யாப்பருங்கலக் காரிகை

குணசாகரர் உரையுடன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAY 1949
MADRAS

ACL-TVAL
01320

P31,E71
K148

மகாமகோபாத்தியாய

ர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு :: சென்னை, 20.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு - 7

அமிர்தசாகரனார் அருளிச்செய்த

யாப்பருங்கலக் காரிகை

மூலமும்

குணசாகரர் உரையும்

பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து
நூதனமாக எழுதப்பெற்ற பலவகைக் குறிப்புக்களுடன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

இவை

டாக்டர் ஐயரவர்களின் குமாரரும்
நூல் நிலையத்தின் கௌரவ கியூரேட்டருமான

S. கலியாணசுந்தர ஐயரால்

சென்னை
வீனஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

அடையாறு :: :: சென்னை, 20.

உரிமைப் பதிவு] 1948 [விலை ரூ. 3-8.

P31, E71
N48

இப்புத்தகத்தில் அடங்கியவை

		பக்கம்
1.	முகவுரை ...	iii
2.	நூலாசிரியர் வரலாறு ...	xvii
3.	உரையாசிரியர் வரலாறு ...	xxi
4.	இப்பதிப்பில் வந்துள்ள நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி	xxii
5.	யாப்பருங்கலக் காரிகை மூலமும் குணசாகரர் உரையும்	1—206
	க. உறுப்பியல்	1
	உ. செய்யுளியல்	62
	௩. ஒழிபியல்	138
6.	காரிகை முதற்குறிப் பகராதி ...	207
7.	மேற்கோட் சூத்திர முதற்குறிப் பகராதி	208
8.	இலக்கிய மேற்கோள் முதற்குறிப் பகராதி ...	211
9.	அரும்பத முதலியவற்றின் அகராதி	214
10.	பிழையும் திருத்தமும்	225

110183

P31, E71
N48

உ

முகவுரை

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

—சகல கலாவல்லிமாலை

தமிழ் இலக்கணத்தைத் தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று வகையாகக் கொண்டார். யாப்பு அணி என்பவை தொல்காப்பியம் பொருளதிகாரத்துள் முறையே செய்யுளியல், உவமவியல் என்பவற்றுள் அடங்கும். பிற்காலத்தார் இலக்கணங்களை வடநூல் முறையைப் பின்பற்றி ஐந்தாகக் கொண்டனர். தொல்காப்பியர் காலத்தும் அவருக்குப் பின்னரும் யாப்பைப் பற்றிய நூல்கள் பல தமிழில் இருந்தன. அவை நூற்பாவிலோ வெண்பாவிலோ ஆக்கப்பட்டவை யாப்பருங்கல விருத்தியை நோக்குங்கால் அவ்வுரை எழுந்த காலத்துக்கு முன்னர் யாப்பிலக்கண நூல்கள் பல பலவாகப் பல்கியிருந்தமை புலனாகும். யாப்பருங்கலமும் காரிகையும் தோன்றிய பின்னர் அவை யெல்லாம் வழக்கொழிந்து அழிந்து போயிருக்கவேண்டும். அவற்றுள் தொல்காப்பியச் செய்யுளியல் ஒன்றே எஞ்சி நிற்கிறது. பிற்காலத்தில் யாப்பிலக்கணத்தைக் கற்க விழைந்தாரும் செய்யுளியலைப் பயிலாது யாப்பருங்கலக் காரிகையையே பயில்வாராயினர். யாப்புலகில் காரிகைக்கு அத் துணைச் சிறப்பு இன்றும் உள்ளது.

யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியராகிய அமுதசாகரனார் யாப்பிலக்கணம் ஒன்றை இயற்றக் கருதி யாப்பருங்கலம் என்ற நூலை எழுதினார். யாப்பின் பரப்பைக் கடலெனக் கொண்டு அக் கடலைக் கடத்தற்குத் தம்நூல் ஒரு கலம் போல்வதெனக் கருதி அதற்கு அவர் யாப்பருங்கலம் என்ற பெயரை [1]வழங்கினார்.

1. இப்பெயருக்கு வேறு காரணம் கூறுவாருமுளர்.

யாப்பருங்கலம் சார்புநூல் என்பது, 'இதுவும் சார்புநூலாகலின்' (பக். 98, 129) என்று அந்நூல் உரையிற் கூறப்பட்டிருப்பதனால் தெரிகிறது. யாப்பருங்கலம் தொல்காப்பியத்தின் போக்கைப் பின்பற்றாமல் காக்கைபாடினியத்தைத் தழுவி அமைந்துள்ளது.[2] யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை இவற்றின் உரைகளில் காக்கைபாடினியாரின் சூத்திரங்கள் பல மேற்கோளாகக் காட்டப் பெறுவதனால் இது புலனாகிறது.

யாப்பருங்கலம் 96-சூத்திரங்களைக் கொண்டுள்ளது. 96-சூத்திரங்களில் யாப்பிலக்கணப் பரப்பை முற்றுற விவரித்தல் இயலாமையின் ஆசிரியர் விதப்புக் கிளவிகளைச் சூத்திரங்களிற் பெய்து, சூத்திரங்களிற் கூறாது விட்ட பொருளை உரையிற் கொள்ளுமாறு அமைத்தனர். பெருகக் கற்றார்க்கே அந்நூல் பெரிதும் பயன்படுதல் நோக்கியும், அஃதும் உரையின் உதவியின்றி விளக்கப்பொருள் கொள்ளுவதில் இடர்ப்பாடு நிகழ்வதை எண்ணியும் இளம் பக்குவிகளுக்கும் எளிதில் விளங்குமாறு அமுத சாகர முனிவரே தம் யாப்பருங்கலத்துக்கு அங்கமாகப் பொருளைச் சுருக்கியும் விளக்கியும் யாப்பருங்கலக் காரிகையை அருளிச் செய்தார்[3] என்று கொள்ளல் வேண்டும்.

யாப்பருங்கலத்துக்கு அங்கமாக இயற்றப்பட்ட காரணத்தினால் இந்நூல் யாப்பருங்கலப் புறனடை என்றும் வழங்கப்படும்.[4] ஒரு நூலுக்கு அங்கமாக அமையும் பிறிதொரு நூல் 'புறனடை' என்ற பெயருடன் வழங்கப்படுதல் தமிழ் வழக்

---

2. 'யாப்பருங்கலம் காக்கைபாடினியத்தைப் பின்பற்றியது; தொல்காப்பியத்தின் வழித்தாயதன்று. அது நேர்பசை நிரைபசை வேண்டாது காக்கைபாடினியார் போல நாலசைப் பொதுச்சீர் வேண்டுவதனாலும், தாழிசை துறை விருத்தங்களைத் தொல்காப்பியனார் முதலாயினார் போலக் கொச்சகக் கலிப்பாற் படுத்தாது பாவினங்களென வகுப்பதனாலும், பிறவாற்றாலும் இனிது புலப்படும்.'

(ஸ்ரீ. த. கனகசுந்தரம்பிள்ளை யவர்கள்.)

3. 'யாப்பருங்கல மென்னும் யாப்பிற் கங்கமாய்......செய்யப்பட்டமையின் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து' (கா. 1. உரை.)

4. யா. வி. பக். 227, 250, 311, 329, 334.

குப் போலும். அவிநயர் யாப்புக்கு அங்கமாய் அமைந்த நாலடி நாற்பது என்னும் நூலைக் குணசாகரர்

'குறினெடி லாய்தம்............என்பது
நாலடி நாற்பது என்னும் புறனடை'

என்கிறார்.[5]

சூத்திர ரூபமாக உள்ள நூலுக்குச் சுலோக ரூபமாக விளக்கம் கூறும் நூலை வடமொழியாளர் காரிகை என்பர். அம்மரபை யொட்டி இந்நூலும் யாப்பருங்கலக் காரிகை எனப்பட்டது போலும். தமிழில் காரிகை என்ற சொல்லுக்குக் கட்டளைக் கலித்துறை என்ற பொருளும் உண்டு. கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்ததனால் இந்நூலைக் காரிகை என்றார் என்று கொள்ளல் ஏற்புடைத்து. அந்த யாப்பில் அமைந்த வீர சோழியமும் வீரசோழியக் காரிகை எனப்படும்.[6]

இலக்கணச் செய்திகளைக் கூறும் கட்டளைக் கலித்துறைகளை காரிகை எனப்படுதல் அல்லாமல் கோவை, அந்தாதி, நான்மணிமாலை முதலியவற்றிலுள்ள கலித்துறைகள் காரிகை எனப்படும் வழக்கம் யாண்டும் காணப்படவில்லை.

ஆதியில் இலக்கண நூல்கள் நூற்பாவாலும் வெண்பாக்களாலும் இயற்றப்பட்டன. கட்டளைக் கலித்துறையால் இயற்றப்படும் வழக்கம் இடையிற் றோன்றியது. வீரசோழியம், களவியற் காரிகை, நவநீதப் பாட்டியல் முதலியன யாப்பருங் கலக் காரிகை போன்று காரிகை யாப்பில் அமைந்தவை. யாப்பருங்கலத்து உரையுள் யாப்பிலக்கணச் செய்திகளைக் கூறும் கட்டளைக் கலித்துறைகள் சில காணப்படுகின்றன. அத்தகையவற்றுள், 'மாவாழ் புலிவாழ்' (பக். 84), 'தூங்கேந் தடக்கல்' (பக். 193) என்பன இந்நூலில் வந்துள்ளன. இவற்றைச் செய்தவர் இன்னவர் என்று திட்டமாகக் கூற இயலவில்லை. கிரந்தங்களின் கணக்கை எடுத்துக் கூறுவது வடமொழி மரபை யொட்டி

5. யா. வி. பக். 32.

6. 'தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் றன்மொழிந்த படிவீர சோழியக் காரிகை நூற்றெண் பஃதொடொன்றின், திடமார் பொழிப்புரை யைப்பெருந் தேவன் செகம்பழிச்சக், கடனாக வேமொழிந் தான்றமிழ் காதலிற் கற்பவர்க்கே.'

யெழுந்த வழக்கமாகும்.[7] இந்தக் கணக்கெடுப்பதற்கு எழுத் தெண்ணித் தொடுக்கப்படும் கட்டளைக் கலித்துறைகள் வசதி யாக உள்ளன. நூல்களில் இடைச் செருகல் நேரா வண்ணம் ஆசிரியர்கள் சூத்திரங்களின் கணக்கைக் கூறுவதும், நூல்களை அந்தாதித் தொடையில் அமைப்பதும், இயல்களின் ஈற்றில் முதனினைப்புச் சூத்திரங்களைச் சேர்ப்பதும் வழக்கம்.

காரிகையாப்பில் அமைந்த நூல்கள் பலவாயினும் தமிழர் யாப்பருங்கலக் காரிகை ஒன்றனையே காரிகை என்ற பொதுப் பெயரான் வழங்குவர். இந்நூலின் சிறப்புக்கு இதுவும் ஒரு சான்று.

> ‘பாவிய லாருநற் காரிகை யோதியின் பாலமர்ந்தும்
> மேவிய லாருநன் னூலிடை யாயா விதமென்னவே.’
>
> (சிராமலைக். 9)

> ‘காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்கின்றதே.’
>
> (படிக். தனிப்.)

> ‘...........எமர்பாலிப் புலவரெலாம்
> நன்னூ லிடையெழிற் காரிகை கேட்க நணுகினரே.’
>
> (கோடீச். 241)

> ‘கந்தமிகுஞ் சந்தமல யந்தனி
> லிருந்து வந்தாய் தென்றலே—தமிழ்க்
> காரிகையின் சீர்மையுறு நேர்மையறி
> யாததென்னே தென்றலே.’
>
> (சரபேந்திர.)

இங்ஙனம் பல புலவர்கள் யாப்பருங்கலக் காரிகையின் சிறப்பைத் தம் நூல்களில் தொனியாக அமைத்துப் பாராட்டி யுள்ளார்கள்.

காரிகை யமைப்பை யொட்டிப் பிற்காலத்தார்கள் பாக்க ளுக்கும் பாவினங்களுக்கும் உதாரண இலக்கியங்களாக விளங் கும் சிதம்பரச் செய்யுட் கோவை, பாப்பா வினம், திருவலங்கற்

---

7. காரிகையின் உரையாசிரியரும் கிரந்தங்களின் கணக்கை வடமொழி வழக்குப் பற்றிக் கூறுகிறார் (பக். 3.)

ரிரட்டு முதலிய நூல்களை எழுதியிருப்பதும் இந்நூற் பெருமையையே விளக்கும்.

இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூவகைப்படும். செய்யுளின் உறுப்புக்களாகிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறனையும் கூறுவது உறுப்பியல். தற்சிறப்புப் பாயிரமும் அவை யடக்கமும் உறுப்பியலுள் அடங்கும்.[8] ஐந்துவகைப் பாக்களைப் பற்றியும் அவற்றின் இனங்களைப் பற்றியும் விவரிப்பது செய்யுளியல். உறுப்பியலிலும் செய்யுளியலிலும் கூறப்படாத அவற்றுக்கினமான செய்திகள் ஒழிபியலிற் கூறப்படுகின்றன. அமுதசாகர முனிவர் இந்நூலிற் கூறியுள்ள காரிகைகளின் தொகை 44-என்பது முதற் காரிகை உரையிற் குணசாகரர் உரைப்பதனாலும், ஒவ்வோர் இயலின் முடிவில் காணப்படும் காரிகைகளின் முதனினைப்புச் சூத்திரங்களாலும்,

> ‘ இருபது பதினேந் தொன்பது காரிகை
> உறுப்பியல் செய்யு ளொழிபிய லோத்தே ’

என்று சில சுவடிகளிற் காணப்படும் குறிப்பினாலும் தெரிகிறது. நூலாசிரியர் கூறாத சில காரிகைகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. அவற்றிற் பெரும்பாலன உரையாசிரியர் செய்த உரைச் சூத்திரக் காரிகைகளாம். இவை எல்லாம் உதாரண இலக்கிய முதனினைப்புக்களைக் கூறுவன.

பாயிரமும் அவையடக்கமும் நீங்கலாக நூலாசிரியர் செய்த காரிகை 41. இவற்றுள் 9, 11, 13, 15, 18, 20, 22-ஆம் காரிகைகள் உதாரண விலக்கிய முதற் குறிப்புக் காரிகைகள். எஞ்சிய 34-ம் இலக்கணச் சூத்திரங்களாகிய காரிகைகள். அமுதசாகரர் இந்த 34-காரிகைகளையும் இயற்றிய பின்னர் உதாரண முதனினைப்புக் காரிகைகளை முறையாக ஒன்றன்பின் ஒன்றாக எழுதிச்

8. அச்சுப் புத்தகங்களில் எல்லாம் பாயிரமும் அவையடக்கமும் உறுப்பியலுக்குப் புறம்பாகக் கொள்ளப்பட்டுள்ளன. ‘ இவ்வோத்தினுள் இத்தலைக் காரிகை என் நுதலிற்றோ வெனின், சிறப்புப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று (பக். 5) என்பதனாலும், ‘ கந்தமுந் தேனார்.........மோனையு மாமுறுப்பே’ (பக். 61) என்பதனாலும் இவை உறுப்பியலுள் அடங்கு மென்பது தெளிவாகும்.

சேர்த்திருத்தல் வேண்டும். 22-ஆம் காரிகைக்குப்பின் காணப் படும் உதாரண முதனினைப்புக் காரிகைகள் குணசாகரர் செய்த [9] உரைச் சூத்திரங்கள் போலும். நூலாசிரியர் பிற்பகுதிக்குத் தாமே இலக்கிய முதனினைப்பை எழுதாமல் விட்ட காரணம் புலனாக வில்லை.

ஒவ்வோரியலின் ஈற்றிலுள்ள காரிகை முதனினைப்புச் சூத்தி ரங்கள் மூன்றும் நூலாசிரியராலும் உரையாசிரியராலும் எழுதப் படாமல் பிறிதொருவரால் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும். சுவடிதோறும் இவை வேறு வேறாக உள்ளன. 'யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரைப்பாடமும் முற்றும்' என்ற தொடருக் குப்பின் ஒழிபியல் முதனினைப்புக் காரிகை காணப்படுவதும் இதனை வலியுறுத்தும். சில சுவடிகளில், காரிகை முதனினைப் புக்களாக இராமல் ஆசிரிய அடிவரவாக இவை அமைந்துள் ளன. இவற்றின் விவரத்தை அங்கங்கே காணலாம்.

யாப்பருங்கலமும் காரிகையும் ஒருவராலேயே இயற்றப்பட் டன வாயினும் இவ்விரண்டற்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன :

(1) யாப்பருங்கலம் எழுத்துப் பதினைந்து என்று கூறும்; காரிகை இவற்றைப் பதின்மூன்று என்று நுவல்கிறது (கா. 44.)

(2) எழுத்து, அசை, சீர் முதலியவற்றைப் பற்றிப் புற னடையாகக் கூறும் செய்திகள் காரிகையில் ஒழிபியலில் வேறா கக் கூறப்படுகின்றன ; யாப்பருங்கலம் இவற்றை அந்த அந்த உறுப்பைப் பற்றிய ஒத்தினுள்ளேயே கூறிச் செல்கின்றது.

(3) 'காசு, பிறப்பு' என்னும் வாய்பாடுகள் யாப்பருங் கலத்தில் விதப்பினால் உரையில் பெறவைக்கப்படுகின்றன ; சிந்தி யல் வெண்பாவின் வகைகளும் இங்ஙனமே ; காரிகை நூலுள் இவை காரிகைச் சூத்திரங்களிற் கூறப்படுகின்றன.

(4) யாப்பருங்கலத்தில் மருட்பாவுக்குத் தனிச் சூத்திர மில்லை ; விதப்பினால் அதனை ஆசிரியர் பெறவைத்தார் ; காரிகை யில் அது தனிக்காரிகையாக (கா. 35) அமைந்துள்ளது.

---

9. இவ்வுரைச் சூத்திரங்கள் சில பிரதிகளில் இராமையினாலும், காணப்பட்டபிரதிகளிலும் பாடபேதம் மிகுதியாக இருந்தமையினாலும் இவற்றை இப்பதிப்பில் பகரக்குறிகளுக்கிடையில் வெளியிட்டலாயிற்று.

இங்ஙனம் மற்றும் பல செய்திகள் காரிகையில் மயக்கத்துக்கு இடமின்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

எழுத்தும் சொல்லும் பயில்வார்க்கு நன்னூல் எப்படியோ, அப்படியே யாப்பிலக்கணம் பயில்வாருக்குக் காரிகை பயன்பட்டு வருவது என்றாலும் நன்னூலுக்கு வழங்கி வருவது போன்ற பல உரைகள் காரிகைக்கு இல்லை. குணசாகரரின் உரை ஒன்றே உளது. குணசாகரர் காலத்துக்கு முன் இந்நூலுக்கு வேறு உரைகள் இருந்தனவோ என்று கருதுமாறு குணசாகரர் ஓரிடத்தில் 'வேறு பொருள் கூறுவாரு முளர்' (கா. 2, உரை) என்று குறிப்பிடுகிறார்.

நூலாசிரியரும் உரையாசிரியரும் காரிகையில் எடுத்தாளும் அரசர், ஆசிரியர், ஊர்கள், தெய்வங்கள், நூல்கள் முதலியன :-

அரசர் முதலிய தலைவர் : அச்சுதன், கண்டன், கதக்கண்ணன், கவி கண்ணனார், காளிங்கன், சுவர்னமாப்பூதன், சேட்சென்னி, சோழர், திரையன், பாரி, மலையன், மாசேனன், வரகுணன்.

ஆசிரியர் : அகத்தியர், அவிநயர், இடைக்காடனார், காக்கை பாடினியார், கையனார், தொல்காப்பியர், நத்தத்தனார், பல்காயனார், பொய்கையார், மயேச்சுரர்.

ஊர்கள் முதலிய இடங்கள் : கச்சி, குன்றார், கூடல், கொற்கை, கோழி, கோளூர், சோழநாடு, தலையாலங்கானம், தொண்டி, தொண்டை நாடு, பழையனூர், பறநாடு, பாலை நல்வாய், புகார், புத்தூர், முள்ளூர், வஞ்சி.

தெய்வம் முதலியன : அருகன், ஆதிநாதர், இந்திரன், கண்ணன், சிவபெருமான், சுந்தரி, திருமால், நரசிங்க மூர்த்தி, பலராமன், முருகன்.

நூல்கள் : அடிநூல், அருமறை யட்டக வோத்தின் வருக்கக் கோவை, அவிநயர் யாப்பு, இசைத் தமிழ்ச் செய்யுட் டுறைக் கோவை, இராமாயணம், உருபாவதாரம், ஊசி முறி, ஐங்குறு நூறு, கர்நாடகச் சந்தம், கலித்தொகை, கீழ்க்கணக்கு, குணகாங்கியம், குறுந்தொகை, கொன்றை வேந்தன், சந்தோ விசிதி, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி, திருக்குறள், திரு

வெழு கூற்றிருக்கை (நக்கீரர்), தேசிக மாலை, தொல் காப்பியம், நத்தத்தர் யாப்பு, நாலடி நாற்பது, நாலடி நானூறு, நான்மணிக் கடிகை, நிருத்தம், பட்டினப்பாலை, பாளித்தியம், பிங்கலம், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை, மயேச்சுரர் யாப்பு, மலைபடு கடாம், மாபாரதம், மார்க்கண்டேயனார் காஞ்சி, முத்தொள்ளாயிரம், முதுமொழிக்காஞ்சி, யாப்பருங்கலம், யாப்பருங்கல விருத்தி.

இந்நூலைப் பற்றிய பிறசெய்திகள் நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு முதலியவற்றால் விளங்கும்.

யாப்பருங்கலக் காரிகையை எந்தையாரான மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் தம் இளம்பிராயத்தில் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரவர்களிடம் கற்றுக் கொண்டார்கள். அந்த அஸ்திவார பலத்தினாலேயே பிற்காலத்தில் தாம் இலக்கணப் புலமையை எளிதில் பெற இயன்றதென்று அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. அந்த நன்றி யறிவின் பொருட்டு அவர்கள் யாப்பருங்கலக் காரிகையை மற்ற நூல்களைப் போலக் குறிப்புரை முதலியவற்றுடன் வெளியிட்டு அதனை அவர்களுக்கு அர்ப்பணம் செய்ய எண்ணியிருந்தார்கள். பல காரணங்களால் அவர்களுடைய வாழ்நாளில் அது நிறைவேறாமற் போயிற்று. எனக்கு அது வருத்தமாக இருந்தது. அவர்கள் தொகுத்து வைத்துள்ள குறிப்புக்களைக் கொண்டும் காரிகைப் பிரதிகளைக் கொண்டும் அப்பணியை ஒருவாறு நிறைவேற்றும் பேறு இப்போது எனக்குக் கிடைத்தது.

செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் காரிகைப் பாடங் கேட்ட வரலாற்றை எந்தையார் தம் சுயசரிதத்தில் விரிவாக எழுதியுள்ளார். அதில் ஒருபகுதி பின்வருமாறு: இப்பகுதியிலிருந்து காரிகையை ஒருவர் எவ்விதம் பயில வேண்டுமென்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

'செங்கணத்தில் நாட்டாண்மைக் காரரில் பெரிய பண்ணையார், சின்னப் பண்ணையார், பட்டத்துப் பண்ணையார் என்ற பகுப்பினர் இருந்தனர். விருத்தாசல ரெட்டியார் சின்னப் பண்ணையார் என்னும் பகுப்பினர்.

* * *

'படித்தலும், பாடம் சொல்லுதலும், வந்தவர்களிடம் சம்பாஷணை செய்தலுமன்றி வேறு ஒரு காரியத்திலும் அவர் புத்தியைச் செலுத்துவதில்லை. மிகுதியான பூஸ்திதி உள்ளவர் அவர். அவற்றை அவருடைய பிள்ளைகளும் காரியஸ்தருமே கவனித்து வந்தனர். இவ்வாறு அவர் இருத்தலில் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் மிக்க வருத்தம் இருந்தது. அதனை ரெட்டியார் உணர்ந்தும் சிறிதும் கொள்ளவில்லை.

* * *

'**யாப்பருங்கலக் காரிகை பாடம் கேட்டது:** நல்ல வேளையில் நான் காரிகை படிக்கத் தொடங்கினேன். யாப்பிலக்கணத்தைப்பற்றிச் சிறிதும் அறியாத நிலையில் இருந்தேன் நான். எனக்கு அதைக் கற்பிப்பது சிரமமான காரியந்தான். ஆனாலும் ரெட்டியார் தெளிவாக எனக்குக் கற்பித்தார். அவருடைய ஞானமும் என்னுடைய ஆவலும் சேர்ந்து அந்தத் தெளிவுக்குக் காரணமாயின.

* * *

'யாப்பருங்கலக் காரிகையும், உரையும், மேற்கோட் செய்யுட்களும் என் உள்ளத்தே பதிந்தன. மேற்கோட் செய்யுளின் அர்த்தத்தையும், எந்த இலக்கணத்திற்கு உதாரணமாகக் காட்டப்படுகிறதோ அந்த இலக்கணம் அமைந்திருப்பதையும் ரெட்டியார் எடுத்துரைப்பார். அந்த இலக்கணத்தை அமைத்துப் புதிய செய்யுள் எழுதும்படி சொல்லுவார். நான் எழுதியதைப் பார்த்து இன்ன இன்ன பிழைகள் இருக்கின்றன என்று விளக்குவார். ஒருவகைச் செய்யுளுக்குரிய இலக்கணத்தை அந்த வகைச் செய்யுளாலே உரைக்கும் இலக்கண நூல் தெலுங்கிலும் வடமொழியிலும் உள்ளனவாம். ரெட்டியாருக்குத் தெலுங்கு தாய்மொழி. அதிலும் அவருக்குப் பயிற்சி உண்டு. தெலுங்கு நூலைப்பற்றி என்னிடம் சொல்லி, "அவ்வாறே நீரும் செய்து பழகும்" என்று உரைத்து அந்த வழியையும் கற்பித்தார். அப்படியே நேரிசை வெண்பாவின் இலக்கணத்தை நேரிசை வெண்பாவிலேயே அமைத்தேன்; ஆசிரியப்பாவின் இலக்கணத்தை ஆசிரியப்பாவாலேயே கூறினேன். மிகவும் சிரமப்பட்டு இவ்வாறு பாடிக் காட்டுவேன். அந்தச் செய்யுட்களில்

உள்ள குணத்தைக் கண்டு முதலில் எனக்கு உத்ஸாகம் ஊட்டு வார்; பிறகு பிழை யிருந்தால் அதனையும் எடுத்துக் காட்டுவார்.

'காரிகையின் முதற் செய்யுளின் உரையில் உரையாசிரிய ராகிய குணசாகரர் வேறு மொழிகளிலுள்ள நூல்களை உவமை யாக எடுத்துச் சொல்லுகிறார். அந்த நூல்களைப் பற்றிய வர லாறுகளை மாத்திரம் ரெட்டியார் சொல்லவில்லை. ஆதலின் அந்த விஷயத்தில் சந்தேகம் இருந்தது. இடையிடையே வரும் மேற் கோள்களில் ஜைன சமயத் தொடர்புடைய பாடல்கள் பல. அவற்றில் அந்தச் சமய சம்பந்தமான சில செய்திகளையும் அவர் விளக்கவில்லை. மற்ற எல்லாம் தெளிவாகவும் அழுத்தமாகவும் என் அறிவில் பதிந்தன. அந்த அஸ்திவாரபலம் இன்னும் இருந்து வருகிறது. இலக்கணமென்றால் கடினமானதென்ற நினைவே இல்லாமல் சுலபமாக மனத்துக்கு உத்ஸாக முண்டா கும் வண்ணம் ரெட்டியார் பாடம் சொன்ன முறையை நான் என்றும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவரிடம் நான்கு மாதங்கள் நான் பாடம் கேட்டேன். ஆயினும் என் வாழ்வு முழுவதும் அந்தப் பாடம் பயன்பட்டு இன்பம் தருவதாயிற்று.'

* * *

ஐயரவர்கள் எண்ணியதை நிறைவேற்ற நான் கடமையுற்ற வனாதலால் இப்பதிப்பை ஷை செங்கணம் ரெட்டியாரவர்களுக்கு அர்ப்பணம் செய்து அவர்கள் ஞாபகார்த்தமாக வெளியிடு கிறேன். அவருடைய பௌத்திரர் **N. A.** விருத்தாசல ரெட்டி யார் என்பவர் இப்போது செங்கணத்துக்கு அருகேயுள்ள வெண்பாவூர் என்னுமிடத்தில் சுக ஜீவியாக இருந்து குடும்பத் தின் பெருமையைப் பாதுகாத்து வருகிறார். இப்போது இவர் இப்பதிப்பைப் பார்த்துச் சந்தோஷ மடைய விளங்குவது எனக்கு ஆறுதலாக இருக்கிறது.

இதுகாறும் வெவ்வேறு காலங்களில் யாப்பருங்கலக் காரிகை பல அறிஞர்களால் அச்சிற் பதிப்பிக்கப் பட்டுள்ளது. அப்பதிப்புக்களுள் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் திரு. அ. குமார சாமிப் **பிள்ளையவர்களின்** பதிப்பு ஒன்றே புத்துரையாகும்; மற்றவை எல்லாம் குணசாகரரின் பழைய வுரையோடு கூடிய வை. அவை எல்லாம் ஒரு படித்தாகவே உள்ளன. உரையில் வேற்றுமை அதிகம் இல்லை.

இந் நூல் நிலையத்தில் உள்ள சுவடிகளை எல்லாம் ஒப்பு நோக்கி வந்த காலத்தில் உரையின் பல பகுதிகள் குணசாகரர் காலத்துக்குப் பின் பிரதி செய்தோரால் யாப்பருங்கல விருத்தியினின்றும் எடுத்துச் சேர்க்கப் பட்டுள்ளமை புலனாயிற்று. 'யாப்பருங்கல விருத்தியிற் காண்க' என்று காரிகையின் உரையாசிரியர் கூறியுள்ள இடங்களில் எல்லாம் யாப்பருங்கல உரையிலுள்ள தொடர்பான செய்திகள் சில பிரதிகளில் அங்கங்கே இடைச்செருகலாகச் சேர்த்து எழுதப் பெற்றிருந்தன. இப் பதிப்பில் 175-ஆம் பக்கம், 'அவற்றுள் விகாரம்.........குறுக்கலும் என' என்றதன் பின் சில சுவடிகளில், 'என்னை? அந்நாற் சொல்லுந் தொகுக்குங் காலை..........என்மனார் புலவர் என்றார் தொல்காப்பியனார்' என்று ஒரு மேற்கோள் சூத்திரம் காணப்படுகிறது. பிறகு இம்மேற்கோட் சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கும் செய்திக்கு விரிவுரை தரும் நோக்குடன், 'அந்நாற் சொல்லுந் தொகுக்குங் காலை யென்ற வழி நான்கு சொல்லாவன' என்று தொடங்கி இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொற்களின் இலக்கணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பக்கம் 197-இல், ஓரடியால் நடப்பனவும் சொன்னவாறு' என்பதன் பின், 'இனி நூலாவது, என்று தொடங்கிப் பல பக்கங்களில் நன்னூற் பாயிரத்துட் காணப்படும் செய்திகள் முறையே கொடுக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் பிற்காலத்து இடைச் செருகல்களாகச் சேர்க்கப் பெற்றவை பல. [10] இவை எல்லாம் திருத்தமான பிரதிகளில் காணப் பெறவில்லை. சிறந்த பிரதிகளிற் காணப்பட்ட சில செய்திகள் அச்சுப் புத்தகங்களில் இல்லை. இவற்றுள் அவசியமில்லாதவற்றை நீக்கியும், அவசியமென்று தோன்றியவற்றைப் பகரக் குறிகளுக் கிடையில் அங்கங்கே சேர்த்தும் இப் புத்தகம் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

'கொன்றார்ந் தமைந்த' (பக். 99.) என்னும் ஆசிரியத் துறைக்கு நான்காம் அடியில் பதினாறு சீர் அமைதல் வேண்டும்.

---

10. குணசாகர ருரை இங்ஙனம் கூடியும் குறைந்தும் பிரதி தோறும் வேறுபட்டிருத்தலினால் சில ஏடுகளின்மேல் '**காரிகை விரித்துரை**', '**காரிகைச் சிற்றுரை**', '**இது காரிகை விருத்தி**' என்ற தொடர்கள் காணப் படுகின்றன. இவற்றைக் கொண்டு இந்நூலுக்கு உரைகள் பல உள்ளன வென்று தீர்மானித்தல் பொருந்தாது.

யாப்பருங்கல விருத்தியினும், காரிகைப் புத்தகங்களினும் இவ்வடி அங்ஙனம் அமையவில்லை. சில பதிப்பாசிரியர்கள் இதனைக் குறித்துக் குறிப்பும் வெளியிட்டுள்ளார்கள். கிடைத்த சுவடிகளின் பரிசோதனையினால் இப் பதிப்பில் இப்பகுதி திருத்தம் பெற்றுள்ளது.

ஒழிபியலில் உள்ள காரிகைகளின் முதனினைப்புக்களைக் கூறும் காரிகை 'தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை' என்ற உரைச் சூத்திரக் காரிகை நூலாசிரியர் செய்ததாக அச்சுப் புத்தகங்களில் காணப்படுகின்றது. அக்காரிகையும் ஆசிரியர் செய்ததாகக் கொண்டால் ஒழிபியற் காரிகைகளின் எண்ணிக்கை பத்தாகிவிடும். உறுப்பியல் 20-செய்யுளியல் 15-ம் இதனோடு கூட மொத்தக் காரிகைச் சூத்திரங்கள் 45-ஆகிவிடும். இக் கணக்கு "இந்நூல் எவ்வளவைத்தோ வெனின் காரி.........கை வகையால் நாற்பத்தி நான்கும், (பக். 3) என்று உரையாசிரியர் காட்டியதற்கு முரண்பாடாக முடியும். ஒழிபியற் காரிகை முதனினைப்பு இப் பதிப்பில் சிறந்த சுவடிகளால் திருத்தம் பெற்றுள்ளது.

பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட சுவடிகளின் விவரம்

காரிகைப் பதிப்பு விஷயமாகப் பயன்பட்ட சுவடிகள் மொத்தம் பதினொன்கு. இவை யாவும் இந்நூல் நிலையத்து ஏடுகளே. இவற்றின் நிலைமையும் விவரமும் பின் வருமாறு :

சுவடி எண். 27. மூலமும் உரையும் பூர்த்தி. இதனை மேலேடாகக் கொண்ட கையெழுத்துப் பிரதி ஒன்றும் பயன்பட்டது.

எண் 67. மூலமும் உரையும் பூர்த்தி. காரிகைச் சிற்றுரை என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் உதாரணச் சூத்திரங்களும் உதாரண விலக்கியச் செய்யுள்களும் இல்லை.

எண். 177. முற்றும். காரிகை மேற்கோள் சூத்திரங்களும் உதாரண இலக்கியச் செய்யுட்களும் மட்டும் உள்ளன. சுவடி, 67-ம் 177-ம் ஒருவர் வீட்டுப் பிரதிகளே.

எண். 150. முற்றும். இது 177-ஆம் சுவடியைப் போன்றது.

எண். 251. மூலமும் உரையும். கா. 8-முதல் இறுதிவரை உள்ளது. இது கோட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரவர்கள் [11]தம் கைப்பட எழுதி வைத்த பிரதி போலும். எண் 351. மூலமும் உரையும், கா. 38-முதல் இறுதிவரை உள்ளது.

எண். 369. மூலமும் உரையும். கா. 1-முதல் 24-மட்டும் உள்ளது.

எண். 380. மூலமும் உரையும். முற்றும்.

எண். 541. மூலமும் உரையும். கா. 1-முதல் 31-முடிய உள்ள குறைப்பிரதி.

எண். 601. மூலமும் உரையும். கா. 1-முதல் 42-முடிய உள்ள குறைப்பிரதி. இது மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதி.

எண். 757. இது 150, 177-ஆம் சுவடிகளைப் போன்றது. உறுப்பியற்பகுதி மட்டும் உள்ளது.

எண். 804. மூலமும் உரையும் முற்றும். இதுவும் 380-ம் ஒன்றைப்பார்த்து மற்றொன்று படி யெடுத்ததுபோலும். சாலீ வாடீச்சுர ஓதுவார் பிரதி இது.

எண். 946. மூலமும் உரையும். இடையிடை இரண்டோர் ஏடுகள் தவிர கா. 43-முடிய உள்ளது. சிதிலம். காரிகை விரித்துரை என்று இதில் குறிக்கப்பட்டுள்ளது.

எண். 952. மூலமும் உரையும். பூர்த்தி, சிதிலம். இதில். திருமறைக் காட்டிலிருக்கும் வடமரில் கவுண்டினிய கோத்திரத் தாரில் மூப்பிலாரில் [12]நாராயணபட்டர் பிள்ளை வரகவி மகா தேவன் இயாப்பருங்கலக் காரிகை எழுதி முடிந்தது. முற்றும். மேல்பிரதி குறும்பு நாட்டு விசயமங்கலம் நடராச பிள்ளை ஏடு' என்று எழுதப் பெற்றுள்ளது.

---

[11] இவர் இயற்றிய கோடீச்சுரக்கோவை முதலியவற்றை எந்தையார் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள்.

[12] மூப்பிலார் என்பது குடிப்பெயர்.

மேலே குறித்த சுவடிகளில் இப்பதிப்புக்கு விசேஷமாகப் பயன்பட்டவை 251, 380, 541, 601, 804, 952-என்ற எண்களை யுடையவைகளே.

உரையில் உதாரணங்களாகக் காட்டப்பட்ட மேற்கோள் இலக்கியங்களுக்குக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாறு, நூலிலும் உரையிலும் கண்ட அரும்பத முதலியவற்றின் விரிவான அகராதி முதலியவை இந்நூலிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

இப்பதிப்பு இந்தவடிவில் வெளிவருவதற்கு முக்கிய காரணமாக உள்ளவர் தமிழ்நூல்களிற் சிறந்த பயிற்சியுடையவரும், எந்தையாரவர்களிடம் பல வருடங்கள் உடனிருந்து நூற்பதிப்பு விஷயத்தில் நல்ல பழக்கம் பெற்றவரும், இந்நூல் நிலையத்தின் பதிப்புக் குழுவின் தலைவருமாகிய ஸ்ரீமான் ச. கு. கணபதி ஐயரவர்கள் பி. ஒ. எல். ஆவார்கள். அவர்களுக்கும், பதிப்பு வேலையில் அவர்களுக்கு உதவியாக இருந்து சுவடிகளை ஒப்பு நோக்குதல், பிரதிசெய்தல் முதலியவற்றைக் கருத்துடன் கவனித்து வந்தவர்களாகிய ஸ்ரீமான்கள் தமிழ்ப்பண்டிதர் எல். ஸ்ரீனிவாஸ ஐயர், வியாகரண சிரோமணி, தி. இராமாநுஜ ஐயங்கார், ஆர். பாலகிருஷ்ண ஐயர் முதலியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூல் நிலையத்தை மிக்க ஊக்கத்துடன் பாதுகாத்தும் நூற்பதிப்பு விஷயத்தில் அளவற்ற கவனத்தைச் செலுத்தியும் வரும் இந்நூல் நிலையத்தின் அத்யக்ஷரும் அருங்கலை விநோதருமாகிய ஸ்ரீமதி ருக்மிணிதேவியாரவர்களுடைய சிறந்த தமிழபிமானம் யாவராலும் போற்றற்குரியது.

மகாமகோபாத்தியாய
டாக்டர்-உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம், அடையாறு,
1—12—1948.

இங்ஙனம்,
S. கலியாணசுந்தரம்.

OFFICE OF ... 12 MAY 1948 MADRAS

நூலாசிரியர் வரலாறு

யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் அமிர்தசாகரர் என்பது, 'இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோ வெனின்...... அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்தசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது (பக். 3) என்பதனாற் றெரிகிறது. அமிர்தசாகரர் என்ற சொல் அமுதசாகரர் என்றும் சுவடிகளிற் காணப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தியின் பாயிரத்துள் இவர் பெயர் '**அளப்பருங் கடற்பெயர் அருந்தவத்தோன்**' என்று குறிக்கப் பெற்றுள்ளது[1] அளத்தற்கு அரிய கடலினது பெயர் எனவே, அஃது அமிதசாகரர் என்று இருத்தல் வேண்டும் என்று சிலர் கருதுவர். ஆனால் இந்நூலின் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்ட எல்லாச் சுவடிகளிலும் இப்பெயர் அமிர்தசாகரர் என்றோ, அமுதசாகரர் என்றோ காணப்படுகின்றதே ஒழிய ஒன்றிலும் அமிதசாகரர் என்ற பெயர் இல்லை. கிடைத்த யாப்பருங்கல ஏடுகளின் தலைப்பிலும் அமிதசாகரர் என்ற பெயர் இல்லை. வீரசோழிய உரையிலும் இப்பெயர் அமுதசாகரனார் என்றே எடுத்தாளப்படுகிறது.

ஆசிரியர் இந்நூலுள் தெய்வவணக்கமாக அருகதேவரை வணங்குவதனாலும் சமணமதத் தொடர்புள்ள செய்யுட்களை உதாரண இலக்கியமாகக் காட்டுவதனாலும் இவர் அம்மதத்தைச் சேர்ந்தவர் என்பது விளங்கும். 'தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த அருந்தவத்தோன்', 'அருந்தவத்துப் பெருந்தன்மை', 'மாமுனி' என்று இவர் வழங்கப்படுவதைக்கொண்டு இவர் துறவி என்பது புலனாகும்.

---

1. 'முழுதுல கிறைஞ்ச முற்றொருங் குணர்ந்தோன்
செழுமலர்ச் சேவடி செவ்விதின் வணங்கிப்
பாற்படு தென்றமிழ்ப் பரவையின் வாங்கி
யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
தனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே'

என்பது பாயிரம்.

இவர்காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்றும் இவர் முதல் இராசராசன் காலத்தவர் என்றும் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் கூறுவர். எங்ஙனமேனும் இவர் முதற்குலோத்துங்கன் காலத்துக்குப் பிற்பட்டவர் அல்லர்.

'குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்......... அருந்தவத்தோனே' (யா. வி. பாயிரம்) என்று அமுதசாகரர் வழங்கப் பெறுவதனால் இவருடைய ஆசிரியர் குணசாகரர் என்பது போதரும். இக்குணசாகரர் வேறு; யாப்பருங்கலத்துக்கும் காரிகைக்கும் உரை கண்ட குணசாகரர் வேறு. பின்னவர் தம் உரையுள் அமுதசாகரரை அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்தசாகரர்' என்று பாராட்டியுள்ளார்.

யாப்பருங்கலத்தை இயற்றியவரும் இந்த அமிர்தசாகரரே என்பது,

> 'இந்நூலுடை யாரும் "மாஞ்சீர் கலியுட் புகா" எனவும், "நாலசைச்சீர் வெண்பாவி னண்ணா வயற்பாவின், நாலசைச்சீர் நேரீற்று நாலிரண்டாம்—நாலசைச்சீர், ஈறுநிரை சேரி னிருநான்கும் வஞ்சிக்கே, கூறினர் தொல்லோர் குறித்து" என்னும் புற நடையானும் பிறவாற்றானும் விளங்சக் கூறினர் ஆகலால் என்க' (யா. வி. சூ. 15, உரை)

என்றும்,

> 'அது போல இந்நூலுடையாரும் வெண்பா இறுதிச் சீருக்கு வேறு உதாரண வாய்பாட்டால் ஓசை யூட்டுதற் பொருட்டாக்கிக் குற்றியலுகர மீறுகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டானே நேரீற்றியற் சீருக்கு வேறுதாரணம் எடுத்தோதினர் என்க' (யா. வி. சூ. 57, உரை)

என்றும் யாப்பருங்கல விருத்தியில் குணசாகரர் கூறுவதனால் விளங்கும். 'மாஞ்சீர் கலியுட் புகா' என்பது 38-ஆம் காரிகைச் சூத்திரமாகும். காசு பிறப்பு வாய்பாடு கூறியது 25-ஆம் காரிகையாம்.

மேலே காட்டிய முதல் எடுத்துக் காட்டிலிருந்து யாப்பருங்கல் விருத்தியுள் ஒவ்வோர் ஒத்தின் இறுதியிலும் உரையின் இடையிலும் காணப்படும் வெண்பாச் சூத்திரங்களுள் பல (நூலின்பெயர்குறிக்கப்படாதவை)இவ்வாசிரியரே இயற்றியவை

என்று கொள்ள இடமேற்படுகிறது. காரிகை என்பது தமிழில் கட்டளைக் கலித்துறையைக் குறிக்குமேனும் சூத்திரரூபமாக உள்ளவை பாவாலும் இனத்தாலும் அமையும்போது அப்பாக் களையும் இனத்தையும் காரிகை என்பது வடநூன் முறைக்கு முரண்பாடன்று. இப்பொருள் கொள்ளுமிடத்து இவ்வெண்பாச் சூத்திரங்களும் காரிகையாம். இந்த வெண்பாச் சூத்திரங்கள் பெரும்பாலும் வடமொழி வழக்கினைக் கூறிச் செல்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கும்போது; 'ஆரியமேன்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய.........அமிர்த சாகரர்' (பக். 3) என்ற தொடரிற் காணப்படும் பகுதிக்கு ஒரு வாறு பொருள் விளங்குதல் கூடும். இவ்வளவும் ஊகமே ஒழியத் தீர்ந்த கருத்தன்று.

காரிகை நூலை இயற்றிய காரணத்தால் இவர் தொண்டை மண்டலத்தில் குளத்தூர் என்ற இடத்தை மானியமாகப் பெற்றார் என்றும் அவ்வூர் காரிகைக் குளத்தூர் என்று வழங்கும் என்றும் சாஸனங்களால், [2] தெரியவருகிறது.

தாம் இயற்றிய காரிகையை அமுதசாகரர் பாண்டியனது அவைக்களத்தே அரங்கேற்றினார் என்று சிலர் கருதுவர் அதற்கு அவர்கள் காட்டும் ஆதாரம் இந்நூல் அவை யடக்கத் துள் 'தேனார் கமழ் தொங்கன் மீனவன்' (கா. 2) என்ற காரி கையை, 'மீனவன் கேட்ப யானு நடாத்துகின்றேன் என்று எனக்கே நகைதருமால்' என்று அங்வயித்து வலிந்து பொருள் கொள்ளுவதே யாகும். 'மீனவன் கேட்ப அருந்தவன் சொன்ன கன்னித்தமிழ் நூல்' என்று ஆற்றொழுக்காக அமைந்த பொருளைக் கொள்ளுவதே ஏற்புடைத்து. 'அமுத சாகரன் நெடுந்தமிழ் தொகுத்த காரிகைக் குளத்தூர்' என் றும், 'தண்டமிழமுதசாகர முனியைச், சயங்கொண்ட சோழ மண்டலத்துத் தன் சிறு குன்ற நாட்டகத் திருத்தி...........நூற் காரிகை அவனுற் கண்டவன்' என்றும் சாஸனங்களிற் காணப் படும் பகுதிகளால், காரிகை இயற்றப்பட்ட இடம் தொண்டை நாட்டில் உள்ளதென்று தெரியவருகிறது.

---

2. EP. Ind. Vol. XVIII, PP. 64-69.
M. E. R. No. 534 of 1921.

அமுத சாகரனார் யாப்பருங்கலத்தை முதலிற் சூத்திர ரூபமாக இயற்றிப் பிறகு அதற்கு அங்கமாகக் காரிகையை அவர் காலத்தில் சில மொழிகளில் வழங்கிவந்த பலவேறு நூல்களிலிருந்த சிறந்த அமிசங்களை எல்லாம் இந்நூலினுள்ளே ஒருங்கே பெய்து அவை இந்நூலுக்கு அலங்காரமாக அமையும்படி இயற்றியருளினார் என்பது, 'பாளித்திய மென்னும்......காரிகையாப்பிற்றாய் யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்கார முடைத்தாகச் செய்யப்பட்டமையின் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து' (கா. 1, உரை) என்பதனாற் றெரிகிறது.

இந்நூலாசிரியர் இயற்றிய உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகைகள் 9, 11, 13, 15, 18, 20, 22-ஆகியவைகளே. பிற்பகுதியிற் காணப்படும் ஏனை உதாரண முதனினைப்புக் காரிகைகள் உரையாசிரியர் இயற்றியவை. இதனை நோக்கும்போது இந்நூலாசிரியர் காரிகை இலக்கணச் சூத்திரங்களை முதலில் முறையாக இயற்றி முடித்து அதன்பின்னர் ஆங்காங்குச் சேர்க்கவேண்டிய உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகைகளை இயற்றிச் சேர்த்திருத்தல் வேண்டும் என்பது போதரும். எஞ்சிய பகுதியை எழுதுவதற்குள் இவர் காலகதி யடைந்தனரோ அன்றி யாதானும் ஓர் இடர்ப்பாட்டால் எழுதாது விடுத்தனரோ என்று தோற்றுகிறது.

3 'நீகா வாதுநெஞ் சேதொழு வாழி நிகரில் பன்னூற்
காகர மாய்நின்ற வாதியன் னானருள் சேரமிர்த
சாகர மாமுனி தண்டா ரரசர்வண் டார்மகுட
சேகரஞ் சேரச் சிறைவண்டு சேருந் திருந்தடியே.'

பல சுவடிகளில் அமுதசாகரரின் வணக்கமாக இச்செய்யுள் காணப்படுகிறது.

---

3. ஆகரம் - உறைவிடம். ஆதி அன்னான் - அருக பரன். வண் தார் மகுட சேகரம் - வளவிய மாலையைச் சூடிய முடியையுடைய தலைகள். 'நெஞ்சே சேகரஞ்சேர வண்டுசேரும் அமிர்த சாகரமாமுனி திருந்தடி நீ காவாது தொழு, வாழி' எனக் கூட்டி முடிக்க.

உரையாசிரியர் வரலாறு

யாப்பருங்கலக் காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்பது பரம்பரையாக வரும் கேள்வியானும், காரிகைச் சுவடிகளின்மேல் வரையப் பெற்றிருக்கும் குறிப்பினுலும் தெரிகிறது. யாப்பருங்கலத்துக்கு உரைகண்டாரும் இவரே. இரண்டு நூல்களின் உரைகளிலும் உரையாசிரியர் எடுத்தாளும் இலக்கண மேற்கோட் சூத்திரங்களும், உதாரண இலக்கியங்களும் ஒற்றுமை யுடையனவாக இருத்தலினாலும், உரை நடையும் பலவிடங்களில் ஒன்ருகக் காணப்படுவதனுலும் இது விளங்குகின்றது. இவ்விரண்டு உரைகளுள் யாப்பருங்கல உரை முதலிற் ருேன்றி யிருத்தல் வேண்டு மென்பது, 'யாப்பருங்கல விருத்தியுட் காண்க' (பக். 67, 115, 160, 195) என்ற தொடரால் அறியக் கிடக்கின்றது.

தம் காலத்தில் வழங்கிவந்த யாப்பிலக்கண நூல்கள் பலவற்றிலிருந்து இவ்வாசிரியர் மேற்கோள் காட்டுவதனுல் அந்நூல்களிடத்தில் இவருக்கிருந்த பழக்கம் புலனுகின்றது. பண்டையாசிரியரையும் நூல்களேயும் இவர் பாராட்டும் இயல்பினர். சங்கச் சான்ருேர் செய்யுட்களினும் சங்க காலத்துக்குப் பின் தோன்றிய சிந்தாமணி, சூளாமணி போன்ற நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவதிலிருந்து அந்நூல்களிடத்து இவருக்கிருந்த புலமை தெரிகிறது. மேற்கோளே இலக்கியங்களிலிருந்து எடுத்தாளும்போது அநேகமாக நூற்பெயரையோ, ஆசிரியரின் பெயரையோ இவர் குறிப்பிடுவதில்லே. இலக்கணச் சூத்திரங்களே மேற்கோள் காட்டும்பொழுது அவை இன்ன நூலின என்ருே இன்னவர் வாக்கு என்ருே தெளிவாகக் கூறுவர். இன்ன நூலினவை என்று தெரியாதவற்றைக் கூறும்போது, 'என்ருர் ஆகலின்' என்று வாளா கூறுவர். காரிகையைச் சூத்திரமென்றும், சூத்திரக் காரிகை என்றும் குறிப்பர்.

குணசாகரரும் அமுதசாகரரும் ஒரு காலத்தவர் என்று சிலர் கருதுகிருர்கள். இக்கருத்துக்கு யாப்பருங்கலத்துள்ளும் காரிகையுள்ளும் ஆதாரம் எதுவும் இல்லே.

இவர் உரை பிற்காலத்தில் பிரதி செய்தவர்களால் கூட்டியும் குறைத்தும், புதிய உதாரணங்கள் சேர்க்கப் பெற்றும் சில மாறுதல்களே அடைந்திருப்பது முகவுரையில் கூறப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் வந்துள்ள நூற் பெயர்கள்

முதலியவற்றின்

முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு
அடிக் - அடிக் குறிப்பு
அரசியற் - அரசியற் சருக்கம்
ஆய்ச் - ஆய்ச்சியர் குரவை
ஆற்றுப் - ஆற்றுப் படலம்
இ - கா, இ - கை - இக்காரிகை
இராச - இராச பாரம்பரியம்
இறை - இறையனாரகப்பொருள்.
உ - ம் - உதாரணம்
உரைச்சிறப் - உரைச் சிறப்புப் பாயிரம்
எச்ச - எச்சவியல்
எ - து - என்பது
எழுத் - எழுத்ததிகாரம்
எ - று - என்றவாறு
ஐங் - ஐங்குறுநூறு
ஐந்திணை ஐம் - ஐந்திணையைம்பது
கம்ப - கம்பராமாயணம்
கல்யாணச் - கல்யாணச் சருக்கம்
கலி - கலித்தொகை
கலிங்கத்துப் - கலிங்கத்துப்பரணி
கா - காரிகை
குமர குருபர - குமர குருபர சுவாமிகள் பிரபந்தங்கள்
குருகுல - குருகுலச் சருக்கம்
குறள் - திருக்குறள்
குறிப் - குறிப்புரை
குறுந் - குறுந்தொகை
கோடீச் - கோடீச்சுரக் கோவை
சங்கர - சங்கர நமச்சிவாயருரை
சரபேந்திர - சரபேந்திர பூபாலர் குறவஞ்சி
சிராமலைக் - சிராமலைக்கோவை
சிலப் - சிலப்பதிகாரம்
சிறப் - சிறப்புப்பாயிரம்
சீய - சீயவதைச் சருக்கம்
சீவக - சீவக சிந்தாமணி
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
சொல் - சொல்லதிகாரம்
தண்டி - தண்டியலங்காரம்
தனிப் - தனிப்பாடல்
திணைமாலை நூற் - திணைமாலை நூற்றைம்பது
திருவெழுகூற் - திருவெழுகூற்றிருக்கை
துறவு - துறவுச் சருக்கம்
தொல் - தொல்காப்பியம்
நகரச் - நகரச் சருக்கம்
நவநீதப் - நவநீதப் பாட்டியல்
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
நன் - நன்னூல்
நாட்டு - நாட்டுச் சருக்கம், நாட்டுப் படலம்
நாலடி - நாலடி நானூறு
நான்மணி - நான்மணிக்கடிகை
பக் - பக்கம்
பட்டினப் - பட்டினப் பாலை
படிக் - படிக்காசுப் புலவர்
பழ - பழமொழி நானூறு
பாண்டிக் - பாண்டிக்கோவை
பி - ம் - பிரதி பேதம்
பு - வெ - புறப்பொருள் வெண்பா மாலை
புறநா - புறநானூறு
பெருங் - பெருங்கதை
பொருள் - பொருளதிகாரம்
பொன்வண்ணத் - பொன் வண்ணத்தந்தாதி
மயிலை - மயிலைநாதருரை
மலைபடு - மலைபடு கடாம்
முத்தொள் - முத்தொள்ளாயிரம்
முதுமொழிக் - முதுமொழிக்காஞ்சி
முருகு - திருமுருகாற்றுப்படை
மேற் - மேற்கோள்
யா - வி - யாப்பருங்கல விருத்தி
வி - பா - வில்லிபாரதம்

கணபதி துணை

யாப்பருங்கலக் காரிகை

மூலமும் உரையும்

க. உறுப்பியல்

பாயிரம்

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்

1. (க) **கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்**
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

என்பது (உ) காரிகை. [1]நூல் உரைக்கு மிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும் [2] உரைத்து உரைக்கற் பாற்று.

அற்றேல் இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், (ஙு) பாளித்தியம் என்னும் [3]பாகத இலக்கணமும் (ச) பிங்கலம் என்னும்

(க) கந்தம் மடிவு இல் - மணம் ஒழிதல் இல்லாத. கடிமலர் - புதுமலர். கண்ணார் நிழல் - இடம் மிக்க நிழல். பாவினம் - பாவும் இனமும். சந்தம் - அழகு.

(உ) காரிகை - இலக்கணம் கூறும் கட்டளைக் கலித்துறை.

(ஙு) பாளித்தியம் என்னும் பாகத இலக்கணம் - பாளித்தியம் என்னும் பிராகிருத மொழியின் இலக்கணம்; பிராகிருத மொழிகளுள் ஒன்றாகிய பாளி மொழியின் இலக்கணம் கூறும் நூல்போலும்.

(ச) பிங்கலம் - பிங்கலாசாரியார் செய்தது. சந்தோவிசிதி - யாப்பிலக்கணம். பிங்கலச்சந்தஸ் ஸூத்திரம் என்று வழங்கும். சூத்திரமும் காரிகையுமாக உள்ளது; வேதாங்கமான யாப்பைப்பற்றி உரைப்பது; 'வடநூலுடையாரும் பிங்கலம் முதலாகிய சந்தோவிசிதிகளுள் விருத்தச்

(பிரதிபேதம்) 1. யாதானுமொரு நூலுரைக்கு. 2. எடுத்துரைத்துரைக்கற். 3. பிராகிருத.

[4] சந்தோ விசிதியும்போலக் (ரு) காரிகை யாப்பிற்ருய்க் (சு) குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தமேபோல மகடூஉ முன்னிலைத்தாய், அவையடக்கம் உடைத்தாய், (எ) மயேச்சுரர் யாப்பேபோல (அ) உதாரணம் எடுத்தோதி இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவையே போலவும் (கூ) அருமறையகத்து அட்டகவோத்தின் வருக்கக் கோவையே போலவும் (கo) [5]உரூபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் முதல் நினைப்பு உணர்த்திய [6]இலக்கியத்ததாய் வேதத்திற்கு (கக) நிருத்தமும் வியா

சாதி விகற்பங்களாற் கிடந்த உலகியற் சுலோகங்களின் மிக்குங் குறைந்தும் கிடப்ப இருடிகளாற் சொல்லப்படுவனவற்றை ஆரிடம் என்று வழங்குவர் எனக் கொள்க' (யா. வி. சூ. 93, உரை.)

(ரு) காரிகை யாப்பு - இலக்கண விதிகள் சுலோக உருவத்தில் அமைந்தவை.

(சு) குணகாங்கியம் - இது கன்னட மொழியில் முன்பு வழங்கிய யாப்பிலக்கண நூல்போலும். குணகங்கன் என்னும் அரசனுடைய தொடர்புடையதாக இருத்தலும் கூடும்.

(எ) மயேச்சுரர் யாப்பு: மயேச்சுரர் என்னும் ஆசிரியர் இயற்றிய யாப்பிலக்கணம். யாப்பருங்கலத்துக்கு முன் இருந்த நூல் என்று தெரிய வருகிறது. யாப்பருங்கல விருத்தியுரையில் உரையாசிரியர் அந்நூலிலிருந்து பல சூத்திரங்களை மேற்கோளாகக் காட்டுகிருர்.

(அ) ஆசிரியர் உதாரணம் எடுத்தோதிய காரிகைகள்: 9, 11, 13, 15, 18, 20. 22.

(கூ) வேதத்தின் உட்பிரிவாகிய அஷ்டகங்களின் பகுதிகளாகிய வருக்கங்களின் முதல் நினைப்பைத் தொடர்புபடுத்திச் சொல்லும் கோவை; இதற்கு அநுக்ரமணிகா என்றும் பெயர் உண்டு. 'அந்த முட்பட விருக்கும் விருக்கின் வழியே - யாகி வந்தவவ் வருக்கமும் வருக்க முழுதும், வந்த வட்டகமு மொட்டரிய சங்கிதைகளும் - வாய்மை வேதியர்கடாம்விதி யெனும் வகையுமே (கலிங்கத்துப், இராச. 6.)

(கo) உரூபாவதாரம் - வடமொழி வியாகரண நூல்; இதன் ஆசிரியர் தர்மகீர்த்தி என்பவர்; காலம் கி. பி. 9-ஆம் நூற்றுண்டுக்கும் பிற்பட்டவர் என்பர்; பாணினி செய்த அஷ்டாத்யாயீ என்ற சூத்திரரூபமான வியாகரணத்திற்கு அந்நூல் வியாக்கியானம். நீதக சுலோகம் - முதல் நினைப்பைச் சேர்த்துச் சொல்லும் சுலோகம்.

(கக) நிருத்தம் - வேதங்களுக்குரிய அங்கங்களுள் ஒன்று; வேதத்தில் வரும் சொற்களுக்குப்பொருள் உரைக்கும் நிகண்டு; யாஸ்கர் இயற்றியது.

(பி - ம்.) 4. சந்தோபிசிதியும். 5. உரூபாவலங்காரத்திற்கு. 6. இலக்கண விலக்கியத்ததாய்.

காரணத்திற்குக் (கஉ) காரிகையும், [7]அவிநயர் யாப்பிற்கு (கஙு) நாலடி நாற்பதும் (கச) போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் **யாப்பருங்கலக் காரிகை** என்னும் பெயர்த்து.

இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின், பண்டையோர் உரைத்த தண்டமிழ் [8]யாப்பிற் (கரு) கொண்டிலாத குறிப்பினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவை யோரை (கசு) நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது.

இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோ வெனின், ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகை ஆக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை **அமிர்தசாகரர்** என்னும் ஆசிரியாற் செய்யப்பட்டது.

இந்நூல் எவ்வளவைத்தோ எனின் ஒத்துவகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் [9] தொண்ணூறு கிரந்தமும் இருபத்தெட்டு எழுத்தும் எனக் கொள்க. அவற்றுள் ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர் மெய்யுமாகிய முப்பத்திரண்டு எழுத்தும் எனக் கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும் நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்றும் எனக்கொள்க.

(கஉ) வடமொழியில் இலக்கண நூல்களுக்கு வசனத்தில் பாஷ்யம் உண்டு. அந்தப் பாஷ்யத்துப் பொருளைச் சுருக்கிச் சுலோக ரூபத்தில் புலப்படுத்தும் சில நூல்கள் உண்டு. அவற்றைக் காரிகை என்பர். பாணினீயத்தின் வழி நூலாக ஹரிகாரிகா என்ற நூல் ஒன்று உண்டு. அதனை இயற்றியவர் பர்த்ருஹரி.

(கஙு) அவிநயர் யாப்பு - ஐந்து இலக்கணங்களையும் சொல்லும் அவிநயம் என்னும் நூலின் யாப்பதிகாரம்; அவிநயர் என்னும் ஆசிரியர் இயற்றியது.

(கச) நாலடி நாற்பது - நக்கீரர் இயற்றியதாகச் சொல்வதுண்டு. இந்நூல் நாற்பது வெண்பாக்களால் அமைந்தது போலும்.

(கரு) கொண்டிலாத குறிப்பினோர் - பொருள்விளக்கம் பெறாதவர் என்றபடி; வடமொழி நடை.

(கசு) நகுவித்தல் - மகிழ்வித்தல்.

(பி - ம்.) 7. அபிநயனார். 8. யாப்பைக். 9. தொண்ணூற்றெட்டுக்.

அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும், நிரையசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்தெட்டும் எனக்கொள்க. [10]ஆக, இவ்விரு [11] திற முங்கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டெழுத் தாம் எனக் கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினாறும், நிரையசை முத லாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் எனக் கொள்க. என்னை?

(கஎ) ['அடியடி தோறு மைஞ்சீ ராகி]
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே.'

என்றார் ஆகலின்.

இந்நூலாற் பயன் யாதோ எனின், யாப்பு ஆராய்தல் பயன். யாப்பு ஆராயவே பாத் தாழிசை துறை விருத்தங்களால் ஆக்கப் பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அவற்றின் [12] மெய்ம்மை அறிந்து விழுப்பம் எய்தி இம்மை மறுமை வழு வாமை நிகழ்வாராதலினால் இருமைக்கும் உறுதி பயப்பது யாப்பு எனக் கொள்க.

யாப்பெனினும், பாட்டெனினும், தூக்கெனினும், தொடர் பெனினும், செய்யுளெனினும் ஒக்கும். என்னை?

'யாப்பும் பாட்டுந் தூக்குந் தொடர்பும்,
[13]செய்யுளை நோக்கிற் றென்ப நுணங்கி யோரே.'

என்றார் ஆகலின்.

இந்நூல் [14]உறுப்பிய லோத்துஞ் செய்யுளிய லோத்தும் ஒழிபிய லோத்தும் என மூன்று வகைப்படும். இவ் வோத்தென்ன பெயர்த்தோ எனின், எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடி

(கஎ) பல பிரதிகளில் முதலடி இல்லை. சில பிரதிகளில் பின் னிரண்டடிகளே காணப்படுகின்றன.

(பி - ம்) 10. ஆகவிரு. 11. திறத்தினுங். 12. மேன்மை. 13. செய்யு ளென்று செப்பினர் புலவர். 14. உறுப்பியலும் செய்யுளி லும் ஒழிபியலுமென.

யும் தொடையும் என்னும் ஆறு உறுப்பினையும் உணர்த்திற்றாத லால் [15]உறுப்பிய லோத்து என்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுள் [16]இத்தலைக் காரிகை என்னுதலிற்றோ வெனின், சிறப்புப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. என்னை?

‘வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்’

எனவும்,

‘தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்’

எனவும் சொன்னார் ஆகலின்.

‘கந்தமடிவில்.........தாழ்குழலே’ என்பது - முருகு விரியும் மொய் மலர் அசோகின் கீழ் [17]அருகன் றனது அடி வணங்கி எழுத்தும் அசையுஞ் சீருந் தளையும் அடியுந் தொடையும் பாவும் பாவினமு மாமாறு உரைப்பன், தளிர்புரையுஞ் சிறுமெல்லடித் தகை நெடுங்குழற்றையலாய் என்றவாறு. இது பொழிப்புரை யெனக் கொள்க. என்னை?

‘யொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே’

என்றார் ஆகலின்.

‘கந்த மடிவில்.........இணையடி யேத்தி’ என வணக்கம் சொல்லப்பட்டது; ‘எழுத்.........வினங் கூறுவன்’ என அதி காரம் கூறப்பட்டது.

‘வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் [18]வழுவற வகுத்தே
எடுத்துக் கொண்ட விலக்கண விலக்கியம்
இடுக்க ணின்றி யினிது முடியும்’

என்பவராகலின் ஈண்டு வணக்கஞ் செய்யப்பட்டது.

இனி எழுத்து முதலாகிய எட்டினையுங் காரணக் குறியான் வழங்குமாறு:

(பி - ம்.) 15. உறுப்பிய லென்னும். 16. இக். 17. அருகபரனை யடியிணை. 18. வகுத்தெடுத்துக்கொண்ட.

‘ எழுதப் படுதலி னெழுத்தே யவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே யசையியைந்து
சீர்கொள நிற்றலிற் சீரே சீரிரண்டு
19 தட்டு நிற்றலிற் றளையே யத்தளை
அடுத்து நடத்தலி னடியே யடியிரண்டும்
20 தொடுத்துமன் சேறலிற் றொடையே யத்தொடை
பாவி நடத்தலிற் பாவே பாவொத்
தினமாய் நடத்தலி னினமெனப் படுமே ’

21 என்றார் ஆகலின்.

பந்தம் எனினும் தளை எனினும் ஒக்கும். என்னை ?

‘ பகுத்தெதிர் நிற்றலிற் பந்தந் தளையென
வகுத்தனர் மாதோ வண்டமி ழோரே ?

என்றார் ஆகலின்.

‘பல்லவத்தின் சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே ’ என்பது மகடூஉ முன்னிலை.

ஏகாரம் ஈற்றசை யேகாரம். (க)

அவையடக்கம்

2. (க)தேனார் கமழ்தோங்கன் (உ)மீனவன் கேட்பத்தேண் ணீரரு
காணார் மலயத் தருந்தவன் சோன்னகன் னித்தமிழ்நூல் [விக்
யாணை நடாத்துகின் றேனேன் (ரு)றெனக்கே நகைதருமால்
ஆனை வறிவி னவர்கட் கேன் னுங்கோலேன் னுதரவே.

(க) கேட்ப - கேட்கத் தக்கதாக. கன்னி - அழிவின்மை. நூல் - இலக்கணம். நடாத்துதல் - நிகழ்த்துதல்; ‘ நவநீத னடத்தினனே ’ (நவநீதப். சிறப்.) ‘ என் ஆதரவு எனக்கே நகைதரும்; அறிவின் அவர் கட்கு என்னுங்சொல் ? ’

(உ) பாண்டியன் அகத்தியர் பால் நூல் கேட்டமை ; ‘அன்றகத்தி யன்வாய் உரைதரு தீந்தமிழ் கேட்டோன் ’ (பாண்டிக்.)

(ரு) ‘நன்னு வலர்முக நகைநா ணுமே, என்னு லியன்றவை யியற்று மிந்நூலுள் ’ (நன். சங்கர. உரைச்சிறப். 15-6)

(பி-ம்.) 19. தட்டுற. 20. தொடுத்தன் முதலாயின. 21. எனவரும்.

இ - கை. [1] நூலினது பெருந்தன்மையும் ஆசிரியனது பெருந்தன்மையும் தனது உள்ளக் குறைபாடும் உணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்......று.

[தேன் நிறைந்த மணங்கமழ்கின்ற வேப்ப மாலையைத் தரித்த பாண்டியன் கேட்கத் தெளிந்த அருவி நீரையுடைய சந்தனச்சோலை சூழ்ந்த பொதியமலையில் எழுந்தருளி யிருக்கின்ற அரிய தவத்தினையுடைய முதலாசிரியராகிய அகத்தியமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள் இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கண நூலை, யானும் அவாவினால் எனது புல்லிய நாவைக்கொண்டு சொல்லத் தொடங்கினேன். இது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின், குறைவில்லாத அறிவினை உடையவர்க்கு யாதாகுமோ! எ - று.]

ஏ: அசைநிலை. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'யானு நடாத்து கின்றேன்' என்பதற்கு வேறு பொருள் கூறுவாரும் உளர். (உ)

இதுவுமது

3. (க) சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப் [மாய்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிற
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேவிவ் விருநிலமே.

இ - கை. புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்க முணர்த்...று.

[இ - ள். பனிதோய்ந்த நெடிய (உ) இமயவரை யிடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரியகாக்கைப் புள்ளும்(ங) பொன்னிறம் உற்

(க) சுருக்க மில் கேள்வி - பரந்தகேள்வி யறிவு. துகள் - குற்றம். பருப்பொருள் - தூலப் பொருள்; சிறப்பில்லாதது இது; 'பதற் சொற் பருப்பொருள் பன்னுபு நீக்கிப், பொருட்சொன் னிரப்பும் புலவர்' (பெருங். உ. 4 : 51-2.) மால் - பெருமை. பொருப்பு - மலை.

(உ) இமயமலையைப் பொன்மலை என்றல் மரபு: 'பொற்கோட் டிமயம்' 'பொன்படு நெடுங்கோட் டிமயம்' (புறநா உ. 24, ௩௧: 14-5); 'புள்ளி மால்வரை பொன்னென நோக்கி' [கம்ப. ஆற்றுப். 4.)

(ங) இமயம் சேர்ந்த காக்கை பொன்னிறம் பெறும்: 'கனக மலையருகே, போயின காக்கையு மன்றே படைத்தது பொன்வண்ணமே'

(பி - ம்.) 1. 'நூற் சிறப்பும் ஆசிரியரது'

திருக்கும் என்று பரந்த இவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றந் தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியை யுடைய புலவர்க்கு முன் குற்றமுடைய அறிவில்லாத யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப்பொருளும், சிறந்த நுண் பொருள் ஆம். எ - று.

அன்று, ஓ, ஏ. அசைநிலை.] (௩)

1. எழுத்து

4. **குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்த மெய்யே**
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த [1]வளபு மசைக்குறுப் பாவனவே.

இ. கா. மேலதிகாரம் பாரித்த (க) எட்டனுள்ளும் அசைக்கு உறுப்பாம் [2] எழுத்துக்களது பெயர் வேறுபாடு உணர்த்...று.

குறிலாவன: அ இ உ எ ஒ என இவை என்னை ?

'அ இ உ
எ ஒ என்னு மப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப'
(தொல். எழுத். சூ. 3.)

என்றார் ஆகலின், (உ)

(பொன்வண்ணத். 100); 'பொன்னிறப் புறவுங் கருநிறக் காக்கையும், மன்னுமா லிமய வரைப்புறஞ் சேர்ந்துழி, இருதிறப் பறவைக்கு மொரு நிற னல்லதை, நிறம்வேறு தெரிப்ப துண்டோ' (குமர குருபர. 455 24-7.)

(க.) எட்டாவன: எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, இனம் என்பன.

(உ) 'எகர ஒகரங்கள் புள்ளிபெற் றியலு மென்றார் அகத்திய னார்' என்ற தொடர் பலபிரதிகளில் இங்கே காணப்படுகிறது. வேறு சில பிரதிகளில் இத்தொடர் 'அகரமுதல்' என்ற சூத்திரத்தின் பின் காணப்படுகிறது.

(பி - ம்.) 1. வளவு. 2. என்ற எழுத்துக்களது.

நெடிலாவன : ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என இவை. என்னை ?

‘ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ வென்னு மப்பா லேழும்
ஈரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப’

என்றார் ஆகலின். (தோல். எழுத். சூ. 4.)

ஆவியாவன : அகரமுதல் ஔகார ஈறாய்க் கிடந்த பன்னிரண்டெழுத்தும் எனக் கொள்க. ஆவி யெனினும் உயிர் எனினும் [3] ஒக்கும். என்னை ?

‘(௩) அகரமுத லௌகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப’

என்றார் ஆகலின்.

குறுகிய மூவுயிராவன : குற்றியலிகரமும் குற்றிய லுகரமும் ஐகாரக் குறுக்கமும் என இவை. [என்னை ?

‘அவைதாம், குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமும்
ஆய்த மென்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன’

என்றார் ஆகலின்.] இவை மேலே சொல்லுதும்.

ஆய்தமென்பது அக்கேனம். அக்கேனம் எனினும், ஆய்தம் எனினும், தனிநிலை எனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் ஒக்கும். என்னை ?

‘அக்கேன மாய்தந் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால வைந்து மிதற்கே’

(௪) என்றார் ஆகலின்.

வரலாறு

எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு எனவரும். (௫) என்னை ?

---

(௩) ‘அகரமுதல்’ என்பது சில சுவடிகளில் இல்லை; தோல். எழுத் சூ. 8. அங்ஙனமே அமைந்துள்ளது.

(௪) ஒரு பிரதியில் ‘என்றார் மயேச்சுரர்’ என்று காணப்படுகிறது. இஃது அவிநயனார் சூத்திரம் என்று கூறுவர்; யா. வி. சூ. 2. மேற்.

(௫) இதன்பின் சில பிரதிகளில் ‘அதுவும் சார்பிற்றோன்றும்

(பி - ம்.) 3. ஒக்கும், ‘ஆவிதானே வுயிரெனப் படுமே.’ என்றாராகலின்.

'குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே'

என்றார் ஆகலின். (தொல். எழுத். சூ. 38.)

மெய்யாவன: ககர முதல் னகர ஈறாய்க் கிடந்த பதினெட்டெழுத்தும் எனக் கொள்க. என்னை?

(சூ) 'ககர முதல னகர விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப'

என்றார் ஆகலின்.

மெய் எனினும், உடம்பெனினும், உறுப்பெனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் ஒக்கும். என்னை?

'மெய்யுடம் புறுப்பொற் றிவைதா மொருபொருள்
செய்யு [4]மென்று செப்பினர் புலவர்,'
'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்,'
(தொல். எழுத். சூ. 15.)
'எகர ஒகரத் தியற்கையு மற்றே,'
(தொல். எழுத். சூ. 16.)
'மெய்யி னியக்க மகரமொடு சிவணும்,'
(தொல். எழுத். சூ. 46.)
'மெய்யியிர் நீங்கிற் றன்னுரு வாகும்'
(தொல். எழுத். 139.)

[5] எனவுஞ் சொன்னார் ஆகலின்.

மெய்யே; ஏகாரம்: எண்ணேகாரம். என்னை?

'எண்ணே கார மிடையிட்டுக் கொளினும்
எண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்.'
(தொல். சொல். சூ. 283.)

எழுத்து. அதற்குச் சார்......றெழுத்துக்கு முன்னாக வல்லின வெழுத்திற்குப் பின்னாக வரு மாய்தம்' என்பது காணப்படுகிறது.

(சூ) 'ககர முதல்' என்ற தொடர் சில பிரதிகளில் இல்லை; தொல். எழுத். சூ. 9. அங்ஙனமே உள்ளது. இச்சூத்திரத்திற்குப் பிரதியாகச் சில சுவடிகளில், 'ககரமுத னகர வீறா, மும்மையின் வந்த மூவாறு முடம்பே' என்பதும் 'ககர வொற்றுமுத னகரவொற் றீறாப், பகருமொற் றெழுத்துப் பதினெட்டு மெய்யே' என்பதும் காணப்படுகின்றன.

(பி - ம்.) 4. மென்மனார் தெரிந்திசி னோரே. 5. என்றாராகலின்.

மறுவறு மூவினமாவன: வல்லினம் மெல்லினம் இடையினம் என இவை. வல்லினமாவன : க ச ட த ப ற. மெல்லினமாவன : ங ஞ ண ந ம ன. இடையினமாவன : ய ர ல வ ழ ள. என்னை ?

"வல்லெழுத் தென்ப க ச ட த ப ற'
'மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன'
'இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள'

என்றார் ஆகலின். (தோல். எழுத். சூ. 19-21.)

[6]'மறுவறு மூவினம்' என்று சிறப்பித்த வதனால், அவை உயிர் மெய்யாகிய காலத்தும் அப்பெயரானே வழங்கப்படும் எனக் கொள்க. என்னை ?

'விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்'

என்றார் ஆகலின்.

உயிர் மெய்யாவன : உயிரும் மெய்யுங் கூட்டி உச்சரிக்கப் படா நின்ற பன்னிரு பதினெட்டு இருநூற் றொருபத்தாறெழுத் தும் எனக் கொள்க. என்னை ?

'உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
அம்மூ வாறு முயிரொடு முயிர்ப்ப
இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே,'

'புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே,'

'மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே'

என்றார் ஆகலின். (தோல். எழுத். சூ. 17-18.)

'மைதீர் உயிர்மெய்' என்று சிறப்பித்த வதனால் ஏறிய உயி ரின் அளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க. என்னை ?

'(எ) உயிர்மெய்க் களவு முயிரள வென்ப'

என்றார் ஆகலின். (அ)

(எ) சில பிரதிகளில் இச்சூத்திரத்துக்குப் பதிலாக, 'மெய்யோடி யையினு முயிரிய றிரியா' தோல். எழுத். 10. என்பது காணப்படுகிறது.

(அ) இதன்பின் ஒரு பிரதியில், 'செந்தமிழ் எழுத்து ஆறுவன : 'எகர மொகர மாய்தம் ழகரம், றகர னகரந் தமிழ்ப் பொது மற்றே' எனக் கொள்க' என்ற தொடர் காணப்படுகிறது.

(பி - ம்.) 6. மூவினமென்னாது மறுவறுவென்று.

'மதிமருட்டும் சிறுநுதல் பேர் அமர்க்கண் செய்ய வாய் ஐய நுண்ணிடையாய் எ. து. மகடூஉ முன்னிலை. என்னை ?

'இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
கைப்பறு பேய்ச்சுரையின் காய்' (நாலடி. 116.)

எனப் பிறரும் தடங்கண்ணாய் என்று இடையே (க) மகடூஉ முன்னிலை சொல்லினாரும் உளரெனக் கொள்க.

மதி என்பது ஈண்டுப் [7]பிறை; அஃது,

'(க0) இருகோட் டொருமதி யெழில்பெற மிலச்சினை'
(நக்கீரர் திருவெழுகூற்.)

என்றாற்போலக் கொள்க. அல்லதூஉம், (கக) அறிவினை மயக்குஞ் சிறுநுதன் முதலாகிய உறுப்புக்களை உடையாய் என்றுமாம்.

'அறிஞர் உரைத்த அளபும்' எ - து. புலவராற் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ - று.

அளபெனினும் அளபெடை எனினும் புலுதம் எனினும் ஒக்கும். என்னை ?

[8]'அளபெடை புலுத மாயிரு பெயரும்
அளபெடை யென்ப ரறிந்திசி னோரே'

என்றார் ஆகலின். அவை போக்கிச் சொல்லுதும்.

அசைக்கு உறுப்பாவன எ - து. இப்பதின்மூன்று [9]திறத்தெழுத்தும் அசைக்கு உறுப்பாவன எ - று.

(க) இலக்கணப் பாவில் மகடூஉ முன்னிலை வந்தமைக்கு உதாரணமாக இலக்கியச் செய்யுளில் அது வந்தமையைக் காட்டியது அத்துணைச் சிறப்பன்று போலும்.

(க0) பிறையை மதி என்றமைக்கு இஃது உதாரணம்; மதி - பூர்ண சந்திரன்; பிறையின் இரு நுனிகளையும் கோடு என்றார். இருகோடும் ஒன்றுகூடின் மதியமாம்; 'கோடுகூடு மதியம்' (புறநா. சுஎ : 4.)

(கக) நுதல் அறிவினை மயக்குதல்: 'பிறையென மதிமயக்குறூஉ நுதலும்' (நற். உஉசு); 'ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள், நண்ணாரு முட்குமென் பீடு' (குறள், 1088.)

(பி - ம்.) 7. பிறையை. 8. அளபொடு புலுத, அளபே புலுத; 9. வகை யெழுத்துக்களும்.

ஆவனவே; ஏகாரம்: ஈற்றசை யேகாரம்; தேற்றம் எனி னும் அமையும். என்னை?

'தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே'

என்றார் ஆகலின். (தொல். சொல். சூ. 252.)

'குறினெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமையோ டாய்தம்
இ உ ஐ யென் மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும்'

என்றார் காக்கை பாடினியாரும் எனக் கொள்க.

இனி மூவுயிர்க் குறுக்கமும் அளபெடைகளும் ஆமாறு சொல்லுதும்.

அவற்றுட் குற்றிய லுகரம் வருமாறு: நெடிற்கீழும், நெடி லொற்றின் கீழும், குறிலிணைக் கீழும், குறிலிணை யொற்றின்கீழும், குறினெடிற்கீழும், குறினெடி லொற்றின் கீழும், குற்றொற்றின் கீழும் என்று இவ்வேழிடத்து ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அது குற்றிய லுகரம் என்று வழங்கப்படும் எனக் கொள்க. என்னை?

'நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
(கஉ) றேழ்குற் றுகரக் கிடனென மொழிப'

'(கஙு) எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே'

என்றார் ஆகலின்.

வரலாறு

நாகு, காசு, காடு, காது, காபு, காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகாம் வந்தவாறு.

(கஉ) எழுவகை என்பதைப் பலர் மறுப்பர்: 'இதனை எழென்று கொள்வார்க்குப் பிண்ணாக்கு, சுண்ணாம்பு, ஆமணக்கு முதலியன முடியாமை உணர்க' (தொல். எழுத்து. 406, 320.) சிவஞான முனிவரும் இங்ஙனமே கூறுவர்; நன். சூ. 94.

(கஙு) இது பல்காயனார் வாக்கு என்பர்; யா. வி. சூ. 2, உரை.

நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று என நெடி லொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றிய லுகரம் வந்தவாறு.

வரகு, முரசு, முருடு, மருது, துரபு, கவறு எனக் குறி லிணைக் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு, பொரிச்சு, தெருட்டு, குருத்து, பொருப்பு, சிரற்று எனக் குறிலிணை யொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அசோகு, பலாசு, மலாடு, கொடாது, புதாபு, விராறு எனக் குறினெடிற் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றிய லுகரம் வந்தவாறு.

தமாக்கு, தடாச்சு, பறட்டு, கொடாத்து, புதாப்பு, விராற்று எனக் குறினெடி லொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று எனக் குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

[குற்றிய லுகரவெழுத்து ஆறுவகைப்படும் என்பாருமுளர். அவையாவன : ஈரெழுத்தொரு மொழி, உயிர்த்தொடர்மொழி, இடைத்தொடர் மொழி, வன்றொடர்மொழி, மென்றொடர் மொழி, ஆய்தத்தொடர் மொழி என்றிவை. என்னை ?

‘ ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன் ’

என்றார் ஆகலின்.] (தொல். எழுத். சூ. 406.)

இனிக் குற்றியலிகரத்துக்குச் சொல்லுமாறு :

குற்றியலுகரம் திரிந்தும் திரியாதும் யகரமோடு இயைபின் கண் வந்த இகரம் குற்றிய லிகரமென்று வழங்கப்படும் எ - று. என்னை ?

'(கச) வல்லெழுத் தாறே நெடுவகை யிடத்தும்
உகர மரையாம் யகரமோ டியையின்
இகரங் குறுகு மென்மனார் புலவர்'

'யகரம் வரும்வழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது'

என்றார் ஆகலின். (தொல். எழுத். சூ. 410.)

வரலாறு

நாகியாது, காகியாது, காடியாது, காதியாது, காபியாது, காறியாது என வரும். (கரு) ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

[10] இனி உகரம் திரியாது வந்த குற்றியலிகரம் மியாவென்னும் முன்னிலை யசைச் சொல்லின்கண் மகரம் ஊர்ந்து நின்ற இகரம் குற்றியலிகரமென்று வழங்கப்படும் எ - று. என்னை?

'குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே'

என்றார் ஆகலின். (தொல். எழுத். 34.)

வரலாறு

கேண்மியா, சென்மியா எனக் கொள்க.

இனி ஐகாரக் குறுக்கத்திற்குச் சொல்லுமாறு.

அளபெடுத்தற் கண்ணும் தனியே சொல்லுதற்கண்ணும் இன்றி [11] அல்லாத வழிவந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி (கரு) ஒன்றரை [12] மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகக் குறுகும்; [13] ஐகாரம் குறுகு மிடத்து முதலிடை கடையென்னும் மூவிடத்தும் குறுகும். என்னை?

(கச) இஃது அவிநயச் சூத்திரம் என்பர்; யா. வி. 2, உரை.

(கரு) 'ஒழிந்தனவும்' என்றது ஏழு குற்றுகரங்களில் இங்கே காட்டிய நெடிற்கீழ் உகரங்கள் ஒழிந்த ஏனைய ஆறன்முன் யகரம் வந்து இகரமாகத் திரிந்த உகரங்களை.

(கசு) நன்னூலார் ஐகாரக் குறுக்கத்துக்கு மாத்திரை ஒன்று என்பர். சூ. 99.

(பி - ம்.) 10. இனித் திரியாது வந்த குற்றியலிகரம் வருமாறு. 11. யொழிந்த. 12. மாத்திரையாய்க் குறுகும். 13. அவை குறுகு.

'(கஎ) அளபெடை தனியிரண் டல்வழி ஐஒள
உளதா மொன்றரை தனிமையு மாகும்'

என்றார் ஆகலின்.

வரலாறு

ஐப்பசி, மைப்புரம் எனமொழி முதற்கண் ஐகாரங் குறுகின வாறு; மடையன் உடைவாள் என மொழிக்கிடையின்கண் ஐகாரம் குறுகினவாறு; குவளை, தவளை, திணை, பனை என மொழிக்கிறுதியின்கண் ஐகாரம் குறுகினவாறு.

இனி அளபெடைக்குச் சொல்லுமாறு:

அளபெடை இருவகைப்படும், உயிரளபெடையும் ஒற்றளபெடையும் என (கஅ).

உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்கு மிடத்து ஐகாரம் இகரத்தோடு அளபெடுக்கும்; ஔகாரம் உகரத்தோடு அளபெடுக்கும். ஒழிந்தனவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும் எனக் கொள்க.

'குன்றிசை மொழிவயி னின்றிசை நிரைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே'

'ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்'

என்றார் தொல்காப்பியனார். (எழுத். சூ. 41-2.)

அவை நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும். நான்கிடமாவன: தனிநிலையும், முதனிலையும், இடைநிலையும், கடைநிலையும் என. என்னை?

(கஎ) இஃது அவிநயச் சூத்திரமென்பர்; யா. வி. சூ. 2. உரை; நன். சூ. 59, மயிலை. சில பிரதிகளில் இச்சூத்திரத்திற்கு முன் 'முதலிடை கடையென மூன்றிடத் தொருசொல், அதனொடு குறுகு மைகார வெழுத்தே' என்ற வேறொரு சூத்திரமும் காணப்படுகிறது. இப்புதுச் சூத்திரம் சில பிரதிகளில், 'மொழிமுத லிடைகடை யெனமூன் றிடத்தும், அழியா தைகா ரங்குறு கும்மே' என்றுங் காணப்படுகிறது.

(கஅ) இதன்பின் ஒரு பிரதியில் 'என்னை, உயிரளபெடை யெழுத்தொற்றளபெடையெழுத், தவையிரண் டென்ப வளபெடை யெழுத்தே' என்றார் ஆகலின்' என்ற தொடர் காணப்படுகிறது. இதிற்கண்ட சூத்திரம் வேறொரு பிரதியில் 'உயிரள பெடையு மொற்றள பெடையு மென் றுயிரண் டென்ப வளபெடை தானே' என்று காணப்படுகிறது.

'தனிநிலை முதனிலை யிடைநிலை யீறென
நால்வகைப் படூஉ மளபாய் வருமிடனே'
என்றார் ஆகலின்.

வரலாறு

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ எனத் தனிநிலை யளபெடை வந்தவாறு.

ஆஅலமரம், ஈஇரிலை, ஊஉரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் என முதனிலை யளபெடை வந்தவாறு.

படாஅகை, பரீஇசம், கழூஉமணி, பரேஎசம், வளைஇயம், புரோஒசை, அநௌஉகம் என இடைநிலை அளபெடை வந்தவாறு.

கடாஅ, குரீஇ, கழூஉ, பிலேஎ, கடைஇ, அரோஒ, அரௌஉ என இறுதிநிலை யளபெடை வந்தவாறு.

உயிரளபெடை எழுத்து நோக்க ஏழாம், இடம்நோக்க நான்காம், எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க (கக) இருபத்தெட்டாம் எனக் கொள்க.

இனி ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு.

ஒற்றுக்களுள், ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம் என்னும் பதினோரொற்றும் குறிற்கீழும் குறிலிணைக் கீழும் வந்து அளபெடுக்கும் எனக் கொள்க. என்னை?

'ஙஞண நமன வயலள வாய்தம்
எனுமிவை யீரிடத் தளபெழு மொரோவழி'
'வன்மையொடு ரஃகான் ழஃகா னொழித்தாங்
கன்மை யாய்தமோ டளபெழு மொரோவழி'
என்றார் ஆகலின்.

வரலாறு

மங்ங்கலம் பஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு என இவை குறிற்கீழ் பதினோரொற்றும் அளபெழுந்தவாறு.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, மருண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு,

(கக) நன்னூலார் உயிரளபெடை இருபத்தொன்று என்பர்; சூ. 61.

முரன்ன்று, (உ0) குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு என இவை பதினேரொற்றும் குறிலிணைக் கீழ் அளபெழுந்தவாறு.

(உக) இவ்விருபத்திரண்டு புள்ளி யளபெடையும் செய்யுளிடத்து அரிதாகவல்லது (உஉ) பரவை வழக்கினுள் வாராவெனக் கொள்க. என்னை ?

‘ மாத்திரை வகையாற் [14] றளைதம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும் ’

என்றார் ஆகலின்.

‘அறிஞர் உரைத்த அளபும்’ என்று சிறப்பித்த வதனாற் குற்றெழுத்து ஒரு மாத்திரை, நெட்டெழுத்து இரண்டு மாத்திரை, உயிரளபெடை மூன்று மாத்திரை, ஆய்தமும் மெய்யும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒரோவொன்று அரைமாத்திரை, ஐகாரக் குறுக்கமும் (உந) ஔகாரக் குறுக்கமும் ஒரோவொன்று ஒன்றரை மாத்திரை, ஒற்றளபெடை ஒரு மாத்திரை, ஆய்தக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஒரோ ஒன்று கான்மாத்திரை எனக் கொள்க.

‘ ஒன்றிரண் டொருமூன் றொன்றரை யரைகால்
என்றனர் பொழுதிவை யிமைநொடி யளவே ’

‘ கண்ணிமை [15]நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே ’ (தொல். எழுத். 7.)

(உ0) இதன்பின், ‘குரவை என்ற வழி ஒற்றும் வாகு என்புழி ஆய்தமும் இலவெனினும் செய்யுட்கண் ஓசைகெட்டுழி வருவித்துக் கொள்ளுக’ என்ற தொடர் ஒரு பிரதியிற் காணப்படுகிறது.

(உக) நன்னூலார் புள்ளியளபெடை நாற்பத்திரண்டு என்பர்; சூ. 61.

(உஉ) பரவை வழக்கு - பரந்துபட்ட வழக்கு; என்றது உலக வழக்கு.

(உந) காரிகையில் சொல்லப்படாத ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கங்களுக்கு இங்கே மாத்திரை கூறியது ‘ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்’ என்னும் உத்தியாலென்க. யாப்பருங்கலத்தில் இவை மூன்றனையும் கூட்டி ஆசிரியர் அசைக்கு உறுப்பாம் எழுத்துப் பதினைந்து என்பர். காரிகையில் கூறப்படுவன பதின்மூன்றே.

(பி - ம்.) 14. றளைதப. 15. கைந்நொடி யளவே.

'ஒற்றிற்கு மாத்திரை யொன்றே யளபெழுந்தாற்
றெற்றற் குறிலதுவே யாம்'

'(உச) உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே'

என்றார் ஆகலின். (ச)

2. அசை

5. குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தோற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெளியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

இ - கை. (க) நிரனிறைப் பொருள்கோள் வகையான் (உ) நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றுக்கு உதாரணம் ஆமாறும் உணர்த்...று.

'குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறினெடிலே நெறியே வரினும் நிரைந்து ஒற்று அடுப்பினும் நேர்நிரை என்று அறி' எ - து. குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம் எ - று.

குறில் இணைந்து வரினும், குறினெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறினெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம் எ - று.

(உச) இதன்பின் சில சுவடிகளில் 'அரைநொடி யென்பதியாதென வினவின், நொடிதாக் கூடிய விருவிர லளவே' என்ற சூத்திரம் காணப்படுகிறது.

(க) நிரனிறைப் பொருள்கோள் - பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு நிரையாக (வரிசையாக) நிறுத்தி முறையானே இதற்கு இது பயனிலை என்பது தோன்றக் கூறுவதாம்; நன். சூ. 414.

(உ) செய்யுளுக்கு எழுத்தெண்ணுங்கால் மெய்கள் தள்ளுண்டு போம். அங்ஙனம் கணக்கிட்டு நேரசையைத் தனியசை என்றும் நிரையசையை இணையசை என்றும் காக்கை பாடினியார் முதலியோர் வழங்குவர். இந்நூலாசிரியரும் யாப்பருங்கலத்தில் இப்பெயர்களை ஆளுவர்; யா. வி. சூ. 7, 9.

['நெடில்குறி றனியா நின்றுமொற் றடுத்தும்
நடைபெறு நேரசை நால்வகை யானே'

'குறிலிணை குறினெடி றனித்து மொற் றடுத்தும்
நெறிமையி னுன்காய் வருநிரை யசையே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 6, 8.)]

'வேய்புரையும் மென்தோளி' எ - து. மகடூஉ முன்னிலை.

'உதாரணம் ஆ, ழி, வெள், வேல், வெறியே, சுறு, நிறம், விண்தோய் விளாம் என்று வேண்டுவரே' எ - து. நேரசைக்கு உதாரணம் ஆ, ழி, வெள், வேல் எனவும், நிரையசைக்கு உதாரணம் வெறி, சுறு, நிறம், விளாம் எனவும் சொல்லுவர் புலவர் எ - று.

(ரு) அகலம் உரையிற் கொள்க. அகலம் எனினும் விரித்துரை எனினும் ஒக்கும். என்னை?

'அகல மென்ப தாசறக் கிளப்பின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே'

என்றார் ஆகலின்.

'விண்டோய் விளாம்' என்று சிறப்பித்தவதனால் நேரசை ஓரலகு பெறும், நிரையசை ஈரலகு பெறும் எனக் கொள்க.

வரலாறு

ஆ - எனத் தனிநெடில் நேரசை ஆயினவாறு; ழி - எனத் தனிக்குறில் நேரசை ஆயினவாறு; வெள் - எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு; வேல் - என நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு; வெறி - எனக் குறில் இணைந்து நிரையசை ஆயினவாறு; சுறு - எனக் குறினெடில் இணைந்து நிரையசை ஆயினவாறு; நிறம் - எனக் குறில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு; விளாம் - எனக் குறினெடில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு.

(ரு) அகலம் - விருத்தியுரை; என்றது யாப்பருங்கல விருத்தியை; 12-ஆங் காரிகை யுரையுள்ளும் இங்ஙனமே கூறுவர்; பலவிடங்களில் இங்ஙனமன்றி 'அவை யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க' என்றும் கூறுவர்.

இனி அவற்றுக்குச் செய்யுள் வருமாறு :

‘(ச) போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே.’

இது (ரு) நேரசை நான்கும் வந்த செய்யுள்.

‘(சு) [1]அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
[2]மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.’

இது (எ) நிரையசை நான்கும் வந்த செய்யுள்.

‘குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு [3]மென்றிசிற் பெயரே’

என்றார் தொல்காப்பியனார் (பொருள். 315.)

‘(அ) கோழி வேந்த னேரசை நிரையசை
யாழ்புனல் [4]வாழ்க்கை வெறிசுறு நிறங்குரால்’

என்று உதாரணம் எடுத்தோதினாரும் உளரெனக் கொள்க.

‘குறிலே நெடிலே’ என்னும் இக்காரிகை தன்னையே இலக்கியமாக அலகிடினும் இழுக்காதெனக் கொள்க. (ரு)

(ச) போது - மலர். சாந்தம் - சந்தனம். பொற்ப - பொலிவுபெற. ஆதிநாதன் - முதல் தீர்த்தங்கரர்.

(ரு) நேரசை நான்காவன : குறிலும் நெடிலும் தனித்து வருவன இரண்டு, ஒற்றொடு வருவன இரண்டு.

(சு) வரதன் - அருகபரன். பவம் - பிறப்பு. பரிசு அறுத்தல் - பெருமையை அழித்தல். பணிபவர் பிறப்பின் பெருமையை அழிப்பவர்.

(எ) நிரையசை நான்காவன: குறிலிணையும் குறினெடிலும் தனித்து வருவன இரண்டு, ஒற்றொடு வருவன இரண்டு.

(அ) ஆ, ழி, வெள், வேல் - வெறி, சுறு, நிறம், விளாம் என்று இவ்வாசிரியர் காட்டியவாறு கோழி வேந்தன்......குரால் என்று பிற சொற்களை உதாரணம் காட்டினாரும் உளர் என்பதற்கு இது மேற்கோள். கோ - ழி ; வேந் - தன்—இந்நான்கும் நேரசை. வெறி - சுறு ; நிறம், குரால்—இந்நான்கும் நிரையசை.

(பி - ம்.) 1. அணிகிளரசோ. 2. மணி நிழ லவி. 3. மென்றிசி னோரே. 4. வேட்கை.

3. சீர்

6. ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யானிறுப
வாரசை மென்முலை மாதே [1]வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.

இ - கை. அவ்வசைகளாலாகிய (க) சீர்களது பெயர் வேறுபா டுணர்த்......று.

'ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய' எ - து. (உ) இரண்டசையின் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய வுரிச்சீர் எனப்படும் எ - று.

அகவல் எனினும் ஆசிரியம் எனினும் ஒக்கும். என்னை?

(ங) 'அகவ லென்ப தாசிரியப் [2]பாவே'

என்றார் ஆகலின்.

'வெண்பா வினவாம் நேரசையால் இற்ற மூவசைச்சீர்' எ-து. (ச) நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா வுரிச்சீர் எனப்படும் எ - று.

'நிரையான் இறுப வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்' எ - து. (ரு) நிரையசை இறுதியாகிய மூவசைச் சீர் நான்கும் வஞ்சியுரிச் சீர் எனப்படும் எ - று.

'வார் அசை மென்முலை மாதே' எ - து. மகடூஉ முன்னிலை.

'ஓரசையே நின்றும் சீராம்' எ - து. ஒரோவிடத்து நேரசை

(க) முறியாத சொல் சீராக வருவது சிறப்புடைச்சீர்; முறிந்தசொல் சீராக வருவது சிறப்பில்சீர். 'போது - சாந்தம் - பொற்ப' — இவை சிறப்புடைச் சீர்கள். 'பரிசறுப் - பவரே' இவை சிறப்பில் சீர்கள்.

(உ) நான்காவன: நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்பவை.

(ங) இச்சூத்திரம் சங்கயாப்பு என்ற நூலைச் சேர்ந்தது; யா. வி. சூ. 27, 69, மேற்.

(ச) நேர் இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன: நேர்நேர்நேர், நிரைநேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் என்பன.

(ரு) நிரை இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன: நேர்நேர் நிரை, நிரைநேர் நிரை, நிரைநிரைநிரை, நேர்நிரை நிரை என்பன.

(பி - ம்.) 1. வருபவஞ். 2. பெயரே.

தானே நின்றும் சீராம், நிரையசை தானே நின்றும் சீராம்; அவை (கூ) அசைச்சீர் எனப்படும் எ - று.

'பொது ஒரு நாலசையே' எ - து. நாலசையினலாகிய சீர் (எ) பொதுச்சீர் எனப்படும் எ - று.

'நான்கு' என்பதனை எல்லாவற்ருேடுங் கூட்டி (அ) மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க.

'ஈரசை கூடிய சீரியற் சீரவை
ஈரிரண் டென்ப வியல்புணர்ந் தோரே'

'மூவசைச் சீருரிச் சீரிரு நான்கினுள்
நேரிரு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே'

'நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னறே'

'ஓரசைச் சீருமஃ தோரிரு வகைத்தே'

(யா. வி. சூ. 11-14.)

'(கூ) நாலசை யானு நடைபெறு (க0) மோரசை
சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத் துளவே.

என்ருர் காக்கை பாடினியார். (கூ)

(கூ) இவ்வாசிரியர் யாப்பருங் கலத்தில் அசைச் சீரையும் பொதுச் சீர் என்பர் (சூ. 14.)

(எ) சிறப்பின்மையின் பொதுச்சீர் என்று பெயர் பெற்றது; பொது: சிறப்பின்மையை அறிவிக்கும் சொல்; 'புலமிக் கவரைப் புலமை தெரிதல் .....பொதுமக்கட் காகாவாம்' (பழ.)

(அ) மத்திம தீபம்: ஒரு சொல் இடையிலே நின்று செய்யுளிற் பலவிடத்தும் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளக்குவது. அணி வகைகளுள் இது தீவகவணியின் பாற்படும்; தண்டி. சூ. 40.

(கூ) இது பல்காயனர் செய்தது என்று யாப்பருங்கல விருத்தியாற் றெரிகிறது; சூ. 13, மேற்.

(க0) ஓரசைச் சீர் பெரும்பான்மையும் வெண்பாவின் இறுதிக் கண்ணும் அமபோதரங்க உறுப்பின் இறுதிக் கண்ணும், வஞ்சி விருத்தம் முதலியவற்றின் இடையிலும் வரும்.

சீர்களின் வாய்பாடு.

7. தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே [1]வருபவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.

இ - கை. முறையானே (க) முதல் நான்கு சீர்க்கும் உதாரணம் ஆமாறுணர்த்......று.

'தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீர் அகவற்கு ஆம்'. எ - து. நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை ஆகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீரும் ஆசிரியவுரிச் சீர்க்கு உதாரணமாம் எ - று.

'ஆம் கடை காய் அடையின் வெண்பாவிற்கு' எ - து அவற்றின் கடைக்கண், காய் என்னும் சொற்பெற்றுத் தேமாங் காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் எனவரும் நான்கு சீரும் வெண்பாவுரிச் சீர்க்கு உதாரணமாம் எ - று.

'அந்தம் கனியா வருப வஞ்சிக்கு உரிச்சீர்' எ - து. அவ் வீரசைச் சீரின் இறுதிக்கண், கனி என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என வரும் நான்கு சீரும் வஞ்சியுரிச் சீர்க்கு உதாரணமாம் எ - று.

'வாமாண் கலையல்குன் மாதே' எ - து. மகடூஉ முன்னிலை.

'நாமாண் புரைத்த அசைச் சீர்க்கு உதாரணம் நாள் மலரே' எ - து. 'ஒரோ விடத்து ஆம்' என்று (உ) உரைக்கப்பட்ட ஓரசைச் சீர்க்கு உதாரணம் நாள் என்பதூஉம், மலர் என்பதூஉம் ஆம் எ - று. நாள் என்பது நேரசைச் சீர்க்கு உதாரணம், மலர் என்பது நிரையசைச் சீர்க்கு உதாரணம்.

இதனுள் [2]ஆம் என்பதனை [3]எல்லாவற்றோடுங் கூட்டி மத்திம [4]தீபமாக்கிப் பொருளுரைத்துக் கொள்க.

(க) முதல் நான்கு சீர்: ஆசிரியவுரிச்சீர், காய்ச்சீர், கனிச்சீர், அசைச்சீர், இம் முறை காரிகை 6-இல் கூறப்பட்டுள்ளது.

(உ) இங்ஙனம் முன் காரிகை உரையில் உரைக்கப்பட்டது.

(பி - ம்.) 1. வகுத்த. 2. ஆமாம். 3. யெங்குமொட்டி. 4. தீபமாக.

‘(௬) அம்ம் பவள்வரி நெடுங்கண் ணய்வஞ்சிக்
கொம்ம் பவள்கொடி மருங்குல் கோங்கின்
அரும்ம் பவண்முலை யொக்குமே யொக்கும்
கரும்ம் பவள்வாயிற் சொல்’

என்னும் இப் பொய்கையார் வாக்கினுள் ஒக்கும் என்பதனை [5] மத்திம தீபமாக வைத்து எல்லாவற்றோடுங் கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற் [6] போலக் கொள்க. (எ)

(௬) இது செப்பலோசையிற் சிறிது வழுவி வந்த - இன்னிசை வெண்பா ஆதலின் வெண்டுறை யாகும்.

(பி - ம்.) 5. எங்குமொட்டிப்பொரு. 6. போல விதனுள் ஆமென்பதனையு மெங்கு மொட்டிப் பொருளுணர்ந்து கொள்க.

பொதுச்சீருக்கு வாய்பாடும் அசைச்சீர் பொதுச்சீர்கட்குத் தளைவழங்கு முறைமையும்

8. தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய [1] பூவினங் காய்ச்சீ ரனைய கனியோடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரோக்கு மொண்டளைக்கே.

இ - கை. பொதுச்சீருக்கு உதாரணம் ஆமாறும் அவற்றது எண்ணும், பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வந்தால் தளை வழங்கும் முறைமையும் உணர்த்......று.

‘தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்து உறழ்ந்தால் எண்ணிரு நாலசைச் சீர்வந்து அருகும்’ எ - து. தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கினோடு தண்ணிழல், தண்பூ, நறும்பூ, நறுநிழல், என்னும் நான்கினையும் முறையானே கொணர்ந்து உறழ்ந்தாற் பதினாறு நாலசைச்சீர்க்கு உதாரணமாம் எ - று.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன (க) அதிகாரத்தால் வருவித் துரைக்கப் பட்டன.

(க) அதிகாரமாவது: எடுத்துக்கொண்ட அதிகாரம் இது வாதலின் இச் சூத்திரத்துள் அதிகரித்த பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு

(பி - ம்.) 1. பூவினகாய்.

அருகும் என்பதனால் அச்சீர் செய்யுளகத்து [2] அரிதாக அன்றி வாரா எனக் கொள்க.

வரலாறு

1. தேமாந் தண்ணிழல் 2. புளிமாந் தண்ணிழல்
3. கருவிளந் தண்ணிழல் 4. கூவிளந் தண்ணிழல்

எனவும்,

5. தேமாந் தண்பூ 6. புளிமாந் தண்பூ
7. கருவிளந் தண்பூ 8. கூவிளந் தண்பூ

எனவும்,

9. தேமா நறும்பூ 10. புளிமா நறும்பூ
11. கருவிள நறும்பூ 12. கூவிள நறும்பூ

எனவும்,

13. தேமா நறுநிழல் 14. புளிமா நறுநிழல்
15. கருவிள நறுநிழல் 16. கூவிள நறுநிழல்

எனவுங் கொள்க.

'இனி அவற்றுள் கண்ணிய [3]பூவினம் காய்ச்சீர் அனைய' எ - து. அந் நாலசைச் சீர் பதினாறனுள்ளும் பூ என்னுஞ் சொல் இறுதியாகிய நேரீற்றுப் பொதுச் சீரெட்டும், காய் என்னுஞ் சொல் இறுதியாகிய வெண்பா வுரிச்சீரே போலக் கொண்டு, வருஞ் சீர் முதலசையோடு ஒன்றியது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவும் கொண்டு வழங்கப்படும் எ - று.

'கனியொடு ஒக்கும் ஒண்ணிழற் சீர்' எ - து. நிழல் என்னுஞ் சொல் இறுதியாகிய நிரை யீற்றுப் பொதுச்சீர் எட்டும் கனி என்னுஞ் சொல் இறுதியாகிய வஞ்சி யுரிச்சீரே போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றா விடினும் வஞ்சித் தளையென்று வழங்கப்படும் எ - று.

'அசைச்சீர் இயற்சீர் ஒக்கும்' எ - து. நாள் மலர் என்னும் ஓரசைச்சீர் ஆசிரியவுரிச்சீரே போலக் கொண்டு, வருஞ்சீர்

பொருந்த உரைக்க வேண்டுழி உரைத்தல். இங்கே அதிகரித்த பொருள் தேமா, புளிமா முதலிய நான்கும் எனக் கொள்க.

(பி - ம்.) 2. அருகியன்றி. 3. பூவினகாய்.

முதலசையோடு ஒன்றியது ஆசிரியத் தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் [4]வழங்கப்படும் எ - று.

இயசீற்றெனினும் ஆசிரிய வுரிச்சீரெனினும் ஒக்கும். என்னை ?

‘ (௨) இயற்சீ ரெல்லா மாசிரிய வுரிச்சீர் ’

என்றார் ஆகலின்.

‘ஒண்டளைக்கே’ எ-து. ஒள்ளிய தளை வழங்கு மிடத்து எ-று. ஒண்டளை என்பதனை (௩) இறுதி [5]விளக்காகக் கொள்க.

‘ கண்ணிய பூவினம் ’ என்று சிறப்பித்த வதனால், வெண்பா வினுள் நாலசைச்சீர் வாரா, ஆசிரியத் துள்ளுங் குற்றுகரம் வந் தழியன்றி வாரா, கலியுள்ளும் பெரும்பான்மையுங் குற்றுகரம் வந்தவழியன்றி வாரா, வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும், வஞ்சியுள் இரண்டு நாலசைச் சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும், அல்லனவற்றுட் பெரும்பான்மை யும் ஓரடியுள் ஒன்றன்றி வாரா, (௪) இரண்டு வரினும் கண்ணுற்று நில்லா, [6]பாவின்றுணைப் பாவினத்துட் பயின்று வாரா எனக் கொள்க.

‘ ஒண்ணிழற் சீர் ’ என்று சிறப்பித்தவதனால் நிழல் என் னுஞ் சொல் இறுதியாகிய நிரையீற்றுப் பொதுச் சீர் எட்டும் வஞ்சியுள் அல்லது வாரா எனக் கொள்க.

‘ நாலசை யானடை பெற்றன வஞ்சியுள்
ஈரொன் [7]றிணைதலு மேனுழி யொன்றுசென்
றூதலு மந்த நிரையசை வந்தன

---

(௨) இது காக்கை பாடினியார் செய்ததென்பர் (யா. வி. சூ. 11, மேற்.)

(௩) இறுதி விளக்காவது ஒரு சொல் ஈற்றிலே நின்று செய்யுளிற் பல விடங்களிலும் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளக்கு வது ; இது தீவகவணியின் பிரிவுகளுள் ஒன்று (தண்டி. சூ. 40;) கடை நிலைத் தீவகம் என்றும் வழங்கும்.

(௪) நாலசைச்சீர் இரண்டுவரின் அவற்றை ஈரசைச்சீர் நான்காகக் கொண்டு கணக்கிடுவர் ஆதல் பற்றிக் ‘ கண்ணுற்று நில்லா ’ என்றார்.

(பி - ம்.) 4, கொண்டு வழங்கப். 5. விளக்காகப் பொருளுரைத் துக். 6. பாவினத்துள்ளும் பயின்று. 7. றிணைதலு.

கூறிய வஞ்சிக் [8]குரியன வாகலும்
[9]ஆகுந வெண்ப வறிந்திசி னோரே'

என்றார் காக்கை பாடினியார்.

இனி [10]ஒரு சாரார், வெண்பாவினுள் அளவெழுந்தால் [11]நாலசைப் பொதுச் சீர் வரு மென்பார் உளராயினும், அவ்வாறு அலகிட்டு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டும் பொழுது, செப்பலோசை [12]பிழைக்கு மென்பதூஉம், ஆண்டுச் சீருந்தளை யும் [13]சிதைய வாராமையின் அளபெடுப்பனவும் அல்ல, அளபெடுப்பினும் அளபெடைகள் (ரு) அலகு காரியம் [14]பெறுவனவும் அல்ல வென்பதூஉங் காக்கைபாடினியார் முதலிய தொல்லாசிரியர் துணிவு; அதுவே இந்நூலுடையார்க்கும் உடன்பாடு. (அ)

(ரு) இங்கே அலகு காரியம் பெறுதலாவது அவ்வளபெடையும் ஓரெழுத்தாகக் கருதப்பெற்றுப் பிறிதொரு சீராக நிற்றல். காரிகை 36-இல் 'பல்லுக்குத் தோற்ற' என்ற உதாரண வெண்பாவைக் காண்க.

(பி - ம்.) 8. குணத்தன, குரைத்தன. 9. ஆகுமென்ப. 10. யொருசார். 11. நாலசைச்சீர். 12. யழிந்து பிழைக்கு. 13. சிதையாமையான் அள. 14. பெறுவனவல்ல.

சீர்கட்கு உதாரண முதற் குறிப்பு

9. குன்றக் குறவ னகவல்போன் ஞரம்வேண் பாட்டுவஞ்சிக்
கோன்று முதாரணம் பூந்தா மரையயென்ப வோரைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதேன் ஞரள்ளற் பள்ளத்தி னேடங்கண் வானத்துமே.

இ......கை. முறையானே ஐந்து வகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்பு உணர்த்...று.

'குன்றக் குறவன் அகவல்' எ - து :

'(க) குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்

(க) வரையர மகளிர் - மலைகளிலே திரியும் தெய்வப் பெண்டிர். ஐயள் - அழகுடையவள் ; வியக்கத்தக்கவள் எனினுமாம். சுணங்கு மார்பினள்.

ஐய வரும்பிய முலையள்
செய்ய வாயினண் மார்பினள் சுணங்கே.'

(ஐங்- 255.)

இந் நேரிசை யாசிரியப்பாவி னுள் நான்கு ஆசிரியவுரிச்சீரும் வந்தவாறு கண்டு சொள்க.

'பொன்னாரம் வெண் பாட்டு' எ - து :

'(௨) பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழலக்கை பற்றினேற் - கென்னோ
மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்.'

இந்நேரிசை வெண்பாவி னுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.

'வஞ்சிக்கு ஒன்றும் உதாரணம் பூந்தாமரை' எ - து :

'(௩) பூந்தாமரைப் [1]போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய [2]மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
[3]மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.'

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

இக்குறளடி வஞ்சிப்பாவி னுள் நான்கு வஞ்சியுரிச்சீரும் வந்தவாறு கண்டு கொள்க.

'ஓரசைச்சீர் நன்றறிவாரிற் கயவரும் பாலொடு' எ - து :

'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.'

(குறள், 1072.)

---

(௨) கிள்ளி - சோழன். ஊழ் - வயிரம். கோழி-உறையூர். மனனோடு வாய் எல்லாம் நாடன்பேரே வரும்: நினைப்பும் சொல்லும் கூறப்பட்டன.

(௩) களவயின் - நெற்களத்தில். வினைக்கம்பலை - வேலை செய்யுங் கால் எழும் ஒலி. சிலம்பல் - ஒலித்தல். வயலின் கம்பலைக்கு அயல். ஆனா - நீங்காத.

(பி - ம்.) 1. போஒ தலமர. 2. மணமுரசொடு. 3. மகிழு.

இக்குறள் வெண்பாவினுள் இலர் என நிரையசை சீராயின வாறு கண்டு கொள்க.

‘பாலொடு தேன்கலந் தற்றே [4]பணிமொழி
வாலெயி றூறிய நீர்.’

(குறள், 1121.)

இக்குறள் வெண்பாவினுள் நீர் என நேரசை சீராயின வாறு கண்டு கொள்க.

‘நாலசைச் சீர்க்கு அன்றதென்னுர் அள்ளற் பள்ளத்தி னேடு அங்கண் வானத்துமே’ எ - து:

‘(சு)அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் [5]வியன்குன்றூரன்’

என்னும் பழம் பாட்டினுள் [6]நாலசைப்பொதுச்சீர் வந்தவாறு கண்டு கொள்க.

(ரு) அங்கண்வானத் தமரரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் [7]மங்கையருங்
கடிமலரேந்திக் [8]கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
[9]கொங்கிவரசோகின் [10]கொழுநிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரைய முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்

(சு) அள்ளற் பள்ளம் - சேற்றை யுடைய வயல். வேங்கை வாயில்-புலிப்பொறி பொறித்த கதவினையுடைய வாசல்.

(ரு) வடிவு - அழகு. கதழ்ந்து - அன்பு மிகுந்து. முக்குடை: சந்திராதித்தம், நித்த விநோதம், சகல பாசனம் என மூன்று குடைகள் அருகதேவருக்கு உண்டு. வெங்கண் - கொடிய. விளிவு - அழிவு. அனந்த சதுஷ்டயம் - அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம் அனந்த சுகம் என்னும் நான்கின் கூட்டம். இதனை, சுத்தாத்ம ஸ்வரூபம், என்பர்; இதனை அடைதலே வீடு பேறு. ஆதி - அருகபரன்.

(பி - ம்.) 4. பணிமொழி. 5. வியன்குன்றுரே. 6. ஓரடியினுள் இரண்டு நாலசைச்சீர் வந்தவாறு. இதனைக் குறளடி வஞ்சிப்பாவாக அலகிட்டுக் கொள்க. 7. மடமங்கையருங். 8. கலந். 9. கொங்கவி. 10. குளிர் நிழற்கீழ்.

பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
அனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
வந்தாதுந்துமி நின்றியம்ப
விலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்
தருணெறி நடாத்திய வாதிதன்
றிருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.’

இக்குறளடி வஞ்சிப்பாவினுட் பொதுச்சீர் பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தவாறு கண்டுகொள்க.

இதனுள் நேரீற்றுப்பொதுச்சீர் எட்டும் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவுங் கொண்டு வழங்கப்படும் எ - று. நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியதூஉம் ஒன்றாததூஉம் வஞ்சித்தளை என்று வழங்கப்படும் எ - று.

இவ்வாறு பிறரும் இலக்கியங்களை முதலடுக்கிச் சொன்னாரும் உளரெனக் கொள்க. என்னை ?

‘ (௯) குன்று கூதிர் பண்பு தோழி
விளியசை முத்துற ழென்றிவை யெல்லாந்
தெளிய வந்த செந்துறைச் செந்துறை ’

என்றார் காக்கை பாடினியார். (௯)

(௯) ‘ குன்று கூதிர் ...செந்துறைச் செந்துறை’: ‘ “ ஓங்கெழின் முதலாக், குன்று கூதிர் பண்புதோழி, விளியிசை முத்துற ழென்றிவை யெல்லாம், தெளியவந்த செந்துறைச் செந்துறை ” என்னு மிதனுள், ஓங்கெழில் ’ என்புழி, ‘ ஓங்கெழி லகல்கதிர் பிதிர்துணி மணிவிழ முந்நீர் விசும்பொடு பொருதலற ” என்னும் பாட்டும், ‘ குன்று ’ என்புழி. “ குன்று குடையாக் குளிர்மழை தாங்கினன் ” என்னும் பாட்டும், ‘ கூதிர் ’ என்புழி, “ கூதிர்கொண் டிருடேங்கும் ” என்னும் பாட்டும், ‘ பண்பு ’ என்புழி, “ பண்பகொள் செயன்மாலை ” என்னும் பாட்டும், ‘ தோழி ’ என்புழி, “ தோழி வாழி, தோழிவாழி, வேழமேறி வென்ற தன்றியும் ” என்னும் பாட்டும், ‘ விளியிசை ’ என்புழி, “ விளியிசைப்ப விண்ணக நடுங்க ” என்னும் பாட்டும், ‘ முத்துறழ் ’ என்புழி, “ முத்துற

4. தளை

10. [1]தண்சீர் தனதோன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குறித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மோண்ணுதலே.

இ....கை. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றுதலும் ஒன்றாமையுமாகிய (க) எழுதளையும் ஆமாறுணர்த்......று.

'தண்சீர் தனது ஒன்றில் தன்தளையாம்' எ. து தன்சீர் நின்று தனது வருஞ்சீர் முதலசையோடு (உ) ஒன்றுவது தன்றளையாம் எ - று.

எனவே, ஆசிரியவுரிச்சீர் நிற்ப ஆசிரியவுரிச்சீர் வந்து நேரா யொன்றுவது நேரொன்றாசிரியத்தளை, நிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாம். எ - று. வெண்பாவுரிச்சீர் நிற்பத் தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை யாம் எ - று. வஞ்சியுரிச்சீர் நிற்பத் தன் வருஞ்சீர் முதலசை யோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம் எ - று.

'தணவாத' என்று மிகுத்துச் சொல்லியவதனால், தன் சீர்

முகவந்தேங்கி" என்னும் பாட்டும் குறிப்பினுன் முகனின்ற மொழியான் அறியவந்தன' (பா. சூ. 268, மயிலை.)

செந்துறைச் செந்துறை என்பது செந்துறை விரி மூன்றனுள் ஒன்று. மற்றவை வெண்டுறையும், வெண்டுறைச் செந்துறையுமாம். நாற்பெரும் பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறை எனப்படும். பாடற்கு ஏற்றது செந்துறை யானுற்போல ஆடற்கேற்றது வெண்டுறை எனப்படும். இவற்றின் விரிவை யாப்பருங் கலவிருத்தி ஒழிபியலிற் காண்க.

(க) தளைக்கப்படுவது தளை ; தளை - கட்டு. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றியும் ஒன்றாதும் வரும் தளை எழாம்.

(உ) ஒரு சீர் தன் சீரோடு ஒன்றிவருவதனால் தோன்றுந்தளை நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை என நான்காம்.

(பி - ம்.) 1. தன்சீர்.

நிற்பப் பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றுவதூஉம் தன்றளையே, (ரு) சிறப்பின்றாயினு மெனக் கொள்க.

'வஞ்சி வண்சீர் (ச) விகற்பமும் வஞ்சிக்குரித்து' எ - து. வஞ்சியுரிச்சீர் நிற்பத் தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றாத தூஉம் ஒன்றாத வஞ்சித்தளையாம் எ - று.

'வண்சீர்' என்று சிறப்பித்த வதனால் வஞ்சியுரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையே, சிறப்பின்றாயினு மெனக் கொள்க.

'வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளையாய்விடும்' எ - து. வெண்பா வுரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது கலித்தளையாம் எ - று.

'வல்லோர் வகுத்த' என்று மிகுத்துச் சொன்னவதனால் வெண்பா வுரிச்சீர் நிற்பப் பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் கலித்தளையே, சிறப்பின்றாயினும் எனக் கொள்க.

'வெண்டளையாம் ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும்' எ - து. ஆசிரிய வுரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் இயற்சீர் வெண்டளையாம் எ - று.

'ஒண்சீர்' என்று சிறப்பித்த வதனால் ஆசிரிய வுரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் இயற்சீர் வெண்டளையே, சிறப்பின்றாயினுமெனக் கொள்க.

'ஒண்ணுதலே' எ - து. மகடூஉ முன்னிலை.

'இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசிரி யத்தளை யாகும்'

'இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்'

(ரு) எந்தச்சீர் நின்றதோ அந்தச்சீரே பின்னும் வந்து ஒன்றுவதும் ஒன்றாததும் சிறப்புடைத் தளையாம். நின்றசீர் அன்றி வேற்றுச்சீர் வந்து ஒன்றுவதும் ஒன்றாததும் சிறப்பில் தளையாம்.

(ச) விகற்பம் - வேறுபாடு. ஒன்றிவராமல் வேறுபட்டு வருவது விகற்பமாம். ஒன்றாத வஞ்சித்தளை, இயற்சீர் வெண்டளை, கலித்தளை இம்மூன்றும் விகற்பமாகி வந்தவை.

‘உரிச் சீரதனு ளுரைத்தவை யன்றிக்
கலக்குந் தளையெனக் கண்டிசி னோரே’

‘வெண்சீ ரிறுதியி னேரசை பின்வரின்
வெண்சீர் வெண்டளை யாகு மென்ப’

‘வெண்சீ ரிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாங் கலித்தளை யாகும்’

‘தன்சீ ரிரண்டு தலைப்பெய நம்முளொத்
தொன்றினு மொன்றா தொழியினும் வஞ்சியின்
பந்த மெனப்பெயர் பகரப் படுமே’

என்றார் காக்கைபாடினியாரும் எனக் கொள்க. (௧௦)

தளைகட்கு உதாரண முதனினைப்பு

11. திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளறு வஞ்சிமந் [1]தாநில மேன்பமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே.

இ...கை. அத்தளைகளான் வந்த இலக்கியங்களுக்கு முதனினைப்பு உணர்த்...று.

‘திருமழை யுள்ளாரகவல்’ எ - து:

அகவல்

‘(க) திருமழை தலைஇய விருணிற விசும்பின்
[2]விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
[3]பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.’

இது நிரையொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

அகவல்

‘(உ) உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்

(க) ‘திருமழை......பண்ணமைத்’ மலைபடு. 1-2. திருமழை - செல்வத்தை யுண்டாக்கும் மழை. இமிழ் - முழங்கும். கடுப்ப - ஒப்ப. பண்ணமைந்து - அலங்கரிக்கப்பெற்று. தேரின் அதிர்ச்சிக்கு மேகத்தின் இசை உவமை ‘பண்ணமைந் தவர்தேர்’ காறும் நிரையொன்றாசிரியத்தளை.

(உ) உள்ளார் கொல் - நினையாரோ. சிலம்பி பொதி - சிலந்தியின் நூலால் மூடப்பட்ட. முதலடி நேரொன் றாசிரியத் தளை.

(பி - ம்.) 1. தாநிலம் வந்தமை, 2. மண்ணதி, 3. பண்ணமைத்.

துகில்பொதி பவள மேய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே.'
(ஐங். தனிப். 2.)

இது நேரொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

'சிலை விலங்காகும் வெள்ளை' எ - து:

நேரிசை வெண்பா

'(ங) சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் [4]போது.'

இது வெண்சீர் வெண்டளையானும் இயற்சீர் வெண்டளையானும் வந்த செய்யுள்.

'மருளறு வஞ்சி மந்தாநிலம்' எ - து:

வஞ்சிப்பா

'(ச) மந்தாநில [5]மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
யெனவாங்
கினிதி னொதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே.'

இது (ரு) மயக்கமற வகுத்த வஞ்சித்தளையுள் ஒன்றிய தூஉம் ஒன்றாத தூஉம் வந்த செய்யுள்.

(ங) சிலைவிலங்கு - வில் தோற்றோடுதற்குக் காரணமான. ஒசிய - வளைய. விலங்கிற்று - தழுவுதலினின்றும் நீங்கியது. கார்மாலை - கார் காலத்து மாலை நேரம்.

(ச) மந்தாநிலம் - தென்றல். இறைவன் - அருகபரன். முத லிரண்டடிகளில் ஒன்றிய வஞ்சித்தளையும் மூன்றாமடியில் ஒன்றாத வஞ் சித்தளையும் வந்துள்ளன.

(ரு) மயக்கமற வகுத்த வஞ்சித்தளை - வஞ்சி யுரிச்சீரோடு வஞ்சி யுரிச்சீரே புணருவதனால் வருந்தளை; மயக்கம் - கலப்பு. மயக்கமில்லாத தலித்தளை என்பதற்கும் இங்ஙனமே கொள்க. இவ்வஞ்சிப்பாவின் முதன் மூன்றடிகளிலும் வஞ்சி யுரிச்சீர்களே வந்துள்ளமை காண்க.

(பி - ம்.) 4. போழ்து. 5. வந்தசைப்ப.

['மருளாறு' என்றதனுல் வஞ்சித்தளையால் வந்த வஞ்சிப்பாச் சிறப்புடைத்து.]

'மைதீர் கலியின் தெரிவுறு பந்தம்......செல்வப் போர்க் கதக் கண்ணன்' எ - து:

கலிப்பா

'(சு) செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.'

இது மயக்கமில்லாத கலித்தளையான் வந்த செய்யுள்.

['மைதீர்கலி' யென்றவதனாற் கலித்தளையான் வந்த கலிப்பா (எ) சிறப்புடைத்து.]

'நல்லாய்' எ - து. மகடூஉ முன்னிலை.

'உரிமையின் கணின்மை யோரசைச்சீருக்கு உதாரணமே:' எ-து:

வஞ்சி விருத்தம்

'உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையாற்
பெருமை 6கொன்ற வென்பவே.'

இம் (அ) முச்சீரடி வஞ்சி விருத்தத்துள் 'மழை' என்னும் நிரையசைச்சீர் இயற்சீரேபோல நின்று, வருஞ்சீர் முதலசையோடு

'எனவாங்கு' தனிச்சொல். இனிதி......மகிழ்ந்தே:' சுரிதகம். வஞ்சிப்பா தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று இறுவது.

(சு) ஆழி - சக்கரப்படை. முல்லைத்தார் - வெற்றிமாலை ; பு. வெ. 222. முன்பெல்லாம் வெற்றியையே பெற்றவர் என்றபடி. கொண்மூ - மேகம். மருமம் - மார்பு. ஆழியை யானையில் அழுத்துதல் : 'கொல் யானை யணிநுத லழுத்திய வாழிபோல்' (கலி. கசுச.)

(எ) 'செல்வப்போர்' என்ற இச்செய்யுளே சிறப்புடைய கலிப்பாவுக்கு உதாரணம்.

(அ) வஞ்சிவிருத்தம் முச்சீரடியானே வருவது ஆதலின் 'முச்சீரடி' என்று இங்கே மிகுத்துக் கூறியது என்னையெனின் அசைசீராக வருதல் அரிதாகலின், 'இருசீரடியான் வந்த வஞ்சித்துறையோ இது' என்று மயக்கம் கொள்ளாமைக்கு என்க.

(பி - ம்.) 6. பொன்றுமென்பவே.

ஒன்றாமையின் இயற்சீர் வெண்டளை யாயினவாறும், 'சேய்' என்னும் அசைச்சீர் இயற்சீரேபோல நின்று வருஞ்சீர் முதலசையோடு நேரசையாய் ஒன்றினமையின் நேரொன்றாசிரியத் தளையாயினவாறும் கண்டுகொள்க. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

['உதாரணம்' என்பதனை இறுதிநிலை விளக்கெனக்கொள்க.] (கக)

5. அடி

12. குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

இ.....கை. அத்தளைகளான் வந்த அடிகளது பெயர் வேறுபாடு உணர்த்...று.

'குறள் இரு சீரடி' எ - து. இருசீரான் வந்த அடி (க) குறளடியெனப்படும் எ - று.

'சிந்து முச்சீரடி' எ - து. முச்சீரான் வந்தஅடி சிந்தடியெனப்படும் எ - று.

'நாலொருசீர் அறைதரு காலை அளவொடு நேரடி' எ - து. நாற்சீரான் வந்தஅடி அளவடியென்றும் நேரடியென்றும் வழங்கப்படும் எ - று.

[அளவடியெனினும் நேரடியெனினும் ஒக்கும்] 'அளவொடு நேரடி' என்றவதனால் அளவடி மற்றை யெல்லா வடியினும் சிறப்புடைத்து.

'ஐயொருசீர் நிறைதரு (உ) பாதம் நெடிலடியாம்' எ - து. ஐஞ்சீரான் வந்தவடி நெடிலடியென்று வழங்கப்படும் எ - று.

(க) குறளடி முதலியன காரணக்குறியின : மக்களில் தீரக் குறியானைக் 'குறளன்' என்றும், அவனின் நெடியானைச் சிந்தன்' என்றும், குறியனும் நெடியனும் அல்லாதானை 'அளவிற் பட்டான்' என்றும், அவனின் நெடியானை 'நெடியான்' என்றும், தீரநெடியானைக் 'கழிய நெடியான்' என்றும் வழங்குவர் ஆதலின் இவ்வடிக்கும் இவ்வாறே பெயர் சென்றதெனக் கொள்க

(உ) பாதம் - அடி.

'நெடுமென் பணைத்தோள் கறைகெழு வேற்கண் நல்லாய்' எ - து. மகடூஉ முன்னிலை.

'மிக்க பாதம் கழிநெடிலே' எ - து. ஐஞ்சீரின் மிக்கசீரான் வந்த அடியெல்லாங் கழி நெடிலடி எனப்படும் எ - று.

(௩) அகலம் உரையிற் கொள்க.

'குறளடி சிந்தடி யிருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்
நிரனிறை வகையா னிறுத்தனர் கொளவே'

'கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்
அறுசீர் முதலா வையிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே'

என்பவை யாப்பருங்கலமெனக் கொள்க (சூ. 24, 25.)

'இருசீர் குறளடி சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீ [1]ரைஞ்சீர் நெடிலடி
அறுசீர் கழிநெடி லாகு மென்ப'

'எண்சீ ரெழுசீ ரிவையாங் கழிநெடிற்
கொன்றிய வென்ப வுணர்ந்திசி னோரே'

என்றார் காக்கைபாடினியாரும்.

'(௪) [குறளொரு பந்த மிருதளை சிந்தாம்
முத்தளை யளவடி நாற்றளை நெடிலடி
மிக்கன கழிநெடி லென்றிசி னோரே'

என்றார் பிறருமெனக் கொள்க.] (௧௨)

---

(௫) 'விரிவான பொருளை யாப்பருங்கல விருத்தியுரையிற் கண்டு கொள்ளுக' என்பது இத்தொடரின் பொருள்; காரிகை, 5-அடிக்.

(௪) இச்சூத்திரம் தளையின் கணக்கைக் கொண்டு குறளடி முதலியவற்றை விளக்குகின்றது; பந்தம் - தளை.

(பி - ம்.) 1. ரறுசீரதனி னிழிபு நெடிலடி யென்றிசி னோரே.

அடிகளுக்கு உதாரண முதனினைப்பு

13. **திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து**
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவேன் றன்வினையின்
இரைக்குங் கணிகோண்ட மூவடி வோடிடங் கோங்குமற்றுங்
சரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே.

இ......கை. அவ்வடிகளான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்......று.

திரைத்த விருதுகுறள் சிந்து எ-று:

வஞ்சித்துறை

'(க) திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்'

(சூளா. சீயவதை. 172.)

இது குறளடியான் வந்த செய்யுள்.

வஞ்சிவிருத்தம்

' இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது [1]வேற்றடங் கையினாய்'

(சூளா. சீயவதை. 170.)

இது சிந்தடியான் வந்த செய்யுள்.

'அளவடி தேம்பழுத்து' எ-று:

கலிவிருத்தம்

'(உ) தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரிடும்

(க) திரைத்த சாலிகை - சுருங்கிய கவசம். நிரந்து - நிரம்பி. தேன்கள் இரைப்ப - வண்டுகள் ஒலிப்ப. விரை - நறுமணம். மாலையில் படிந்துள்ள வண்டுகளுக்கு மாலைக்கிடும் கவசம் உவமை.

(உ) இனியநீர் மூன்று - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் என்னும் மூன்றும் கலந்து ஊறிய நீர். அளிந்தன - கனிந்தனவாகிய.

(பி - ம்.) 1. வேற்றடக்கையினாய், வேற்றடங் கண்ணினாய்.

மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே.'

(சூளா. நகரச். 14.)

இது அளவடியான் வந்த செய்யுள்.

'விரிக்கு நெடிலடி வென்றான் வினையின்' எ - து:

விருத்தக் கலித்துறை

'(௬) வென்றான் வினையின் [2]றொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.'

(சூளா. காப்பு.)

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

'வேல்நெடுங் கண்ணி' எ - து. மகடூஉ முன்னிலை.

'இரைக்குங் கனிகொண்ட மூவடி வோடிடங் கொங்கு மற்றும்.........கழிநெடிலே' எ - து:

ஆசிரியவிருத்தம்

'இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய ரினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் [3]குழம்புக டிகழ்ந்தெழ நுடங்கிய வலயத்தாற்
றிரைக்க ரங்களிற் செழுமலர்ச் சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு பொருதல தவியாதே'

(சூளா. கல்யாணச். 51.)

என்பது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

வேரி - தேன். மதுத்தண்டு - கள்ளைப் பொதிந்து வைத்திருக்கும் மூங்கிற் குழாய்; 'நீடமை விளைந்த தேக்கட் டேறல் (முருகு 195.) தவளம் - வெண்மை.

(௬) வினையின் தொகை ஆய வென்றான்: 'வெங்கண் வினைப்பகை விளிவெய்த......அருணெறி நடாத்திய வாதி' (கா. 9. மேற்.) 'திகழும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி': 'வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி' (சீவக. 2.); 'பரிதியி னொருதா னாகி......உயர்ந்த அற்புத மூர்த்தி' (நன். சிறப். 3-5.)

(௭) இரைக்கும் - ஒலிக்கும். பறவைகள்: அறுகாற் பறவை என்பது வண்டுக்குப் பெயர். இலயம் - கலப்பு. இது கங்கையின் வருணனை.

(பி - ம்.) 2. றொகை நீங்க, றொகையாக, றொகையாகி 3. குழம்பு கொண்டு உதிர்ந்தெழ.

ஆசிரியவிருத்தம்

‘(௫) கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு கமழ்கின்ற காந்த ளித
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி யகிலாவி குஞ்சி கமழ [ழால்
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி, னோடு வருவானி தென்கொ றணிவே.’
(சூளா. அரசியற். 197.)

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

ஆசிரியவிருத்தம்

‘(௬) மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலக மூடியெழின் முளைவயிர [4]நாற்றித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டாற்
சேவடிக டாமரையின் சேயிதழ்க டீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளா [5]வாலெமக்குப் புண்ணியர்தங் கோவே.’
(சூளா. துறவு. 64.)

இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

ஆசிரியவிருத்தம்

‘(௭) இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாரையை
யிலங்கு மாழியின் விலங்கியோள்
6 முடங்கல் வாலுளை மடங்கன் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்

(௫) கணி - சோதிடம்: கார்ப்பருவத்தின் வருகையை அறிவிக்க இது மலர்வதனால், ‘கணிகொண் டலர்ந்த வேங்கை’ என்றார்; ‘இள வேங்கை நாளுரைப்ப ‘ (திணைமாலை நூற். 20.) வனமாலை - பலநிற மலரும் தழையும் கொண்டு தொடுத்த மாலை.

(௬) மூன்று வடிவினவாகிய குடை என்க. ‘சுடரோய்’ என்றது அருகபரனை. புலம்கொளா - இவ்விஷயங்கள் எங்கள் அறிவுக்கு எட்டவில்லை.

(௭) தாரையை விலங்கியோள் - தாருகனை அழித்தவள்; ‘சூருடைக் கானக முகந்த காளி தாருகன், பேருரங்கிழித்த பெண்’ (சிலப். ௨௦ : 38-40.) உளைமடங்கல் - சிங்கம். முருக்கியோள் - அழித்தவள்.

(பி - ம்.) 4. நாறித். 5. வாலெமக்கெம். 6. முடங்குவாலுளை.

வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
நடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.'

இஃது ஒன்பதின் சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

ஆசிரியவிருத்தம்

'கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
வங்க பூர்வ மாதி யாய வாதி நூலி
னீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை 7சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே.'

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'மற்றும்' என்றதனாற் பதின்சீரின் மிக்க அடியான் வரப் பெறுவனவும் உளவெனக் கொள்க. அவை யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

(அ) 'கரிக்கைக் கவான் மருப்பு ஏர்முலைமாதர்' எ - து. மகடூஉ முன்னிலை.

இக் காரிகையுள் மகடூஉ முன்னிலையை இரண்டிடத்தே சொல்லியதூஉம் 'விரிக்கு நெடிலடி' யென்று சிறப்பித்ததூஉம் எண்சீரின் மிக்க சீரான் வந்த அடி சிறப்பிலவெனக் கொள்க என்று அறிவித்தற்கெனக் கொள்க.

'இரண்டு முதலா வெட்டீ றாகத்
திரண்ட சீரா னடிமுடி வுடைய
இறந்து வரினு மடிமுடி வுடைய
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே'

என்றார் காக்கை பாடினியார். (கரு)

(அ) கரிக்கை கவான் - யானையின் துதிக்கையைப் போன்ற துடை. மருப்பு - யானையின் தந்தம். ஏர் - அழகு.

(பி - ம்.) 7. சென்று.

அடிவரையறை

14. வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கேள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையோண் [1]போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

இ......கை. அவ்வடி வரையறையான் வந்த நான்கு பாவிற்கும் சிறுமை பெருமை உணர்த்......று.

(க) 'வெள்ளைக்கு இரண்டடி இழிபு' எ - து. வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை எ - று.

'வஞ்சிக்கு மூன்றடி இழிபு' எ - து. வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ - று.

'மூன்றகவற்கு இழிபு' எ - து. ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ - று.

'எள்ளப்படாக் கலிக்கு ஈரிரண்டு ஆகும் இழிபு' எ - து. கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை எ - று.

['இழிபு' எ - து. சிறுமை எ - று.]

'உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை' எ-து. நான்கு பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோரது பொருண் முடிவு குறிப்பே, வரையறையில்லை எ - று.

'ஒண்போது அலைத்த கள்ளக் கருநெடுங்கண் சுரிமென் குழல் காரிகையே' எ - து. மகடூஉ முன்னிலை.

'எள்ளப்படாக் கலிக்கு' என்று சிறப்பித்தவதனால், (உ) துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியால் வருவது தரவு கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளலோசையிற் சிறிது

(க) வெண்பா வெள்ளையென்றும் வழங்கப்படும்; வெள்ளைச் செந்துறை, 'செந்துறைவெள்ளை' போன்ற பெயர்களைக் காண்க.

(உ) துள்ள லோசை சிறிதும் வழுவாது வருதல் - கலித்தளையே அமைந்து வருவது.

(பி - ம்.) 1. போதுலைத்த, போர்தொலைத்த.

வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்றும் தெரிந்து உணரப்படும். எ - று.

'வெள்ளைக் கிரண்டாம் அகவற்கு மூன்று கலிக்கடி நான்கு எள்ளப்படா வஞ்சிப்பாவிற்கு மூன்றும் இழிபு' என்று பாக்களை முறையிற் கூறாது தலை தடுமாற்றமாகக் காரிகை சொல்லவேண்டிய தென்னையோ வெனில், 'தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தல்' என்பது தந்திரவுத்தியாகலின்; அது மயேச்சுரர் முதலாகிய வொருசாராசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்று அறிவித்தற் கென்பதூஉம் ஆசிரியப்பா இரண்டடிச் (ரூ) சுரிதகமாய் வரப்பெறும் என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க. என்னை ?

'வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியெனும்
நுண்பா வுணர்ந்தோர் நுவலுங் காலை
இரண்டு மூன்று நான்கு மிரண்டுந்
திரண்ட வடியின் சிறுமைக் கெல்லை'

என்றெடுத்து ஓதிய மயேச்சுரர் வஞ்சிச் சிறுமைக்குக் காட்டும் பாட்டு :

'பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன் [2]கழல் பரவாதவர் வினைவெல்லார்
அதனால்,
அறிவன தடியிணை [3]பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவியி னெறியே.'

இதனை முச்சீர் வஞ்சியாக அலகிட்டு வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தான் இற்று இரண்டடியான் வந்தவாறு கண்டுகொள்க.

'(சு) ஒருதொடை யீரடி வெண்பாச் சிறுமை
இருதொடை மூன்று மடியி னிழிந்து

(ரூ) சுரிதகம் - கலிப்பா, வஞ்சிப்பாக்களின் ஈற்றில் வரும் உறுப்பு. நீர்ச்சுழிபோலச் சுரிந்து முடிவதனால் சுரிதகம் எனப்படும். சுரிந்து முடிதலாவது முன்வந்த அடியளவிற் சுருங்கி முடிதல்.

(சு) இரண்டடிகொண்டது ஒருதொடை ஆதல்பற்றி 'ஒருதொடை யீரடி' என்றார். தொடை - (மலர்களால்) தொடுக்கப்படும் மாலையே போல, அடிகளால் தொடுக்கப்படுவது. மூன்றும் அடி - மூன்றாகிய

(1ரீ - ம்.) 2. புகழ். 3. பரவி.

வருவன வாசிரிய மில்லென மொழிப
வஞ்சியு மப்பா வழக்கின வாகும்,'
'நான்கா மடியினு மூன்றுந் தொடையினுந்
[4] தாழ்ந்து கலிப்பாத் தழுவுத லிலவே,'
'[5] உரைப்போர் குறிப்பினை [6]நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துரை யில்லென்
றுரைத்தனர் மாதோ வுணர்ந்திசி னோரே,'

என்றார் காக்கை பாடினியாருமெனக் கொள்க. (கச)

அடிகள். மேலே, 'நான்காம் அடியினும் மூன்றும் தொடையினும்' என்று வருவனவற்றுக்கும் இங்ஙனமே பொருள் கொள்க.

(பி - ம்.) 4. தாழ்ந்த. 5. படைப்போர். 6. யன்றிப், நோக்கிப்.

அடிவரையறை உதாரண முதற்குறிப்பு

15. அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
[1]குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
திறத்தா றிதுசெல்வப் போர்ச்சேங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
[2]புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.

இ......கை. [3]அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங் கட்கு முதனினைப் புணர்த்...று.

'அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு' எ - து :

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.' (குறள், 37.)

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'அகவற்கு இழிபு [4]குறித்தாங்கு உரைப்பின் முதுக்குறைந் தாம்' எ - து :

'(க) முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.'

(க) முதுக்குறைந்தனள் - முதற்பூப்படைந்து பருவம் வரய்க்கப் பெற்றாள் என்றபடி ; முதுக்குறைதல் - அறிவுமிகுதல். மலையன் : ஒரு

(பி - ம்.) 1. குறித்தா றுரைப். 2. 'புறத்தான்வரு. 3. அந்நான்கு பாவிற்கும் அடிவரையான். 4. குறித்தா றுரைப்பின்.

இது மூன்றடியான் ஆசிரிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'குறையாக் கலியின் திறத்தாறிது செல்வப்போர் எ - து:

'செல்வப்போர்க் கதக்கண்ணன்......பாய்ந்தொளித்ததே.'

(கா. 11, மேற்.)

இது நான்கடியானே கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'செங்கண் மேதி வஞ்சிச் சிறுமை' எ - து:

'(உ) செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலராருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ்
செழுநீர்,
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லாஞப் பெருவண் மையனே.'

இது தனிச் சொற்பெற்றுச் சுரிதகத்தான் இற்று மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'புறத்தாழ் கருமென் குழல்திருவே அன்ன பூங்கொடியே' எ - து. மகடூஉ முன்னிலை.

வள்ளல்; மலையமான் திருமுடிக்காரி என்றும் சொல்லப்படுவான்; புறநா. கஉரு, கஙிஅ. ஒள்வேல் - ஒள்ளிய வேலைப்போன்ற.

(உ) மேதி - எருமை. பொழிற் காஞ்சி - சோலையிலுள்ள காஞ்சி மரம். ஆஞ - நீங்காத. தலைவனது பரத்தைமையை உள்ளுறை யுவமையால் விளக்கி அவனைப் பழிப்பது இச்செய்யுள்.

6. தொடை

அடிமோனை முதலிய ஐந்து

16. எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு [1]மொழிமுதற்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

அடிமோனை யிணைமோனை பொழிப்புமோனை ஒரூஉமோனை கூழைமோனை மேற்கதுவாய்மோனை கீழ்க்கதுவாய்மோனை முற்றுமோனை யெனவும்,

---

(பி - ம்.) 1. முதன் மொழிக்கண்.

அடியியைபு இணையியைபு பொழிப்பியைபு ஒரூஉவியைபு கூழையியைபு மேற்கதுவாயியைபு கீழ்க்கதுவாயியைபு முற்றியைபு எனவும்,

அடியெதுகை இணையெதுகை பொழிப்பெதுகை ஒரூஉ வெதுகை கூழையெதுகை மேற்கதுவா யெதுகை கீழ்க்கதுவா யெதுகை முற்றெதுகை எனவும்,

அடிமுரண் இணைமுரண் பொழிப்புமுரண் ஒரூஉமுரண் கூழைமுரண் மேற்கதுவாய்முரண் கீழ்க்கதுவாய்முரண் முற்று முரண் எனவும்,

அடியளபெடை இணையளபெடை பொழிப்பளபெடை ஒரூஉ வளபெடை கூழையளபெடை மேற்கதுவாயளபெடை கீழ்க்கதுவா யளபெடை முற்றளபெடை எனவும்,

அந்தாதித்தொடை யிரட்டைத்தொடை செந்தொடை யென வுங் கிடந்ததொடையும் தொடை விகற்பங்களும் ஆமாறு உணர்த் துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள் இக்காரிகை (க) அடிமோனையும், அடியியைபும், அடியெதுகையும், அடிமுரணும், அடியளபெடையும் ஆமாறு உணர்த்......று.

' எழுவாய் எழுத்து ஒன்றின் மோனை ' எ - து. அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும் எ - று.

எழுவாய் எனினும் ஆதி யெனினும் முத லெனினும் ஒக்கும். (க)

மோனை எனினும் முதற்றொடை எனினும் ஒக்கும்.

' இறுதி யியைபு ' எ-து. அடிதோறும் இறுதிக்கண் [2]நின்ற

(க) எல்லாத் தொடை விகற்பங்களிலும் மோனையும் எதுகை யுமே பாக்களுக்கும் பாவினங்களுக்கும் இன்றியமையாத சிறப்பினவாக உள்ளன. எதுகை மோனைகளைப் பற்றிய பிற செய்திகள் 41-ஆம் காரி கையுட் கூறப்படுகின்றன. முரண் தொடையைப்பற்றிய பிற செய்தி கள் 40-ஆம் காரிகையுட் கூறப்படுகின்றன.

(பி. ம்.) 2. நின்றசீரை முதற்சீராகக் கொண்டு அச்சீரின் முடி வெழுத்தானும், அசையானும், சீரானும். சொல்லானும் ஒன்றி.

(உ) எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியையுத் தொடை எனப்படும். எ - று.

'இரண்டாம் வழுவாவெழுத்து ஒன்றின்......எதுகை எ-து. அடிதோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும் எ - று.

(ஊ) 'இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகை' யென்னாது, 'வழுவா எழுத்து' என்று சிறப்பித்தவதனால், இரண்டாம் எழுத்து ஒன்றிவரினும் முதலெழுத்தெல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து, கட்டென்பதற்குப் பட்டென்பது அல்லாது பாட்டென்பது எதுகை யாகாது, காட்டென்பதற்குப் பாட்டென்பது அல்லாது பட்டென்பது எதுகையாகாது எனக் கொள்க.

'மாதே' எ - து. மகடூஉ முன்னிலை.

'மறுதலைத்த மொழியான் வரினும் முரண்' எ - து. அடிதோறும் [3]மொழிமுதற்கட் (ச) சொல்லானும் பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்டொடை எனப்படும் எ - று.

'மொழியான் வரினும்' என்றவும்மையாற் [4]பொருளானும் வரும் என்பதாயிற்று.

'அடிதோறும் எ - து. மத்திம தீபமெனக் கொள்க.

[5] 'மொழிமுதற்கண் அழியாது அளபெடுத்து ஒன்றுவதாகும் அளபெடையே எ - து. அடிதோறும் [6]மொழிமுதற்

(உ) எழுத்தான் ஒன்றிவந்ததற்கு உதாரணம், 'மொய்த்துடன்றவழும்' (கா. உ0. மேற்.) என்பது. சொல்லான் ஒன்றிவந்ததற்கு உதாரணம், 'இன்னகைத் துவர்வாய்' (கா. 18. மேற்.) என்பது.

(ஊ) 'இரண்டாம் வழுவா வெழுத்து' என்று சிறப்பித்த வதனால், அடிக்கு எழுத்து எண்ணுங்கால் மெய்களை விட்டொழித்து எண்ணுவது போலன்றித் தொடைக்கு அவையும் கூட்டிக்கொள்ளப்படும் என்றவாறு.

(ச) சொல் முரணுக்கு உதாரணம் 'சீரடிப் பேரல்குல்' 'சுருங்கிய நுசுப்பு பெருகுவடம்,' 'குவிந்து விரிந்து' போன்ற தொடர்கள். பொருள் முரணுக்கு உதாரணம், 'இருள்பரந்தன்ன' என்ற செய்யுளின் (கா. 18.) முதல் நான்கு அடிகள்.

(பி - ம்.) 3. முதன்மொழிக்கட். 4. பொருளான் வரினுமென்ப. 5. முதன்மொழிக்கண். 6. முதன்மொழிக்கண்.

கண் உயிரானும் ஒற்றானும் அளபெடுத்துத் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத் தொடை எனப்படும் எ - று.

'அழியாது' என்று மிகுத்துச் சொல்லியவதனால் நான்கு உயிரளபெடையும் இரண்டு ஒற்றளபெடையும் தம்முள் ஒன்றி வரத் தொடுப்பது சிறப்புடைத்தென்று உணர்க. தொடை விகற்பத்துள் நான்கு உயிரளபெடையும் இரண்டு ஒற்றளபெடையும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பினும் இழுக்காது.

> 'முதலெழுத் தொன்றின் மோனை யெதுகை
> முதலெழுத் தளவோ டொத்தது முதலா
> அஃதொழித் [7]தொன்றின வாகு மென்ப'

என்றார் பல்காயனார்.

> 'இறுவா யொப்பினஃ தியைபென மொழிப'

என்றார் [8]கையனார்.

> 'மொழியினும் பொருளினு முரணுதன் முரணே'

என்றார் தோல்காப்பியனார் (பொருள். சூ. 40.)

> 'அளபெடைத் [9]தொடைக்கே யளபெடை யொன்றும்'

என்றார் [10]நத்தத்தனாரும் எனக் கொள்க. (கசு)

(பி - ம்.) 7. தொன்றினகு. 8. காக்கை பாடினியார், மயேச்சுரர். 9. தொடையே. 10. நற்றத்தனார்.

அந்தாதி, இரட்டை, செந்தொடை

17. அந்த முதலாத் தொடுப்ப தந்தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமோவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே.

இ......சை. அந்தாதித் தொடையும் இரட்டைத்தொடையும் செந்தொடையும் ஆமாறு உணர்த்...று.

'அந்த முதலாத் தொடுப்பது அந்தாதி' எ - து. அடிதோறும், ஓரடி இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையானும்,

சீரானும், அடியானும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பது (க) அந்தாதித்தொடை எனப்படும் எ - று.

'அடிமுழுதும் வந்த மொழியே வருவது இரட்டை வரன் முறையான்' எ - து. ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத்தொடை யெனப்படும் எ - று.

'வரன் முறையான்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஈற்றெழுத்தொன்று குறையினும் இழுக்காது; அது நாற்சீரின் மிக்கு வரப்பெறுதெனக் கொள்க.

'முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை நாமம் பெறும்' எ - து. மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது (உ) செந்தொடை யெனப்படும் எ - று.

'முந்திய' என்று மிகுத்துச் சொல்லியவதனால் அசையுஞ் சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்தெனக் கொள்க.

'நறுமென் குழல் தேமொழியே' எ - து. மகடூஉ முன்னிலை.

'அடியுஞ் சீரு மசையு மெழுத்தும்
முடிவு முதலாச் [1]செய்யுண் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறியல் வேண்டும்'

[2] எனவும்,

(க) இறுதியடியின் இறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவன மண்டல வந்தாதி. அங்ஙனம் வாராதன செந்நடை யந்தாதி. ஒரு நூலுள் நின்றகவியின் ஈறும் வருங்கவியின் முதலும் ஒன்றிவருவதும் அந்தாதியே. அங்ஙனம் ஒருநூலுள் இறுதிச் செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் ஒன்றிவருவது மண்டலித்து வந்ததாகும். இவ்வித முறையை நான்மணிமாலை, மும்மணிக்கோவை, அந்தாதி நூல்கள் முதலியவற்றிற் காண்க.

(உ) காராட்டை வெள்ளாடு என்றல்போல் செம்மைப்படாத தொடையினைச் செந்தொடை என்றார். செயற்கைத்தொடை விகற்பங்களை வேண்டாது சீர், இசை முதலியவற்றால் இணங்கி வருவதால் செந்தொடையாயிற்று என்பாரும் உளர்.

(பி - ம்.) 1 செய்யுளின். 2. என்றார் நத்தத்தனார். ஒரு சொலடி ....திரட்டையென்றார் மயேச்சுரர்.

'ஒருசொ லடிமுழுதும் வருவ திரட்டை'
எனவுஞ் சொன்னார் மயேச்சுரர்.

'சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை யென்பர்'
என்றார் தொல்காப்பியனாரும் (பொருள், சூ. 412.) எனக் கொள்க.

'அசையினுஞ் சீரினு [3]மிசையினு மெல்லாம்
இசையா தாவது செந்தொடை [4]தானே'
என்றார் [5]காக்கை பாடினியார். (கஎ)

(பி - ம்.) 3. மடியினு. 4. யென்ப. 5. கையனார், பல்காயனார்.

தொடை விகற்பங்களுக்கு முதனினைப்பு

18 மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரேதுகை
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
ஓவிலந் [1]தாதி யுலகுட னுமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவேன் றுகும் [2]பணிமொழியே.

இ......கை. அடிமோனை முதலாகிய தொடைகளான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்...று.

'மாவும் புள் மோனை' எ - து:

ஆசிரியப்பா

'(க) மாவும் புள்ளும் [3]வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.'

(க) மா - விலங்கு. வதி - வழி. விரிந்த பூ என்றது மாலைக் காலத்தில் குவியும் தாமரை முதலியவற்றை. கோதை இங்கே முல்லை மாலை. மாயோள் - மாமை நிறத்தை யுடையவள்; பெண்களுக்கு அழகைத் தருவது இந்நிறம். வாடை துயர்தருதல்: குறுந். கOரு, ககO, உசO, உஎஎ. ருகஎ, ருரு௨.

(பி - ம்.) 1. தாதிக்குலகுட 2. பனிமொழியே. 3. வதுவையிற், வரிவயிற்.

இஃது அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத் தொடை.

'இயைபு இன்னகை' எ - து:

ஆசிரியப்பா

'(உ) இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் [4]தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே.'

இஃது அடிதோறும் [5]இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியியைபுத் தொடை.

'வடியேர் எதுகைக்கு' எ - து:

வெண்பா

'(ரு) வடியேர்க ணீர்மல்க வான்பொருட்குச் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டுள்
இடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை.'

இஃது அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியெதுகைத் தொடை.

'ஏவின் முரணும் இருள் பரந்து' எ - து:

'(சு) [6]இருள்பரந் தன்ன மாநீர் மருங்கின்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்

(உ) கிளவி - சொல். அணங்கு - வருத்தம் தருவது. சுணங்கு - தேமல். அமைத்தோளி - மூங்கிலைப்போன்ற தோள்களை யுடையவள்.

(ரு) வடி - மாவடுவின் பிளவு. கண் - தலைவியின் கண்கள். கவுள் - கன்னம். இடியோசை கேட்ட வேழம் பிடி நடுங்குமே என்று அஞ்சி அப்பிடியின் முதுகைத் தடவியது. சென்றார், கை காணார் கொல்.

(சு) மாநீர் - கடல். அணங்கு - வருத்திக் கொல்லும் தெய்வமகள்.

(பி - ம்.) 4. தோளிக்கூடலு, தோளிகூடலு. 5. இறுதிச் சீர்க்கண் நின்ற எழுத்தானுஞ் சொல்லானும். 6. இருள்விரிந்.

சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே.'

இஃது அடிதோறும் [7]முதற்கண்ணே மறுதலைப்படத் தொடுத்தமையான் அடிமுரண்டொடை.

'ஈண்டு அளபு ஆஅவளிய' எ - து :

பஃறொடை வெண்பா

'(ங) ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ [8]ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றேள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்.'

இஃது அடிதோறும் [9]முதற்கண் [10]அளபெடை ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியளபெடைத் தொடை.

[11]'ஒவிலந்தாதி உலகுடனும்' எ - து :

ஆசிரியப்பா

'(சு) உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனவ்
வாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.'

(ங) ஆஅ அளிய - மிகவும் இரங்கத்தக்கன. அலவன் - நண்டு. பார்ப்பு - குஞ்சு. ஈஇர் இரை - நுண்ணிய உணவு. ஈஇர் அளைப்பள்ளியுள் - ஈரத்தோடு கூடிய சேற்று வளையுள். தூஉந்திரை - தாவுகின்ற அலைகள். மேஎ அலைப்பட்ட - விரும்பி அலைவுக்குள்ளான. அலவன் துஞ்சாது, துயர் உழக்கும், அலவனும் பார்ப்பும் அளிய.

(சு) அறிவன் - அருகபரன். உலகு புண்ணிய மாந்தரது என்ப. இச்செய்யுள் மண்டலவந்தாதி.

(பி - ம்.) 7. சொல்லானும் பொருளானும் முதற்கண்ணே. 8. ரிரைக்சொண். 9. முதற்சீர்க்கண். 10. அளபெடுத் தொன்றி. 11. ஒவிலந்தாதிக்கு.

இது (எ) நான்கு [12] அந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

'ஒக்குமே யிரட்டை' எ - து :

சிந்தியல் வெண்பா

'(அ) ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினுட் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.'

இஃது ஓரடி முழுதும் ஒருசொல்லே வரத் தொடுத்தமையான் இரட்டைத் தொடை.

இறுதிச்சீர் ஏகாரத்தாற் குறைபடினும் இழுக்காது. இது நாற்சீரின் மிக்கு வரப்பெறுமெனக் கொள்க.

'பாவரும் செந்தொடை பூத்தவென்றுரும்' எ - து :

ஆசிரியப்பா

'(க) பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.'

இது மோனை முதலாகிய தொடையுந் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையாற் செந்தொடை.

'பணி மொழியே' எ - து. மகடூஉ முன்னிலை. (கஅ)

(எ) நான்கு அந்தாதித் தொடை : எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் வந்த நான்குமாம்.

(அ) கொட்டிப்பூவின் நிறம் சிறிய எரி ஒக்கும்.

(க) கொடிச்சி - குறிஞ்சி நிலப்பெண். இச்செய்யுள் தொடை விகற்பங்களுள் ஒன்றையும் பெறாமல் அகவலோசையோடு இயைந்து ஆசிரியப்பா ஆனவாறு காண்க.

(பி - ம்.) 12. அந்தாதியும்.

முப்பத்தைந்து தொடை விகற்பம்

19. இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉவாம்
இருசீ ரிடையிட்ட டீறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மோன்றின்முற் றுமேன்ப மற்றவையே.

இ......கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து [1]தொடை விகற்பமும் ஆமாறு உணர்த்......று.

‘இருசீர் மிசை இணையாகும்’ எ - து. முத லிருசீர்க்கண்ணும் மோனை முதலாயின (க) ஐந்தும் வரத்தொடுப்பது இணைத்தொடை எனப்படும் எ - று.

‘பொழிப்பு இடையிட்டு’ எ - து. முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது பொழிப்புத் தொடை எனப்படும் எ - று.

‘ஒரூஉவாம் இருசீர்இடை இட்டது’ எ - து. நடுவிருசீர்க் கண்ணுமின்றி, முதற்சீர்க்கண்ணும் [2]நான்காஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது ஒரூஉத்தொடை எனப்படும் எ - று.

‘ஈறிலி கூழை’ எ - து. இறுதிச்சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்றுசீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத்தொடுப்பது கூழைத்தொடை எனப்படும் எ - று.

(உ) ‘முதல் இறுவாய் வருசீர் அயலிலமேல் கீழ் வகுத்தமைதீர் கதுவாய்’ எ - து.

முதலயற் சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத்தொடுப்பது மேற்கதுவாய்

(க) ஐந்தும்: மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்னும் ஐந்தும்.

(உ) ‘முதல் வருசீர் அயலிலமேல் வகுத்த கதுவாய், இறுவாய் வருசீர் அயலில கீழ்வகுத்த கதுவாய்’ என்று நிரனிறை விரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

(பி - ம்.) 1. தொடையுந் தொடை விகற்பமும், தொடையுமாமாறு.
2. இறுதிச்சீர்க்கண்ணும்.

என்றும் ஈற்றயற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் வழங்கப்படும் எ - று.

இது நிரனிறை எனக் கொள்க. என்னை ?

கடையயன் முதிலயல் கதுவாய் கீழ்மேல்'

என்றார் [3]அவிநயனார்.

முதலயற் சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாய் என்றும் ஈற்றயற் சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாய் என்றும் [4]வேண்டினார் கையனார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் என்பது அறிவித்தற்கு, 'மைதீர் கதுவாய்' என்று விதப்புரைத்தாரெனக் கொள்க.

'வருசீர் முழுவதும் ஒன்றின் முற்றும்' எ - து [5]நான்கு சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது முற்றுத் தொடை எனப்படும் எ - று.

'மற்றவையே' என்பது இறுதி விளக்கெனக் கொள்க.

'சீர் முழுவதும் ஒன்றின் முற்றும்' என்னாது 'வருசீர் முழுவதும்' என்று சிறப்பித்தது, இணைமோனை முதலாகிய (௬) முப்பத்தைந்து தொடை விகற்பமும் அளவடிக் கண்ணே இவ்வாறு வழங்கப்படும் என்பதூஉம், இணையியைபு முதலாகிய விகற்பமும் இறுதிச்சீரே முதற்சீராகக் கொண்டு வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க.

இயைபுத் தொடைக்கு ஏழு விகற்பமும் இறுதிச்சீர் முதலாகக் காட்டினார் கையனார் முதலாகிய ஒருசார் ஆசிரியரெனக் கொள்க.

---

(௬) முப்பத்தைந்து தொடை விகற்பமாவன : மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் ஐந்தனுள் ஒவ்வொன்றும் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்னும் ஏழனோடும் உறழ ஏழாக, மொத்தத்தில் ($7 \times 5 = 35$) முப்பத்தைந்தாதல் காண்க. இவற்றினோடு அடிமோனை முதலிய ஐந்தும் அந்தாதி, இரட்டை, செந்தொடை என்ற மூன்றும் கூட்டத் தொடை விகற்பங்கள் நாற்பத்து மூன்றாயின என்க.

(பி - ம்.) 3. பிறருமெனக் கொள்க. 3. சொன்னார், வழங்குவர். 5. எல்லாச் சீர்க்கண்ணும்.

'மோனை யெதுகை முரணியை பளபெடை
பாத மிணையே பொழிப்போ டொரூஉத் தொடை
கூழை க்துவாய் மிசையதூஉங் கீழதூஉஞ்
சீரிய முற்றெடு சிவணுமா ரவையே,'

'இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே,'

'முதலொடு மூன்றாஞ் சேர்த்தொடை பொழிப்பே,'

'சீரிரண் டிடைதபத் தொடுப்ப தொரூஉத்தொடை,'

'மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே,'

'முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே,'

'ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்,'

'சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே'

(யா. வி. சூ. 34, 42-48.)

என்றார் ஆகலின். (கசு)

தொடை விகற்பங்கட்கு உதாரண முதனினைப்பு

20. மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட ஞமியைபிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
ரூன விகற்பமுந் தாட்டாஅ மரையென்ப தாழ்குழலே.

இ...கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்...று.

'மோனை விகற்பம் அணிமலர்' எ - து :

ஆசிரியப்பா

'(க) அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி (இணைமோனை)
அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி (பொழிப்பு)

(க) கவற்றி - வருந்தச்செய்து. அரிக்குரல் கிண்கிணி - தவளையைப்போல் ஒலிசெய்கின்ற கிண்கிணி என்ற அணி; 'தவளைவாய

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி (ஒரூஉ)
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல் (கூழை)
அரும்பிய கொங்கை [1]யவ்வளை யமைத்தோள் (மேற்கது.)
அவிர்மதி யனைய திருநுத லரிவை (கீழ்க்கது.)
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த (முற்று)
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.'

இதனுள் இணைமோனை முதலாகிய எழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'மொய்த்துடன் ஆம் இயைபிற்கு எ - து:

ஆசிரியப்பா

'(உ) மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே (இணையியைபு)
மற்றத னயலே முத்துறழ் மணலே (பொழிப்பு)
நிழலே யினியத னயலது கடலே (ஒரூஉ)
மாதர் நகிலே வல்லே யியலே (கூழை)
வில்லே நுதலே வேற்கண் கயலே (மேற்கது.)
பல்லே தளவம் பாலே சொல்லே (கீழ்க்கது.)
புயலே குழலே மயிலே யியலே (முற்று)
அதனால்,
இவ்வயி னிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் [2]நிறையே.'

இதனுள் இணையியைபு முதலாகிய எழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'ஏனை யெதுகைக் கினம் பொன்னி னன்ன' எ - து:

பொலன்செய் கிண்கிணி (தருப். ௯சஅ.) அகற்றி - வென்று. அந்நுண், அவ்வளை: அ - அழகு. அமை - மூங்கில். அனுக்கி, அலைத்து - வருத்தி. சிந்தையை அடி, அல்குல், மருங்குல், கொங்கை, தோள், நுதல் அரிவை நோக்கம் திறைகொண்டன. இது தலைவன் பாங்கனுக்குக் கூறியது.

(உ) வல் - சூதாடு கருவி. தளவம் - முல்லை. இவ்வயின் - இத்தகைய சிறந்த இடத்தில்; இடச்சிறப்பு: 1-3 அடி. இவ்வுரு - இத்தகைய சிறந்த உரு; உருச்சிறப்பு: 4-7 அடி. இது பாங்கன் கூற்று; செவ்வி செப்பல்.

(பி - ம்.) அய்வளை. 2. நிலையே.

ஆசிரியப்பா

'(௩) பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் (இணையெதுகை)
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி (பொழிப்பு)
[3] மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய (ஒரூஉ)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி (கூழை)
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை (மேற்கது.)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க் (கீழ்க்கது.)
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய (முற்று)
[4] மயிலேர் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவுதொலைத் தனவே.'

இதனுள் இணையெதுகை முதலாகிய ஏழு விகற்பமும் முறை யானே வந்தவாறு கண்டுகொள்க.

'இனி முரணிற்கு ஆன விகற்பமுஞ் சீறடிப்பேரது' எ - து:

ஆசிரியப்பா

'(௪) சீறடிப் பேரக லல்கு லொல்குபு (இணைமுரண்)
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக் (பொழிப்பு)
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்த (ஒரூஉ)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் (கூழை)
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் (மேற்கது)
இருக்கையு நிலையு மேஞ்செழி லியக்கமுங் (கீழ்க்கது.)
துவர்வாய்த் தீஞ்சொலு மவர்தென [5]முனியாது (முற்று)
என்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே.'

இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழு விகற்பமும் முறை யானே வந்தவாறு கண்டுகொள்க.

'அளபெடையின் தானவிகற்பமும் தாட்டாஅமரை' எ-து:

(௩) வடம் - ஆரம். 1-4 : ஏந்தி, கவற்றி, தாங்கி மன்னிய முலை. துன்னுவித்து - பொருந்தச்செய்து. முலையால் வருத்தி. துன்னுவித்துத் துன்னிய வாணுதலின் கண்கள் எம் அறிவைத் தொலைத்தன.

(௪) இஃது ஓம்படை ; தோழியின் கூற்று.

(பி - ம்.) 3. மின்னவி. 4. மயிலே சாயல். 5. முனியாயென்று.

ஆசிரியப்பா

'(௫) தாஅட் டாஅ மரைமல ருழக்கிப் (இணையளபெடை)
பூஉக் குவளைப் போஒ தருந்திக் (பொழிப்பு)
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய் (ஒரூஉ)
மாஅத் தாஅண் மோஒட் டெருமைத் (கூழை)
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅன் (மேற்கது.)
மீஇ னாஅர்ந் துகளுஞ் சீஇர் (கீழ்க்கது.)
ஏஎ [6]ராஅர் நீஇ ணீஇர் (முற்று)
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா [7]னதே.'

இதனுள் இணையளபெடை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

['தான விகற்பமும்' என்று சிறப்பித்தவதனால் (௬) இரண்டளபெடையும் வரப்பெறும்; வரிற் றம்முண் மயங்காதே வரவொன்றும்.] (௨௦)

'தாழ் குழலே' எ - து. மகடூஉ முன்னிலை.

௧. உறுப்பியல் முற்றும்.

---

(௫) 1-8. எருமை யுழக்கி, அருந்தி, கறித்துப்போய், சோர் பாலை மீன் ஆர்ந்து உகளும் நீர் ஊரன். அலர் - பழிச்சொல்.

(௬) இரண்டளபெடையும்; உயிரளபெடை, ஒற்றளபெடைகள். இவை இரண்டும் இணைமோனை முதலியவற்றில் ஒன்றுடன் ஒன்று கலவாது என்றபடி.

(பி - ம்.) .6 னஅ. 7. னவே.

உறுப்பியல் (க) முதனினைப்புக் காரிகை

கந்தமுந் தேனார் சுருக்கமுங் காதற் குறில்குறிலே
தந்தன வீரசை தேமாவுந் தண்குன்றத் தன்றிருவுங்
கோந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளை யறவெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

(க) இஃது உறுப்பியலில் ஆசிரியர் கூறிய காரிகைகளின் முதனினைப்புக் காரிகை. இஃது அடிவரவென்றும் வழங்கப்படும். இதனை இயற்றியவர் எவர் என்பது விளங்கவில்லை. முதனினைப்பை உணர்த்தும் செய்யுள் பிரதிதோறும் வேறுபட்டிருக்கிறது. அவ்வேறுபாடு வருமாறு :

கலித்துறை

' கந்தமுந் தேனார் சுருக்கங் குறிநெடி லாங்குறிலே
தந்தன வீரசை தேமா தண் குன்றந்தண் சீர்திரும
அந்தண் குறடிரை வெள்ளைக் கறத்தெழு வாயொடந்த
முந்திய மாவிரு மோனை யிருப துறுப்பியலே.'

அடிவர வாசிரியம்

' கந்தந் தேனார் சுருக்கங் குறிநெடில்
குறிலே யீரசை தேமாந் தண்ணிழல்
குன்றந் தண்சீர் திருமழை குறளிரு
திரைத்த வெள்ளை யறத்தா றெழுவாய்
அந்த மாவு மிருசீர் மோனை
என்றிவை [1]யிருபது முறுப்பிய லாகும்.'

(பி - ம்) 1. நாலைந் துறுப்பிய லோத்தே.

உ. செய்யுளியல்

பாவுக்குரிய அடியும் ஓசையும்

21. வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியேன்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தேன் [1]றுரைப்ப வோலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல்சேன் ரேங்குதுள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின்—வெண்பா வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்; மருட்பா எனக் கிடந்த செய்யுட்க ளாமாறு உணர்த்துதலாற் செய்யுளிய லோத்து என்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுள் இத்தலைக் காரிகை என்னுதலிற்றோ எனின்—வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு பாவிற்கும் அடியும் ஓசையு மாமாறு உணர்த்......று.

'வெண்பா அகவல் கலிப்பா அளவடி' எ - து. வெண் பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் [2]நாற்சீரடியான் வரும் எ - று.

'வஞ்சி என்னும் ஒண்பா அடிகுறள் சிந்து என்று உரைப்ப' எ - து. வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரும் என்று சொல்லுவர் புலவர் எ - று.

'வஞ்சி என்னும் ஒண்பா' என்று சிறப்பித்தவதனால் வெண் பாவின் ஈற்றடியும், நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலி வெண்பாவின் ஈற்றடியும முச்சீரடியான் வரும்; இணைக்குற ளாசிரியப்பாவின் இடையடி இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரும்; கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்க வுறுப்பும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும்; அராக வுறுப்பு [3]நாற்சீரின் மிக்கு வருவனவும் உள எனக் கொள்க.

(பி - ம்.) 1. றுரைப்பரொலி. 2. நாற்சீரோரடியான். 3. அளவடி முதலாக எல்லா வடியானும் வரப்பெறும்.

இவை போக்கித் தத்தம் (க) இலக்கணச் சூத்திரத்துள்ளே காட்டுதும்.

[' கலியொடு வெண்பா வகவல் கூறின்
அளவடி யதனு னடக்குமன் னவையே'
' சிந்தடி குறளடி யென்றிரண் டடியான்
வஞ்சி நடக்கும் [4]வழக்கின வாகும்'
என்பது யாப்பருங்கலம் (சூ. 27-26.)]

'ஒலிமுறையே' எ - து. ஓசை முன்பு சொன்ன அடைவே எ - று.

'திண்பாமலி செப்பல் சீர்சால் அகவல் சென்றோங்கு துள்ளல் நண்பா அமைந்த நலமிகு தூங்கல்' எ - து. வெண்பா செப்பலோசையான் வரும், ஆசிரியப்பா அகவலோசையான் வரும், கலிப்பா துள்ளலோசையான் வரும், வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும் எ - று.

'நறுநுதலே' எ - து மகடூஉ முன்னிலை.

'திண்பாமலி செப்பல்' என்று சிறப்பித்தவதனாற் செப்பலோசை மூன்றுவகைப்படும், ஏந்திசைச் செப்பலும் தூங்கிசைச் செப்பலும் ஒழுகிசைச் செப்பலும் என. என்னை ?

' (உ) வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்ப லென்மனார் புலவர்.'

' இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
[5] தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்.'

' வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்.'

[இவற்றுக்குச் செய்யுள் :

' யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.' (குறள், 397.)

(க) இலக்கணச் சூத்திரம் என்றது காரிகைகளை.
(உ) இவை மூன்றும் சங்கயாப்பு என்பது யாப்பருங்கல விருத்தியிற் கண்டது.

(பி - ம்.) 4. வழக்கினையுடைய, வழக்கினதென்ப. 5. மயக்கமில் 'புலவர் தூங்கிசை யென்ப, மயக்கமி றூங்க லெனவகுத் தனரே.

இது வெண்சீர் வெண்டளையான் வந்தமையால் ஏந்திசைச் செப்பலோசை.

> 'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயி றூறிய நீர்.' (குறள், 1121.)

இஃது இயற்சீர் வெண்டளையான் வந்தமையால் தூங்கிசைச் செப்பலோசை.

> 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா வுயிருந் தொழும்.' (குறள், 290.)

இஃது இரண்டு தளையும் விரவி வந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை.]

'சீர் சாலகவல்' என்று சிறப்பித்தவதனால் அகவலோசை மூன்றுவகைப்படும், ஏந்திசை யகவலும் தூங்கிசை யகவலும் ஒழுகிசை யகவலுமென. என்னை ?

> 'நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
> நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
> ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்
> ஏந்த றூங்க லொழுக லென்றிவை
> ஆய்ந்த நிரனிறை யாகு மென்ப'

[இவற்றுக்குச் செய்யுள் :

> 'போது சாந்தம்...........தன்னுவாறே.' (கா. 5, மேற்.)

இது நேரொன்றாசிரியத் தளையான் வந்தமையால் ஏந்திசை யகவலோசை.

> 'அணிநிழ...........பரிசறுப்பவரே' (கா. 5. மேற்.)

இது நிரையொன்றாசிரியத் தளையான் வந்தமையால் தூங்கிசை யகவலோசை.

> 'குன்றக் குறவன்...........சுணங்கே.' (கா. 9. மேற்.)

இஃது இரண்டு தளையும் விரவி வந்தமையால் ஒழுகிசை யகவலோசை.

'சென்றேங்கு துள்ளல்' என்று சிறப்பித்த வதனாற் றுள்ளலோசை மூன்று வகைப்படும், ஏந்திசைத் துள்ளலும் அகவற் றுள்ளலும் பிரிந்திசைத் துள்ளலும் என. என்னை ?

‘ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்.’

‘வெண்டளை தன்றளை [6]யென்றிவை யியையின்
ஒன்றிய வகவற் றுள்ளலென் றோதுப.’

‘தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்
[7] பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்.’

[இவற்றுக்குச் செய்யுள் :

தரவு கொச்சகக் கலிப்பா

‘(௩) முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினனார் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியை[8]யரியா
நிருமலரா [9]யறிவினராய் நிலவுவர்சோ தியினிடையே.’

இது கலித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் துள்ளலோசை.

‘செல்வப்போர்க்...........தொளித்ததே.’

(கா. 11, மேற்.)

இது வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வந்தமையால் அகவற்றுள்ளலோசை.

வஞ்சிப்பா

(௪) ‘குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைய பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிற்றொரீஇத் தாங்குவனத் [10]தொன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு,

௩. சினனார் - அருகபரன், காதி - முத்திக்குப் பாதகமாக உள்ள கர்மங்கள்; அவை ஞானவரணீயம், தரிசன வரணீயம், போகநீயம், அந்தராயம் என்பன. மனமுடையார் சோதியி னிடையே நிலவுவர்.

௪. குடம் - கண்ணனுடிய குடக்கூத்து ; தயிர்த்தாழியுமாம். புறவு - முல்லை நிலம். மரம் பாய்ந்து - கட்டப்பெற்ற மரவேலியை நீக்கிக்கொண்டு. காளைகளுக்கு மணிகட்டுதல் மரபு. ஆன் - பசு. ஏறு ஆர்ப்ப, பாய்ந்து, ஒரீஇ, ஒன்றப்போய், புல்லி முனையும் கான். இது, தோழி தலைவியை ஆற்றுவித்தது.

(பி - ம்.) 6. யென்றிரண்டியையின். 7. பிரிந்து. 8. யெறியா. 9. யருவினராய். 10. தேறப்.

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்,
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.'

இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத்துள்ள லோசை.]

'கண்பா வமைந்த நலமிகு தூங்கல்' என்று சிறப்பித்த வதனாற் றூங்கலோசை மூன்று வகைப்படும், ஏந்திசைத் தூங்கலும் அகவற்றூங்கலும் பிரிந்திசைத் தூங்கலும் என. என்னை?

'ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்
ஒன்று வஞ்சித் தளையே வரினும்
[11] ஆயிரு தளையும் பிறவு மயங்கினும்
ஏந்த லகவல் [12]பிரிந்திசைத் தூங்கலென்
றேய்ந்த நிரனிறை யாகு மென்ப.'

[இவற்றுக்குச் செய்யுள் :

வஞ்சிப்பா

'(ரு) வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்துநர்
நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.'

இஃது ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் துள்ள லோசை.

வஞ்சிப்பா

(சு) 'வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூரறிவனைக்
கானார்

ரு. வனம் - நீர்; அழகுமாம். நாற்கதி : மக்கள், தேவர், நரகர், விலங்கு என்ற பிறவிகள்.

சு. அருள்கூர் அறிவன் - அருகபரன், கான் ஆர் - மணம் மிகுந்த.

(பி - ம்.) 11. என்றிவை யிரண்டும். 12. பிரிதலென்றிவை யாய்ந்த.

மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.'

இஃது ஒன்றாத வஞ்சித் தளையான் வந்தமையால் அகவற் றூங்க லோசை.

'மந்தாநிலம்...........மகிழ்ந்தே.'
(கா. 11, மேற்.)

இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் தூங்க லோசை.]

13 இவற்றிற்கு இலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. (க)

(பி - ம்.) 13. இவற்றுக்கு விருத்தியாப்பருங்.

உதாரண முதனினைப்பு

22. வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ்சேங்
களம்படக் கோன்று கலிக்கரி தாயகண் ணார்கோடிபோற்
றுளங்கிடை [1]மாதே சுறமறி தோன்னலத் தின்புலம்பேன்
[2] றுளங்கோடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

இ - கை. அவ்வடியானும் ஓசையானும் வந்த இலக்கியங் கட்கு முதனினைப்புணர்த்......று.

'வளம்பட வென்பது வெள்ளைக்கு' எ - து:

'(க) வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்; (நாலடி. 103.)

இஃது அளவடியானும் செப்பலோசையானும் வந்தமையான் வெண்பா.

(க) வளம்பட - செல்வம் முதலியவற்றால் பெருமைபெற. போகம் - சுகங்கள். ஆற்றான் அளந்தன - ஊழ்வினையால் அளவு செய்யப்பட்டன. விளங்காயும் களங்கனியும் விதைவிதை வழியே பின்பும் அப்படி பலித்தல் அல்லது திரளவும் கறுக்கவும் செய்தாரில்லை.

(பி - ம்.) 1. மாதர். 2. றுளங்கொண்டு.

'அகவற்கு உதாரணம் செங்களம் படக்கொன்று' எ - து:

'(உ) செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்,
3 கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.' (குறுந். க.)

இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்தமையான் ஆசிரியப்பா.

'கலிக்கு அரிதாய' எ. து:

'(ரு) அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி

இது தரவு.

(1) அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே.

(2) இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீய்ந்த வுலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்

(உ) கோல் - திரண்ட. கழல் தொடி - கழலவிட்ட வீரவளை. சேஎய் - முருகன். அம்பையும் யானையையும் வளையையுமுடைய சேய். குருதிப்பூ - செந்நிறமலர். குலை - பூங்கொத்து. காந்தட்டு - காந்தளையுடையது. தோழி கையுறை மறுத்தது இது.

(ரு) அருளியோர்க்கு. தம்மை அருளவந்த அந்தணர் தாபதர் முதலியவர்களுக்கு. தெறுதல் - அழித்தல். புரிவு அமர் - மனம் பொருந்துதல் அமைந்த. 'பொருள் அளித்தலும் தெறுதலும் புணர்ச்சியும்' தரும் என. வலிப்பல் - துணிவேன். (1) துடி அடிக்கயம் - துடிபோலும் அடியையுடைய யானைக்கன்றுகள். (2) உலவை - காய்ந்த மரக்கொம்புகள். (3) கல் - மலை. வேய் - மூங்கில். கனைகதிர் - செறிந்த சூரிய கிரணங்கள். இனைநலம் - தலைவன் தலைவியை எண்ணி வருந்துவதற்குக் காரணமான நலங்கள்; இனைதல் - வருந்துதல். மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்தம்.

(பி - ம்.) 3. கழறொடீஇச்.

அன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே.

(3) கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்ற ரக்காட்டுள்
இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்

[4] இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.' (கலி. கக.)

இது சுரிதகம்.

இஃது அளவடியானும் துள்ளலோசையானும் வந்தமையால் கலிப்பா.

'கண்ணார் கொடிபோல் துளங்கிடை மாதே' எ - து. மகடூஉ முன்னிலை.

'சுறமறி தொன்னலத்தின் புலம்பென்று உளங்கொடு நாவலர் ஓதினர் வஞ்சிக்குதாரணம்' எ - து:

'(ச) சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
என வாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே.'

OFFICE OF THE REGISTRAR
12 MAY 194
MADRA

இஃது இருசீரடியானும் தூங்கலோசையானும் வந்தமையால் [5]குறளடி வஞ்சிப்பா.

(ச) சுற - சுறாமீன். மறிவன - துள்ளுவன. இறவு - மீன்வகைகளுள் ஒன்று. கிடங்கு - அகழி. பணை - வயல்.

(பி - ம்.) 4. இனநல. 5, வஞ்சிப்பா.

'(ஞ) தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
இன்னலத்தகை யிதுவென்ன வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப்பெரிதும்
கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் [6]சேணிவந் தற்றே.'

இது முச்சீரடியானும் தூங்கலோசையானும் வந்தமையால் [7]சிந்தடி வஞ்சிப்பா.

'உதாரணமே' எ - து. இறுதி விளக்காகக் கொள்க. (உ)

(ஞ) புலம்பு - தனிமை. பரிவு - துன்பம். அஞர் - துன்பம். பொருள் வயிற் பிரிந்துபோகும் தலைவனுக்குத் தோழி சொல்லியது இது.

(பி - ம்.) 6. சேணிகந். 7. வஞ்சிப்பா.

குறள்வெண்பா, நேரிசைவெண்பா

23. ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூஉய்ச்சேப்ப லோசைகுன்று
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெரிசுரி பூங்குழ னேரிழையே.

இ - கை. குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, [1]நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும்; நேரிசை யாசிரியப்பா, இணைக்குற ளாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா எனவும்; நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும்; குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா, எனவும்; புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா எனவுங் கிடந்த பாவிகற்

(பி - ம்.) 1. சிந்தியல்வெண்பா வெனவும்.

பங்களுள், செப்பலோசைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்டளை'தட்டு, வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் இறும் வெண்பாவினை (க) அடியானும் ஓசையானுந் தொடையானும் [2]பெயர் வேறுபாடுணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள் இக்காரிகை குறள்வெண்பாவும், இருகுறள் நேரிசை வெண்பாவும், ஆசிடை நேரிசை வெண்பாவும் ஆமாறுணர்த்......று.

'ஈரடி வெண்பாக்குறள்' எ - து. இரண்டடியால் வரும் வெண்பா குறள் வெண்பா எனப்படும் எ - று. (உ) என்னை?

> 'தொடையொன் றடியிரண் டாகி வருமேற்
> குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே'

என்றார் காக்கை பாடினியாரும் எனக் கொள்க.

வரலாறு

> 'உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
> கச்சாணி யன்ன ருடைத்து.' (குறள், 667.)

> 'உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
> கடையரே கல்லா தவர்.' (குறள், 395.)

இவை இரு (ங) விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்த குறள் வெண்பா.

'குறட்பா இரண்டாய் இடைக்கட் சீரியவான் றனிச் சொல்லடி மூஉய்ச் செப்பலோசை குன்றாது ஓரிரண்டாயும் ஒரு விகற்பாயும் வருவதுண்டேல் நேரிசையாகும்' எ - து. இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச் சொல்லால்

(க) அடியாற் பெயர் பெற்றவை குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா. ஓசையாற் பெயர் பெற்றவை நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா. தொடையாற் பெயர்பெற்றது பஃறொடை வெண்பா.

(உ) இதற்குமுன் 'அவை இனக்குறள் வெண்பாவும் விகற்பக் குறள் வெண்பாவும் என இரண்டாம்' என்ற தொடர் ஒரு பிரதியிற் காணப்படுகின்றது. இனக்குறள் வெண்பா என்பது ஒரு விகற்பத்தால் வருவது.

(ங) விகற்பம் - இங்கே எதுகை வேறுபாடு.

(பி - ம்.) 2. வேறுபாடுணர்த்.

அடிநிரம்பிச் செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பாய்க் கடை யிரண்டடியும் மற்றொரு விகற்பாய் வரினும் நான்கடியும் ஒரு விகற்பாய் வரினும் அவை இரு குறணேரிசை வெண்பா எனப்படும் எ - று. என்னை?

'குற்றிய லுகர [3]முதற்குறள் வெண்பா
முற்றி னிருகுற ணேரிசை யாகும்'

என்றார் ஆகலின்.

வரலாறு

'(ச) தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்.'

'(ரு) அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலை யார்காய்ந்தா லென்செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு.'

இவை இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லால் அடிநிரம்பிச் செப்பலோசை வழுவாது இருவிகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்தமையால் இருகுறணேரிசை வெண்பா.

'சீரிய வான்றனிச் சொல்' என்று சிறப்பித்தவதனால் முதற்குறட் பாவினோடு தனிச்சொல் இடை வேறுபட்டு விட்டிசைப்பின், ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படப் (சா) பற்றுசிட்டு விளக்கினாற்போல, முதற் குறட்பாவின் இறுதிக்

(ச) தடம் - குளம். தாது - பூந்தாது. அலவுன் - ஆண் நண்டு. பூழிக்கதவு - புழுதியாகிய கதவு. பெடைபுலந்து கதவடைத்தது. ஊழி நடாயினான் - ஊழிக்காலம்வரை ஆணை செலுத்துபவன்.

(ரு) வரைகீண்டு - மலையைக் கல்லிப் பெயர்த்து. வரை வயிரம் - வயிரம்பற்றிய மூங்கில்.

(சா) பற்றுசு - பொற்கொல்லர் நகைகளுக்கு இடும்பொடி; இராகி எனவும் படும்.

(பி - ம்.) 3. விறுதி முதற்குற, ளூற்றிடி னிருகுற ணேரிசை வெண்பா.

கண் ஒன்றும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவனவும் உள; அவை ஒருசாராசிடை நேரிசை வெண்பா எனக் கொள்க.

வரலாறு

'(எ) தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னற்றமே தானுறும்—தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியெங்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து.'

'(அ) கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா— [4]ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.' (நாலடி. 250.)

இவை [5]இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லாய் இடை வேறுபட்டு முறையே இரண்டசையானும் ஓரசையானும் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசைவெண்பா.

'(க) ஆர்த்த வறிவின ராண்டிளைஞ ராயினும்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.' (நாலடி. 351.)

'(கO) வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்

(எ) துவலை - துளி. சேவடி நாறும்.

(அ) கருமம் - பொருளீட்டும் தொழில்கள். உள்படா - உள்பட்டுச் செய்து. துவ்வா - நுகர்ந்து. செய்யா - செய்து. அறம்பொருள் இன்பம் மூன்றும் கூறப்பட்டன. பட்டினம் - கடற்கரையூர்.

(க) ஆர்த்த - மனத்தின்கண் பிணிப்புண்ட. ஆண்டு - பிராயம். மூத்தொறும் - முதிருந்தோறும். எருவை - நாணல் சாதி. போத்து - உட்புரை; உள்ளே போலாக இருப்பது.

(கO) வஞ்சியேன் - வஞ்சி என்னும் ஊரினேன்; வஞ்சனை செய்யேன் என்பது குறிப்புப் பொருள். வஞ்சியாய் - பெண்ணே. வஞ்சியார்கோ - வஞ்சிநகரில் உள்ளவர்களுக்குத் தலைவன்; சேரன் என்றபடி.

(பி - ம்.) 4. ஒரு முறையே. 5. முதற்குறட் பாவினோடு தனிச்சொல் லிடை வேறுபட்டு நின்று இரண்டசை.

வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.'

இவை முதற்குறட்பாவின் இறுதிக்கண், முறையே ஓரசை, யானும் ஈரசையானும் ஆசிட்டு ஒரு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

'நெரிசுரி பூங்குழல் நேரிழையே' எ-து. மகடூஉ முன்னிலை.

'வெண்பா வகவல் கலிப்பா அளவடி' என்னுங் காரிகையுள் வெண்பாச் செப்பலோசையால் வருமெனக் கூறி ஈண்டுச் செப்பலோசை குன்றுதென்றது கூறியது கூறிற்றாகாது; அஃது ஒரு சார் பிறபாக்களைத் தத்தம் உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும் பொழுது தத்தம் ஓசையிற் சிறிது வழுவி வருவனவும் உள வாயினும், வெண்பாச் செப்பலோசையிற் சிறிதும் வழுவலாகா தென்பது யாப்புறுத்தற் பொருட்டாகவும், செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த நேரசை இன்னிசை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்டுறைப்பாற்படுத்து வழங்கினும் இழுக்கா தென்பது அறிவித்தற்கும் எனக் கொள்க. என்னை ?

'கூறியது கூறினுங் குற்ற மில்லை
வேறொரு பொருளை விளக்கு மாயின்'

என்றார் ஆகலின்.

'தத்தம் பாவினத் தொப்பினுங் குறையினும்
ஒன்றொன் றொவ்வா வேற்றுமை வகையாற்
பாத்தம் வண்ண மேலா வாகிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும்.'

'குறட்பா விரண்டடி நால்வகைத் தொடையான்
முதற்பாத் தனிச்சொலி னடிமூஉ யிருவகை
விகற்பி [6]னடப்பி னேரிசை வெண்பா'

என்றார் அவிநயனார்.

'இரண்டா மடியி னீற்றோரூஉ வெய்தி
மூரண்ட வெதுகைய தாகியு மாகா

(பி - ம்.) 6. நடத்த னேரிசை.

திரண்டு துணியா யிடைதனி 7போழ்ந்தும்
நிரந்தடி நான்கின நேரிசை வெண்பா'

என்றார் காக்கை பாடினியார்.

['உருவுகண் டெள்ளா வுடையார் குறண்மட வாய்தடமண்
டரிய வரைகீண் டிருகுற ணேரிசை தாமரையின்
கருமமு மார்த்தவும் வஞ்சியுங் காமர் தனிச்சொன்முன்னு
நெரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே.'

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே குறள்வெண்பாவிற்கும், இருகுறணேரிசை வெண்பாவிற்கும், ஆசிடை நேரிசைவெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.] (ந)

(பி - ம்) 7. போழ.

இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா

24. ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று [1]நிகழ்வது பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே.

இ - கை. இன்னிசை வெண்பாவும் பஃறொடை வெண்பாவுமாமாறு உணர்த்......று.

'ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி நடப்பின் அஃது இன்னிசை துன்னும்' எ - து. ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வந்து நான்கடியாய்த் தனிச்சொலின்றி நடப்பின் அஃது இன்னிசை வெண்பா எனப்படும் எ - று.

வாலாறு

'(க) வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணாள்மேல் வைகுதல்
[2] வைகலை வைத்துணரா தார்.' (நாலடி. 39.)

(க) வைகலும் வைகல் - நாள்தோறும் கழிவு. வைகலை - நாட்களை. வைகும் என்று - கழியும் என்று. பொழுது போக்கலை இன்புறவாகக் கருதுவர் என்றபடி.

(பி - ம்.) 1. நிகழ்வ. 2- வைகலும்.

'(உ) தகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கா லொட்டப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.' (நாலடி. 2.)

இவை நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

'(௩) கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் [3]தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.' (நான்மணி. 18.)

'(ச) இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.' (நாலடி. 36.)

இவை நான்கடியாய்த் தனிச் சொலின்றிப் பல விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா. ஒன்றல்லவெல்லாம் பல என்பது தமிழ் நடையாகலின். என்னை?

'ஒன்றல் லவைபல தமிழ்நடை வடநூல்
இரண்டல் லவைபல வென்றிசி னோரே'

என்றார் ஆகலின்.

'ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி நடப்பின் அஃது இன்னிசை' என்றது 'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தால் வருவனவும், அடிதோறும் ஒரூஉத்தொடைபெற்று வருவனவும், நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவன

(உ) தகள்தீர் - குற்றம்தீர்ந்த. பகடு நடந்த கூழ் - உழவுத்தொழிலாலே வந்த சோறு. அகடுஉற - சாயாது ஒருபடிப்பட. 'சகடக்கல் போல' என்பது மேல்கீழாய் வருதல்.

(௩) கலவர் - மரக்கலங்களை யுடையவர். பாய்மா - குதிரை.

(ச) ஒருவுமின் - நீங்குமின். மாண்டார் - மாட்சிமைப்பட்டவர்கள்.

(பி - ம்.) 3. தேரில்.

வும் எல்லாம் இன்னிசை வெண்பா வென்று பெயரிட்டு வழங்கப் படும் எ - று.

'(ஓ) அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.' (நாலடி. 151.)

'(சு) மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மில்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ தெல்லாம் படும்.'

இவை இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

'வளம்பட.........செய்தாரு மில்.' (கா. 22, மேற்.)

இது மூன்றுமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

'(எ) மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லைத் தவமும்
அரசிலா னில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.' (நான்மணி. 48.)

இஃது அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு வந்த இன்னிசை வெண்பா.

பிறவும் வந்தவழியே கண்டுகொள்க.

'தனிச்சொற் றழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினு மொன்றே வரினும்
இதன்பெய ரின்னிசை யென்றிசி னோரே'

(ஓ) பாரிக்கும் - பரப்பும். தண்ணளியே பாரித்தலால் சான்றோரும் அன்னர். மன்:மிகுதிப்பொருளில் வந்த இடைச்சொல். தெருமந்து-மயங்கி.

(சு) கச்சியில் கடல்படு திரவியமேயன்றி வேறு நிலங்களின் பொருள்களும் உள என்றபடி.

(எ) சில பிரதிகளில் இச்செய்யுளுக்குப் பிரதியாக 'இன்னுமை வேண்டி.........வெகுளிவிடல்' (நான்மணி. 17.) என்ற செய்யுளும், 'இஃது அடிதோறும் தனிச்சொற் பெற்றுவந்த இன்னிசை வெண்பா' என்ற தொடரும் காணப்படுகின்றன.

‘ஒருவிகற் பாகித் தனிச்சொ லின்றியும்
இருவிகற் பாகித் தனிச்சொ லின்றியுந்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியுந்
தனிச்சொ லின்றிப் பலவிகற் பாகியும்
அடியடி தோறு மொரூஉத்தொடை யடைநவும்
எனவைந் தாகு மின்னிசை தானே’

என்றார் பிறருமெனக் கொள்க.

‘அடிபலவாய்ச் சென்று [4]நிகழ்வது பஃறொடையாம்’ எ-து. நான்கடியின் மிக்க பலவடியால் வருவது பஃறொடை வெண்பா எனப்படும் எ - று.

நேரிசை வெண்பாவிற்கும் இன்னிசை வெண்பாவிற்கும் நான்கடியே உரிமை சொன்னமையால் ‘நான்கடியின் மிக்க வடியான் வருவது’ என்பது (அ) ஆற்றலாற் போந்த பொருளெனக் கொள்க.

‘வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே [5]நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்.’

இஃது அடியடிதோறும் ஒரூஉத்தொடை. பெற்றுப் பல விகற்பத்தால் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

‘(க) சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்

(அ) ஆற்றலாற் போந்த பொருள் - புத்தி நுட்பத்தினாற் கொண்ட பொருள்; ‘செய்வேனோ என்பது வினாதல்; இவ்வோகார இடைச் சொற்கு எதிர்மறை முதலிய பொருள் விலக்கி ஆற்றலான் வினாப் பொருளே கொள்க’ (நன். சூ. 386, சங்கர.)

(க) மாவடர்கண் - மாவடுவைப் பொருத கண். ஆற்றுக்கால் ஆட்டியர் - மருதநிலப் பெண். ஆட்டியர் மாவடர் கண்கள் நீலம் வேல்பகழி கயல் இவைகளோடு தோற்றம் தொழில் வடிவு தடுமாற்றம் என்னும் இவைகளில் ஒத்தன.

(பி - ம்.) 4. நிகழ்வது. 5. நாற்றிசையுட் டேயங்கள்.

தோற்றந் தெரிழில்வடிவு தம்முட் டமொற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன [6]மாவடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்.'

இஃது [7]ஐந்தடியான் ஒரு விகற்பத்தான் வந்த பஃறொடை வெண்பா.

'(௪௦) பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.'

இஃது ஆறடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

ஏழடியின் மிக்க பஃறொடை வெண்பா யாப்பருங்கல விருத்தியுள்ளும் தேசிகமாலை முதலியவற்றுள்ளும் கண்டு கொள்க.

'அடிபுலவாய் நிகழ்வது' என்னாது, 'அடி பலவாய்ச் சென்று நிகழ்வது' என்று சிறப்பித்தவதனால், செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்கலிப்பாற்படுத்து வழங்கினும் இழுக்காதெனக் கொள்க.

'சிறை வண்டினங்கள் துன்றுங் கருமென் குழற்றுடி யேர் இடைத் தூமொழியே' எ - து. மகடூஉ முன்னிலை.

'தொடையடி யித்துணை யென்னும் வழக்க
முடையதை யன்றி யுறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமங் கொளலே'

என்றார் காக்கைபாடினியாரும் எனக் கொள்க.

---

(௪௦) உலாப்போந்த தலைவனைக் கண்டு காதல்கொண்ட தலைவியின் கூற்று இது. அந்நிலையள் - நல்லள் என்றபடி. தார் - மாலை. றியேன் - தீயேன்; குறுக்கல் விகாரம்.

(பி - ம்.) 6. மாவேடர். 7. ஐந்தடியான் வந்த ஒரு விகற்பம்.

உதாரண முதனிலைப்பு

['வைக றுகடீர் கடற்குட்ட மின்றுகொ லன்றுமங்கண்
எய்து மலிதேர் வளம்பட வேமழை யின்னிசையாம்
வையக மெல்லாம் பலவிகற் பேற்றது சேற்றுடனே
பையர வல்குல்பன் மாடம் பஃறொடைப் பல்விகற்பே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே முறைப்படியே இன்னிசை வெண்பாவிற்கும் பஃறொடை வெண்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனிலைத்துக் கொள்க. (ச)

சிந்தியல் வெண்பா, வெண்பாவின் ஈற்றடி

25. நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமோண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே.

இ - கை. நேரிசைச் சிந்தியல் வெண்பாவும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவு மாமாறும், எல்லா வெண்பாவிற்கும் ஈற்றடி ஆமாறுமுணர்த்......று.

'நேரிசை இன்னிசைபோல நடந்துஅடி மூன்றின் வந்தால் நேரிசை இன்னிசைச் சிந்தியல் ஆகும்' எ - து. நேரிசை வெண்பாவேபோல இரண்டாமடி யிறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் மூன்றடியால் வருவன வெல்லாம் நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும் எ - று. இன்னிசை வெண்பாவேபோலத் தனிச் சொல்லின்றி ஒரு விகற்பாகியும் பல விகற்பாகியும் மூன்றடியால் வருவனவெல்லாம் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும் எ - று. என்னை?

'நேரிசைச் சிந்து மின்னிசைச் சிந்துமென்
றீரடி முக்கா லிருவகைப் படுமே'

என்றார் பிறருமெனக் கொள்க.

வரலாறு

'(க) நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
[1] பாலைநல் வாயின் மகள்.'

'(உ) அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
[2] செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்ப— [3]செறிந்தார்
[4] சிறந்தமை யாராய்ந்து கொண்டு.'

இவை இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரு விகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

'(ங) சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.'

'(ச) நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
[5] பறநாட்டுப் பெண்டி ரடி.'

'(ரு) முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடுப்பீன்ற போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்.'

இவை மூன்றடியாய்த் தனிச் சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

(க) மாலையைக்கொண்டு வண்டினைப் புடைத்தல்: 'கற்பெனு மாலை வீசி நாணெனுங் களிவண்டோப்பி' (சீவக. 2073.)

(உ) அறிந்தான் - கடவுள். செறிந்தார் - புலமை மிகுந்தவர். செறிந்தார் வத்தி அறிந்து ஆராய்ந்து கொண்டு உரைப்ப.

(ங) சுரை - சுரைக்காய். சுனை சுரை மிதப்ப அம்மி ஆழ யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப.

(ச) பாரி பறநாடு - பாரிவள்ளலின் பறம்பு நாடு. பறம்புநாட்டு மகளிரைப் பிறநாட்டு மகளிர் வணங்குவர் என்றபடி.

(ரு) துடுப்பு - காந்தள் மடல். போயினார் - தலைவியைப் பிரிந்து சென்ற தலைவர். முல்லை காட்டின, காந்தள் ஈன்ற, கார் போயினார் வரவுரைக்கும்.

பி - ம்.) 1. மாலைநல். 2. சிறந்தார்க்குஞ், செறிந்தார்க்குஞ். 3. சிறந்தார். 4. செறிந்தமை. 5. அறநாட்டுப்.

உதாரண முதனினைப்பு

[‘ நற்கொற்ற வாயி லறிந்தா னையுநறும் பூங்குழலாய்
சொற்பெற்ற நேரிசைச் சிந்திய லாஞ்சுரை யாழவம்மி
நிற்றற் குரிய நறுநீல [6]முல்லை முறுவலுமென்
றெற்றப் படாதன வின்னிசைச் சிந்துக் கிலக்கியமே.’

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும் முறையாகக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொளக.]

‘நிகரில் வெள்ளைக்கு ஓரசைச்சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும் இற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம் என்று தேறுகவே’ எ - து. எல்லா வெண்பாவிற்கும் நாளென்னும் நேரசைச் சீரானும், மலரென்னும் நிரையசைச் சீரானும், காசு பிறப்பென்னும் வாய்பாட்டாற் குற்றியலுகர மீறுகிய நேரீற்றியற் சீரானும் இற்ற முச்சீரடியே இறுதியாமென்று தெளிக எ - று,

[வெண்பாவின் இறுதிச்சீர்க்குக் குற்றியலுகரம் ஈறாக வேறு உதாரணம் எடுத்தோதியதூஉம், மேல் ஓரசைச்சீர்க்கு உதாரணம் வேறுகாட்டிப் போந்ததூஉம் (கா. 7), வெண்பாவினை அலகிட்டு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டும்பொழுது பிற வாய்பாட்டான் ஓசையூட்டலாகாதென்பது அறிவித்தற்கெனக் கொள்க.]

‘(சு) பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.’ (குறள், 1121.)

இது நீர் என்று நாளென்னும் ஓரசைச்சீரான் முடிந்தது.

‘நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.’ (குறள், 1072.)

இஃது இலர் என்று மலர் என்னும் ஓரசைச்சீரான் முடிந்தது.

‘கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.’ (குறள், 984.)

(சு) கீழ்வரும் ‘பாலொடு’ முதலிய நான்கு குறட்பாக்களும் இரண்டொரு பிரதிகளில் உதாரண வாய்பாட்டான் அலகிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

(பி. ம்.) 6. நெய்தலு முல்லையுமென்.

இது சால்பு என்று காசென்னும் வாய்பாட்டான் முடிந்தது.

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.' (குறள், 1.)

இஃது உலகு என்று பிறப்பென்னும் வாய்பாட்டான் முடிந்தது.

'நிகரில் வெள்ளைக்கு' என்று சிறப்பித்தவதனால் குறள் வெண்பாவினை (எ) ஓரடி முக்காலென்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்காலென்றும், நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடி முக்காலென்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்காலென்றும், பஃறொடை வெண்பாவினைப் பலவடி முக்காலென்றும் பெயரிட்டு வழங்குவர் ஒருசா ராசிரியர் எனக் கொள்க.

'ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும்' என்று சிறப்பித்தவதனால் காசு பிறப்பு என்னுங் குற்றியலுகர மீறாய் முச்சீரடியான் முடிவதுபோல முற்றியலுகர மீறாய் நேரீற்றியற்சீர் இறுதியாக வருவனவுமுள ஒருசார் வெண்பா எனக் கொள்க.

வரலாறு

'(அ) மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவார்க் கருளு.'

இது பிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றிய லுகர மீறாக இற்ற வெண்பா.

'7 இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.'

இது காசென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

இவை செய்யுளியலுடையார் காட்டியவெனக் கொள்க.

(எ) நான்கு சீர்களாலான அடியை அளவாகக்கொண்டு மூன்று சீர்களாலான வெண்பாவின் ஈற்றடியை முக்கால் என்றார்.

(அ) இஃது ஓம்படை.

(பி - ம்) 7. இனை.

'செப்ப லிசையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகவும் பெறுமே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 57.)

['மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறவாய்
ஓவா தளபெடுத் தூஉங் கெழூஉமு தாரணமாய்
நாவார் பெரும்புகழ் நத்தத்தர் யாப்பி னடந்ததுபோல்
தேய்வா முகரம்வந் தாலியற் சீருக்குச் செப்பியதே.

இக்காரிகைச் சூத்திரத்துள் ஓசையூட்டுதற் கருத்தாவது: 'மாவாழ்சுரம்' 'புலிவாழ்சுரம்' என்னும் வஞ்சியுரிச் சீரிரண்டும் உளவாகவைத்து, ஒரு பயனோக்கித் தூஉமணி, கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீர்க்கு உதாரணம் எடுத்துக் காட்டினர் நத்தத்தனர் முதலாகிய ஒருசாராசிரியர். அதுபோல இந்நூலுடையாரும் தேமா, புளிமா என்னுமிரண்டு நேரீற் றியற்சீரு முளவாக வெண்பாவின் இறுதிச்சீருக்கு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டுதற் பொருட்டாகக் குற்றியலுகரம் ஈறுகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் நேரீற்றியற்சீ ரீறுக வேறு உதாரண மெடுத்தோதினர் எனக் கொள்க.] (ரு)

வெண்செந்துறை, குறட்டாழிசை

26. அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
சேந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.

இ.....கை. குறள் வெண்பாவிற் கினமாகிய துறையுந் தாழிசையும் ஆமா றுணர்த்...று.

'அந்தமில் பாதம் அளவிரண்டு ஒத்து முடியின் வெள் ளைச் செந்துறையாகும்' எ - து. இரண்டடியாய்த் தம்முள் அள

வொத்து வருவது [1]வெண்செந்துறை என்றும் செந்துறை வெள்ளையென்றும் பெயரிட்டு வழங்கப்படும் எ - று.

' அந்தமில் பாதம்' என்று சிறப்பித்தவதனால் (க) விழுமிய பொருளும் ஒழுகிய வோசையு முடைத்தாய் வருவது எ - று. என்னை ?

' ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 62.)

வரலாறு

' ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.' (முதுமொழிக்.)

' கொன்றை வேய்ந்த செல்வ [2]னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.' (கோன்றைவேந்தன்.

இவை இரண்டடியாய் அளவொத்து ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளுமுடைத்தாய் வந்த வெண் செந்துறை.

' திருவே' எ - து மகடூஉ முன்னிலை.

' சீர் பலவாய் அந்தம் குறைநவும் செந்துறைப் பாட்டின் இழிபும் அங்கேழ் சந்தம் சிதைந்த குறளும் குறளினத் தாழிசையே' எ - து. நாற்சீரின் மிக்க பலசீரால் வந்த அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும், செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவும், குறள் வெண்பாவிற் சிறிது செப்பலோசை சிதைந்து வருவனவும் குறள் வெண்பாவிற்கு இனமாகிய குறட்டாழிசை எனப்படும் எ - று.

குறட்டாழிசை எனினும் தாழிசைக் குறள் எனினும் ஒக்கும். இரண்டடி என்பது (உ) அதிகாரத்தான் வருவித்

(க) விழுமிய பொருள் - சிறந்த பொருள். ஒழுகிய ஓசை - தட்டுத்தடங்க லில்லாத சீரிய ஓசை.

(உ) குறட்பாவின் இனத்தைக் கூறுவது இங்கே அதிகாரம். குறட்பாவுக்கு அடியிரண்டாயினாற் போல அதன் இனங்கட்கும் இரண்டடியே கொள்ள வேண்டும் என்பது. அதிகாரம் இன்னதென்பது : (கா. 8. அடிக். க.)

(பி - ம்.) 1. குறள்வெண் செந்துறை. 2. னிணையடி.

துரைக்கப் பட்டது. சீர்வரை யறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் வரப்பெறும் எனக்கொள்க. (ரூ)

வரலாறு

'நீல மாகட னீடு வார்திரை
நின்ற போற்பொங்கிப் பொன்று [3]மாங்கவை
காலம்பல காலஞ் சென்றபின்
செல்வர் யாக்கை கழிதலுமே.'

'நண்ணு வார்வினை நைய நாடொறும்
நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணி னனடி யேயடை வார்கள் கற்றவரே.'

இவை நாற்சீரின் மிக்க பலசீரான் வந்த அடியிரண்டாய் ஈற்றடி குறைந்து வந்த குறட்டாழிசை.

'பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்னாய்.'

'(சு) அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே.'

இவை விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி இரண்டடியும் அளவொத்துச் செந்துறை வெள்ளையிற் சிதைந்து வந்தமையின் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள்.

'வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.'

இது குறள் வெண்பாவிற் சிறிது செப்பலோசை சிதைந்து வந்த சந்த மழிந்த குறட்டாழிசை.

(ரூ) இதன்பின் சில பிரதிகளில், 'என்னை? "ஈரடியாகிச் சீர்பல மிடைந்தே, அந்தடி குறைந்து வந்தினி தொழுகும், திறப்பா டுடைய குறட்டா ழிசையே" என்றார் ஆகலின்' என்ற பகுதி காணப்படுகிறது.

(சு) கவுந்தி - குந்தி தேச மன்னன்மகள்; பாண்டவரின் தாய். அறுவர்க்கு - சூரியன் முதலிய ஆறு பேருக்கு. அறுவரை - கன்னன் தருமன் முதலிய ஆறு பேரை.

(பி - ம்.) மாங்கடை.

'(ஞ) அந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவும்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே'

'உரைத்தன விரண்டுங் குறட்பா வினமே'
என்பன யாப்பருங்கலம் (சூ. 64, 65.) (சு)

(ஞ) அந்தடி - ஈற்றடி. சந்து அழி - சந்தம் சிதைந்த.

வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்

27. மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத் [யே
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசை
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்பா
ஆன்றடி தாஞ்சில வந்தங் [1]குறைந்திறும் வெண்டுறையே.

இ......கை வெளிவிருத்தமும் வெண்டாழிசையும் வெண்டுறையும் ஆமாறு உணர்த்...று.

'மூன்றடியானும் முடிந்து அடிதோறும் முடிவிடத்துத் தான் தனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்' எ - து. மூன்றடியானும் முற்றுப் பெற்று அடிதோறும் இறுக்திகண் ஒரு சொல்லே வருவது வெளிவிருத்தம் எனப்படும் எ - று.

'மூன்றடியானும் என்ற உம்மையால் நான்கடியானும் வரப் பெறும் எனக் கொள்க.' என்னை?

'ஒருமூன் றொருநான் கடியடி தோறுந்
தனிச்சொற் றழுவி நடப்பன வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டப் படுமே'

என்றார் காக்கைபாடினியார்.

['தண்டா விருத்தம்' என்று சிறப்பித்தவதனால் நாற் சீரடியுட் பட்டு அடங்காதே வேறாய் வருவது ஈண்டுத் தனிச் சொல் ஆவதெனக் கொள்க]

(பி - ம்.) 1. குறைந்திடும்.

வரலாறு

'(க) கொண்டன் முழங்கினவாற் கோபம்
பரந்தனவால்—என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம்
பூத்தனவால்— என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை [2]யியைந்தகவி
யேங்கினவால்—என்செய்கோயான்.

இது மூன்றடியாய் அடிதோறும் இறுதிக்கண் 'என் செய்கோயான்' என்னுந் தனிச் சொற்பெற்று வந்த வெளி விருத்தம்.

'(உ) ஆவா வென்றே யஞ்சின [3]ராழ்ந்தார்—ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீத்தார்—ஒருசாரார்
[4] ஏகீர் நாகீ ரென்செய்து மென்றார்—ஒருசாரார்.'

இது நாலடியாய் அடிதோறும் இறுதிக்கண் 'ஒரு சாரார்' என்னுந் தனிச் சொற் பெற்று வந்த வெளி விருத்தம்.

'வெண்டாழிசையே மூன்றடியாய் வெள்ளை போன்றிறும்' எ - து. மூன்றடியாய் அவற்றின் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரான் இறுவது வெண்டாழிசை யென்றும், வெள்ளொத் தாழிசை யென்றும் பெயரிட்டு வழங்கப்படும் எ - று.

'அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும்

என்பது யாப்பருங்கலம் (சூ : 66.)

(க) கோபம் - இந்திர கோபப் பூச்சி. வரி - இசை. தளவம் - முல்லை. தலைவி பருவங்கண்டு வருந்தியது இது. மூன்றடியான் வந்தமையால் சிந்தியல் வெண்பாவின் இனம் இது.

(உ) ஆவா இரக்கங் குறித்து வந்தது. கூவிளி - கூப்பீடு. நாகீர் - இளையவரே. நான்கடியாய்த் தனிச் சொற்பெற்று வந்தமையால் இது நேரிசை வெண்பாவின் இனம்.

(பி - ம்.) 2. யிருந்தகவி, யிசைந்தகவி. 3. ராழாவொரு. 4. ஏயீர் நாய்கீ.

வரலாறு

'நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.'

[5] இஃது ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசை.

'மூன்றிழிபு ஏழு உயர்பாய் ஆன்றடிதாம் சில அந்தங் குறைந்திறும் வெண்டுறையே' எ - து. மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமையாய் இடையிடை நான்கடியானும் ஐந்தடியானும் ஆறடியானும் வந்து, பின்பிற் சிலவடி சிலசீர் குறைந்து வருவன வெண்டுறையாம் எ - று.

'ஆன்றடிதாம்' என்று சிறப்பித்தவதனுல் முன்பிற் சிலவடி ஓரோசையாய்ப் பின்பிற் சிலவடி மற்ருேர் ஓசையாய் வருவனவும் உள. அஃது ஒரு சார் வேற்றொலி வெண்டுறை எனக் கொள்க.

'மூன்றடி முதலா வேழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்'

என்பது யாப்பருங்கலம் (சூ - 67.)

[சீர் வரையறுத்தி லாமையால் எனைத்துச் சீரானும் வரப் பெறும்.]

வரலாறு

'(கூ) குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ [6]னெஞ்சழிந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னுட [7]னீப்பானே வல்லன்.'

(கூ) இசைய - இசையையுடைய. கோழ்இலைய - செழிப்பான இலைகளையுடைய. அழல் எரி - அழலுகின்ற தீ. அளிய - இரங்கத் தக்கன. காந்தள் மலரை மந்திகள் தீயென்று மயங்கின. நான்கடி வெண்டுறையாதல் பற்றி இது இன்னிசை வெண்பாவின் இனம். ஐந்தடி முதலாக ஏறிய அடிகளையுடைய வெண்டுறைகள் பஃறொடை வெண்பாவின் இனம்.

(பி - ம்.) 5. இது மூன்றடியால் ஆசிரியத் தளையால் வந்து சிந்தியல் வெண்பாவிற் சிதைந்தமையால் வெண்டாழிசை. பிறவும் வந்தவாறு கண்டுகொள்க. 6. நெஞ்சசைந்து, நெஞ்சயர்ந்து. 7. நிற்பானே.

இது நான்கடியாய் ஈற்றடி யிரண்டும் இவ்விருசீர் குறைந்து வந்த ஒரொலி வெண்டுறை.

'(௪) தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னு மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் [8]சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே.'

இது மூன்றடியாய் ஈற்றடி யிரண்டும் இவ்விருசீர் குறைந்து வந்த ஒரொலி வெண்டுறை.

'(௫) முழங்குதிரைக் கொற்கைவேந்தன் [9]முழுதுலகம்
புரந்தளித்து முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்
ருக்கரிய வைவேல் பாடிக்

[10] கலங்கிநின் ருரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினு லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டுமிவள்
[11] பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் ருரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே ருபவே.'

இஃது ஏழடியாய் முதலிரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய், பின்பில் ஐந்தடியும் நாற்சீராய் வேற்றோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. ஐந்தடியானும் ஆறடியானும் வருவன யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

'மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை மூன்றிழிபேழ்
ஆன்றடி தாஞ்சில வந்தத் தடிக ளவைகுறைந்து
தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந் தனிச்சொல்வந்து
மூன்றடி யானு முடியு முடியுமோர் நான்கினுமே'

என்று வெண்பாவுக்கினமாகிய தாழிசை துறைவிருத்தங்கட்கு முறையானே இலக்கணஞ் சொல்லாது தலை தடுமாற்றமாகக் காரிகை சொல்லவேண்டியது என்னையோவெனின், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி ஒன்றொரு சீர் குறைந்து வருவனவுள

(௪) தாளாளர் - முயற்சியுடையோர். பீலி - மயிலிறகு.
(௫) தடம்கட்கே - விசாலமான கண்களுக்கே. புரிந்து - விரும்பி. இச்செய்யுள் கலம்பகத்துள் மதங்கு என்ற உறுப்பைச் சாரும்.

(பி - ம்.) 8. சாய்ந்துவிடும் பிளிற்றி. 9. முழுதுலகு மேவல் செய. 10. கலந்து நின். 11. புலங்கொள்.

வென்பதூஉம், வெள்ளொத் தாழிசையின் முதலிரண்டடியும் நாற்சீரான் வருமென்பதூஉம், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேல் மூன் றடுக்கி வருவனவெல்லாம் வெள்ளொத்தாழிசை யென்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க, 'தலைதடு மாற்றந் தந்துபுணர்ந் துரைத்தல்' என்பது தந்திர வுத்தி யாகலின்.

'(சு) வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன [12]வுரைப்பன்மற்
செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.'

இஃது ஐந்தடியாய் ஈற்றடி ஒன்றொருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

வெள்ளொத் தாழிசையின் முதலிரண்டடியும் நாற்சீரானே வருவது 'நண்பிதென் று' என்னும் இலக்கியத்தே கண்டுகொள்க.

'(எ) அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்

'வடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
[13] நீடான் துறந்து விடல்

'பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல்.'

இவை சிந்தியல் வெண்பா வொருபொருண்மேல் மூன் றடுக்கி வந்தமையால் வெள்ளொத் தாழிசை.

(சு) உறவு உற வரும் வழி - நேயங்கொள்ளும் விதம். செறிவுறு - நெருங்கிப் பழகும். அரசர் முதலாயினாரிடம் பழகும் முறை கூறப் படுகிறது.

(எ) சேட் சென்னி - ஒரு சோழன். ஒன்னார், கூடார், மேவார் என்பன பகைவரைக் குறிக்கும் சொற்கள். புறம் - இடம். வடி - தோழி ; விளி. சேட்சென்னி கவர்ந்து துறந்துவிடல் அறங்கொல்.

(பி - ம்.) 12. வுரைப்பன் யான். 13. நாடான், நேடான்.

'ஈரடி முக்கா லிசைகொள நடந்து
மூன்றுட னடுக்கித் தோன்றினுெத் தாழிசை'

என்றார் மயேச்சுரரு மெனக் கொள்க.

உதாரண முதனினைப்பு

[(ஊ) கோண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளாண் முழங்கோடு தாழிசையே
நண்பிதேன் றூர்கலி கோன்றைவெண் செந்துறை நீலநண்ணு
பிண்டி யறுவர்வண் [14]டார்குறட் டாழிசை பெய்வளையே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே வெண்பா வினங் கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.] (எ)

(அ) 'வெறியுறு கமழ்கண்ணி' என்பதும், 'அன்னு யறங்கொல்' என்பதும் இவ்வுதாரண முதனினைப்புக் காரிகையில் இல்லை. முதலிற் கூறவேண்டிய குறள் வெண்பா வினத்தின் முதற்குறிப்பு பின்னே கூறப்பட்டுள்ளது.

நால்வகை ஆசிரியப்பா

28 கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.

எ - து. அகவலோசையோ டளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலில்லா ஆசிரியப் பாவினை (க) அடியானுந் தொடையானும் ஓசையானும் பொரு ளானும் பெயர் வேறுபாடுணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்றுள், இக்காரிகை நேரிசை யாசிரியப்பாவும், இணைக்குற ளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறிமண்டில வாசிரியப்பாவுமாமா றுணர்த்......று.

(க) அடியாற் பெயர்பெற்றது இணைக்குற ளாசிரியப்பா ; தொடை யாற் பெயர்பெற்றது அடிமறிமண்டில வாசிரியப்பா ; ஓசையாற் பெயர் பெற்றது நேரிசை யாசிரிப்பா ; பொருளாற் பெயர் பெற்றது நிலைமண் டில வாசிரியப்பா ; மண்டிலம் - நாற்சீரைக்கொண்ட அடி ; தொல். பொருள். 427.

(பி - ம்) 14. டார் வெறி தாழிசை.

'கடை அயல் பாதம் முச்சீர் வரின் நேரிசை' எ-து. [1] ஈற்றடியின் அயலடி முச்சீரான் வரும் எனின் அது நேரிசை யாசிரியப்பா எனப்படும் எ-று. என்னை?

'(உ) அந்த வடியி னயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரி யம்மே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 71.)

வரலாறு

'(ரூ) நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.' (குறுந். 3.)

இஃது [2]ஈற்றடியின் அயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா வென்க் கொள்க.

'சாமரு சீர் இடை பல குன்றின் இணைக்குறள்' எ-து. முதலடியும் ஈற்றடியும் ஒத்து இடையடிகள் [3]இரண்டும் பலவும் ஒருசீர் குறைந்தும் இருசீர் குறைந்தும் வருவன (ச) இணைக்குற ளாசிரியப்பா எனப்படும் எ-று. என்னை?

'அளவடி யந்தமு மாதியு [4]மாகிக்
குறளடி சிந்தடி [5]யென்றாங் கிரண்டும்
இடைவர நிற்ப திணைக்குற ளாகும்'

என்றார் காக்கை பாடினியார்.

(உ) பல பிரதிகளில் இப்பகுதி, 'ஈற்றதனயலடி யொருசீர் குறைந்து, நிற்பது நேரிசை யாசிரியம்மே என்றாராகலின்' என்று காணப்படுகிறது. 'ஒருசீர் குறைந்து' என்பதற்கு, 'முச்சீராக' என்பது பிரதி பேதம்.

(ரூ) நீர் - கடல். ஆர் அளவின்று - அருமை அளவின்று. சாரல் - மலைப்பக்கம். கோல் - கொம்புகள். தேன் இழைக்கும் - தேனைச் செய்யும்.

(ச) நாற்சீரினும் குறைந்த சீரையுடைய சிந்தடியையும் குறளடியையும் இங்கே குறள் என்றார். இணை - இரண்டு. இணைக்குறள் - குறளடியும் சிந்தடியுமாகிய இரண்டு.

(பி-ம்.) 1. ஈற்றயலடி. 2. ஈற்றயலடி. 3. ஒருசீரும் இருசீரும் குறைந்து வருவன. 4. மாகக். 5. யென்றாங் கிரண்டும்.

'இணைக்குற ளிடைபல குறைந்திற லியல்பே' என்பது யாப்பருங்கலம் (சூ. 72.)

வரலாறு

'(6) நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.'

இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடி இருசீரானும் முச்சீரானும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா.

'[சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெறியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா மெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.' (புறநா. 235.)

இஃது இருசீரடியும் முச்சீரடியும் இடையிடை வந்தமையால் இணைக்குற ளாசிரியப்பா.]

(6) தீர்பு ஒல்லாது - தீர்தல் தகாது என்றபடி.

'காமரு சீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரியப்பா நான்கிற்கும் ஏ என்னும் அசைச்சொல்லால் இறுவது சிறப்புடைத்து, பிறவெழுத்தானும் [6]இறப்பெறு மாயினும் எனக் கொள்க.

'அகவ லிசையன வகவல் மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐயென் றிறுமே' (யா. வி. சூ. 67.)

[7] என்றாராகலின்.

'எல்லாவடியும் ஒத்து நடைபெறுமாயின் நிலைமண்டிலம்' எ - து. எல்லாவடியும் தம்முள் ஒத்து நாற்சீரடியான் வருவது நிலைமண்டில வாசிரியப்பாவாம் எ - று.

வரலாறு

'(சு) வேரல் வேலி வேர்கோட் பலவின்
சார லுடன் செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.' (குறுந். கஅ.)

இஃது எல்லாவடியும் ஒத்து நான்குசீரான் வந்தமையால் நிலைமண்டில வாசிரியப்பாவெனக் கொள்க.

நிலைமண்டில வாசிரியப்பாவிற்கு என் என்னும் அசைச் சொல்லால் இறுவது சிறப்புடைத்து, மற்றொருசார் ஒற்றினானும் உயிரினானும் இறப்பெறுமாயினும் எனக் கொள்க.

'ஒத்த வடித்தா யுலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே'

'என்னென் கிளவி யீறாப் பெறுதலும்
அன்னவை பிறவு மந்த நிலைபெற
நிற்கவும் பெறாஉ நிலைமண் டிலமே'

என்றார் காக்கை பாடினியார்.

'நடு ஆதி அந்தத்து அடைதரு பாதத்து அகவல் அடிமறி மண்டிலமே' எ - து. எல்லாவடியும் ஒத்து முதல் நடு விறுதி

(சு) வேரல் - மூங்கில். பலவு - பலாமரம். செவ்வியை ஆகு மதி - வரைந்துகொள்ளும் பருவத்தை உடையையாக.

(பி - ம்.) 6. இறப்பெறுமெனக். 7. என்றார் காக்கை பாடினியார்.

யாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில வாசிரியப்பாவாம் எ - று.

(எ) 'மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம்' என்பது யாப்பருங்கலம் (சூ. 73.)

'உரைப்போர் குறிப்பி னுணர்வகை யின்றி
இடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்
மதிக்கப் படாதன மண்டில யாப்பே'

என்றார் காக்கை பாடினியாரும் எனக் கொள்க.

வரலாறு

'(அ) சூரல் பம்பிய சிறுகானி யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாடநீ வர லாறே.'

இஃது எல்லா வடியும் முதல் நடுவிறுதியாக வுச்சரித்து ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மண்டில வாசிரியப்பாவாம் எ - று.

[நேரிசை யாகு நிலத்தினு மென்ப திணைக்குறட்பா
8 நீரின்றண் ணென்னு நிலைமை யதாநிலை மண்டிலப்பா
வேரலென் றூரும் விரைமலர்க் கோதைவில் லேர்நுதலாய்
சூரல்பம் பென்ப தடிமறி 9யாகத் துணிந்தனரே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.] (அ)

(எ) இச்சூத்திரம் சில பிரதிகளில், 'மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம், நிலைக்குறி மரபி னிற்கவும் பெறுமே' என்று காக்கைபாடினியார் வாக்காகக் காணப்படுகிறது.

(அ) சூரல் – காலைச் சுற்றிக்கொள்ளத்தக்க சூரற்கொடி; பிரம்பு. சூரரமகளிர் - தெய்வப் பெண்கள். ஆரணங்கினர் - மிகுதியாகத் தாக்கி வருத்தக்கூடியவர். ஆறு - வழி.

(பி - ம்.) 8. நீரின் சிறிய நிலைமைய. 9. மண்டிலந்தாமொழியே.

ஆசிரியப்பாவின் இனம்

29. தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறேல் சீரகவல்
விருத்தங் கழிநெடி ஞன்கோத் திறுவது மேல்லியலே.

இ - கை. ஆசிரியத்தாழிசையும் ஆசிரியத்துறையும் ஆசிரிய விருத்தமுமா மாறுணர்த்......று.

(க) ‘தருக்கியல் தாழிசை மூன்றடி ஒப்பன’ எ - து. மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத்தாழிசையாம் எ - று.

‘தருக்கிய ருழிசை’ என்று சிறப்பித்தவதனல் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடைய, தனியே வரப்பெறுமாயினும் எனக் கொள்க.

‘மூன்றடி யொத்த முடிவின வாய்விடின்
ஆன்ற வசுவற் ருழிசை யாகும்’

என்பது யாப்பருங்கலம் (சூ. 75.)

[‘ஒத்த வொருபொருண் மூவடி முடியினஃ
தொத்தா ழிசையா முடன்மூன் றடுக்கின்’

என்ருர் மயேச்சுரர்.]

வரலாறு

‘(உ) கன்று குணிலாக் [1]கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

‘பாம்பு கயிருக் கடல்கடைந்த [2]மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.’

(க) தருக்கு இயல் தாழிசை - ஓசை இனிமை முதலிய நோக்கிப் பயில்வோர் தருக்குவதற்குக் காரணமான தாழிசை.

(உ) குணில் - குறுந்தடி. நம் ஆனுள் - நம்முடைய பசுக்கூட்டத்தினிடம். எல்லி - பகல். கொன்றை, ஆம்பல், முல்லை என்பன சில கருவி.

(பி - ம்.) 1. கனியெறிந்த மாமாயன், கனியுகுத்த. 2. மாமாயன்.

'கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த [3]மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.' (சிலப். ஆய்ச்.)

இவை மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து ஒரு பொருண் மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை.

'(ரு) வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் [4]னிரைகழ றொழுதனம்.'

இது தனியே வந்த ஆசிரியத் தாழிசை.

[சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் மூன்றடியாய் வரப்பெறும்.]

'நான்கடியாய் (ச) எருத்தடி நைந்தும் இடை மடக்காயும், இடையிடையே சுருக்கடியாயும் துறையாம்' எ - து. நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும், ஆசிரியத்துறை எனப்படும் எ - று.

'நான்கடியாய்' என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டியும், இடைமடக்கு என்பதனை (ௌ) இருதலையுங் கூட்டி மத்திம தீபமாக்கியும் பொருளுரைத்துக் கொள்க.

சீர்வரை யறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியாய் வரப்பெறும் எனக் கொள்க.

(ரு) பான்மதி விடுத்தனை பல்லுயிர் ஓம்பினை - சந்திரனை உண்டு பண்ணி அம்மதியைக் கொண்டு பல உயிர்களைக் காப்பாற்றினை. சந்திரன் திருமாலிடம் தோன்றியது: 'எங்கண் மாதவ னிதயமா மலர்வரு திங்கள்' (வி. பா. குருகுல. 1.) சந்திரன் ஒஷதிகளையும் உயிர்களையும் வளர்ப்பவன்.

(ச) எருத்தடி - ஈற்றயலடி. எருத்தடி நைந்து வரும் துறை நேரிசை யாசிரியப்பாவின் இனம்.

(ௌ) இருதலையும் கூட்டலாவது: 'எருத்தடி நைந்து,' 'இடையிடையே சுருக்கடியாயும்' என்ற இரண்டனோடுங் கூட்டுவது.'

(பி - ம்.) 3. மாமாயன் 4. னிருகழ.

‘(சு) கரைபொரு [5]கானியாற்றங் கல்லதரெம்முள்ளி வருவி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாரலையோ.’

இது நான்சடியாய் ஈற்றயலடி குறைந்து மற்றெல்லா வடியும் ஒத்து வந்த ஆசிரியத்துறை.

‘(எ) [6]வண்டுளர் பூந்தார் [7]வளங்கெழு செம்பூட்சேஎய் வடிவே போலத்
[8] தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி மாவினவித் தணந்தோர் யாரே
[9] தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்கு [10]படமொழிந்து படர்ந்தோ னன்றே.’

இது நான்சடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

‘(அ) கொன்றூர்ந் தமைந்த குருமுகத் தெழினிறக்
குருதிக் கோட்டன விருந்தடப் பெருங்கைக்
குன்றுமென வன்றுமெனக்
குமுறு நின்றன கொடுந்தொழின் வேழம்
[11] வென்றூங் கமைந்த விளங்கொளி யிளம்பிறைத்
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தாள்
அதிரும் வானென வெதிரும் [12]கூற்றெனச்
சுழலா நின்றன சுழிகண் யாளி
சென்றூர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் துறுவலிப் புலவுநா றழல்வாய்ப்

(சு) கல் அதர் - மலைவழி. எம் உள்ளி - எம்மை நினைத்து. வரையர மங்கையர் - மலையில் வாழும் தெய்வ மங்கையர்.

(எ) சேஎய் - முருகக் கடவுள். பிண்டித்தழை - அசோகமரத்தினது இலைகளால் ஆன ஓர் உடை விசேடம். மாவினவி - தான் தேடி வந்த விலங்கு அப்பக்கம் வந்ததா என்று கேட்டு. தணத்தல் - நீங்குதல். தலைவியும் தோழியும் உரையாடல் இது.

(அ) குருமுகம் - ஒளிபொருந்திய முகம். பிறை எயிற்று அழல் உளைப் பரூஉத்தாள் யாளி. வான் - மேகம். ஆர்ந்து - நிறைந்து. நுதி - கூர்மை. பொறி எருத்து - புள்ளிகள் பொருந்திய பிடரி. புலிமான் ஏற்றை - ஆண்புலி. இறுவரை - பெருமலை. எறிகுறும்பு - கொள்ளை மிகுந்த பாலை நிலத்தார். நோனார் - ஆற்றுதார். கரவு - பிறரறியாமல் மறைந்துவரும் தொழில்.

(பி - ம்.) 5. கான்யாற்றங்......வருதி. 6. வண்டுளரும். 7. வரிவளைக்கைச் செம். 8, 9. தண்டளிர்ப்பூம், 10. படநடந்து. 11. வென்றூர்ந்தமைந்த. 12. காற்றெனச்.

[13] புனலாமென வனலாமெனப்
புகையா நின்றன புலிமா னேற்றை
என்றுங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் [14] தனிவரல் விலக்கலின்
இறுவரைமிசை யெறிகுறும்பிடை
இதுவென்னென வதுநோனர்
காவிரவிடைக் களவுளமது கற்றோது கற்பன்றே.'

இது முதலடியும் மூன்றாமடியும் பதினன்கு சீராய் அல்லாத அடியிரண்டும் பதினாறு சீராய் இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை.

'(க) இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
அரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்த திளவேனில்.'

இது நான்கடியா யிடையிடை குறைந்து [15] இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

'கடையத னயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
யிடையிடை குறைநவு மகவற் றுறையே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 76.)

'குறைவில்தொல் சீர்அகவல் விருத்தம் கழிநெடில் நான் கொத்து இறுவது' எ - து. கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தமெனப்படும் எ - று.

['குறைவில் தொல்சீர்' என்று சிறப்பித்த வதனால் எண் சீரின் மிக்க சீரால் வருமடி சிறப்பிலவெனக் கொள்க.]

'(கo) விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
விறல்வாள் வீசி விரையார்வேங்

(க) தேன் - வண்டுகள். குயில் முழவாக, தேன் யாழாக, பொழில் அரங்கமாக இளவேனில் ஆடும். அகன்றார் நெஞ்சம் மாமா!

(கo) மாதங்கி = மதங்கி - ஆடல் பாடல்களில் வல்ல ஒருபெண். தாம்தாம் - தாள ஒத்தைக் குறிக்கும் ஒலி. தண்ணுமை - ஒரு தோற்கருவி விசேடம். தண்ணுமை தாந்தாம் என்னும்.

(பி - ம்.) 13. புனலாமெனக்கன. 14. தனிவா வெனத்தலைவிலக்கலின். 15. நடுவடி மடக்காய்.

110182 MADRAS
DB151 N48

கடஞ்சூழ் நாடன் [16]காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம்
வடிக்க ணீல மலர் தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தாம்
என்னுந் தன்கைத் தண்ணுமையே'

என்பது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

'கணிகொண் டலர்ந்த' (கா. 13.) என்பது எழுசீர்க்கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

'மூவடிவி னிரண்டு' (கா. 13.) என்பது எண்சீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

'இடங்கை வெஞ்சிலை (கா. 13.) என்பது ஒன்பதின் சீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

'கொங்குதங்கு' (கா. 13.) என்பது பதின்சீர்க்கழி நெடிலடி யான் வந்த ஆசிரிய விருத்தம்.

பதின்சீரின் மிக்கு வருவனவெல்லாம் யாப்பருங்கல விருத்தி யுட் கண்டுகொள்க.

'கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவல தாகும்'

என்பது யாப்பருங்கலம் (சூ. 77.)

'மெல்லியலே' எ - து. மகடூஉ முன்னிலை.

'[[17]கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கரைபொருகான்
என்றது வண்டினர் பூந்தா ரிரங்கு குயின் முழவாக்
கொன்றூர்ந் தமைந்த வகவற் றுறைகுறை யாவிருத்தம்
[18]பின்றாழ் குழலி [19]விடங்கணி மூவடி வாதியவே.'

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே ஆசிரியப்பா வினங் கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.] (கூ)

(பி - ம்.) 16. காளிம்பன். 17. கன்றொடு வானுறத் தாழிசை யாகும், கன்று குணிலாந்தாழிசை யாகும். 18. முன்றாழ். 19. விடஞ் சூழ்கணிகொண்ட மூவடிவே.

நேரிசையோத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க வோத்தாழிசைக் கலிப்பா

30. தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யோத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோன்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு [1]வேமடுப்பின்
அரவொன்று மல்கு லதம்போ தரங்கவோத் தாழிசையே.

எ...கை. துள்ளல் ஓசைத்தாய், நேரீற்று இயற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது நிரை முதலாகிய வெண்பா வுரிச்சீர்மிக்கு நேரடித்ததாய், தன்றளையும் (க) அயற்றளையுந் தட்டுத் தரவு தாழிசை [2]என்னும் முதனுறுப்பும் அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமென்னும் துணையுறுப்பு முடைத்தாய், (உ) ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக் கலி என்னும் பெயர் வேறுபாட்டாற் கிடந்த கலிப்பாவினை (ங) உறுப்பினானும் ஓசையானும் பொருளானும் பெயர் வேறு பாடு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

(க) தளைதட்டு - தளைபொருந்தி.

(உ) ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்பன கலிப் பாவின் மூன்று வகைகள். இவற்றுள் ஒத்தாழிசைக் கலிப்பா (1) நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, (2) அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, (3) வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா என மூன்றுவகைப்படும். வெண் கலிப்பா ஒன்றேயாம்; கலிவெண்பா அதன் இனத்தது என்றலுமாம். கொச்சகக்கலிப்பா (1) தரவு கொச்சகக் கலிப்பா, (2) தரவிணைக் கொச்ச கக்கலிப்பா, (3) சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, (4) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, (5) மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐவகைப் படும்.

(ங) உறுப்பினுல் வந்த பெயர்: ஒத்தாழிசைக் கலிப்பா; ஒத்த தாழிசைகளை யுடையதென்பது பொருள்; ஒப்பு எல்லாத் தாழிசை யும் ஒரு பொருண்மேல் வருதல். ஓசையால் வந்த பெயர்: வெண் கலிப்பா. பொருளால் வந்த பெயர்: கொச்சகக்கலிப்பா. இவற்றின் பிரிவுகளில் மயங்கிசைக் கொச்சகம் என்பது பொருளால் வந்த பெயர்; மற்றவை உறுப்பினுல் வந்த பெயர்.

(பி - ம்.) 1. வேமடுப்பதர, வந்தடுப்பதர. 2. அராகம் அம்போத ரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்பினையு முடைத்தாய்.

அவற்றுள் இக்காரிகை (௪) நேரிசை யொத்தாழிசைக் கலிப் பாவும், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவும் ஆமாறு உணர்த்......று.

'தரவு ஒன்று தாழிசை மூன்று தனிச்சொல் சுரிதகமாய் நிரல்ஒன்றின் நேரிசை யொத்தாழிசைக்கலி' எ - து. முன்பு ஒரு தரவு வந்து, அதன்பின் மூன்று தாழிசை வந்து, அதன் பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன்பின் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் ஒரு சுரிதக உறுப்புப் பெற்றுச் சொன்ன பெற்றியிற் றிரியாது வருமெனின் அது நேரிசை யொத்தா ழிசைக் கலிப்பாவாம் எ - று.

(௫) **தரவு** எனினும் **எருத்தம்** எனினும் ஒக்கும்.

(௬) **தாழிசை** எனினும் **இடைநிலைப்பாட்டு** எனினும் ஒக்கும்.

(௭) **தனிச்சொல்** எனினும், **விட்டிசை** எனினும், **தனிநிலை** எனினும், **கூன்** எனினும் ஒக்கும்.

---

(௪) நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா மற்றெல்லாக் கலிப்பா வகைகளிலுஞ் சிறப்புடையது என்பர்.

(௫) கலிப்பாவின் முதலுறுப்பாகத் தரப்படுவது தரவு; 'தலைவனைத் தந்து நிற்பது' என்னலுமாம். எருத்தம் - தலைவனைத் தருவதற்கு எருத் தம்போன்றது ; எருத்தம் - பிடரி ; 'யானை யெருத்தம் பொலியக்...... ......சென்றாரும்' (நாலடி. 3.)

(௬) தாழம்பட்ட இசையையுடையது தாழிசை ; தாழம்பட்ட இசை - கீழ்ப்பட்ட ஓசை ; உச்சஸ்தாயிக்கு மாறுபட்டது இது. இடை நிலைப்பாட்டு - தரவுக்கும் சுரிதகத்துக்கும் இடையில் நிற்கும் பாட்டு ; முடிந்தபொருளைக் கொண்டிருத்தலின் பாட்டென்றார்.

(௭) தனிச்சொல் - சுரிதகத்தோடும் அதற்குமுன்னே உள்ள உறுப் போடும் ஓசை முதலியவற்றிற் றொடர்பின்றித் தனியே நிற்கும் சொல். இருசொல்லாலாகிய தொடர்மொழியாயினும் சொல்லெனப்படும். விட் டிசை - ஓரோசையினின்று மற்றோரோசை விட்டு இசைக்கப்படுவதற் குக் காரணமாக உள்ளது. கூன் - நேர்மையாக வந்த ஓசை சுரிதகத் தோடு பொருந்தாமற் றடைபட்டு வளைதற்குக் காரணமாக உள்ளது ; கூன் - வளைவு.

(அ) சுரிதகம் எனினும், **அடக்கியல்** எனினும், **வைப்பு** எனினும், **வாரம்** எனினும், **போக்கியல்** எனினும் ஒக்கும்.

> ‘தந்துமுன் நிற்றலிற் றரவே தாழிசை
> 3 ஒத்தாழ் தலினஃ தொத்தா ழிசையே
> தனிதர நிற்றலிற் றனிச்சொல் குனிதிரை
> நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்
> சோர்ச்சியில் புலவர் சுரிதக மென்பர்’

என்று காரணக்குறி சொன்னாரும் உளர்.

இனித் தரவு தாழிசைகட்கு அடி அளவுஆமாறு, ‘சுறுங் கிற்று மூன்றடி’ (கா. 42) என்னுங் காரிகையுட் பேரக்கிச் சொல்லுதும்.

வரலாறு

> ‘(க) வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
> தோணெடுந்தண் டகைதுறந்து துன்பங்கூர் 4பசப்பினவாய்ப்
> பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ.

இது தரவு.

> (1) ‘சூருடைய 5நெடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
> பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே,
>
> (2) ‘சேணுடைய 6கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
> நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ 7நயமிலரே,
>
> (3) ‘சிலம்படைந்த வெங்கானஞ் 8சீரிலவே யென்பவாற்
> புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே ;

இவை மூன்றுந் தாழிசை.

(அ) சுரிதகம் - உள்ளடங்கும் ஓசையை யுடையது ; சுரிதல் - நீர்ச் சுழிபோன்று சுருங்கி முடிதல். அடக்கியல் - உள்ளடக்கி இசைக்கப்படுவது. வைப்பு : ஈற்றில் வைக்கப்படுவது. வாரம் - வரம்பாக வுடையது. போக்கியல் - செல்லுதலையுடையது.

(க) தகை - இயல்பு. பசப்பினவாய் - காமத்தால் ஏற்படும் நிற வேறுபாட்டை யுடையனவாய். வலிப்பவோ - துணிவார்களோ. சூர் - அச்சம், தெய்வமகளிர். கடங்கள் - பாலைநிலத்து வழி. பீர் - பசலை. சிலம்பு - மலை. புலம்பு - தனிமை.

(பி - ம்.) 3. ஒத்தாழ்ந்திறினஃ, ஒத்தாங்கிரைத்தலி னொத்தா, 4. பசப்பினவாம், பசப்பினவால். 5. கடுங்கடங்கள். 6. வெங்கானம். 7. நல்லவரே. 8. செலற்கரிய வென்பவாற்.

எனவாங்கு ;

இது தனிச்சொல்.

'அருளென விலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.'

இது சுரிதகம்.

இது தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்றும் இரண்டடியாய்த் தனிச்சொற் பெற்று மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

வெள்ளைச் சுரிதகத்தா லிற்றன யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

'தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகம்
எனநாற் குறிப்பின தொத்தா ழிசைக்கலி'

என்றார் காக்கை பாடினியார்.

'தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
[9] தனிச்சொ லிடைகிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைச்கலி'

என்றார் மயேச்சுரர்.

'நீர்த் திரைபோல் மரபு ஒன்று நேரடி முச்சீர் குறள்நடுவே [10]மடுப்பின் அது அம்போதரங்க வொத்தாழிசையே' எ - து. கரைசாரக் கரைசார, ஒருகாலைக் கொருகாற் சுருங்கி வருநீர்த் தரங்கமேபோல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகிய (௧௦) அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச்சொற்கும் நடுவே [11]கொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புடைத்தாய் (அவை சொன்ன பெற்றியின் திரியாது) வருமெனின் அது அம்போதரங்க வொத் தாழிசைக் கலிப்பா என்று வழங்கப்படும் எ - று.

---

(௧௦) அசையடி - அம்போதரங்க வடிகள் ; அசையும் சீராகப் பயின்று வரும் அடி என்க. சொற்சீரடி என்பதும் அது.

(பி - ம்.) 9. தனிச்சொல் வந்து சுரிதகம். 10. மடுப்பது. 11. தொடுத்து.

(கக) **அம்போதரங்க வுறுப்பு** எனினும், **அசையடி** எனினும், **பிரிந்திசைக்குறள்** எனினும், **சொற்சீரடி** எனினும், **எண்** எனினும் ஒக்கும்.

'மரபொன்றும்' என்று சிறப்பித்தவதனால் அசையடிதான் [12]அளவடி ஈரடியாய் இரண்டும், அளவடி ஓரடியாய் நான்கும், சிந்தடி ஓரடியாய் எட்டும், குறளடி ஓரடியாய்ப் பதினாறுமாய் வருவது சிறப்புடைத்து. (கஉ) எட்டும் பதினாறுமென்று சொல்லப் பட்டன [13]நான்கும் எட்டுமாய் வருவன எனக் கொள்க. இவற்றைப் **பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண்** என்ப.

'ஈரடி யிரண்டு மோரடி நான்கும்
முச்சீ ரெட்டு மிருசீ ரிரட்டியும்
அச்சீர் குறையினு மம்போ தரங்கம்'

'அனைய வாகிய வசையடி நான்குந்
தனியொடு தாழிசை யிடைவரு மென்ப'

என்றார் ஆகலின்.

வரலாறு

'(கங) கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிர்த்த தமனியப் பொடிபொங்க

(கக) அம்போதரங்கம் - நீர்அலை. தோன்றுமிடத்துப் பெரிதாக இருந்து கரையைச் சாரச் சாரக் குறைந்து போவது அலையின் இயல்பு. எண்: அளவடி ஈரடி ஓர் எதுகையாக இரண்டு வருவது பேரெண். அளவடி ஓரடி நான்கு வருவது அளவெண். சிந்தடியாய் வருவது இடையெண். குறளடியாய் வருவது சிற்றெண்.

(கஉ) எட்டும், பதினாறும் பாதியாக வருதல்போல் நான்கும் என்றதும் இரண்டாக வருவதும் உண்டு.

(கங) உளைய - பிடரிமயிரையுடைய. நரசிங்கமூர்த்தியின் கண்களுக்குக் கடலில் எழும் கதிர் உவமை. கலி - கடல். இரண்டாந்தாழிசையிற் கூறப்படுவது சிசுபாலனுடன் மலைந்ததுபோலும். மூன்றாந்தாழிசையிற் கூறப்படுவது கண்ணன் கொல்லேறு தழுவி நப்பின்னையை மணந்த வரலாறு.

(பி - ம்.) **12.** ஈரடியா லிரண்டும், ஓரடியால் நான்கும், சிந்தடியா லெட்டும், குறளடியாற் பதினாறுமாய். **13.** சுருங்கிவரப் பெறுமாயினு மெனக் கொள்க.

[14]வார்புன விழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய் ;

இது தரவு.

(1) 'முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த [15] மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ.

(2) 'கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர [16]வெதிர்மலைந்து
சேணுய ரிருவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ.

(3) 'படுமணி யினநிரை பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு [17]மருப்பொசிய [18]வீழ்ந்துதிறம் வேறுக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.

இவை மூன்றும் தாழிசை.

(1) 'இலங்கொலி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் [19]தடக்கை மாஅல் நின்னிறம்.

(2) 'விரியிணர்க் கோங்கமும் வெங்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.

இவை [20]ஈரடி யிரண்டு அம்போதரங்கம்.

'கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை.

(கச) இவை [21]நாற்சீரோரடி நான்கு அம்போதரங்கம்.

'போரவுணர்க் கடந்தோய் நீ
புணர்மருதம் பிளந்தோய் நீ

(கச) நாற்சீர் ஓரடி நான்கு என்றவை இங்கே இரண்டாக வந்தன.

(பி - ம்.) 14. வார்புனன் மார்பினி. 15. மறமன்னர். 16. வெதிர் கலங்கிச். 17. மருப்பொடிய. 18. வீழ்ந்தததன் திறம்வேறு. 19. தடக் கையின் மாய. 20. இரண்டும் பேரெண். 21. அளவெண்.

நீரகல மளந்தோய் நீ
நிழறிகழும் படையோய் நீ

இவை [22]முச்சீரோரடி நான்கு அம்போதரங்கம்.

(1) 'ஊழி நீ (2) உலகு நீ
(3) உருவு நீ (4) யருவு நீ
(5) ஆழி நீ (6) யருளு நீ
(7) அறமு நீ (8) மறமு நீ'.

இவை [23]இருசீரோரடி யெட்டு அம்போதரங்கம்.

எனவாங்கு

இது தனிச்சொல்.

'அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.'

இஃது ஆசிரியச் சுரிதகம்.

இஃது எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்ட முச்சீரடியும் இருசீரடியும் நான்கும் எட்டுமாய்ச் சிறப்பில்லாத எண்ணடியான் வந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா. எட்டும் பதினாறுமாய் வருவன யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க. ('நலங்கிளர்......ஓங்குக வெனவே' சூ. 83. மேற்.)

'அரவொன்று மல்குல்' என்பது மகடூஉ முன்னிலை.

'நீர்த்திரை போல நிரலே முறைமுறை
ஆக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச் சுரிதகம்
[24]தாங்கித் தழுவும் தரவினோ டைந்தும்
யாப்புற் றமைந்தன வம்போ தரங்கம்'

என்றார் காக்கை பாடினியார்.

(பி - ம்.) 22. இடையெண். 23. சிற்றெண். 24. தாக்கித் தொடுத்த.

உதாரண முதனினைப்பு

[வாணெடுங் கண்பனி நேரிசை யாகும் மதர்த்திருண்டு
சேணுற [25]வோடிக் குழையிட றிச்செறுச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடையநல்லாய்
ஏணுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே முன்வந்த இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.] (க௦)

(பி - ம்.) 25. நீண்டு குழைமீது பாய்ந்து செயிர்த்துழைக்கண்
நாணுற வண்குமி ழிற்சேரு மொண்க ணறுநுதலாய்
காணுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்றே.'

வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா

31. அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளைதட்
டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்
[1] விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.

இ - கை. வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவும் வெண் கலிப்பாவும் ஆமாறுணர்த்...று.

' அசையடி முன்னர் அராகம் வந்து எல்லா வுறுப்புமுண் டேல் வசையறு வண்ணக வொத்தாழிசைக் கலி ' எ - து. அம் போதரங்க வுறுப்புக்கும் தாழிசைக்கும் நடுவே அராகவுறுப்புப் பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினையும் உடைத்தாய் வரு மெனின் அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும் எ-று.

(க) அராகம் எனினும், [2]அடுக்கியல் எனினும், முடுக்கியல் எனினும், போக்கியல் எனினும், வண்ணகம் எனினும் ஒக்கும். [என்னை ?

(க) அராகம் - முடுகிச் செல்லும் ஓசையை யுடையது. அடுக்கியல் - கருவிளச் சீர்களே பெரும்பாலும் பயின்று ஓசையடுக்குடன் இயல்வது. வண்ணகம் - முடுகியலோசையாகிய சந்தத்தை யுடையது.

(பி - ம்.) 1. விசையுறு. 2. அடுக்கிசை.

'அராக மென்ப தடுக்கியல் வண்ணகம்
முடுக்கிய லெனவும் மொழிந்தனர் புலவர்'

என்றார் ஆகலின்.]

'வசையறு வண்ணகம்' என்று சிறப்பித்தவதனால் அராக வுறுப்புத்தான் அளவடி முதலாகிய எல்லாவடியானும் வரப் பெறும் எனக் கொள்க.

அடி வரையறையாவது : சிறுமை நான்கடியானும், பெருமை எட்டடியானும், இடை ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியா னும் வரப்பெறுமெனக் கொள்க. என்னை?

'அளவடி முதலா வனைத்தினு நான்கடி
முதலா [3]விரட்டியு முடுகிய னடக்கும்'

என்றார் ஆகலின்.

வரலாறு

'விளங்குபணிப் பசும்பொன்னின் [4]விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் [5]பணையெருத்தின் [6]மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை [7]யூரகேள் ;

இது தரவு.

(1) 'காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் [8]றிரியாத மரபொத்தாய் காவினுற்
பிணிநலம் [9]பிரிவெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ ;

(2) 'அன்பினு லமிழ்தளைஇ யறிவினுற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுவதற் கிருளிடைத் தமியையாய்க்
கதிர்வளைத்தோள் [10]கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ ;

(பி - ம்.) 3. விரட்டிசை. 4. விசித்தமைத்துக். 5. பகட்டெழி னெரிகுஞ்சிக். 6. மிசைத்தோன்றுங். 7. யூரசே. 8. றணியாத; 'பிரி யாத. 9. பெரிதெய்திப், பெரிதெய்தப், பீரெய்தப். 10. குளிர்ப்பிக்கும், அதிர்ப்பிக்கும், வளைப்பிக்கும்.

(3) 'பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகுந்
தேங்காத [11]காவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ ;

இவை மூன்றுந் தாழிசை.

'தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்
போதுறு [12]நறுமலர் புதுவிரை தெரிதரு
கருநெய்தல் விரிவன கழி
தீதுறு திறமறு கெனநனி [13]முனிவன
துணையொடு பிணைவன துறை
மூதுறு [14]மொலிகலி நுரைதரு திரையொடு
கழிதொடர் புடையது கடல்.

இவை நான்கும் அராகம்.

(1) 'கொடுந்திற லுடையன சுறவேறு கோட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாமென் றுரைத்திலமோ

(2) 'கருநிறத் [15]துறுதொழிற் காம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான விராவார வென்றிலமோ ;

இவை நாற்சீர் ஈரடியிரண்டு அம்போதரங்கம்.

'நாணொடு [16]கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்றா [17]னனவது நன்னுதற்கே ;

இவை நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்.

'அத்திறத்தா லசைந்தன தோள்
அலரதற்கு மெலிந்தன கண்
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்
பொன்னிறத்தாற் போர்த்தன முலை'
அழலினா லசைந்தது நகை
அணியினா லொசிந்த திடை

(பி - ம்.) 11. காவினாற்றெளி. 12. நறுவிரை புதுமலர் விரிதரு. 13. துணையொடு நனைசினை பிணைவன. 14. மொழியொடு சுரிகெழு மொலிகலி முடிதொடர். 15. தெழுதொழிற். 16. கலந்தன்றாற், கழிந்தன்றாற். 17. னனவினா.

[18]குழலினை னிமிர்ந்தது முடி
குறையினற் கோடிற்று நிறை ;
இவை முச்சீர் ஓரடி யெட்டு அம்போதரங்கம்.

'உட்கொண்ட தகைத்தொருபால்
உலகறிந்த வலத்தொருபால்
கட்கொண்ட றுளித்தொருபால்
கழிவெய்தும் படிற்றொருபால்
பரிவுறூஉந் தகைத்தொருபால்
[19]படர்வுறூஉம் பசப்பொருபால்
இரவுறூஉந் துயரொருபால்
இளிவந்த வெளிற்றொருபால்
[20]மெலிவுவந் தலைத்தொருபால்
விளர்ப்புவந் [21]தடைந்தொருபால்
பொலிவுசென் றகன்றொருபால்
பொறைவந்து கூர்ந்தொருபால்
காதலிற் [22]கதிர்ப்பொருபால்
கட்படாத் துயரொருபால்
ஏதில்சென் [23]றணைந்தொருபால்
இயனணிற் [24]செறித்தொருபால்,
இவை இருசீர் ஓரடிப் பதினறு அம்போதரங்கம்.
எனவாங்கு
இது தனிச்சொல்.

'இன்னதிவ் வழக்க மித்திற மிவணலம்
என்னவு முன்னாட் டென்ன [25]யாகிக்
கலந்த [26]வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.'
இது சுரிதகம்.

இஃது ஆறுறுப்புங் குறைவின்றி வந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

(பி - ம்.) 18. குழலினல் விரிந்தது. 19. படிவுறூஉம், பசப்புவந் தணைந்தொருபால். 20. மெலிவுறூஉந் தகைத்தொருபால். 21. தடர்த் தொருபால். 22. களிப்பொருபால். 23. றகன்றொருபால். 24. செறிவொருபால். 25. யாகில். 26. வண்மைய ராயினு.

‘அச்சொலப் பட்ட வுறுப்போ[27]டாரகவடி
வைத்த நடையது வண்ணக மாகும்’

என்றார் காக்கைபாடினியார்.

‘வான்றளை தட்டு இசைதன தாகியும் வெண்பா இயைந்தும் விசையறு சிந்தடியால் இறுமாய்விடின் வெண்கலியே’ எ - து. கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும், வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி முச்சீரான் இறுமெனின் அது வெண்கலிப்பா என்றும் கலிவெண்பா என்றும் பெயரிட்டு வழங்கப்படும் எ - று.

‘இன்பால் மொழியாய்’ எ - து. மகடூஉ முன்னிலை.

‘விசையறு சிந்தடி’ என்று சிறப்பித்த வதனால் வேற்றுத் தளை தட்டு அருகியும் வரப்பெறும் எனக் கொள்க.

வரலாறு

‘வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர் தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட்[28]டிவையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.’

இது (உ) தன்றளையானும் துள்ளலோசையானும் வந்து ஈற்றடி முச்சீராய் வெண்பாப்போல முடிந்தமையின் வெண்கலிப்பா.

‘(ங) சுடர்த்தொடீஇ கேளாய் தெருவிளு மாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி

(உ) இது பெரும்பாலும் கலித்தளையாலும் சிறுபான்மை வெண்டளையானும் துள்ளலோசை பெற்று வந்த வெண்கலிப்பா. இங்ஙனம் வருவது சிறப்பில் வெண்கலிப்பா. கலித்தளையானே வருவதும், வெண்சீர் வெண்டளையானே வருவதும் சிறப்புடை வெண்கலிப்பா. இருவகை வெண்டளைகளான் வருவது கலிவெண்பா.

(ங) இது வெண்டளை பெற்றுப் பலவடிகளில் வந்தமையின் இதற்கும் பஃறொடை வெண்பாவுக்கும் வேற்றுமை என்னை எனின்; கலி

(பி - ம்.) 27. டாரகம். 28. டிவை யுரைத்துத்.

நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்ற ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.' (கலி. ருக.)

இது வெள்ளோசை தழுவி வெண்டளை தட்டுச் சிந்தடியா லிற்று ஒரு பொருண்மேல் வந்தமையாற் (ச) கலிவெண்பா.

'ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்
றிரிவின்றி நடப்பது கலிவெண் பாட்டே'
என்றார் தொல்காப்பியனார் (பொருள். சூ. 154.)

'வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா வியலது வெண்கலி யாகும்'
என்றார் காக்கை பாடினியார்.

இனிப் பிற தளையான் வருமாறு:

29'ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.'

வெண்பா, அல்லது வெண்கலிப்பா என்னும் இது வெள்ளோசை தழுவிப் பெரும்பாலும் துள்ளலோசைத்தாய் வருவது. பஃறொடை வெண்பா செப்ப லோசைத்தாய் வருவது.

(ச) பிற்காலத்துக் கலிவெண்பாக் களாலாகிய உலா, தூது முதலியன நேரிசை வெண்பாவோடொத்த இவ்விரண்டு அடிகள் ஓர் கண்ணியாக இரண்டாம் அடியினிறுதியிற் றனிச்சீர் பெற்றுப் பல கண்ணிகளால் முடிவன வாகும்.

(பி - ம்.) 29. ஏர்மலி.

இஃது ஆசிரியத் தளையானும் கலித்தளையானும் வந்தமையால் வெண்கலிப்பா.

பிறவும் யாப்பருங்கல விருத்தியுட் காண்க.

உதாரண முதனினைப்பு

(ங) [நின்று விளங்கு மணிப்பசும் பொன்னிற மாறுறுப்பும்
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைக்கலி யோசைகுன்றுத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யேர்மலரும்
என்றிவை வெண்கலிப் பாவுக் கிலக்கிய மேந்திழையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவுக்கும் வெண்கலிப்பாவுக்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.] (கக)

(ஞ) 30, 31-ஆம் காரிகைகளின் உதாரண முதனினைப்பு எல்லாம் அமைந்த பின்வருமாறு முதனினைப்புச் செய்யுட்கள் இரண்டு இங்கே பல பிரதிகளிற் காணப்படுகின்றன.

'வாணெடுங் கண்ணெனப் நேரிசை யாகுமம் போதரங்கம்
கேணெடு துன்பங் களையுங் கெடலரு வண்ணகமே
பூண்முலை மாதே விளங்கு மணிவெண் கலியுரைப்பின்
வாணுதல் வாளார் சுடர்த்தொடீஇ யேர்மலர் மற்றிவையே'

'வளங்கெழு வாணெடு கண்ணுங் கெடலரு மாமுனியும்
நலங்கிளர் நேரிசை யம்போ தரங்கவொத் தாழிசையே
விளங்கு மணிப்பசும் பொன்னென்ப வண்ணக வெண்கலிப்பா
துளங்கிய வாளாற் சுடர்த்தொடீஇ யேர்மலர் சொல்லினரே.'

கோச்சகக் கலிப்பா வகை

32. தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகோங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கோச்சகமே.

இ-கை. தரவு கொச்சகக்கலிப்பாவும், தாவிணைக் கொச்சகக் கலிப்பாவும், சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவும், பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் ஆமாறுணர்த்.......று.

இதன் பொழிப்பு : ஒரு தரவு வந்தும், தரவு இரண்டாய் வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் தம்முள் மயங்கியும், வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவன எல்லாம் (க) கொச்சகக் கலிப்பாவாம் எ - று.

'சொல்லின் முடிவின் அப்பொருண் முடித்தல்' என்பது தந்திரவுத்தி யாகலான் தரவுகொச்சகம் [1]முதலாகிய ஐந்து கலிப்பாவும் (உ) அப்பெயரானே வழங்கப்படும் எனக் கொள்க.

['தாமும்' என்று சிறப்பித்தவதனால் தனிச்சொல்லும் சுரிதகமும் இடையிட்டு வரப்பெறுமெனக் கொள்க.]

'மரபே' என்று சிறப்பித்தவதனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வண்ணமும் அடியும் தொடையும் மயங்கியும் கலியுள் வாராவென்ற நேரீற்று இயற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் ஐஞ்சீரடியும் வந்து, ஒத்தாழிசைக் கலிப்பாவினோடு ஒவ்வாது வேறுபட்டு வருவனவெல்லாம் கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்படும் எ - று.

'வாங்கமைத்தோள் அரவு ஏர் அகல் அல்குல் அம்பேர் நெடுங்கண் வம்பேறு கொங்கை குரவே கமழ் குழலாய்' எ - து. மகடூஉ முன்னிலை.

(க) கொச்சகம் : 'பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப ; அது போலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும் தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகம் என்றார். இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியும் கொய்சகம் என்று சிதைத்தும் வழங்குப' (தொல். பொருள். சூ 464, பேரா.)

(உ) அவற்றுள் ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டு வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், தரவு, தாழிசை முதலாகிய ஆறு உறுப்பும் தம்முண் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தோடும் மயங்கியும் வருவன வெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும்.

(பி - ம்.) 1. முதலாவுடையனவெல்லாம்.

'கொச்சகமே' எ - து - இறுதி விளக்கெனக் கொள்க.

அவற்றுக்குச் செய்யுள் வருமாறு :

'செல்வப்போர்க் கதக் கண்ணன்' (கா. 11, மேற்.)
என்பது தனிச்சொல்லும் சுரிதகமும் இல்லாத தன்றளையான் வந்த தரவு கொச்சகக் கலிப்பா.

'குடநிலைத் தண்புறவிற்......சென்றவாறே' (கா. 21, மேற்.)
என்பது தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தால் இற்ற தரவு கொச்சகக் கலிப்பா.

[1] 'வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலற்குங் காவலனும்
கொடிபடு [2]மணிமாடக் கூடலார் கோமானே.

இது தரவு.

என வாங்கு,

இது தனிச்சொல்.

[2] 'துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்ப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ.

இது தரவு.

அதனால்,

இது தனிச்சொல்.

'செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே'

இது சுரிதகம்.

இஃது இடையிடை தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தால் இற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

இனிச் சுரிதகம் இல்லாத தரவிணைக் கொச்சகக் கலிப்பா வந்துழிக் கண்டு கொள்க.

'(க) பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்

(க) குருஉக் கொண்ட - பெருமையைக் கொண்ட. உச்சியார் - தேவர். அருவரையால் - பெருமை பொருந்திய மலையினால். பகை - இந்

(பி - ம்.) 2. வரைமார்பிற், வரைமாடக்.

படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந் தான் கூடலார் கோமானே.

இது தரவு.

ஆங்கொருசார்,

இது தனிச்சொல்.

(1) ‘உச்சியார்க் கிறைவனா யுலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
[3]வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்,

(2) ‘அக்கால மணிநிரைகாத் தருவரையாற் [4]பகைதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
[5]சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.

ஆங்கொருசார்,

(3) ‘மால்கொண்ட பகைதணிப்பான் மாதடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே.

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று,

இது தனிச்சொல்.

‘கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நின்றபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.’

இது சுரிதகம்.

திரன் ஆயர் மீது கொண்ட பகை. சமழ்த்தனர் - நாணினர். செங்கோல் - சிவந்த அம்பு. ஐவருள் ஒருவன் ஐவர் - மும்மூர்த்திகள், முருகன், இந்திரன்.

(பி - ம்.) 3. வச்சிரங்கை. 4. பிணிதவிர்த்து. 5. சக்கரங்கை.

இஃது இடையிடை தனிச்சொற் பெற்று நான்கடித் தரவு ஒன்றும், மூன்றடித் தாழிசை மூன்றும், சுரிதகமுமாய் நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தன்றளையான் வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

(ச) ‘ தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு.

(1) ‘ இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றூழ்குழ றளர்வாளோ.

(2) ‘ தகைநல [6]மிவைவாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல [7]மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

(3) ‘ அணிநல னிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநலன் மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.

(4) ‘ நாம்பிரியோ மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

(5) ‘ குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.

(6) ‘ சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிசீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த [8]பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறும் தாழிசை.

அதனால்,

இது தனிச்சொல்.

‘ அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெறும்பெற லரியன வெறுக்கையு மற்றே

(ச) கண்மதி - கண்ணினால் மதிக்கப்படும். தளநல முகை - முல்லையின் நல்ல முகைகள். ஓம்பிரியோம்; ஓம்: உடன் பாட்டை உணர்த்தும் சொல். அளித்த : உவம வாசகம்.

(பி - ம்.) 6. மிவள்வாடத். 7. மிவை வாடி. 8. பனிமொழியும்.

விழுமிய நறிமதி வாழி
[9]தழுவிய காதலிற் றரும்பொருள் சிறிதே.'

இது சுரிதகம்.

இது நான்கடித் தரவும் இரண்டடித் தாழிசை ஆறும் தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

(1) '(இ) மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன் றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால் நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறையச் சிறையன்னம் இரைநயந் திரைகூடு மேமஞ்சார் துறைவகேள்.

(2) [10]'மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
[11] கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுன்னீர் பரந்தொழுகு மேமஞ்சார் துறைவகேள்.

இவை இரண்டும் தரவு.

(1) 'கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள் தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.

(2) 'கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோள் தெண்பனிநீ ருகக்கண்டுந் [12]திரியலனே யென்றியால்.

(இ) மணற் பரப்பினுல் வெண்மையாகத் தோன்றும் கானல் பலராமனுக்கு உவமை. மாயவனையும் பலராமனையும் சமணர் தம் மதத்துப் பெரியோராகக் கருதுவர்.

நொய் பறைய - நொய்ம்மையான தூவியையுடைய. இறை கூடும் - தங்குதலை மிகும். வேலாழி - கடல்; 'வேலாழி சூழுலகு' (நீலகேசி, 62.) நுழை நுசுப்பு - நுண்ணிய இடை. கயில் கவையா சிறுபுறத்தோள் - கொக்கியோடு கூடிய கயிற்றை அணிந்த கழுத்தினள் என்றபடி - நாய்கன் - கப்பற்றலைவன். வீழ்சுடரின் நெய் விளக்குச் சுவாலையிலிருந்து சொட்டும் நெய். அடும்பு அமல் இறும்பு - அடும்பங் கொடிகள் நிறைந்த மலை. திமில் - படவு. படவுகளுக்குக் குதிரைகள் உவமை. சுடரொளி மறை தொறும் - சூரியனொளி மறையும் போதெல்லாம். கால் - காற்று தவிர்ப்பாய்மன்; மன் - முன்பு என்ற படி. காமக்கு - காமத்துக்கு இன் பக்கு - இன்பத்துக்கு. பொறை - பாரம்.

(பி - ம்.) 9. கெழுமிய. 10. வரையென. 11. கரையெனக். 12. தெரியலனே.

(3) 'நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

(4) 'கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டும் நீங்கலனே யென்றியால்.

(5) 'கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

(6) 'வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டும் தாங்கலனே யென்றியால்.

இவை ஆறும் ஈரடித் தாழிசை.

அதனால்,

இது தனிச்சொல்.

(1) 'அடும்பமல ரிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.

(2) 'செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

(3) 'அரைசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்.

(4) 'அலங்கொளி ரவிர்சுட ரிலங்கொளி மறைதொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்.

(1) 'விடாஅது கழலுமென் வெள்வளையுந் [13] தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

(2) 'ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் [14] தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

(3) 'தாங்காது கழலுமென் றகைவளையுந் [14] தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

(4) 'மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

(5) 'காதலார் [16] மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானிற்கு மாறுரையாய்.

(பி - ம்.) 13-15. செறிப்பாய்மன். 16. மார்பின்றி.

(6) 'இணைபிரிந்தார் [17]மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

'பகைபோன் றதுதுறை
பரிவா யினகுறி
நகையிழந் ததுமுகம்
நனிவா டிற்றுடம்பு
தகையிழந் தனதோள்
தலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய்
பொறையா யிற்றுயிர்.

இவை இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்.

அதனால்,

இது தனிச்சொல்.

'இனையது நினையா லினையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.'

இது சுரிதகம்.

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்தும் ஆறு தாழிசையும், தனிச்சொல்லும், எட்டம்போதரங்க வுறுப்பும், தனிச்சொல்லும், பெற்று நான்கடிச் சுரிதகத்தால் இற்றுக் கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

ஆசிரியத்தினோடும் வெண்பாவினோடும் மயங்கிவந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்' (கலி. ௩௯.) என்னும் பழம்பாட்டினுள் மயங்கி வந்தவாறு யாப்பருங்கலவிருத்தியுட் (சூ. 86.) கண்டு கொள்க.

(பி - ம்.) 17. மார்பின்றி,

இன்னும் ‘ மாபே ’ என்று சிறப்பித்தவதனல் தாவு, ஒரு போகு முதலாக வுடையனவற்றை எல்லாம் இதனுற் பெயர் கொடுத்துக் கொச்சகமென்று வழங்கப்படும் எ - று.

‘ (சு) எருத்திய லின்றி யிடைநிலை பெற்றும்
இடைநிலை யின்றி யெருத்துடைத் தாகியும்
எருத்த மிரட்டித் திடைநிலை பெற்றும்
இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்
இடையு மெருத்து மிரட்டுற வந்தும்
எருத்த மிரட்டித் திடைநிலை யாறு
அடக்கிய லாறு மமைந்த வுறுப்பிற்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயும்
தரவொடு தாழிசை யம்போ தரங்கம்
முடுகியல் போக்கியல் என்றிவை யெல்லாம்
முறைதடு மாற மொழிந்தமை யின்றி
18 இடையிடை வெண்பாச் சிலபல சேர்ந்து
மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன
கொச்சக மென்னுங் குறிப்பின வாகும் ’

என்றார் காக்கைபாடினியார்.

‘ தாவே தாவிணை தாழிசை சிலபல
வான்முறை பிறழ வயற்பா மயங்கியும்
தனிச்சொற் பலவா யிடையிடை நடந்தும்
ஒத்தா ழிசைக்கலி யுறுப்பினிற் பிறழ
வைத்த முறையான் வண்ணக விறுவாய்
மயங்கி வந்தனவு மியங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர் ’

19 எனவும்,

‘ ஓதப் பட்ட வுறுப்பு வகையெல்லாம்
ஏதப் படாமற் கலக்கியல் பெய்தி
மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும்
வண்ணமு மடியுந் தொடையு மயங்கியும்

(சு) எருத்தியல், எருத்து ; எருத்தம் - தாவு. இடைநிலை - தாழிசை. அடக்கியல் - சுரிதகம். முடுகியல் - அராகம். போக்கியல் - சுரிதகம்.

(பி - ம்.) 18. இடைநிலை. 19. என்றார் கையனர்.

அடுக்கிசை யந்தந் தொடுத்தன பல்கியும்
கலிவயிற் சுடிந்த சீரிடை மிடைந்தும்
நாற்சீ ரிறந்த சீரொடு சிவணியும்
மூச்சீ ரிருசீ ரம்போ தரங்கம்
அச்சீர் முடிவிடை யழிவில தழுவியும்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே'

எனவும் சொன்னார் மயேச்சுரரும் எனக் கொள்க.

'தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
(எ) எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடுக்கிய வின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப'

என்றார் தொல்காப்பியனார் (பொருள். சூ. 461.)

இவற்றுக் கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க.

(அ) [குடநிலைத் தண்புற விற்செல்வப் போர்முற் றரவுரைப்பின்
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பரூஉத்தடக்கை
அடிவரு சிஃறா ழிசைதன் மதிபஃ றாழிசையாம்
மடவரன் மாதே மணிகிள ராகு மயங்கிசையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே கலிப்பாவிற்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.] (கஉ)

(எ) எண் - அம்போதரங்க உறுப்பு.

(அ) இங்கே இருத்தற்குரிய முதனினைப்புக் காரிகை, பிரதிதோறும் வேறுபட்டுள்ளது. சில வேறுபாடுகள் வருமாறு:

குடநிலைத் தண்செல்வப் போர்க்கதக் கண்ணின் றரவுரைப்பின்
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பரூஉத்தடக்கை
இடமிக வாய்ச்சில தாழிசை தண்மதி யேர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிள ராகு மயங்கிசையே.

தரவாங் குடநிலை யஞ்செல்வப் போரும் தரவிணையாம்
பரவார் வடிவுடைச் சிஃறா ழிசையே பரூஉத்தடக்கை
வரவாய தண்மதி பஃறா ழிசையே மயங்கிசையோர்
குரவார் குழலி மணிகிள ராகுங் கொச்சகமே.

கலிப்பாவின் இனம்

33. **அடிவரை யின்றி யளவோத்து மந்தடி நீண்டிசைப்பிற்**
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்கா நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மேல்லியலே.

இ - கை. கலித்தாழிசையும் கலித்துறையும் கலிவிருத்தமும் ஆமாறுணர்த்......று.

'அடிவரை யின்றி யளவொத்தும் அந்தடி நீண்டிசைப்பிற் கடிதலிலாக் கலித் தாழிசையாகும்' எ - து - இரண்டடி முதலாய்ப் பலவடியானும் வந்து ஈற்றடி மிக்கு ஏனையடி தம்முள் அளவொத்தும் ஒவ்வாதும் வருமெனின் அது கலித்தாழிசை எனப்படும் எ - று.

[அளவொத்தும் என்ற உம்மையால் ஈற்றடி மிக்கு அல்லாத வடி அளவொத்தும் ஒவ்வாதும் வரப்பெறுமெனக் கொள்க.]

'கடித லிலாக்கலித் தாழிசை' என்று சிறப்பித்தவதனால் அவை ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்துத் தனியே வரப்பெறுமாயினும் எனக் கொள்க.

வாலாறு

'(க) கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
[1]பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்'

'ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்'

'மென்றினை காத்து மிகுபூங் [2]கமழ்சாரற்
[3]குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்.'

இவை இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வந்தமையாற் கலித்தாழிசை.

(க) காத்தும் - காப்போம். குளவி அடுக்கத்து - காட்டு மல்லிகையுடைய மலைச்சாரலில். வாரல் - வாராதே. இது தோழி கூற்று.

(பி - ம்.) 1. பொய்தீர். 2. கமழ்சோலைக். 3. குன்றிற்.

'(உ) வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி [4]னெழாதாய்க் குறுலியரோ
[5]நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்.

இது ஈற்றடி மிக்கு ஏனையடி மூன்றும் ஒத்துத் தனியே வந்த கலித்தாழிசை.

'பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.'

இஃது இரண்டாமடி குறைந்து, ஈற்றடி மிக்கு முதலடியும் மூன்றாமடியும் ஒத்து வந்தமையால் ஈற்றடி மிக்கு ஏனையடிகள் ஒவ்வாது வந்த கலித்தாழிசை.

'அடியெனைத் தாகியு மொத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 87.)

'அந்தடி மிக்குச் சிலபல வாயடி
தந்தமு ளொப்பன தாழிசை யாகும்'

என்றார் காக்கை பாடினியார்.

'கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது' எ - து. ஐஞ்சீரடி நான்காய் [ஒத்து] வருவது (ரு) கலித்துறை எ - று.

வரலாறு

'யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்

(உ) கேள் - உறவினர் ; என்றது தலைவனை. எழால் - தோன்றாதே. உறுலியர் - உறுது ஒழிக.

(ரு) கலித்துறை : இது கலிநிலைத்துறை என்றும், காவியங்களிற் பயின்று வருவதனால் காப்பியக்கலித்துறை என்றும் வழங்கும். ஐஞ்சீரடி நான்காய் எழுத்தெண்ணித் தொடுக்கப்படும் கட்டளைக்கலித்துறை இதனின் வேறுபட்டது. இதனுடைய இலக்கணத்தைக் காரிகை 1, உரையிற் காண்க.

(பி - ம்.) 4. னுறுதாய்க், னெழாலாய்க். 5. நீள்வரைக்.

தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.'

'வென்றான் வினையின்......நீங்கி நின்றார்.'

(கா. 13, மேற்.)

இவை நெடிலடி நான்காய் வந்தமையாற் கலித்துறை.

'நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை'

என்பது யாப்பருங்கலம் (சூ. 88.)

'ஐஞ்சீ ரடியி னடித்தொகை நான்மையோ
டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை'

என்றார் காக்கை பாடினியார்.

'நேரடி ஈரிரண்டாய் விடின் அதுவாகும் விருத்தம்' எ - து. நாற்சீரடி நான்காய் வருமெனின் அது கலிவிருத்தம் எ - று.

'அளவடி நான்கின கலிவிருத் தம்மே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 89.)

'நாலொரு சீரா னடந்த வடித்தொகை
ஈரிரண் டாகி யியன்றன யாவையுங்
காரிகை சார்ந்த கலிவிருத் தம்மே'

[6] என்றார் காக்கை பாடினியார்.

வரலாறு

'வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலி னெண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி [7]னின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை நின்றுரை நீள்கடை காப்போய்.'

(சூளா, சீயவதைச். 87.)

'தேம்பழுத் தினிய...........தவள மாடமே.'

(கா. 13, மேற்.)

இவை நாற்சீர் நாலடியாய் வந்தமையாற் கலிவிருத்தம்.

'திருத்தகு மெல்லியலே' எ - து. மகடூஉ முன்னிலை.

(பி - ம்.) 6. என்றாரு முளரெனக் கொள்க. 7. னீடினர்.

உதாரண முதனினைப்பு

[கொய்தினை யாய்தினை மென்றினை வாள்வரி [8]பூண்ட பறை
எய்திய தாழிசை யானும்வென் [9]ருனுங் கலித்துறையே
மைதிக ழோதி [10]வடிவே னெடுங்கண் வனமுலையாய்
மெய்திகழ் வேய்தலை தேம்பழுத் [11]தென்ப விருத்தங்களே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.]

(பி - ம்.) 8. பூண்டகலிக்கெய்திய. 9. ருன்றுறையே விருத்தம், ருனுந் துறைவிருத்தம். 10 வரிநெடுங் கண்ண வனமுலைபாய், வரி நெடுங்கண்வன மென்முலையாய். 11. தாமென்று வேண்டுவரே.

வஞ்சிப்பாவும் இனமும்

34. குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னலிறும் வஞ்சிவஞ் சிக்கோடியே.

இ - கை. வஞ்சித்தாழிசையும் வஞ்சித்துறையும் வஞ்சி விருத்தமும் வஞ்சிப்பாவுக்கு ஈறு ஆமாறும் உணர்த்......று.

'குறளடி நான்கினம் மூன்று ஒரு தாழிசை' எ - து. இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருண் மேல் அடுக்கி வருமெனின் அது வஞ்சித் தாழிசை எனப்படும் எ - று.

'கோதில்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் அவை ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வரினே தாழிசை யாவதெனக் கொள்க.

'குறளடி நான்கவை கூடின வாகி
முறைமையி னவ்வகை மூன்றிணைந் தொன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை யாகும்'

என்றார் காக்கை பாடினியார்.

வரலாறு

'(1) மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்

இடைச்சுர மிறந்தார்கே
நடக்குமென் மனனேகாண்.

(2) 'பேடையை யிரும்போத்துத்
[1]தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்கே
ஓடுமென் மனனேகாண்.

(3) 'இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்கே
விரும்புமென் மனனேகாண்.'

இவை இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித் தாழிசை.

'கோதில் வஞ்சித்துறை ஒருவாது தனிவருமாய்விடின்' எ - து. இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்றே வரின் அது வஞ்சித்துறை எனப்படும் எ - று.

வாலாறு

'மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தன காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்.'

'திரைத்த சாலிகை.........மாலையாய்.'

(கா. 13, மேற்.)

இவை இருசீரடி நான்கினால் ஒரு பொருண்மேல் தனியே வந்தமையால் வஞ்சித்துறை எனக்கொள்க.

'குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரிற்
றுறையென மொழிப துணிந்திசி னோரே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 91.)

['ஒன்றின் ஒன்மையு முடைத்தாக் குறளடி
வந்தன வஞ்சித் துறையென லாகும்.'

என்றாரும் உளரெனக் கொள்க.]

(பி - ம்.) 1. கோடையால்.

'சிந்தடி நான்கு அறைதரு காலை விருத்தம்' எ - து. முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம் எனப்படும் எ - று.

'சிந்தடி நான்காய் [2]வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்த மென்மனார் புலவர்'

என்பது யாப்பருங்கலம் (சூ. 92.)

வரலாறு

'சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை [3]யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க [4]ணிவள்வாழும்.'

['இருது வேற்றுமை.........கையினாய்.'] (கா. 13, மேற்.)
இவை சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம்.

'தனிச்சொல் வந்து மறைதலில் வாரத்தினால் இறும் வஞ்சி' எ - து. குறளடி வஞ்சிப்பாவும் சிந்தடி வஞ்சிப்பாவும் தனிச்சொற் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் இறும் எ - று.

'மறைதலில் வாரம்' என்று சிறப்பித்ததனால் வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் இறுவது அல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெறாதெனக் கொள்க.

'தூங்க லிசையன வஞ்சி மற்றவை
ஆய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே'

என்பது யாப்பருங்கலம் (சூ. 90.)

வரலாறு

'பூந்தாமரை.........பெருவண்மையனே' (கா. 9, மேற்.)
என்னும் குறளடி வஞ்சிப்பா நாளென்னும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்றதெனக் கொள்க.

'(க) கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன

(க) கொடி வாலன - கொடியைப்போன்ற வால்களை யுடையன. குருநிறம் - செந்நிறம். உளையன பிடரிமயிரை யுடையன. பணை எருத்

(பி - ம்.) 2. வருவன வஞ்சி எஞ்சா. 3, யார்ந்த கழலார்ப்ப. 4. ணிவள் வாழுமே.

பிணையெருத்தி னிணையரிமா னணையேந்தத்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினைப் பத்திமையாற் செப்பினேன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.'

இச்சிந்தடி வஞ்சிப்பா, 'புணையென' என்னும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்றதெனக் கொள்க.

['தொன்னலத்தின்......சேணிவந்தற்றே' (கா. 23, மேற்.) என்னும் சிந்தடி வஞ்சிப்பா 'எனப் பெரிதும்' என்னும் தனிச் சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்றது.]

'அமுதே,' 'வஞ்சிக்கொடியே' என்பன மகடூஉ முன்னிலை.

['உ மடப்பிடி பேடை யிரும்பிடி தாழிசை வாய்ந்ததுறை
[5] வடுப்புரை [6]கண்மட வாய்மை சிறந்த திரைத்தவுமாம்
மடற்றிகழ் சோலை யிருதுவு மாகும் விருத்தம் வஞ்சிக்
[7] கொடித்திகழ் பூந்தா மரைகொடி வாலன தொன்னலமே.'

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே வஞ்சிப்பாவுக்கும் இனங்கட்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.]

(கசு.)

தின் - பருத்த பிடரியை யுடைய. அரிமான் - சிங்கம். நாற்கதி: காரிகை, 9. அடிக். கு.

உ. அச்சுப் பிரதிகளில் இந்த உதாரண முதனினைப்புப் பின்வருமாறு உள்ளது.

'மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் றாழிசையாம்
வடுப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுறையாம்
தடப்பெருஞ் சோலை மருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கொடித்தொடி பூந்தா மரைகொடி வால னுதாரணமே.'

(பி - ம்.) 5. தொடைக்குரி மைசிறந் தாங்குந் திரைத்தவஞ் சித்துறையாம், சுடர்த்தொடி சோலை யிருது விருத்தம்பூந் தாமரையும், அடுத்த கொடிவா லனதொன் னலம்வஞ்சி யாகுமின்னே. 6. கண்ணுய் திரைத்தவென் றுகுமொண்மை சிறந்த. 7. தடத்திய பூந்தா மரைகொடி வாலன தானறியே.

மருட்பா

35. பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவென்னும் வையகமே.

இ... கை. புறநிலை வாழ்த்து மருட்பாவும், கைக்கிளை மருட்பாவும், வாயுறை வாழ்த்து மருட்பாவும், செவியறிவுறூஉ மருட்பாவும் ஆமாறுஉணர்த்...று.

இதன் பொழிப்பு : புறநிலை வாழ்த்தும், கைக்கிளை, வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம் என்னும் நான்கு பொருண்மேலும் வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வருமெனின் அதனை மருட்பா வென்று வழங்குவர் புலவர் எ - று.

'வண்பால் மொழி மடவாய்' எ - து. மகடூஉ முன்னிலை.

'வெள்ளை முதலா வாசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்
(க) [கலிநிலை வகையும் வஞ்சி யும்பெறா]

[1] என்றார் காக்கை பாடினியார்.

வரலாறு

(1. புறநிலை வாழ்த்து மருட்பா)

(உ) தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரிய முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் [2]னிற்காப்ப வென்னுந்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.'

இது 'வழிபடு தெய்வம் நிற் புறங்காப்பப் பழிதீர் செல்வ

(க) இவ்வடி தோல். பொருள், சூ. 422 இன் ஈற்றடியாகவும் காணப்படுகிறது.

(உ) கொல் லேற்றான் - சிவன். இப்பாட்டின் ஈற்றிலுள்ள இரண்டும் ஆசிரியவடிகள். தெய்வத்தைப் புறம் நிறுத்தி வாழ்த்தலின் இது புறநிலை வாழ்த்தாயிற்று.

(பி - ம்.) 1. என்றார் ஆகலின். 2. நிற்புறங் காப்ப.

மொடு ஒருகாலைக் கொருகால் சிறந்து பொலிவாய்' என்றமையால் புறநிலை வாழ்த்து மருட்பா. என்னை ?

'வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.'

(தொல், பொருள். சூ. 422.)

என்றார் ஆகலின்.

(2. கைக்கிளை மருட்பா)

'(ரு) திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும் - அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே'. (பு. வெ. 287.)

இது துணிதலை றுதலிய ஒருதலைக் காமம் ஆதலாற் (சு) கைக்கிளை மருட்பா.

'காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை யதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே'

என்றார் ஆகலின்.

'பாங்குடைக் கைக்கிளை' என்று சிறப்பித்தவதனுல் கைக்கிளை எல்லாப் பாவானும் வரப்பெறும், மருட்பாவென்னும் யாப்புற வில்லை என்க.

(3. வாயுறை வாழ்த்து மருட்பா)

'(ரு) பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரில்லார் மாட்டும்

(ரு) கோதை-மலர்மாலை. போகிதழ்-நீண்ட இமைகளையுடைய. அகலிடத்து அணங்கு - மானிட மகளாகிய தெய்வம். இறுதியிலுள்ள இரண்டும் ஆசிரியவடிகள்.

(சு) கைக்கிளை : ஒத்த தலைவனும் தலைவியும் முதன் முதற் சந்திக்கும்போது தொடக்கத்தில் ஒருவரிடம் தோன்றும் காதல் ; இதனை ஒருமருங்கு பற்றிய கேண்மை என்பர்.

(ரு) விலங்கி - மாறுபட்டு. ஈற்றிலுள்ள இரண்டும் ஆசிரியவடிகள்.

சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
இலங்கு மெறிபடையு மாற்றலு மன்பும்
கலந்தங் கல்வியும் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனே டிவ்வா றனைத்தும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத னீவிருங் காண்டிர் - நினைத்தக்க
கூறிய வெம்மொழி [3]பிறழாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.

இது மெய்ப்பொருளே சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பா. என்னை ?

‘(௬) வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் [4]தற்றே’

(பொருள், சூ. 424.)

என்றார் தொல்காப்பியனார்.

‘(௭) பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு

(௬) வாயுறை வாழ்த்து - மருந்து போன்ற வாழ்த்து; வாயுறை - மருந்து. கடு - நோய்க்கு மருந்தாக அளிக்கும் விடம். ஓம்படைக் கிளவி - பாதுகாத்துச் சொல்லும் சொல். வேம்பும் கடுவும் போல முதற்கண் தோன்றினும் பின்னர் நல்லன வாகி உறுதிபயக்கும் சொல்லை, வெஞ்சொல் என்றார்.

(௭) கோட்டந்து - கொள்ளுதலைச் செய்து. மருக - வழித்தோன்றலே. அனுங்கல் - கெடுதல். மழவர் - வீரர். மன்றம் மறுக - நியாய மன்றத்துப் பெரியார் வருந்த. அவையார் - நீதிமன்றத்தோர். குழிசி - மிடா; என்றது சோற்றுக்கு ஆதாரமாக உள்ளதை. ஒட்டார் - பகைவர். இனனுகி - இனத்தவனுகி.

(பி - ம்.) 3. பிழையாது. 4. தன்றே.

வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா [5]ணிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
[6]அமைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்பட் டேற்க வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றூற் கினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றூர்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதிநீ
அற்ற மறிந்த வறிவினய் - மற்றும்
இவையிவை வீயா தொழுகி நிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.'

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் [7]அவிந்தொழுகல் கடனென்று அரசர்க்கு உரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா. என்னை?

'(அ) செவியுறைதானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே'
(பொருள். சூ. 426.)

என்றார் தொல்காப்பியனார்.

'என்று இப்பொருண் மிசை' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இந் நான்கு பொருண்மேலு மன்றி மருட்பா வரப்பெறு மெனக் கொள்க. என்னை?

'புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்

(அ) செவியுறை - செவிமருந்து. பொங்குதல் - பெருக்கம். அவிதல் - அடங்கி வாழ்தல். அடங்கி வாழ்வாருக்குப் புகழாதலான் இது வாழ்த்தின்பாற் பட்டது.

(பி - ல்) 5. ணிதியீட்டம். 6. படைத்த. 7. வியந்தொழுகல்.

வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் [8]பாவின வென்ப' (பொருள். சூ. 473.)

என்றார் தொல்காப்பியனார்.

'பண்பார் புறநிலை' என்றும், 'ஒண்பாச் செவியறிவு' என்றும் சிறப்பித்தவதனால், புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெண்பாவேயாயும் ஆசிரியமேயாயும் வரப்பெறும்; கலியும் வஞ்சியுமாய் வரப்பெறாவெனக் கொள்க.

'ஊனமில்லா வெண்பா' என்று சிறப்பித்தவதனால் வேற்று வண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத்தாய் மங்கலமாயிற்றாய் அவ்வாறே வேற்றுத் தளையும் அடியும் விரவாமையின் எல்லாப்பாவி னுள்ளும் வெண்பாச் சிறப்புடைத்தென்று முன்வைக்கப்பட்டது என்று கொள்க.

'வேதவாய் மெய்ம்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்
(க) ஆதிசால் பாவு மரசர் வியன் பாவும்
ஓதியவா றேத மருட்பாவென் றோங்கிற்றே.'

'பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையாற் - பண்மேற்
றிறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவல்
இசைமருட்கு மில்லை யினம்.'

['தென்ற லிடையுந் திருநுதல் வேர்வும் பலமுறையென்
றொன்றிய பாவும்பல் யானையு மென்பவொண் போதமர்ந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே.'

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே மருட்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.]

உ. செய்யுளியலோத்து முற்றும்.

(க) ஆதிசால்பா - அந்தண சாதிப்பா; என்றது வெண்பாவை. அரசர் வியன்பா - ஆசிரியப்பா.

(பி - ம்.) 8. பாங்கினவாகும்.

செய்யுளியல் முதனிலைப்புக் காரிகை (க)

வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையே
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு [1]ளியலென்ப பாவலரே.

க. செய்யுளியல் முதனிலைப்புக் காரிகை பிரதிதோறும் கீழ் வருமாறு வேறுபட்டுள்ளது.

கலித்துறை

(1) வெண்பா வளம்பட வீரடி யொன்றுட நேரிசைமேல்
[2]நண்பாகு மந்தமின் மூன்றடி நண்ணுங் கடையயலும்
தண்பா றருக்கிய [3]லேதர வொன்றசை யேதரவே
திண்பா வடிகுறள் பண்பார் மூவைந்து செயுளியிலே.

அடிவரவாசிரியம்

(2) வெண்பா வகவல் வளம்பட வீரடி
ஒன்றும் பலவும் நேரிசை யந்தமில்
மூன்றடி யானுங் கடையயற் பாதத்
தருக்கிய ருழிசை தரவொன்று தாழிசை
அசையடி முன்னர் தரவே
அடிவரை குறளடி பண்பார் புறநிலையே.

(3) வெண்பா வளம்பட வீரடி யுருவுகண்
டொன்றும் வைக னேரிசை நற்கொற்ற
மாவா ழந்தமின் மூன்றடி கொண்டல்
கடையய னேரிசை தருக்கிய கன்று
தரவொன் றசையடி வளங்கெழு தரவே
குடநிலை யடிவரை கொய்தினை குறளடி
மடப்பிடி பண்பார் தென்றன்மூ வொன்பான்
செய்யு ளியலெனச் செப்பிடு மோத்தே.

(பி - ம்.) 1. ளென்றோதுவர் பத்தைந்துமே. 2. எண்பாவு 3. றரவொன்,. றசையடி.

௯. ஒழிபியல்

எழுத்துக்களின் புறனடை

36. சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉ அளபோ
டாரு மறிவ ரலகு பெறாமையை காரனைவேல்
ஒருங் குறிலிய லொற்றள பாய்விடி னோரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிண்முலை வாணுதலே.

எ...கை. இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் உறுப்பிய லோத்தி னுள்ளும் செய்யுளிய லோத்தினுள்ளும் சொல்லா தொழிந்த [1]பொருளின் இயல்புகளை உணர்த்திற்றாதலால் ஒழிபிய லோத்து என்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுள் இத்தலைக் காரிகை என்னுதலிற்றோ எனின், ஒருசார் எழுத்துக்கட்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்......ற்று.

'சிருந் தளையுஞ் சிதையிற் சிறிய இ, உ, அளபோடு ஆரும் அறிவர் அலகு பெறாமை'—என்பது சீருந்தளையுங் கெடவந்த விடத்துக் குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும் உயிரளபெடையும் அலகு காரியம் பெறா எ - று.

'ஒற்றளபாய்விடின் ஓர் அலகாம்' என்றுரைத்தமையால், ஈண்டு உயிரளபெடையே கொள்ளப்பட்டது.

'சிரும் தளையும் சிதையிற் சிறிய இ உ அளபோடு அலகு பெறா' என்னாது 'ஆரு மறிவர்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் குற்றிய லிகரக் குற்றிய லுகரங்கள் ஒற்றியல்பினவாய் நிற்கும், உயிரள பெடை நெட்டெழுத்தியல்பிற்றாய் நிற்கும், அலகிடு மிடத்து எனக் கொள்க.

'எதிரது மறுத்தல்' என்னும் இலக்கணத்தாற் சீருந் தளையுங் [2]திருந்த நிற்புழி சிறிய இ உ அளபோடு ஆரும் அறிவர் அலகு பெறுதல் என்பதாயிற்று. சீருந் தளையுங் கெடாமல் வந்த இடத்துக் குற்றியலிகரக் குற்றிய லுகரம் உயிரளபெடைகள் அலகு காரியம் பெறும் எ - று.

(பி - ம்.) 1. பொருளை யுணர்த்தினமையின். 2. திருந்திற்.

இன்னும் 'ஆரும் அறிவர்' என்று சிறப்பித்தவதனால் அவை அலகு சாரியம் பெறும் பொழுது குற்றியலிகரக் குற்றிய லுகரமும் குற்றெழுத்தின் பயத்தவாய் நின்று அலகு பெறும் எனக் கொள்க.

உயிரளபெடைகள் அலகு சாரியம் பெறுமாறு தத்தங் சாரிகையுட் போக்கிச் சொல்லுதும்.

வரலாறு

வெண்பா

'(க) சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா னாளைப்
பெருநன்றி மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்.'

இதனுள், 'இன்றிவர்க்கியாம்' என்புழிக் குற்றிய லிகரம் வந்து [வெண்பாவினுள்] வஞ்சி யுரிச்சீராயிற்று. வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவும் என்னும் ஒத்திலாமையால் வெண்பா அழிய நிற்கு மாதலின் ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறா தென்று களையச் சீர் சிதையாதாம்.

குறள் வெண்பா

'குழலினிதி யாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.' (குறள். 66.)

'அருளல்லதி யாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.' (குறள், 254.)

இவற்றுட், 'குழலினி தியாழினி' தென்புழி ஆசிரியத் தளையும், 'அருளல்லதி யாதெனி' லென்புழிக் கலித்தளையும் வந்து 'வெள்ளைத் தன்மை குன்றிப் போஞ்சீர் கனி புகிற் புல்லா தயற்றளை' (கா. 38) என்னும் [3]இலக்கணத்தோடு மாறுகொள்ளும்

(க) பெரிது மன்னும் என்று. அவாய் - விரும்பி. வான் அவாம் உள்ளத்தவர் - விண்ணுலகை விரும்பும் மனத்தவர்.

(பி - ம்.) 3. இலக்கணத்தோடும், வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன, எல்லாத் தளையு மயங்கியும் வழங்கும்' (யா. வி சூ. 32) என்னும் இலக்கணத்தோடும்.

ஆதலான் ஈண்டுக் குற்றிய லிகரத்தை இவ்விலக்கணத்தான் அலகு பெறாதென்று களையச் சீருந் தளையுஞ் சிதையாவாம்.

இனிக் குற்றியலுகரத்துக்குச் சொல்லுமாறு:

வஞ்சிப்பா

'(௨) கொன்றுகோடுநீடு [4]குருதிபாயவும்
[5]சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றமூடுநீடு பிடியுள்போலும்
அதனால்
இண்டிடை யிரவிவ ணெறிவரின்
வண்டுண் கோதை யுயிர்வா ழலளே.'

இக்குறளடி வஞ்சிப்பாவினுட் குற்றிய லுகரம் பல வந்து ஐயசைச் சீரும். ஆறசைச் சீரும் வந்தன; அவ்வாறு வருக என்னும் ஒத்தில்லாமையால் ஆண்டுக் குற்றுகரங்களை இவ்விலக்கணத்தால் அலகு பெறா என்று களையச் சீருந் தளையுஞ் சிதையாவாம்.

இனி, உயிரளபெடைக்குச் சொல்லுமாறு :

வெண்பா

'(௫) பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னுந் [6]தோன்றிலவால் - நெல்லுக்கு
நூறேஒநூ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கும்
மாறேமா லன்றளந்த மண்.'

இதனுள், 'நூறேஒ நூ' றென்புழிப் பண்ட மாற்றின்கண் அளபெடை (௬) **அநுகரணம்** வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருக என்னும் ஒத்தில்லாமையால் இவ்

---

(௨) கோடு - யானையின் தந்தம், மலையின் சிகரம், சங்கு. யானையின் மத்தகத்திற் சங்கம்; சீவக 2306. ஊடும்பிடி. இண்டு - ஈண்டு.

(௫) முல்லை பல்லுக்குத் தோற்ற. மாறே - இடையும் முலையும் சமமான விலை யாமோ. மால் அளந்த உலகினும் பெருமையுடையன.

(௬) அநுகரணம் - ஒலிக்குறிப்புக்கேற்ற எழுத்தில் ஒன்றும் பலவும் வந்து செய்யுளடியைப் பிழைபடா வண்ணம் நிரப்புவது.

(பி - ம்.) 4. குருதி மாறவும். 5. சென்றுசென்றுநீடு. 6. தூற்றின வால்.

வாறு அலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசை யூட்டும்பொழுது ஓசை யுண்ணாது செப்பலோசை அழிந்து நிற்குமாதலால் ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தான் அலகு பெறுதென்று [களைந்து] நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடச் சீரும் தளையும் சிதையாவாம்.

வெண்பா

‘(௫) இடைநுடங்க வீங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.’

இதனுள் ‘உப்போஒ’ என்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடை யனுகரணம் வந்து கலித்தளை (௬) தட்டு, [7] அவ்வாறு வரும் இலக்கணம் இன்மையான் அலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசை யூட்டி னும் ஓசை யுண்ணாது செப்பலோசை யழிந்து வருமாதலான், ஈண்டு உயிரளபெடையை [இவ்விலக்கணத்தால்] நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடத் தளை சிதையாதாம்.

இனிக் குற்றிய லிகரக் குற்றியலுகரங்கள் குற்றெழுத்தே போல நின்று அலகு பெறுமாறு :

வெண்பா

‘(௭) வந்துநீ பேரி னுயிர்வாழும் வாராக்கான்
முந்தியாய் பெய்த வளைகழலும் - முந்தியாம்
கோளானே கண்டநங் கோல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு.’

இதனுள் ‘வந்துநீ’ என்புழிக் குற்றியலுகரமும் ‘முந்தியாய்’ என்புழிக் குற்றியலிகரமும் சீர்தளை சிதையாமல் வந்து திருந்தி நிற்றலிற் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெற்றவாறு கண்டு கொள்க.

---

(௫) கடைகடையின் - முன்றில் தோறும்.

(௬) தட்டு - ஒன்றி.

(௭) ஆய் - தாய். கோள் - கொள்கை. கோல் குறியாய் - கோல் அடையாளமாக.

(பி - ம்.) 7. வெண்பா வழிய நிற்கு மாதலின் ஈண்டு.

['இஉ இரண்டின் குறுக்கந் தளைதப
நிற்புழி யொற்றும் நிலைமைய வாகும்'
'உயிரள பேழு முரைத்த முறையான்
வருமெனி னவ்வியல் வைக்கப் படுமே'
என்றார் காக்கைபாடினியார்.]

'தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய விகரமுங் குற்றிய லுகரமும்
அளபெடை யாவியு மலகியல் பிலவே'
என்பது யாப்பருங்கலம் (சூ. 4.)

'ஐகாரம் நைவேல் ஒருங் குறிலியல்' எ - து. ஒன்றரை மாத்திரை என்று ஓதப்பட்ட, ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக்கொண்டு அலகிடப்பெறும் எ-று. 'ஒரும்' என்பது இடைச் சொல்.

'குறுமை யெழுத்தி னியல்பே யைகாரம்
நெடுமையி னீங்கியக் கால்'
எனவும்,

'ஈறு மிடையு மிணைந்து மிணையசை
யாகுமை யென்ப வறிந்திசி னோரே'
எனவுஞ் சொன்னார் ஆகலின்.

[8]'அன்னையை நோவ தவமா லணியிழாய்
[9]புன்னையை நோவன் புலந்து.'

'(அ) கடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையாய் கோறா வெனலும் - அடைப்பையான்
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் [10]றனைப்பெறினும்
கொள்ளாதி யாங்காண் டலை.'

'கெண்டையை வென்ற கிளரொளி யுண்கணாள்
பண்டைய ளல்லள் படி.'

இவற்றுள் ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் குறிலோடும் நெடிலோடும் கூடி நின்று நிரையசை யாயின.

(அ) அடைப்பையான் - வெற்றிலை பாக்குப் பெட்டியைத் தூக்குபவன். கோல் தா எனலும். சுள்ளற் சிறு கோல் - சுள்ளென்று அடிப்பதற்கு ஏற்ற வளைந்தகோல். அதன்வேகம் நாம் காண்டலைக் கொள்ளாது.

(பி - ம்.) 8. அன்னையையா னேவ தெவன்மா. 9. புன்னையை யானே' 10. றலைப்பெறினும் எள்ளாதி யாங்கண்டிலம்.

'ஒற்றளபாய்விடின் ஓர்அலகாம்' எ - து. ஒற்றுக்கள் அளபெழுந்தால் நேரசையாம் எ - று.

'ஆய்தமு மொற்று மளபெழ நிற்புழி
வேறல செய்தும் விதியின வாகும்'

என்றார் காக்கை பாடினியார்.

ஒற்றுக்கள் அளபெழாவழி அலகுகாரியம் பெறா என்பதாம்.

'தனிநிலை யொற்றிவை தாமல கிலவே
யளபெடை யல்லாக் காலை யான' (யா. வி. சூ. 3.)

என்றார் ஆகலின்.

'கார்க்கட லீர்த்திரையாய்க் கன்னற்கே சார்வடிவம்
போர்க்களிறு வாளிதொட்ட போது.'

இதனுள் ஈரொற்று உடனிலையாய் நிற்பினுங் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகு பெறாவெனக் கொள்க. என்னை?

'ஈரொற் றுயினு மூவொற் றுயினும்
ஓரொற் றியல வென்மனார் புலவர்'

என்றார் ஆகலின்.

(க) ['கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்.' (மலைபடு. 352.)]

'கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு.

'(௧௦) எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃ குவார்க்கில்லை வீடு.'

இவற்றுள் ஒற்றும் ஆய்தமும் அளபெழுந்து ஓரலகு பெற்றவாறு கண்டு கொள்க.

['இருவகை மருங்கினு மெய்யள பெழினே
நிரை நேர் நேர்நே ராகுத லன்றி
நிரை நிரை நேர்நிரை யாகுத லிலவே']

'வாரும் வடமுந் திகழு முகிண் முலை வாணுதலே' எ - து. மகடூஉ முன்னிலை. (௧)

(க) கண் தண் எனக்கண்டும்.

(௧௦) எஃகு - வேல்; ஆயுதப் பொது. வெஃகுதல் - ஆசைப்படுதல்.

அசையின் புறனடை

37. விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறி னேரசையேன்
றேட்டப் படாததற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடி னேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னற்குறில் சேரி னிலக்கிய மேர் சிதைவே.

இ - கை. ஒருசார் அசைகட்கு எய்தியதோர் இலக்கண முணர்த்......று.

'விட்டிசைத் தல்லான் முதற்கண் தனிக்குறில் நேரசை என்று ஒட்டப்படாது' எ - து. மேல் பொது வகையாய், தனிக்குறில் நேரசை என்றார் (கா. 5.) ஆயினும், (க) விட்டிசைத்து நின்றபொழுதல்லது மொழிக்கு முதற்கண் நின்ற தனிக் குற்றெழுத்து நேரசை யாகாது. எனவே, விட்டிசையாத வழி மொழி முதற்கண் தனிக்குறில், குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசையாம் என்பதாயிற்று.

'அதற்கு உண்ணுன் உதாரணம்' எ - து :

வெண்பா

'(உ) உண்ணு ளொளிநிறு ஞெங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.'

இதனுள் அஆ என்புழி அருளின்கட் குறிப்பாய், விட்டிசைத்துக் குற்றெழுத்து மொழிக்கு முதற்கண் நேரசையாயின வாறும், அல்லாத வழி பிறவற்றின் குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசை ஆயினவாறும் கண்டு கொள்க.

வெண்பா

'(ங) வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணமை வேண்டிற்—பறிமுன்கை

(க) விட்டிசை - வருமொழியோடு தொடர்தலின்றி வேறுபட்டு ஒலித்தலை யுடையது.

(உ) ஒளி என்பது தான் உளனுய காலத்து விளங்குதல்; புகழ் என்பது தான் இறந்த காலத்தும் உளதாம் பெயர். கொன்னே - பயனின்றியே. 'கொன்னே பொருள் காத்திருப்பானேல்' என்று கூட்டுக.

(ங) புறவின் - முல்லை நிலத்தில். மறி - ஆட்டுக் குட்டி. பறி - பனை

அஉ மறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ.'

இது தற்சுட்டின் கண்ணும் ஏவற் கண்ணும் வந்தது. 'அ உம் அறியா' என்பது அகரம், தன்னையே சுட்டினமையின் தற்சுட்டு; 'நொ' என்பது 'இன்னதொன்றைச் செய்' என்றமையின் ஏவல்.

'அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை [1]வெல்வா ரிகல்?'

இது சுட்டின் கண்ணும் வினாவின் கண்ணும் வந்தது; இவற்றுள் 'அ அவனும், இ இவனும், உ உவனும்' என்பது சுட்டு; 'எ எவனை' என்பது வினா எனக் கொள்க.

(ச) இவ்வைந்தும் மொழி முதற்கண் விட்டிசைத்து வந்தன.

'விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசையாகாது' என்னாது, 'ஒட்டப்படாது' என்று சிறப்பித்தவதனால் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்து குற்றெழுத்து நேரசையாம் என்பதூஉம், விட்டிசைத்து நிற்பதுதான் குறிப்பின் கண்ணும், ஏவற் கண்ணும், தற்சுட்டின் கண்ணும், வினாவின் கண்ணும், சுட்டின் கண்ணும் என்பதூஉம், விட்டிசைத்து வந்த குற்றெழுத்து மற்றோர் எழுத்தினோடு கூடி நிரையசை ஆகாது என்பதூஉம் கொள்க.

'அஇ உஎ ஒ இவை குறிய மற்றைய
ஏழ்நெட் டெழுத்தா நேரப் படுமே'

என, தற்சுட்டின்கண் குற்றெழுத்து மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து நேரசை யாயிற்று. ஏவல் முதலியவற்றின்கண் நின்ற குற்றெழுத்து மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து நேரசையாயினவாறு வந்தவழிக்கண்டு கொள்க.

யோலைப்பாய்; 'பறிப்புறத் திட்ட பானுரையிடையன்' (நற், கசஉ.) அஉம் - அ என்ற எழுத்தையும். நொ அலையல் - துன்பப் படுத்தாதே.

(ச) ஐந்தும் என்றது குறிப்பு, தற்சுட்டு, ஏவல், சுட்டு, வினா என்ற ஐந்தனிடத்தும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்தினை.

(பி - ம்.) 1. வெல்லா ரிகல்.

'ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா
சுட்டினும் வினவினு முயிர்வரு காலை
ஒட்டி வரூஉ மொருசாரு முளவே'

என்றார் மயேச்சுரர்.

'ஓசை குன்று நெட்டளபாய் விடின் நேர் நேர்' எ - து. நெட்டெழுத்து அளபெடுத்து வருமெனின் அஃது இரண்டு நேரசையாக வைக்கப்படும் எ - று.

'ஓசை குன்று' என்று மிகுத்துச் சொல்லியவதனால் மூன்று மாத்திரையின் மிக உச்சரிப்பினும் நேர் நேராக வைக்கப் படும் எ - று.

'நிரையொடு நேரசையாம் இட்டத்தினால் குறில் சேரின்' எ - து. குற்றெழுத்தினோடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெடுத்து வந்தால் அவை [இரண்டனையும் கூட்டி] நிரையசையும், நேரசையுமாக வைக்கப்படும் எ - று.

'இலக்கியம் ஏர் சிதைவே' எ - து.

குறள் வெண்பா

'(௫) ஏஎர் சிதைய வழாஅ லெலாஅ நின்
சேயரி சிந்திய கண்'

என்னும் இப்பாட்டு நேர் நேர் ஆதற்கும், நிரை நேர் ஆதற்கும் இலக்கியம் எனக் கொள்க. இதனுள் 'ஏஎர்' என்பது நேர் நேராயிற்று; 'அழாஅல்' என்பதும், 'எலாஅ' என்பதும் நிரை நேராயின.

'இட்டத்தினால்' என்று சிறப்பித்தவதனால் பின்பு நின்ற குற்றெழுத்தி னோடும் நெட்டெழுத்தினோடும் கூடி அளபெடை நிரையசை ஆகாதெனக் கொள்க.

'தனிநிலை யளபெடை நேர்நே ரியற்றே
இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே'

என்றார் பிறருமெனக் கொள்க. (௨)

---

(௫) ஏஎர் - அழகு. அழா அல் - அழாதே. எலாஅ - தோழியே.

சீர்க்கும் தளைக்கும் புறனடை

38. **மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்**
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கோடியே.

இ - கை. சீருந் தளையும் செய்யுளகத்து நிற்பதோர் முறைமை யுணர்த்......று.

'மாஞ்சீர் கலியுட்புகா' எ - து - தேமா புளிமா என்னும் இரண்டு நேரீற்று இயற்சீரும் கலிப்பாவினுட் புகப்பெறா எ - று.

'கலிப்பாவின் விளங்கனி வந்து ஆம் சீர் அடையா' எ - து. கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறா எ - று.

'அகவலகத்தும்' எ - து. ஆசிரியப்பாவினுள்ளும் கருவிளங்கனி கூவிளங்கனியென்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் புகப்பெறா எ - று.

'அல்லாத எல்லாம் தாம்சீர் மயங்கும்' எ - து. ஒழிந்த சீர் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்படும் எ - று.

'தளையும் அஃதே' எ - து. நான்கு பாவிற்றளையும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப்படும் எ - று.

'வெள்ளைத் தன்மை குன்றிப் போம் சீர் கனி புகில்' எ - து. எல்லாச் சீரும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவினுட் புகப்பெறா, புகில் [1]வெள்ளோசை யழிந்து வேறுபட்டு ஓசையுண்ணாது கெடும் எ - று.

'புல்லாது அயற்றளை' எ - து. எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் எல்லாத் தளையும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், வெண்பாவினுள் வெண்சீர் வெண்டளை ஒன்ற

(பி - ம்.) 1. செப்பலோசை.

லும் இயற்சீர் வெண்டளை ஒன்றலும் அல்லது வேற்றுத்தளை விரவா எ - று.

'பூங் கொடியே' எ - து. மகடூஉ முன்னிலை.

வரலாறு

'குடநிலைத்தண் புறவில்......சென்ற வாறே' (கா. 21, மேற்)

என்னும் (க) தரவு கொச்சகக் கலிப்பாவினுள் நிரையீற்று ஆசிரிய வுரிச்சீரும் [2]நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் புக்கு மயங்கிய வாறு கண்டு கொள்க. நேரீற்று ஆசிரிய வுரிச்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வருதலில்லாமையும் கண்டு கொள்க.

ஆசிரியப்பா

'நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிதம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவி லென்னையர் மலையே.'

இவ்வாசிரியப் பாவினுள் தன்சீரும் வெண்சீரும் நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, தன்றளையும் வெண்டளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க. நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வாராமையும் கண்டு கொள்க.

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்.' (புறா. 2.)

'[3]பன்சாற் புணர் மருதின்
[4]போதப்பிய புனற்றாமரை.'

(க) இது பிரிந்திசைத் துள்ளலோசைக்கு மேற்கோள்; கா. 21; தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த தரவு கொச்சகக் கலிப்பா; கா. 32, உரை.

(பி-ம்.) 2. வெண்பாவுரிச்சீரும், நேர்நடு. 3. புன்காய்ப். 4. போதரும்பிய.

'தேன்றூட் டீங்கரும்பின்
பூந்தாட் புனற்றாமரை
வார்காற் செங்கழுநீர்.'

இக்குறளடி வஞ்சிப்பாக்களுள் (உ) தன்சீரும் வெண்சீரும் நேரீற்று இயற்சீரும் வந்து [5]வஞ்சித்தளையும், வெண்டளையும், ஆசிரியத்தளையும் கலித்தளையும் [6]விரவி வந்தவாறு கண்டுகொள்க.

['முழங்குதிரைக் கொற்கை வேந்தன்......வேறுபவே' (கா. 27, மேற்.) என்னும் வேற்றொலி வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும் இயற்சீரும் வெண்சீரும் வந்து, வஞ்சித்தளையும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டு மயங்கியவாறு கண்டு கொள்க.]

கலி விருத்தம்

'(ரு) வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மவ்வல்
நளிர்கொடியன நறுவிரையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன [7]கோங்கம்
ஒளிர்கொடியன [8]வுயர்தளிரன வொழுகிணரன வோடை.'

(சூளா. தூது. 4.)

இக்கலிவிருத்தத்துள் (ச) நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் நேரீற்று இயற்சீரும் [வந்து வஞ்சித்தளையும், இயற்சீர் வெண்டளையும்] மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

நேரீற்று இயற்சீர் கலிப்பாவினுள் வாராதவாறும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் வாராதவாறும், வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வாராத

(உ) 'நிலனேந்திய விசும்பும்' என்ற தொடக்கத்து அடிகள் வஞ்சித்தளை வந்தவை; 'புன்காற் புணர்மருதின்', 'பூந்தாட் புனற்றாமரை' என்பன வெண்டளை வந்தவை; 'தேன்றூட் டீங்கரும்பின்', 'வார்காற் செங்கழுநீர்' என்பன ஆசிரியத்தளை வந்தவை; 'மண்டிணிந்த நிலனும்' என்பது கலித்தளை வந்தது.

(ரு) மவ்வல் - காட்டு மல்லிகை. வகுளம் - மகிழ மரம். குழைமாதவி - தளிர்களோடு கூடிய குருக்கத்திக்கொடி. இணர் - பூங்கொத்து. ஓடை - ஒரு மர விசேடம்.

(ச) ஒவ்வோர் அடியின் ஈற்றிலுள்ள சீர் நேரீற்றியற்சீர்; மற்றவை நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர்கள்.

(பி - ம்.) 5. தன்றளையும். 6. மயங்கி. 7. கொகுடி. 8. வுயர்தளிரிணரொடொழு, வுயர்திரளிணரொடொழு.

வாறும் வேற்றுத்தளை மயங்காமையும் மேற்காட்டிய செய்யுளகத்துள்ளும் பிறவற்றுள்ளும் ஆராய்ந்து கண்டுகொள்க.

நேரீற்று இயற்சீர் வெண்கலியுள்ளும் கொச்சகக் கலியுள்ளும் வருதலும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகக் கலியுள் அருகி வருதலும் செய்யுளோத்தினுள்ளே சொல்லப்பட்டதெனக் கொள்க.

வெண்பா

'(ரு) குலாவணங்கு வில்லெயினர் சோன்கண்டன் கோழி
நிலாவணங்கு [9]வெண்மணன்மே னின்று—புலாலுணங்கல்,
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ[10]நீபிறர்
உள்ளம்புக் காப்ப துரை'

என்று இத்தொடக்கத்து வொருசார் வெண்பாவினுள் (கூ) வஞ்சியுரிச்சீர் வந்தனவாலோ எனின் திருவள்ளுவப்பயன், நாலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும் முத்தொள்ளாயிரம் முதலாகிய பிற சான்றோர் செய்யுளுள்ளும் வஞ்சியுரிச்சீர் வாராமையாலும், வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வருக என்னும் ஒத்தில்லாமையாலும் வேற்றுத்தளை வெண்பாவினுள் விரவாமையாலும், இத்தொடச்சத்தன குற்றமல்லது குணமாகாவென்பது காக்கை பாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு; இதுவே இந் நூலுடையார்க்கும் உடன்பாடு.

'இயற்சீர் [11]நேரீற் றதன்றளை யுடைய
கலிக்கியல் பிலவே காணுங்காலை

(ரு) குலா - மகிழ்ச்சியையுடைய. வணங்குவில் - வளைந்தவில். கண்டன் - சோழன். கோழி - உறையூர் நிலா வணங்கு மணல் - 'தன் ஒளியினால் நிலவை வருத்தும் மணல்' என்றேனும், 'நிலவானது தோற்று வணங்குகின்ற மணல்' என்றேனும் பொருள் கொள்வர். உணங்கல் - வற்றல். புள்காக்கின்ற - பறவைகளை ஓட்டுகின்ற. கோ - தந்தை. உள்ளம் புக்கு ஆப்பது - என் உள்ளத்திற்புகுந்து அதனைக் கட்டுவது.

(கூ) 'கோவின்மையோ' என்பது வஞ்சியுரிச்சீர். இதனுள் 'வின்மை' என்பதன் நடுவிலுள்ள மெய்யை நீக்கி, 'விமை' எனக் கொண்டு இச்சீரைப் பிற்காலத்தார் கூவிளங்காயாகக் கொள்வர். 'சந்தி செயத் தாள் விளக்கத் தூளின்மறுத் தான்கண்டு' (நள.), 'ஈதலறந் தீவினை விட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்' (தனிப்.) என்னும் வெண்பா வடிகளில் இத்தகைய வஞ்சியுரிச்சீர் பயின்றுள்ளமை காண்க.

(பி - ம்.) 9. நொய்மணன்மே. 10. பிறந்துள்ளம் 11. நேரீற்றுச்.

வஞ்சி யுள்ளும் வாரா வாயினும்
ஓரோவிடத் தாகு மென்பனர் புலவர் '

என்றார் பல்காயனார்.

' நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே '

' வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன
எல்லாத் தளையு மயங்கியும் வழங்கும் '

என்பன யாப்பருங்கலம். (சூ. 16, 22.) (ரு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1949
MADRAS

அடி மயக்கம்

39. இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப்படா வல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே.

இ......கை. என்னுதலிற்றோவெனின் (க) அடிமயக்கம் ஆமாறு உணர்த்......று.

' இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள்ளான் மயக்கப்படாவல்ல ' எ - து.—இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் ஆசிரியப்பாவினுள் மயங்கப் பெறும் எ - று. என்னை ?

' இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கு
நிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே '

என்றார் தோல்காப்பியனார் (பொருள், சூ. 374.)

' வஞ்சி விரவ லாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கடிவரை யிலவே '

என்றார் [1]பல்காயனார்.

(க) அடிமயக்கம் - ஒருபாவுக்குரிய அடி மற்றொரு பாவில் பயின்று வருவது.

(பி - ம்.) 1. நத்தத்தனார்.

வரலாறு

ஆசிரியப்பா

'(உ) எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
[2] நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.' (குறுந். கஉ)

இந்நேரிசை யாசிரியப்பாவினுள், 'எறும்பி யளையிற் குறும் பல் சுனைய' என்பது இயற்றளை வெள்ளடி. அதனை

குறள் வெண்பா

'எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்'

என்று உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்க.

ஆசிரியப்பா

'(ரு) [3] இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தோரே
அதனால்,
நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை

(உ) எறும்பி அளையின் - எறும்பின் வளைகளைப் போல. உலைக்கல் - கொல்லனது உலைக்களத்துள்ள பட்டடைக்கல். பகழி மாய்க்கும் கவலைத்து - அம்புகளைத் தீட்டுதற்கு இடமாகிய கவர்த்த வழிகளை யுடையது. நொதுமல் கழறும் - அயற்றன்மையையுடைய சொற்களைக் கூறி இடித்துரைக்கும் அழுங்கல் - ஆரவாரம்.

(ரு) உடைமரத்தின் இலை மிகச் சிறியது. மடங்கல் - இறத்தல். வெள்ளில் - பாடை. வியலுள் - அகன்ற இடத்தின்கண். விலங்குபலி - மாறுபட்ட பிச்சை. மிசையும் - உண்ணும்.

(பி - ம்.) 2. நொதுமலர்க் கழறும். 3. இருங்கடற் றானையொடு பெருநிலங் கவைஇ.

மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்கு பலிமிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முன்னீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே'

(புறநா. ௩௬௩.)

இவ்வாசிரியப் பாவினுள் 'உப்பிலாஅ வவிப்புழுக்கல்' எனவும், 'கைக்கொண்டு பிறக்கு நோக்கா' எனவும், 'இழிபிறப்பினோ னீயப்பெற்று' எனவும் வஞ்சியடி விரவி வந்தவாறு கண்டுகொள்க.

['இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள் ளான்] மயக்கப்படும்' என்றது 'மயக்கப்படா வல்ல' என்று இருகால் விலக்கிச் சொன்னமையால் வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடியும் கலியடியும் ஆசிரியத்துள் அருகி வரப் பெறும் எனக் கொள்க.

வரலாறு

நேரிசையாசிரியப்பா

'(௪) அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதின் மாக்களு நோவர் தோழி
என்று நோவா ரில்லைத்
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே.'

இவ்வாசிரியத்துள், 'அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்' டென்பது வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடி. இதனை,

---

(௪) மதியம் அரவின்வாய்ப்படுதல் - சந்திரகிரகணம் உண்டாதல். பூசல்வாயா - ஆரவாரம் அற்ற. ஏதின் மாக்கள் - அன்னியர். சந்திர கிரகண காலத்தில் மக்கள் வருந்துதல் ஒழிய அம்மதியின் இடுக்கணைக் களைகுநர் இல்லை என்றவாறு; 'அரவுநுங்கு மதியினுக் கிவணோர் போலக் களையாராயினுங் கண்ணினிது படீஇயர்' (குறுந். ௩௬௫.) உண்ட என்நலக்கே - என் நலத்தை அழித்ததற்கு.

குறள் வெண்பா

'அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது'

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா

'(ங) குருகுவேண் டாளி கொடுபுயத் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் [4]சாரல்
அருளா ளாகுத லாயிழை கொடிதே.'

இவ்வாசிரியத்துள் இரண்டாம் அடி கலியடி. இதனை,

'மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றழலுமே'

என வுச்சரித்துக் (சு) கலியடி யாமாறு கண்டுகொள்க.

'வஞ்சி மருங்கின் எஞ்சா அகவல் கலிப்பாதமும் நண்ணும்' எ - து. வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடியும் கலியடியும் வந்து மயங்கப்பெறும் எ - று.

'எஞ்சாவகவல்' என்று சிறப்பித்தவதனால் வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும், கலியடியும் அருகியன்றி வாரா எனக் கொள்க.

'கலிப்பாதமும்' என்ற உம்மையால் வஞ்சியுள் வெள்ளடியும் அருகிவந்து மயங்கப்பெறும்.

'கயற்கண் நல்லாய்' எ - து. மகடூஉ முன்னிலை.

பட்டினப்பாலை என்னும் (எ) வஞ்சிநெடும் பாட்டினுள் ஆசி

(ங) குருகு வேண்டு ஆளி - இளமை பொருந்திய ஆளி என்னும் விலங்கு. உண்டென - களிற்றை உண்டதாக. மாவழங்கு - கொடிய விலங்குகள் திரிகின்ற. சாரலில் தலைவன் அருளாதவனாக இருத்தல் கொடிது. இது தலைவி கூற்று.

(சு) கலிப்பாவினுள் இது தாழிசை என்னும் உறுப்பு.

(எ) வஞ்சியடிகள் விரவி வந்தமையின் பட்டினப்பாலையை வஞ்சி நெடும் பாட்டு என்றும் கூறுவர்.

(பி - ம்.) 4. சோலை.

ரியவடி பயின்றும் கலியடியும் வெள்ளடியும் அருகியும் வந்தன வும் உளவெனக் கொள்க.

'நேரிழை மகளி ருணங்குணக் கவரும்' (பட்டினப், 22.)
என்ற இத்தொடக்கத்தன ஆசிரியவடி.

'கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை' (பட்டினப், 23)
என்பது (அ) இயற்றளை வெள்ளடி. இதனைக்,

குறள் வெண்பா

'(க) கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
யாழிசூழ் வையக் கணி'

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

'வயலாமைப் புழுக்குண்டும் வறளடும்பின் மலர் மலைந்தும்'
(பட்டினப், 64-5.)

என்பது கலியடி இதனை,

'வயலாமை புழுக்குண்டும் வறளடும்பின் மலர்மலைந்துங்
கயல்நாட்டக் கடைசியர்தங் காதலர்தோள் கலந்தனரே'

என வுச்சரித்துக் (கO) கலியடியாமாறு கண்டுகொள்க.

'கலியினுள்ளான் முயக்கப்படும் (கக) முதற்கால் இரு பாவும் முறைமையினே' எ - து. கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் புக்கு மயங்கப்படும் எ - று.

'முறைமையினே' என்பது - வரலாற்று முறைமையோடுங் கூட்டி மயக்க முறைமை செய்து வழங்கப்படும் எ - று.

'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்' (கலி. ௩அ.)
என்னும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

(அ) இயற்றளை வெள்ளடி - இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடி.

(க) கனங்குழை - குழையை யணிந்த பெண். வையக்கு - பூவுலகுக்கு.

(கO) கலிப்பாவினுள் இது தாழிசை என்னும் உறுப்பு.

(கக) வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி. எனக் கிடந்த வரன் முறையான் முன்பில் இரண்டும், 'முதற்கால் இருபா' எனப்பட்டன.

'வெண்பா விரவினுங் கடிவரை யின்றே'
என்றார் [5]நத்தத்தனார்.

'ஆசிரியப் பாவி னயற்பா வடிமயக்கும்
ஆசிரியம் வெண்பா கலிக்கண்ணும்—ஆசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்
ஒண்பா வடிவிரவா வுற்று.' (நாலடி நாற்பது.)

இதனை விரித்துப் பொருளுரைத்துக் கொள்க. (ச)

(பி - ம்.) [5]நற்றத்தனார்.

அடிக்கும் தொடைக்கும் புறனடை

40. அருகிக் கலியோ டகவன் மருங்கினைஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமேன்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரேன்பதுவே.

இ......கை. ஒரு சார் அடிக்கும் தொடைக்கும் எய்திய தோர் இலக்கண முணர்த்......று.

'அருகிக் கலியோடு அகவல் மருங்கின் ஐஞ்சீர் அடியும் வருதற்கு உரித்தென்பர் வான்தமிழ் நாவலர்' எ - து. ஒரு சார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகிவரப்பெறும் என்று சொல்லுவர் புலவர் எ - று.

வரலாறு

'(க) அணிகிளர் [1]சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர்த் தொட்டுழந்து [2]மலைந்தனையே.'

இக்கலிப்பாவினுள் முதலடியின் ஐஞ்சீர் வந்தவாறு கண்டு கொள்க.

நேரிசையாசிரியப்பா

'(உ) உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா

(க) பொறி - புள்ளிகள். அவிர் துத்தி - விளங்குகின்ற படம். மலைந்தவன் கண்ணன். இது தாழிசை.

(உ) உமணர் - உப்பு வாணிகர். சேர்ந்து கழிந்த - கூடிக் கடந்து

(பி - ம்.) 1. பொறியவிர். 2. மலர்ந்தனையே.

டின்னு வென்றி ராயின்
இனியவோ பெரும [3]தமியோர்க்கு மனையே '(குறுந். கஉச.)

இவ்வாசிரியத்துள் முதலடி ஐஞ்சீரான் வந்தவாறு கண்டு கொள்க.

['சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' (கா. 28. மேற்.) என்னும் இணைக்குறளாசிரியப்பாவினுள் ஐஞ்சீரடியும் வந்தவாறு கண்டு கொள்க.]

'வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப'

என்றார் தொல்காப்பியனார் (பொருள். சூ. 375.)

(ங) வெண்பாவினுள் ஐஞ்சீரடியும் வரப்பெறுவெனக் கொள்க.

'ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல'

என்று நத்தத்தனார் அடிநூலினுள் எடுத்தோதினார்.

'மற்றொருசார் கருதில் கடையே கடையிணை பின்கடைக் கூழையும் என்று இரணத்தொடைக்கும் மொழிவர் இடைப் புணர் என்பதுவே' எ - து. ஒரு சாராசிரியர் முரண்தொடையைக் கடைமுரணும், கடையிணை முரணும், பின்முரணும், கடைக்கூழை முரணும், இடைப்புணர் முரணும் என்று வேண்டுவர் எ - று.

இரணத் தொடை எனினும் பகைத்தொடை எனினும் முரண்டொடை எனினும் ஒக்கும். என்னை?

சென்ற. ஊர் பாழ்த்தன்ன - ஊர் பாழாகப் போனது போன்ற. ஓமை - ஒரு மர விசேடம். இது தோழி கூற்று.

(ங) வெண்பாவினுள் ஒரோவிடத்து ஐஞ்சீரடியும் வருதலுண்டு. உ - ம்:

உதிரந் துவரிய வேங்கை யுகிர்போல்
எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—எதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறும்
துன்பங் கலந்தழியு நெஞ்சு. (ஐந்திணை ஐம். 31.)

இங்ஙனம் வருதல் பலர்க்கு உடன்பாடன்று.

(பி - ம்.) 3. தமியேற்கு.

4'மொழியினும் பொருளினு முரணத் தொடுப்பின்
இரணத் தொடையென் றெய்தும் பெயரே'
(காக்கை பாடினியார்.)

'மொழியினும் பொருளினு முரணுதன் முரணே'
(தொல். பொருள், சூ. 407; யா. வி. சூ. 38.)

'மறுதலை யுரைப்பினும் பகைத்தொடை யாகும்'
(அவிநயனார்.)

எனவும் சொன்னார் ஆகலின்.

[கடைமுரணாவது அடிதோறும் இறுதிச்சீர் முரணத் தொடுப்பது. கடையிணை முரணாவது அடிதோறும் கடையிரு சீர் முரணத் தொடுப்பது. பின்முரணாவது இரண்டாஞ் சீர்க் கண்ணும் நான்காஞ் சீர்க்கண்ணும் முரணத் தொடுப்பது. கடைக் கூழை முரணாவது முதற் சீர்க் கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க் கண்ணும் முரணத் தொடுப்பது. இடைப்புணர் முரணாவது நடு இருசீர்க் கண்ணும் முரணத் தொடுப்பது.]

வரலாறு

நேரிசை யாசிரியப்பா

'5கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே
நூலினு நுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே'

இஃது அடிதோறும் கடைச்சீர் மறுதலைப்படத் தொடுத்த மையாற் கடைமுரண்டொடை.

நேரிசை யாசிரியப்பா

'(ச) 6மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் 7விரிசினைத் தோகூஉம்

(ச) ஞாழல் - புலி நகக் கொன்றை. தோகூஉம் - கூட்டமாக இருக்கும். தவிர்ப்பவும் தவிரான் - நாம் தடுக்கவும் வாராமல் இரான். தேர் கானலம். பீர் - பசலை. சிறுநுதல் : விளி. பீர் ஏர் வண்ணம் பெரிது காண்டும்.

(பி - ம்.) 4. மொழியும் பொருளு முரணத். 5. கயலின் மலைந்த கண்ணிணை. 6. மீன்றேர்ந்து வருந்திய, மீனுய்ந் தருந்திய. 7. விரிசினைக் குழூஉம்.

தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதல் பெரிதே.'

இஃது அடிதோறும் கடை இரு சீரும் முரண்வரத் தொடுத்தமையாற் கடையிணை முரண்.

நேரிசை யாசிரியப்பா

'(ரு) சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் துவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல [8]புகழ்ந்து
வீங்குதொடிப் பனைத்தோ ணெகிழத்
துறந்தோ னலனெம் மேனியோ தீதே.'

இஃது [அடிதோறும்] கடைச்சீரும் இரண்டாஞ்சீரும் மறுதலைப் படத் தொடுத்தமையாற் பின் முரண்.

நேரிசை யாசிரியப்பா

'(சு) காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே'

இது முதற் சீரொழிந்து மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப் படத் தொடுத்தமையாற் கடைக்கூழை முரண்டொடை.

நிலைமண்டில வாசிரியப்பா

'(எ) [9]போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரை
கோதையிற் றழ்ந்த வோங்குவெள் ளருவி
[10]காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்

(ரு) நலன் - நல்லவன். இப்பாட்டினுள் ஐந்தாமடியிலும் வீங்குதல் நெகிழ்தல் முரணாக வந்தன.

(சு) அணங்கும் வருத்தும். ஆல்: அசை. எமக்கே - எம்மை: வேற்றுமை மயக்கம்.

(எ) கோதை - மாலை. அருவிக்குமாலை உவமை. கூதாளி - ஒரு மரவிசேடம். வேரல் - மூங்கில். விரை இ - விரவி. அடி 2 - 4 இடைப்

(பி - ம்.) 8. பயிற்றி. 9. போதுவிடு. 10. காந்தள்பசுங் குலைச் செங்கூதாளி.

பெருமலைச் சீறா ரிழுதரு நலங்கவர்ந்
தின்னு [11]வாயின மினியோர் மாட்டே.'

இஃது இடையிரு சீர்க் கண்ணும் மறுதலைப்படத் தொடுத்தமையால் இடைப்புணர் முரண்டொடை.

இவ்வாறு சொன்னார் கையனார் முதலாகிய ஒரு சாராசிரியர் எனக் கொள்க.

'இரணத் தொடைக்கும்' என்ற உம்மையான் ஒழிந்த மோனை எதுகை இயைபு அளபெடை யென்னும் நான்கு தொடைக்கும் இவ்வாறே ஒட்டிக் கொள்க, [ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்பது தந்திரவுத்தியாகலின்.] அவையெல்லாம் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டு கொள்க. (ரு)

புணர் முரண். ஈற்றுச் சீர் ஒழித்து அல்லனவற்றுள் இரண்டு சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பதும் இடைப்புணர் முரணே என்று எண்ணும்படி அடிகள் 5-உம் 6-உம் அமைந்துள்ளன.

(பி - ம்.) 11. வாயி னினியோர், வாருக வினியோர், வாயின வினியோர்.

எதுகை மோனைகளுக்குப் புறநடை

41. வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா லுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்துமொன்றி
[1]நிரக்கு மெதுகையென் றுலுஞ் சிறப்பில நேரிழையே.

இ......கை ஒருசார் எதுகைக்கும் மோனைக்கும் எய்திய தோர் இலக்கணம் உணர்த்......று.

'வருக்கம் நெடில் இனம் வந்தால் எதுகையும் மோனையும் என்று ஒருக்கப் பெயரால் உரைக்கப்படும்' எ - று. (க) வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும் எதுகையும் மோனையுமாய் வந்தால் அவற்றை வருக்க வெதுகை நெடி

(க) க, கா, கி, கீ.........கௌ இவை கவர்க்கம் இங்ஙனமே சவர்க்கம், டவர்க்கம் என மற்ற உயிர் மெய்களுக்கும் கொள்க.

(பி - ம்.) 1. நிரைக்கு.

லெதுகை இனவெதுகை என்றும், வருக்கமோனை, நெடில்மோனை இனமோனை என்றும் பெயரிட்டு வழங்கப்படும் எ - று.

வரலாறு

இன்னிசை வெண்பா

'(உ) நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
[2]பாடுவண் டஞ்சி யகலும் [3]பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் [4]படலொல்லா
[5]பாடமை சேக்கையுட் கண்.'

இது டகர மெய்வருக்க வெதுகை.

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.' (குறள், 37.)

இது றகர மெய்வருக்க வெதுகை.

'ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்' (கா. 27, மேற்.)

இது நெடிலெதுகை.

இது இரண்டாமெழுத் தொன்றாதாயினும் இரண்டா மெழுத்தின் மேலேறிய நெடிலொப்புமை நோக்கி நெடிலெதுகை என்று வழங்கப்படும்.

இனவெதுகை மூன்றுவகைப்படும், வல்லின வெதுகை மெல்லின வெதுகை இடையினவெதுகை என.

வரலாறு

'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.' (குறள், 114.)

இது வல்லின வெதுகை.

'அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு.' (குறள், 74.)

இது மெல்லின வெதுகை.

(உ) இணர் - பூங்கொத்து. தொடி நெகிழ்த்தார் - வளையல் கழலும்படி மெலியச் செய்த தலைவர். உள்ளார் - நம்மை நினையார். பாடு அமை சேக்கை - பெருமை பொருந்திய பாயல். சேக்கையுள் கண் படல் ஒல்லா.

(பி - ம்.) 2. பாடும் வண். 3. பருவத்தும். 4. படலொல்லாப், படரொல்லார். 5. பாடாமைச்.

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.' (குறள், 299.)

இஃது இடையின வெதுகை.

இனி வருக்கமோனை முதலாகிய மூன்று மோனையும் வருமாறு.

ஆசிரியப்பா

'(௫) பகலேபல் [6]பூங்கானக் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் [7]பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் [8]திருத்திப்
புனையீ ரோதி செய்குறி [9]நசைஇப்
பூந்தார மார்ப புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு [10]பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை [11]யொரீஇப்
பொங்குசினந் தணியாப் [12]பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாட்
பேளவத் தன்ன பாயிரு ணீந்தி
இப்பொழுது வருகுவை யாயின்
நற்றூர் மார்ப நீண்டலெங் கதுப்பே.'

இது பகரமெய் வருக்கமோனை.

'ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.'

(முதுமொழிக்காஞ்சி.)

இது முதலெழுத்து ஒன்றாதாயினும் முதலெழுத்தின்மேல் ஏறிய நெடில் ஒப்புமை நோக்கினமையால் நெடில்மோனை என்று வழங்கப்படும்.

இனமோனை மூன்று வகைப்படும், வல்லின மோனையும் மெல்லினமோனையும் இடையின மோனையும் என.

---

(௫) இதனுள் அடிதோறும் முதற்கண் பகர வருக்கவெழுத்துப் பன்னிரண்டும் முறையே வந்தவாறு காண்க.

(பி - ம்.) 6. பூங்கானற். 7. பிணியவிழ்ந் தன்ன நெடுங். 8. திருகிப். 9 நோக்கிப். 10. பெருங்காட்டுட். 11. வெரீஇப்பொருதுசினந் தணிந்த. 12. பூணுத.

வரலாறு

ஆசிரியப்பா

'கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை [13]பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் [14]வாழி யைய பூத்த
கோழுங்கொடி [15]யணிமலர் தயங்கப்
பெருந்தண் [16]வாடை வரூஉம் பொழுதே.'

இஃது எல்லாவடியும் முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமையால் வல்லின மோனை. இது கையனார் காட்டிய பாட்டு.

மெல்லின மோனையும் இடையின மோனையும் வந்துழிக் கண்டுகொள்க.

'வருக்க நெடிலினம் வரையா ராண்டே
நெடிய பிறவு மினத்தினு மாகும்'

என்றாரும் உளர் எனக் கொள்க.

'வருக்கம் நெடில் இனம் வந்தால் எதுகையும் மோனையும் என்று உரைக்கப்படும்' என்னாது 'ஒருக்கப் பெயரான்' என்று சிறப்பித்த வதனால் ஒருசாராசிரியர் தலையாகு எதுகை இடையாகு எதுகை கடையாகு எதுகை என்றும், தலையாகு மோனை இடையாகு மோனை கடையாகு மோனை என்றும் வேண்டுவாரும் உளர் எனக் கொள்க. என்னை?

'சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே'

என்றார் ஆகலின். மோனைக்கும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

வரலாறு

'சிலைவிலங்கு நீள்புருவம்' (கா. 11. மேற்.)

என்னும் பாட்டு (ச) சீர்முழுதொன்றி வந்தமையால் தலையாகெதுகை.

(ச) சீர்முழுதும் ஒன்றிவரலாவது : ஒரு சீரின்கண் முதலெழுத்தொழிந்த மற்றையவை எல்லாம் ஒன்றிவருவது.

(பி - ம்.) 13. பாயா திருந்திழை. 14. வாழியரைய. 15. யனிமலர். 16. வாடையொடு வரூஉம்.

‘அகர முதல............யுலகு’ (கா. 25, மேற்.)

என்பதும்,

‘வடியேர் கண்ணீர் மல்க’ (கா. 18, மேற்.)

என்பதும் (ரு) ஒரெழுத்து ஒன்றி வந்தமையால் இடையாகெதுகை.

‘தக்கார் தகவிலர்’ (பக். 161.)

என்பது (சா) கடையாகெதுகை.

‘பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.’ (குறள், 350.)

இது சீர்முழுதும் ஒன்றி வந்தமையால் தலையாகுமோனை.

‘மாவும் புள்ளும் வதிவயிற் படர’ (கா. 18, மேற்.)

என்பது (எ) இடையாகு மோனை.

‘பகலே பல்பூங் கானக் கிள்ளை யோப்பியும்’ (பக். 162.)

என்பது (அ) கடையாகு மோனை.

‘உயிராசிடை யிட்டிருக்கும் ஒருசார் இரண்டடி மூன்றும் எழுத்தும் ஒன்றி நிரக்கும் எதுகை என்றாலும் சிறப்பில’ எ-து. உயிரெதுகை ஆசெதுகை இடையிட் டெதுகை [என்னும் எதுகையும்], இரண்டடி யெதுகை மூன்றுமெழுத் தொன்றெதுகை என்று இத்தொடக்கத்து ஒரு சாரெதுகையும் உள : ஆகிலும் அவை பெரியதோர் சிறப்பில எனக் கொள்க.

வரலாறு

ஆசிரியப்பா

‘துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி

(ரு) ஓர் எழுத்து என்றது இரண்டாம் எழுத்தினை.

(சா) ஒரெழுத்தும் ஒன்றாது வருக்கம் நெடில் இனம்பற்றி வருவது கடையாகெதுகை எனக் கொள்க.

(எ) முதலெழுத்து ஒன்றே ஒன்றி வருவது இடையாகுமோனை.

(அ) வருக்க முதலிய மோனைகள் கடையாகு மோனை.

[17]வடியமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி [18]நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே.’

இஃது இரண்டாமெழுத் தொன்றாதாயினும் இரண்டா மெழுத்தின் மேலேறிய உயிர் ஒன்றி வந்தமையால் உயிரெதுகை. இது கையனார் காட்டிய பாட்டு.

இனி ஆசெதுகைக்குச் சொல்லுமாறு:

‘ யரலழ வென்னு மீரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை [19]யுயிர்ப்பினஃ
தாசிடை யெதுகையென் [20]றறையல் வேண்டும்’

என்றார் [21]ஆகலின்.

வரலாறு

காப்பியக் கலித்துறை

‘ (க) காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே’ (சீவக. 31.)

இது யகரவொற்று இடை வந்த (கO) ஆசெதுகை.

கலிவிருத்தம்

‘ மாக்கொடி [22]மாணையு மவ்வற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கவர்ந்த மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் [23]பொன்ன ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துகான் றுறந்த மொத்ததே.’

(சூளா. நாட்டு. 29.)

இது ரகர வொற்று இடைவந்த ஆசெதுகை.

(க) காய் மாண்ட - காய் மாட்சிமைப்பட்ட. நெற்றி - உச்சி. தொடை - தேனிறால். வருக்கை - பலாப்பழம்.

(கO) ஆசிடையிட்ட இருகுற ளேரிசை வெண்பாவிற் கூறப் படும் ஆசு வேறு; இங்கே கூறப்படும் ஆசுவேறு அது பற்றுச போன்ற ஒன்றும் இரண்டுமாகிய அசைகள். இது யரலழ ஒற்றுக்கள்.

(பி - ம்.) 17. வடிவமை. 18. நீயென. 19. யுயிர்ப்பிறு சிடை. 20. றறியல் வேண்டும், றறிந்தனர் கொளலே. 21. கையனார். 22. யானையு, மாலையு. 23. புன்னை, கானன்.

வெண்பா

‘ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள வீங்கு.’ (நாலடி, 118.)

இது லகரவொற்று இடைவந்த ஆசெதுகை.

வெண்பா

‘(கக) அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்திரமே போலு மனைவாழ்க்கை—[24]மந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற [25]பூளையே போன்று.

இது ழகரவொற்று இடைவந்த ஆசெதுகை.

‘ஆர்கலி யுலகத்து.........முடைமை’ (கா. 26, மேற்.)

இது ரகர வொற்று இடைவந்த வல்லின வெதுகை.

இனி இடையிட்டெதுகை வருமாறு:

ஆசிரியப்பா

‘தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக லூறும் பையப் பெருகின
நீடா [26]ரிவணென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவம் [27]பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.’

இஃது அடியிடையிட்டு இரண்டாமெழுத்து ஒன்றி வந்த

(கக) மந்திரம் - மாயம். அம்தரத்து - அழகிய பதவியில். பூளை- பூளைப்பஞ்சு. வாழ்நாளும் போகின்ற.

(பி - ம்.) 24. மந்தரத்துள். 25. பூளைபோற் பூத்து. 26. ரிவ ரென நீ மனங்கொண்டோர், ரிவணேநீ மனங்கொண்டோர். 27. செய்து.

மையால் இடையிட்டெதுகை. இது [28]தொல்காப்பியனார் காட்டிய பாட்டு.

> 'தாஅ வண்ணம்,
> இடையிட்டு வந்த வெதுகைத் தாகும்'
> (தொல். பொருள், 527.)

என்றார் ஆகலின்.

இனி இரண்டடி யெதுகை வருமாறு :

இன்னிசை வெண்பா

> '(கஉ) துவைக்குந் துளிமுன்னீர்க் கொற்கை மகளிர்
> அவைப்பதம் [29]பல்லுக் கழகொவ்வா முத்தம்
> மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
> [30]அணங்கமுத மங்கலார் பாட்டு.

இது முதலிரண்டடியும் ஒரெதுகையாய்ப் பின்பிரண்டடியும் மற்றோர் எதுகையாய் வந்தமையால் இரண்டடி யெதுகை.

> 'இரண்டடி யெதுகை திரண்டொருங் கியன்றபின்
> முரண்ட வெதுகையு [31]மிரண்டினுள் வரையார்'

என்றார் ஆகலின்.

மோனைக்கும் இவ்வாறே ஒட்டிக்கொள்க, 'ஒன்றின முடித்த றன்னின [32]முடித்தல்' என்பது தந்திர வுத்தி ஆகலின்.

வரலாறு

கலிவிருத்தம்

> '(கங) ஆகங் கண்டகத் தாலற்ற வாடவர்
> ஆகங் கண்டகத் தாலற்ற வன்பினர்

(கஉ) அச்சுதன் - அச்சுதநந்தி; இவனைப்பற்றி யா. வி. உரையில் சில பாடல்கள் வந்துள்ளன. 'அணங்கு மமுதமு மங்கலார் பாடல்' என்ற பாடத்தைக் கொண்டால் இது கலிவிருத்தம்.

(கங) ஆகம் கண்டகத்தால் அற்ற ஆடவர் - தம் உடல்கள் கத்தியால் அற்று விழுந்த வீரர்களின். ஆகம்கண்டு - உடலைக் கண்டு.

(பி - ம்.) 28. கையனார். 29. பல்லினழ. 30. அணங்குமமுதமு. ......பாடல். 31. மிரண்டல. 32. முடித்தலென், றின்ன வகையான் யாவையு முடியும் என்றார் ஆகலின்.

பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதர நண்ணினர்.'

இது முதலிரண்டடியும் ஒரு மோனையாய்ப் பின்னிரண்டடியும் மற்றொரு மோனையாய் வந்தமையால் இரண்டடி மோனை எனக் கொள்க.

இனி மூன்றாமெழுத் தொன்றெதுகை வருமாறு :

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.' (குறள், 292.)

'(கச) பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றன புன்னை.'

இவை மூன்றாமெழுத்தொன் றெதுகை.

'நிரக்கு மெதுகை' என்று சிறப்பித்தவதனால் விட்டிசை வல்லொற்றெதுகை என்றும், விட்டிசை மோனை என்றும் வேண்டுவாரும் உளரெனக் கொள்க.

வரலாறு

குறள் வெண்பா

'பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
நொஅலைய னின்னாட்டை நீ.'

இது வல்லொற்று ; அடுத்தாற்போல விட்டிசைத்த [33] குற்றெழுத்தோடு புணர்ந்தமையால் விட்டிசை வல்லொற் றெதுகை.

['அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்.'

இது முதலெழுத்து விட்டிசைத்து வந்தமையால் விட்டிசை மோனை.]

இவை எல்லாஞ் சிறப்பிலவெனக் கொள்க.

அற்ற அன்பினார் - தம் உயிர்மேல் அன்பற்ற மனைவிமார். பாகம் கொண்டு - தம் கணவரின் உடலைத் தழுவி. பயோதரம் - முலை. பயோதரம் நண்ணினர் - மேகமண்டலத்தை அடைந்தனர் ; இறந்தார் என்றபடி. இது நிலையோடு முடிதல் என்னும் துறை.

(கச) இது வெண்பாவின் முதற்பகுதி போலும்.

(பி - ம்.) 33. குற்றெழுத்து குற்றெழுத்தினோடு வந்தமையால்.

இன்னும் 'ஒருக்கப் பெயரால்' என்று சிறப்பித்தவதனுல் பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரும் என்ருர் ஆயினும் பெரும்பான்மையும் தலையாகு மோனையிற் றிரிந்தும் தலையா கெதுகையிற் றிரிந்தும் வாராவென்றும், செந்தொடை யொழிந்த எல்லாத் தொடைக்கும் இனவெழுத்து வரத் தொடுப்பதூஉம் (கரு) வழியெதுகை வரத்தொடுப்பதூஉம் வழிமுரண் வரத் தொடுப்பதூஉம் சிறப்புடைத்து என்றும் கொள்க.

இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது மருட் செந்தொடை யெனப்படும் என்றவாறு.

இனவெழுத்து வருமாறு:

தானமொத்த குறிலும் நெடிலும் தம்முள் இனமாம். அகர ஆகார ஐகார ஔகாரங்கள் தம்முள் இனமாம். இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனமாம். உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனமாம். உயிர் மெய்க்கும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

ஒற்றினுள், சகர தகரங்கள் தம்முள் இனமாம். ஞகர நகரங்கள் தம்முள் இனமாம். மகர வகரங்கள் தம்முள் இனமாம்.

இவை அனுவென்றும் வழங்கப்படும் என்னை?

'அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகாரம் ஏஏ - உகரமோ
டோரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத வல்ல வனு'

என்ருர் [34] ஆகலின்.

[இவற்றுக்கு இலக்கியம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டுகொள்க.]

(கரு) வழியெதுகையாவது ஓரடியிற் பல்சீர் எதுகையாக வருதல்; உ-ம். 'சன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய'. வழியெதுகையுள் பொழிப்பெதுகை வருதல் அகவற்குச் சிறப்பு.

(பி - ம்.) 34. காக்கைபாடினியார்.

அவற்றுள் சில வருமாறு:

‘ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.’ (குறள். 228.)

‘அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். (குறள், 64.)

இவை இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையால் மருட் செந்தொடை.

இனி வழியெதுகைக்குச் சொல்லுமாறு:

கட்டளைக் கலித்துறை

‘(கசு) மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் றொண்டியின்வா
கண்டலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு [35]கனமகர [யக்
குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொண்டோர்
மண்டலம் வண்டலம் பக்கொண்ட றூழ வருகின்றதே’ [திங்கள்

எனவும், ‘கொங்கு தங்கு கோதை யோதி’ (கா. 13, மேற்.) எனவும் கொள்க. அநுப்பிராச மென்னும் வடமொழியை வழியெதுகை என்பது தமிழ் வழக்கெனக் கொள்க.

இனி, வழிமுரண் வருமாறு: வழிமுரணி வருவன வழிமுரண் என்று வழங்கப்படும்.

விருத்தம்

‘செய்யனாய்ப் பசும்பொன் ஞேலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்கு ஞேவ வடிக்கொண்ட சுவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணெ னீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தண் மகளிரை வருக வென்றான்’
(சூளா. சிய. 101.)

எனவும்,

(கசு) தொண்டி - பாண்டிநாட்டுத் துறைமுகத்து ளொன்று. கண்டல் - தாழை. கெண்டை என்றது கண்களை. தொண்டை - ஆதொண்டைக் கனி; இது வாய்க்கு உவமை. வண்டு அலம்ப; அலம்ப - ஒலிப்ப. கொண்டல் என்றது கூந்தலை.

(பி - ம்.) 35. கனவயிரக்.

கட்டளைக் கலித்துறை

'ஒருமால் வரைநின் றிருசுட ரோட்டிமுன் னீர்க்கிடந்த
பெருமா னிலனுஞ் சிறுவிலைத் தாவுண்டு பேதையர்கண் [தியிற்
பொருமா தவித்தொங்க [36]லெங்கோன்போர் வல்லவன் பூம்பொ
கருமா னிறவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக்கே'

எனவும் கொள்க.

மோனை எதுகையிற் றிரிந்து பாவும் இனமும் வாராமை மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டுகொள்க.

'நேரிழையே' என்பது மகடூஉ முன்னிலை. (சு)

(பி - ம்.) 36. லெங்கோன் புரவலன்.

தரவு தாழிசைகட்கு அடிவரையறை

42. சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கச்சும் வண்ணகச் சுந்தர வாவது தாழிசைப்பாச்
சுருங்கிற் றிரண்டடி [1]யோக்க மிரட்டி [2]சுரும்பிமிரும்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே.

இ - கை. தரவு தாழிசைகட்கு அடியளவு ஆமாறு உணர்த்......று.

'சுருங்கிற்று மூன்றடி ஏனைத்தரவு' எ - து. அம்போ தரங்க வொத்தாழிசைக் கலிப்பாவும் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்து அல்லாத கலிப்பாவின் தரவிற்கு மூன் றடிச் சிறுமை எ - று.

பெருமை பாடுவோனது பொருள் முடிவு குறிப்பே வரை யறை இல்லை எனக் கொள்க.

'இரு மூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்கும் தரவாவது' எ - து. அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவுக்கும் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவுக்கும் பெருக்க சுருக்கம் இல்லை. ஆறடியே தரவாவது எ - று.

(பி - ம்.) 1. யோங்கலிரட்டி. 2. சுரும்பிருந்த, சுரும்பிவரும்.

'சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவு' என்றார் ஆயினும், கலிப்பாவுக்கு நான்கடியே சிறுமை என்று 'வெள்ளைக் கிரண் டடி' என்னும் காரிகையிற் (கா. 14.) சொன்னமையால் தரவு கொச்சகக் கலிப்பாவுக்கு நான்கடியே சிறுமை எ - று.

'தாழிசைப்பாச் சுருங்கிற் றிரண்டடி [3]ஒக்கம் இரட்டி', எ - து. பொதுவகையாற் றாழிசை சொல்லிப் போந்தாராயி னும், தாழிசைக்கு இரண்டடிச் சிறுமை, பெருமை நான்கடி இடை மூன்றடியாய் வருவதெனக் கொள்க.

'சுருங்கும் தரவினில் தாழிசையே' எ - து. தரவடியிற் றாழிசையடி சுருங்கிவரும் எ - று.

இவற்றுக்கு இலக்கியம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற் றுள்ளுங் கண்டுகொள்க.

'[4] சுரும்பு இமிரும் தாரங்கக் குழலாய்' எ - து. மகடூஉ முன்னிலை. (எ)

(பி - ம்.) 3. யோங்கலிரட்டி. 4. சுரும்பிவரும், சுரும்பிருந்த.

பாக்களுக்குரிய சில இயல்புகள்

43. பொருளோ டடிமுத னிற்பது [1]கூனது வேபொருந்தி
இருள்சேர் [2]விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யோப்புங் குறிக்கோள் போலங்
[கோடியே

இ...கை. மேற் சொல்லப்பட்ட பாக்கட்கு எல்லாம் எய் தியதோர் இலக்கணம் உணர்த்........று.

கூன்

'பொருளோடு அடிமுதல் நிற்பது கூன்' எ - து. அடி முதற்கண் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது கூன் எனப்படும் எ - று.

'அதுவே பொருந்தி இருள் [3]சேர்விலாவஞ்சி ஈற்றினும் நிற்கும்' எ - து. அக்கூன் வஞ்சிப்பாவின் ஈற்றினும் நிற்கும் எ - று.

(பி - ம்.) 1. கூனதுவே. 2. பிலாவஞ்சி. 3. சேர்பிலா.

'ஈற்றினும் நிற்கும்' என்ற உம்மையால் வஞ்சிப்பாவின் [4] நடுவினும் கூன் வரப்பெறும் எ - று.

'இருள் சேர்விலா வஞ்சி' என்று சிறப்பித்தவதனால், வஞ்சியடியின் நடுவும் இறுதியும் அசை கூனாய் வருவது சிறப்புடைத்து. சீர் கூனாய் வரினும் உகர மீறாகிய நேரீற்று இயற்சீராய் அல்லது வாராவெனக் கொள்க. கொச்சகக் கலியுள் ஓரடி கூனாய் வரினும் சிறப்பினவாம். ஆசிரியப்பாவிற்கு இடையிலே வருதலின்றி அதன் ஈற்றினும், வெண்பா கலி என்னும் இவற்றின் இடையினும் ஈற்றினும் கூன் வரப்பெறாதெனக் கொள்க. என்னை?

> 'அடிமுதற் பொருளைத் தானினிது [5]கொண்டு
> முடிய நிற்பது கூனென மொழிப'
>
> 'வஞ்சியி னிறுதியு மாகு மதுவே'
>
> 'அசைகூ னாகு மென்மனார் புலவர்'

என்றார் பல்காயனார்.

கூனைத் தனிச்சொல் என்பாரும் உளர்.

> 'அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ
> திறுதியும் வஞ்சியு ளியலு மென்ப'

என்றார் ஆகலின். (யா. வி. சூ. 94.)

வரலாறு

நேரிசை வெண்பா

> 'உதுக்காண்,
> 'சுரந்தானா வண்கைச் [6]சுவர்ணமாப் பூதன்
> பரந்தானாப் பல்புகழ் பாடி—யிரந்தார்மாட்
> டின்மை யகல்வது போல விருணீங்க
> [7]மின்னு [8]மளித்தேர் மழை.'

இவ்வெண்பாவின் அடிமுதற்கண் 'உதுக்காண்' எனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

(பி - ம்.) 4. முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் கூன். 5. தழுவி, 6. சுவானமாப், சுவாணமாப், சுமானமாப். 7. மன்னு. 8. மளிதேர்.

நேரிசை யாசிரியப்பா

'(க) அவரே. கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே.
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.'

(குறுந். உகக.)

இவ்வாசிரியத்துள் அடிமுதற்கண் 'அவரே' எனவும் இடைக்கண் 'யானே' எனவும் சீர் கூனாய் வந்தவாறு கண்டு கொள்க.

கொச்சகக் கலிப்பா

'(உ) உலகினுட்,
பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகையா யிறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்றி
உறுதகைமை யுலகிற்கோ ரொப்பாகித் தோன்றுமே.'

இக்கலிப்பாவினுள் அடிமுதற்கண் 'உலகினுள்' எனச் சீர் கூனாய் வந்தவாறு கண்டுகொள்க.

'உலகே
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகுமென்ப
அதனால்
நற்றிற நாடுந் தன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே'

(க) தருமார் - கொணரும்பொருட்டு. வள்ளி - வள்ளிக்கொடி. இறந்தோர் - கடந்து சென்றவர். தோடு ஆர் எல்வளை - தொகுதி பொருந்திய விளக்கத்தையுடைய வளையல்கள். பாடு அமை - படுத்தல் அமைந்த. சேக்கை - படுக்கை. படர்கூர்ந்திசின - துன்பம் மிக்கேன்.

(உ) இருந்தகையாய் : விளி. இறுவரை - பெரிய மலை. ஒப்பு ஆகி - உலகம் ஏற்றுக் கொள்வதாகி.

என்னுங் குறளடி வஞ்சிப்பாவின் அடிமுதற்கண் 'உலகே' எனச் சீர் கூனாய் வந்தவாறு.

'மாவழங்கலின் மயக்குற்றன—வழி' என்னும் வஞ்சி யடியி னிறுதிக்கண் 'வழி' என் அசை கூனாய் வந்தவாறு கண்டு கொள்க.

'கலங்கழாலிற் றுறை கலக்குற்றன' என வஞ்சியடியின் நடுவு 'துறை' என அசை கூனாய் வந்தவாறு.

'தேரோடத் துகள்கெழுமிய—தெருவு' என்னும் வஞ்சி யடியின் இறுதிக்கண் 'தெருவு' என உகரவீறாய் இற்ற நேரீற்று இயற்சீர் கூனாய் வந்தவாறு கண்டுகொள்க.

'காமர் கடும்புனல்' (கலி. ௩௯.) என்னுங் கொச்சகக் கலிப்பாவினுள் 'சிறுகுடியீரே சிறுகுடியீரே' என அடி கூனாய் வந்தவாறு கண்டுகொள்க.

இனி, ஒழிந்த 'மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்புப் பொருள்கோள் குறிப்பிசை ஒப்பும் குறிக் கொள்' எ - து. மேல், 'எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை பா இனம் கூறுவன்' என்று அதிகாரம் பரித்த காரிகையுள் (கா. 1.) எடுத்து ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கம் நீக்க வருக்கப்பட்ட (1) விகாரமும், (2) வகையுளியும், (3) வாழ்த் தும், (4) வசையும், (5) வனப்பும், (6) பொருளும், (7) பொருள்கோளும், (8) குறிப்பிசையும், (9) செய்யுளொப்புமையும் ஆமாறு உபதேச முறைமையால் உணர்க எ - று.

'பொலங் கொடியே எ - து. மகடூஉ முன்னிலை.

(1) விகாரம்

அவற்றுள் : விகாரம் ஆறுவகைப்படும், வலித்தலும் மெலித் தலும் விரித்தலும் தொகுத்தலும் நீட்டலும் குறுக்கலும் என.

'குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே.'

இதனுள் 'குறுந்தாள்' எனற்பாலதனைக் 'குறுத்தாள்' என்று வலிக்கும் வழி வலித்தவாறு.

'தண்டையி னினக்கிளி கடிவோள்
பண்டைய ளல்லண் மானோக் கினளே.'

இதனுள் (௩) தட்டையெனற்பாலதனைத் தண்டையென்று மெலிக்கும் வழி மெலித்தவாறு.

இன்னிசை வெண்பா

'(௪) வெண்மண லெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணாடி மண்டிலத் தூதாவி யொத்திழியுந்
தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்
வண்ணஞ் சடைப்பிடியா தார்.'

இதனுள் 'தண்டுறைவர்' எனற்பாலதனைத் 'தண்ணந்துறைவர்' என்று விரிக்கும் வழி விரித்தவாறு.

நேரிசை வெண்பா

'பூத்தாட் புறவின் [9] புனமதில் கைவிடார்
காத்தலிற் காமுறுவ [10] ரேனையர்—பார்த்துரூர்
வேண்டார் வணக்கி விறன்மதி ரூன்கோடல்
வேண்டுமாம் வேண்டார் மகன்.'

இதனுள் 'வேண்டாதாரை வணக்கி' எனற்பாலதனை 'வேண்டார் வணக்கி' என்று தொகுக்கும் வழி தொகுத்தவாறு.

நேரிசை வெண்பா

'(௫) பாசிழை யாகம் பசப்பித்தான் [11] பைந்தொடீஇ
மாசேன னென்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதழ்க் கண்ணி தருதலாற் சேர்த்தியென்
னோய்தீர நெஞ்சின்மேல் வைத்து.'

இதனுள் 'பச்சிழை' எனற்பாலதனைப் 'பாசிழை.' என்று நீட்டும் வழி நீட்டியவாறு.

---

(௩) தட்டை - கிளிகடி கருவி.

(௪) கண்ணாடியில் ஊதும் ஆவி: 'தெள்ளற வியற்றிய நிழல் காண் மண்டிலத், துள்ளூதாவியிற் பைப்பய நுணுகி' (அகநா. எக. 13-4.)

(௫) பாசிழை என்பது பண்பின் விகாரமே ஒழியச் செய்யுள் விகாரம் அன்றென்பர் பலர்.

(பி - ம்.) 9. புனமலர் கைவிட்டார் காத்தலிக் காதல ரேனையர், புனமதில் கைவிட்டார். 10. ரேழையார். 11. பைந்தொடி.

'யானை,
பெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.' (கா. 24, மேற்.)

இதனுள் 'தீயேன்' எனற் பாலதனைத் 'தியேன்' என்று குறுக்கும் வழி குறுக்கியவாறு.

'மருடீஉர் விகாரம்' என்று சிறப்பித்தவதனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டி வழங்கி வாரா நின்றவை அல்லது (சு) [13]துவைக்குப் பாலில்லை எனற்பாலதனைத் 'தூவைக்குப் பாலில்லை' என்றாற்போலப் புணர்க்கப்படா வெனக் கொள்க.

இன்னும் 'மருடீஉர் விகாரம்' என்று சிறப்பித்தவதனால் (எ) தலைக்குறைத்தலும், இடைக்குறைத்தலும், கடைக்குறைத்தலும் என இவையும் [14]வரலாற்று முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும் எ - று.

வரலாறு

'மரையித்ழ் புரையு மஞ்செஞ் சீறடி.'

இதனுள் 'தாமரை' எனற்பாலதனை 'மரை' என்று தலைக் குறைத்து வழங்கினவாறு.

'வேதின வெரிநி னோதி முதுபோத்து.' (குறுந். கசO.)

இதனுள் 'ஓந்தி' எனற்பாலதனை 'ஓதி' என்று இடைக் குறைத்து வழங்கினவாறு.

'அகலிரு விசும்பி னாஅல்போல்
வாலிதின் மலர்ந்த புன்கொடி முசுண்டை.'
(மலைபடு. 100-101.)

இதனுள் (அ) 'ஆரல்' எனற்பாலதனை 'ஆல்' என்று இடைக்குறைத்தது.

(சு) துவை - இறைச்சி.
(எ) இவை முறையே முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை எனப்படும்.
(அ) ஆரல் - கார்த்திகை மீன்.

(பி - ம்.) 13. தன்னவ்வைக்குப் பாலில்லை எனற்பாலதனைத் தனவைக்குப். 14. விகாரமென்று வருவனவுமுள எ . று.

'நீலுண் டுகிலிகை கடுப்ப.'

இதனுள் 'நீலமுண்ட (க) துகிலிகை' எனற்பாலதனை 'நீலுண் துகிலிகை' என்று கடைக்குறைத்து வழங்கினவாறு. பிறவும் அன்ன.

(2) வகையுளி

(கO) வகையுளி என்பது முன்னும் பின்னும், அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி யறிந்து குற்றப்படாமல் வண்ண மறுத்தல். என்னை?

'அருளொக்கு நீரா ரசைசீ ரடிக்கட்
பொருளொக்கா தோசையே 15போற்றி—16மருணீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு'

என்றார் ஆகலின்.

வரலாறு

'கடியார்பூங் கோதை கடாயினன் றிண்டேர்
17 சிறியாடன் சிற்றில் சிதைத்து.'

இதனுட் 'கடியார்' என்றும், 'பூங்கோதை' என்றும் புளிமாவாகவும் தேமாங்காயாகவும் 'கடாயினன்' என்று கருவிளமாகவும் இவ்வாறலகிடின் ஆசிரியத் தளையும் கலித்தளையும் தட்டு, 'வெள்ளைத் தன்மை குன்றிப் போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை' (கா. 38) என்னும் இலக்கணத்தோடு மாறுகொள்ளும் ஆதலால் இதனைக் 'கடியார்பூம்' என்று புளிமாங்காயாகவும், கோதையென்று தேமாவாகவும் அலகிடச் சீருந்தளையும் வண்ணமும் சிதையாதாம்.

'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.' (குறள், 4.)

இதனுள் 'நீடு' என்றும் 'வாழ்வார்' என்றும் அலகிட ஆசிரியத்தளை தட்டு வெண்பாவின் இறுதிக்கண் 'வார்' என்று

(க) துகிலிகை - துணியாலான கொடி.

(கO) சிதைந்தசொல் சீராக வருவது வகையுளி.

(பி - ம்.) 15. நோக்கி. 16. மருணீங்கக். 17. சிறியார்தம்.

அசைச்சீர் ஆகற்பால்து இயற்சீராய், ‘நிகரில் வெள்ளைக்கு ஓரசைச் சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண் காசு மிற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம்’ (கா. 25.) என்னும் இலக்கணத்தோடு மாறுகொள்ளும் ஆதலின் இதனை ‘நீடுவாழ்’ என்று கூவிள மாகவும் ‘வார்’ என்று நாள் என்னும் நேரசைச் சீராகவும் அல கிடத் தளையுஞ் சீரும் வண்ணமுஞ் சிதையாதாம்.

(3) வாழ்த்து

வாழ்த்து இரண்டு வகைப்படும், மெய் வாழ்த்தும் இருபுற வாழ்த்தும் என.

வரலாறு

நேரிசை வெண்பா

‘(கக) கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற 18 தவங்கொலோ—கூர்நுனைவேல்
19 வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.’ (முத்தொள்.)

இது மெய் வாழ்த்து.

நேரிசை வெண்பா.

‘பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடத்து வில்லேற்றிக் கொண்டுழந்தான்—தென்களந்தைப்
20 பூமான் திருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.’

இது (கஉ) இருபுற வாழ்த்து.

(4) வசை.

வசை இரண்டு வகைப்படும், மெய் வசையும் இருபுற வசையும் என.

(கக) நீலம் - குவளை. நக்கதார் - விளக்கம் பொருந்திய மாலை. நீலம் கொண்டிருக்கப்பெற்ற குணம் தவம்கொலோ.

(கஉ) இருபுற வாழ்த்து - வாழ்த்துப்போன்ற வசை. வாழ்த்தென்பது பெருமையைக் கூறுவது.

(பி - ம்.) 18. பயன்கொலோ. 19. வண்டிருக்குந்தார் மார்பன். 20. பூமாண்டிரு.

வரலாறு

நேரிசை வெண்பா

'(கரு) தந்தை யிலேச்சுமடன் [21] ருய்தொழிலி தாண்பார்ப்பான்
எந்தைக் கிதெந்தனம் பட்டதுகொல்—மூந்தை
அவியுணவி னூர்தெரியி னுவதாங் கொல்லோ
கவிகண்ண னூர்தம் பிறப்பு.'

இது மெய் வசை.

'(கச) படையொடு போகாது நின்றெறிந்தா னென்றும்
கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்—படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடி வழங்கு மகன்.'

இஃது இருபுற வசை.

(5) வனப்பு

வனப்பு எட்டு வகைப்படும், அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என.

வரலாறு

அம்மையென்பது (கடு) சிலவாய மெல்லியவாகிய சொற்களால் ஒள்ளியவாகிய பொருண்மேற் சிலவடியாற் சொல்லப் படுவது. என்னை ?

'(ககூ) சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே யடிநிமிர் வின்றே'

என்றார் ஆகலின்.

(கரு) இலேச்சுமடன் - இலைகளைச் சுமந்து சென்று விற்பவன். தொழிலி - வேலைக்காரி. அவியுணவினூர் - தேவர்.

(கச) இருபுறவசை - வசை போன்ற வாழ்த்து. நின்றெறிதலும், தாழ்தலும், தெருவெல்லாம் செல்லுதலும் இங்கே வசைபோன்று புகழாயிற்று.

(கடு) கீழ்க்கணக்கு நூல்கள் நீதிநூல் போன்றவை அம்மையின் பாற்படும்.

(ககூ) வனப்பு என்ற தலைப்பின் கீழ் இந்நூலுள் காணப்படும் சூத்திரங்கள் தோல். பொருள். செய்யுளியலிற் காணப்படும் சூத்திரங்களோடு பொருளில் ஒன்றியும் சொல்லமைப்பில் வேறுபட்டும் காணப் படுகின்றன.

(பி - ம்.) 21. ருய்தோழி.

வரலாறு

‘ அறிவினு ளாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை ’ (குறள், 315.)

எனக் கொள்க.

(கஎ) அழகென்பது - செய்யுட் சொல்லாகிய திரி சொற்களால் ஓசை இனியவாகப் புணர்க்கப்படுவது. என்னை?

‘ செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே யழகெனப் படுமே ’

என்றார் ஆகலின்.

வரலாறு

நேரிசை யாசிரியப்பா

‘ (கஅ) துணியிரும் பரப்பகங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் 22 பாம்புற விழிதரூஉங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே ’

எனக் கொள்க.

(கக) தொன்மை யென்பது பழமைத்தாய் நிகழ்ந்த பெற்றி யுரைக்கப்படும் அவற்றின் மேற்று. என்னை?

‘ சுரிகுழன் மடவாய் தொன்மை தானே
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே ’

என்றார் ஆகலின்.

(கஎ) அழகென்பது எட்டுத்தொகை நூல்கள் போன்றது.

(கஅ) இரும்பரப்பகம் - கடல். எழிலி - மேகம். கலுழி - காட்டாறு. காட்டாற்றுக்குப் பாம்பு உவமை. வல்லியம் - புலி. கல் அதர் - மலைவழி. வெற்ப நெறி யாங்கு வந்தனையோ.

(கக) தொன்மை என்பது செய்யுளும் வசனமும் தழுவிவந்த கதை முதலியன. தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் முதலியன உதாரணமாம்.

(பி - ம்.) 22. பாம்பு பட விழிதரூஉங்.

வரலாறு

'செறிதொடி யுவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன் செய்வதென்'

என்பதூஉம் பாரதம் இராமாயணம் முதலாயினவுங் கொள்க.

'தோல்' என்பது இழுமென மெல்லியவாகிய சொற்களான் விழுமியவாய்க் கிடப்பனவும், (உ0) எல்லாச் சொற்களோடுங் கூடிப் பலவடியும் மயங்கி வந்தனவாய்க் கிடப்பனவும் என இருதிறத்தனவாம். என்னை?

'இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்'

என்றார் ஆகலின்.

வரலாறு

நிலைமண்டிலவாசிரியப்பா

'பாயிரும் பரப்பகம் [24]புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
[25]துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமை யில்லை
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோர் யாரஃ திறுவழி யிறுகென.'

இது மார்க்கண்டேயனார் காஞ்சி. இஃது இழுமென் மொழியால் விழுமியது நுவன்றவாறு.

'திருமழை தலைஇய விருணிற விசும்பின்' என்பது ([26]மலைபடுகடாம்) பரந்தமொழியால் அடி நிமிர்ந்தொழுகியது.

(உக) விருந்தென்பது புதிய வாயினவற்றின் மேற்று. என்னை?

(உ0) பலவடியும் மயங்கி எல்லாச் சொற்களோடுங் கூடி வருவன பத்துப் பாட்டைப் போன்றன.

(உக) கலம்பகம், உலா, தூது, பரணி, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்கள் விருந்து என்பதற்கு உதாரணமாம்.

(பி - ம்.) 23. தொன்மொழிப். 24. குறையப். 25. துணிதரு. 26. கூத்தராற்றுப்படை.

'வெதிர்புரை தோளாய் விருந்து தானே
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.'

அவை இப்பொழுதுள்ளாரைப் பாடுவன. வந்தவழிக் கண்டு கொள்க.

இயைபென்பது ஞண நமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு. என்னை?

'ஞகர முதலா ளகார வீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே'

என்றார் ஆகலின் (உஉ) அவை வந்துழிக் கண்டு கொள்க.

(உங) புலன் என்பது இயற் சொல்லாற் பொருள் தோன்றச் சொல்லப்படுவது. என்னை?

[27] 'தெரிந்த மொழியாற் செவ்வி திற்புணர்ந்
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே'

என்றார் ஆகலின்.

வரலாறு

நேரிசை யாசிரியப்பா

'பாற்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுபுகக் கடவுமதி பாக வுதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்
[28] பெருங்காடு மடுத்த காமர் களிறே'

எனக் கொள்க.

(உஉ) மணிமேகலையும், பெருங்கதையும் இயைபுக்கு உதாரணம். இயைபு பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்யப்படும் பாட்டு.

(உங) புலனுக்கு உதாரணம் சேரிமொழிகள் பயின்று வந்த குறம், குறவஞ்சி, ஏனைய நாடகங்கள், பள்ளு, ஏற்றப்பாட்டு முதலியன.

(பி - ம்.) 27. சேரிமொழியாற். 28. பெருங்கரமெடுத்த.

(உச) இழைபு என்பது—வல்லொற்று யாதும் தீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களான் வருவது. என்னை?

‘ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி காறும்
ஓங்கிய மொழியா னோங்கன மொழியின்
இழைபி னிலக்கண மியைந்த தாகும்’

என்றார் ஆகலின்.

(உரு) செய்யுளியலுடையார் நாற் சீரடி தன்னையே நாலெழுத்து முதலா ஆறெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி என்றும், எழுழுத்து முதலா ஒன்ப தெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி என்றும், பத்தெழுத்து முதலாப் பதினான் கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும், பதினைந்தெழுத்து முதலாப் பதினேழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும் பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும் வேண்டுவர். இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லை எனக் கொள்க.

எழுத்து எண்ணுகின்றுழிக் குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஒற்றும் ஆய்தமும் ஒழிந்த உயிரும் உயிர்மெய்யும் கூட்டி எண்ணப்படும். என்னை?

‘குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமும்
29 ஒற்று மெனவொரு நான்கொழித்துக்—கற்றோர்

(உச.) இழைபு என்பது இசைப்பாட்டுக்கள். கலியும் பரிபாடலும் போன்றவையும் அபிநயத்துக்குப் பயன்படும் பாட்டுக்களும் ஆம். நிலம் - இசைப்பாட்டின் தானம். குறளடி முதல் கழிநெடிலடி யீறாக உள்ள ஐந்தடிகளுக்கு முரிய எழுத்துக்களின் எண்ணைக்கொண்டு கணக்கிடப்படுவது இது. நிலம் பதினேழு ஆவன: குறளடிக்கு 3-நிலம், சிந்தடிக்கு 3-நிலம், அளவடிக்கு ஐந்து நிலம், நெடிலடிக்கு 3-நிலம், கழிநெடிலடிக்கு 3-நிலம், ஆக 17-நிலம்.

(உரு) செய்யுளியலுடையார் — தொல்காப்பியனார். நாற்சீர் கொண்ட அளவடி ஒன்றனையே எழுத்தெண்ணி அது குறளடி முதல் ஐந்தடிகளில் ஒன்று என்று கணக்கிடுவர் தொல்காப்பியனார்.

(பி - ம்.) 29. ஒற்றுமென வோர்நான் ககற்றியே.

உயிரு முயிர்மெய்யு [30]மோதினு ரெண்ணச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு’

என்றார் ஆகலின்.

வரலாறு

நேரிசை யாசிரியப்பா

‘(உ௬) போந்து போந்து சார்ந்து சார்ந்து
தோர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய்க் கொண்டு நீண்ட நீலம்
ஊர்வா யூதை வீச வீர்வாய்
மதியேர் [31]நுண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னெல் லூர
அமையேர் மென்றோ ளாயரி நெடுங்கண்
இணையீ ரோதி யேர்திள வனமுலை
இரும்பமர் மலரிடை யெழுந்த மாவின்
நறுந்தழை துயல்வரூஉஞ் செறிந்தேந் தல்குல்
[32]அணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுதல்
ஒளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு
களிமுழவு முழங்கிய வணிநிலவு மணிநகர்
இருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு கலனளவு கலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே’

எனக் கொள்க.

(௬) பொருள்

இனிப் ‘பொருள் கோள்’ என்பது உம்மைத் தொகை; பொருளும் பொருள்கோளும் என.

(உ௬) குற்றியலிகரம் குற்றியலுகரம் ஒற்று ஆய்தம் இவற்றை ஒழித்து எழுத்தெண்ணி இவ்வாசிரியப்பாவின் அடிகளில் எவை குறளடி, எவை சிந்தடி, எவை அளவடி, எவை நேரடி, எவை கழி நெடிலடி என்று கணக்கிட்டுக் கொள்க என்றவாறு.

(பி - ம்.) 30. போதினர் கொள்ளச். 31. வண்டோ. 32. அணிநல னசைஇய, அணிநகை.

'அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.' (குறள், 254)

இதனுள் அருளும் அருளல்லதும் என்றாற் போலக் கொள்க.

அவற்றுள் பொருளாவன: குறிஞ்சி, கைக்கிளை முதலிய (உஎ) அகமும் அகப்புறமும், வெட்சி பாடாண்பாட்டு முதலிய புறமும் புறப்புறமும் என இவை. (உஅ) அவை அவ்விலக்கணங் கூறிய நூல்களுட் கண்டு கொள்க.

(7) பொருள் கோள்

இனிப் பொருள் கோள் ஒன்பது வகைப்படும். அவை (1) நிரனிறை மொழிமாற்று, (2) சுண்ண மொழி மாற்று, (3) அடிமறி மொழிமாற்று, (4) அடி மொழிமாற்று, (5) பூட்டுவிற் பொருள் கோள், (6) புனலாற்றுப் பொருள் கோள், (7) அளைமறி பாப்புப் பொருள் கோள், (8) தாப்பிசைப் பொருள் கோள், (9) கொண்டு கூட்டுப் பொருள் கோள் என இவை.

அவற்றுள், நிரனிறை இரண்டு வகைப்படும், பெயர் நிரனிறையும் வினை நிரனிறையும் என.

அவற்றுள் பெயர் நிரனிறை வருமாறு:

இன்னிசை வெண்பா

'(உக) கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்

(உஎ) அகம் என்பது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணையாம். அகப்புறமாவது: காந்தளும், வள்ளியும், சுரநடையும், முதுபாலையும், தாபதமும், தபுதாரமும், குற்றிசையும், குறுங்கலியும், பாசறை முல்லையும், இல்லாண்முல்லையும் என்றிவை பத்தும் கைக்கிளையும் பெருந்திணையும் ஆம். புறமாவது: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்னும் ஏழாம். புறப்புறமாவது: வாகை, பாடாண், பொதுவியல் என்னும் மூன்றும்.

(உஅ) சில பிரதிகளில் இங்கே, 'இவற்றின் விகற்ப மெல்லாம் பன்னிரு படலத்துள்ளும் வெண்பா மாலையுள்ளும் கண்டு கொள்க' என்ற தொடர் காணப்படுகிறது.

(உக) கொட்டை - தாமரை மலரின் நடுவிலுள்ள கர்ணிகா என்ற உறுப்பு. 'கொடி நுசுப்பு, குவளைகண், கொட்டை மேனி' என்றும்,

பிடிபிணே மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்'

எனக் கொள்க.

இனி, வினை நிரனிறை வருமாறு:

நேரிசை வெண்பா

'(கூ0) காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியால்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு
நண்ணிய வாய பொருள்'

எனவும்

இன்னிசை வெண்பா

'(கூக) அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலு மிரிந்தோடு [33]மூழ்மலரும் பார்க்கும்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தான்'

எனவும் கொள்க.

[இனி, முறை நிரனிறை, எதிர் நிரனிறை, மயக்க நிரனிறை என்று வேண்டுவாரு முளரெனக் கொள்க. அவை (கூஉ) வந்த வழிக் கண்டு கொள்க.]

'மதிமுகம், பவளம் வாய், முத்தம் முறுவல்' என்றும் 'பிடிநடை, பிணே நோக்கு, மஞ்ஞை சாயல்' என்றும் கூட்டுக. மகளிர்தக்குத் தாமரைக் கொட்டை உவமை: 'செய்யோளமர்ந்த செம்பொற் றாமரை, வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல, மெல்லியன் மாதரை யுள்ளகம் புகுத்தி' (பெருங். க. 38: 257-9.)

(கூ0) கா - காப்பாற்று. து - உண். தாழ் - தாழ்த்து. ஆய் - ஆராய்ச்சி செய். காது சேர் தாழ் குழைஆய் என்ற வினைகளை நிரலே மண் முதலியவற்றோடு கூட்டி 'மண்கா, அமிர்தம்து, தோள் சேர், மாற்றாரைத் தாழ், தோள்குழை, பொருள் ஆய்' என்று முடிக்க.

(கூக) நோக்கி: விளி. உடலும் - பொங்கிவரும். ஊழ் - மலர்ச்சி. 'கடல் உடலும், இருள் இரிந்தோடும், ஆம்பல் மலரும், பாம்பு பார்க்கும்' எனக் கூட்டுக.

(கூஉ) நன். சூ. 414, சங்கர. முதலியவற்றிற் காண்க. நிரனிறைப் பொருள்கோளை ஓர் அணியாகக் கொள்வர் தண்டியலங்கார ஆசிரியரும் மாறனலங்கார ஆசிரியரும்.

(பி - ம்.) 33. மூண்மலரும்.

இனி, சுண்ண மொழிமாற்று வருமாறு:

சிந்தியல் வேண்பா

'(௩௩) சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.'

இதனுள், 'சுரை' என்பதனோடு 'மிதப்ப' என்பது பொருள் கொள்ளவும், 'அம்மி' என்பதனோடு 'ஆழ' என்பது பொருள் கொள்ளவும், 'யானை' என்பதனோடு 'நிலை' என்பது பொருள் கொள்ளவும், 'முயல்' என்பதனோடு 'நீத்து' என்பது பொருள் கொள்ளவும் வந்தமையால் சுண்ணமொழி மாற்று.

இனி, அடி மறி மொழி மாற்று வருமாறு:

அடிமறி மண்டில வாசிரியப்பா

'சூரல் பம்பிய சிறுகானி யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவனே
சார னாட னீவர லாறே' (கா. 28, மேற்.)

என்னும் பாட்டு வேண்டிற் றோரடி முதலாகச் சொன்னாலும் ஓசையும் பொருளுங் கொண்டு நிற்றலால் அடிமறி மொழி மாற்று.

இனி, அடி மொழி மாற்று வருமாறு:

குறள் வேண்பா

'ஆலத்து மேலே குவளை குளத்துள
வாலி னெடிய குரங்கு.'

இதனை 'ஆலத்து மேலே வாலி னெடிய குரங்கு' எனவும், 'குவளை குளத்துள' எனவும் இரண்டடியின் மொழிமாற்றிப் பொருள் கொண்டமையால் அடிமொழி மாற்று. இதனை இரண்டடி மொழிமாற்று எனினும் அமையும்.

---

(௩௩) ஓரடியிலுள்ள மொழிகளை மாற்றி வழங்குவது சுண்ண மொழி மாற்று.

இனி, பூட்டுவிற் பொருள்கோள் வருமாறு:

நேரிசை வெண்பா

‘திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.’

இதனுள் ‘திறந்திடுமின்’ என்பது கதவென்பதனோடு [34]நோக்குடைமையிற் (௩௪) பூட்டுவிற் பொருள்கோளாயிற்று.

இனி, புனல் யாற்றுப் பொருள்கோள் வருமாறு:

இன்னிசை வெண்பா

‘அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைவதூஉங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.’ (நான் மணிக். 28.)

இஃது அடிதோறும் பொருளற்று வந்தமையாற் (௩௫) புனல் யாற்றுப் பொருள்கோள்.

இனி, அளைமறி பாப்புப் பொருள்கோள் வருமாறு:

ஆசிரிய விருத்தம்

‘(௩௬) தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமும்
ஊழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்று
[35]முனிவார் தாமும்

(௩௪) பூட்டுவிற் பொருள்கோளை ஓர் அணியாகக் கொள்வர் மாறனலங்கார முடையார்.

(௩௫) யாற்று நீர்ப் பொருள்கோள், யாற்று வரவுப் பொருள்கோள், ஆற்றொழுக்குப் பொருகோள் எனவும் இது கூறப்படும்.

(௩௬) நாற்கதி - தேவகதி, மக்கட்கதி, விலங்குகதி, நரககதி. மூழ்ந்த - விளைந்த. அளை - புற்று. பாப்புப் பொருள்கோள் - பாம்பு போன்ற பொருள்கோள்.

(பி - ம்.) 34. பொருள் கொண்டமையாற். 35. முயல்வார்.

வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலா தாரே.'

இதனுள் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார்' என்னும் இறுதிச் சொல், இடையும் முதலும் சென்று பொருள் கொண்டமையால் 'அளைமறி பாப்புப் பொருள் கோள்.'

(8) தாப்பிசைப் பொருள்கோள்

இனி, தாப்பிசைப் பொருள்கோள் வருமாறு :

'உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.' (குறள், 255.)

'இதனுள் ஊன் உண்ணாமை யுள்ளது உயிர்நிலை' எனவும் 'ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யா தளறு' எனவும் நடுநின்ற 'ஊன்' என்னும் சொல் முன்னும் பின்னும் பொருள் கொண்டமையால் (௩எ) தாப்பிசைப் பொருள்கோளாயிற்று.

(9) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

இனிக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் வருமாறு :

இன்னிசை வெண்பா

'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்'.

இதனுள், 'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண் கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி பசலை' எனவும், 'அஞ் சனத்தன்ன பைங்கூந்தல்' எனவுஞ் சொற்களைக் கொண்டு கூட் டிப் பொருள் கொண்டமையால் (௩அ) கொண்டு கூட்டுப் பொருள்கோளாயிற்று.

(௩எ) தாப்பிசைப் பொருள் கோள் - கயிற்றினாற் கட்டப்பட்ட ஊசல் போன்ற பொருள் கோள். அணியிலக்கண வகையுள் இப் பொருள் கோள் இடைநிலைத் தீவகத்தின்பாற் படும்.

(௩அ) ஓரடியுள் மொழிகளை மாற்றிப் பொருள் கொள்வது சுண்ணமொழிமாற்று. ஈரடிகளில் மொழிகளை மாற்றிப்பொருள் கொள்வது அடிமொழிமாற்று, பலவடிகளில் மொழிகளை மாற்றிப்

நேரிசை வெண்பா

['ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாணுந் தோளான்
நிறனுள்ளூ ருள்ள தலர்.'

இதனுள் 'தண்ணுமை நாணும் தோள்' என்றும், 'நிறம் வேங்கை வீ' என்றும், 'அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந் தியம்பும் முள்ளூர்' என்றும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் இதுவும் கொண்டு கூட்டுப் பொருள் கோள் ஆயிற்று.]

(8) குறிப்பிசை

இனி, குறிப்பிசை என்பது எழுத்திலோசையான் வந்த (௩௬) முற்கும் வீளையும் இலதையும் அனுகரணமும் முதலாக உடையன செய்யுளகத்து வந்தால் அவற்றையும் செய்யுள் நடை அழியாமல் அசையும் சீரும் அடியும் தொடையும் பிழையாமல் கொண்டு அலகிட்டு வழங்கப்படும் எ - று.

வரலாறு

நேரிசை வெண்பா

'(௪0) மன்றலங் கொன்றை மலர்மலைந் தஃகுவஃ
கென்று திரியு மிடைமகனே—சென்று
மறியாட்டை யுண்ணமல் வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணக்கு மாறு'

எனக் கொள்க.

ஒழிந்தனவும் இடைக்காடனார் பாடிய (௪௧) ஊசிமுறி யுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டு கொள்க. என்னை?

பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்று இவைதம்முள் பேதம் உணர்க.

(௩௬) முற்கு - முக்குதலின் ஒலி. வீளை - சீழ்க்கடித்தலின் ஓசை. இலதை—அனுகரணம் - ஒலிக்குறிப்பு ; ஒப்பாகத் தோன்றுவது என்பது பொருள்.

(௪0) மறி - ஆட்டுக்குட்டி. அண்ணக்கும் ஆறு - தலையை நிமிர்க்கும் விதத்தை. 'ஆட்டை மறி யுண்ணமல்' என்று கூட்டுக.

(௪௧) இத்தொடர் எல்லாச் சுவடிகளிலும் 'ஆசிரிய முறி' என்றே காணப்படுகிறது.

'எழுத்தி லிசையன அசையொடு சீர்க்கண்
நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே'

என்றார் ஆகலின்

(9) ஒப்பு

இனி, 'ஒப்பும்' என்பது மேற்சீரும், தளையும், அடியும், வரையறுக்கப்பட்ட பாவும், பாவினமும் சொன்ன பெற்றியிற் றிரிந்து மிக்கும் குறைந்தும் வந்தாலும் அவற்றை ஒரு புடை ஒப்புமை நோக்கி [36] அவ்வச் செய்யுட்களின் பாற்படுத்தி அப்பெய ரானே வழங்கப்படும் எ - று.

வரலாறு

'(சஉ) கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டுந்
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்து குரைபுனல்
ஊழியு [37] மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்.'

மேல் நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்று வரையறுத்துச் சொன்னார் (கா. 33): இஃது ஐந்தடியான் வந்த தாயினும் ஒருபுடை ஒப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற் படுத்தி வழங்கப்படும். இதனைத் தரவு கொச்சகம் எனினும் இழுக்காது. இஃது அவினயனார் காட்டியது.

'சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர்
நல்வய லூரன் கேண்மை
அல்லிருங் கூந்தற் கலரா னதே.'

மேல் வஞ்சிப்பாவுக்கு மூன்றடிச் சிறுமை என்று வரை யறுத்துச் சொன்னார் (கா. 14): இஃது இரண்டடியான் வந்த தாயினும் ஒரு புடை ஒப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற் படுத்தி வழங்கப்படும் எ - று. வஞ்சிப்பா இரண்டடியானும்

(சஉ) குக்கில் - செம்போத்து என்னும் பறவை. தாழியுள் நீலம்- சட்டியில் வளர்க்குங் குவளை. அறிவன்-அருகபரன். கூழை - கூந்தல்.

(பி - ம்.) 36. ஒழிந்த செய்யுட்களின் பாற்படுத்தி வழங்கப். 37. மாடுவா.

வரப்பெறும் என்று சொன்னார் ஒருசார் ஆசிரியர் எனக்கொள்க. பிறவும் புராண கவிஞராற் சொல்லப்பட்ட இலக்கியங்களை இவ்விலக்கணத்தால் ஒருபுடை ஒப்புமை நோக்கி மிக்கதனால் பெயர் கொடுத்து வழங்கப்படும் எ - று.

இனி, ஒப்பும் என்ற உம்மையால் வண்ணமும், புனைந்துரையும், அடி இன்றி நடப்பனவும், ஓரடியான் நடப்பனவும் ஆமாறு உரைத்துக்கொள்க.

வண்ணம்

அவற்றுள் வண்ணம் நூறு திறத்தன. அவை வருமாறு:

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்று இவ்வைந்தினையும் முதல் வைத்து,

அகவல் வண்ணம், ஒழுகல் வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்று இந்நான்கினையும் இடைவைத்து,

குறில் வண்ணம், நெடில் வண்ணம், வலிவண்ணம், மெலி வண்ணம், இடைவண்ணம் என்று இவ்வைந்தினையும் கடைவைத்துக் கூட்டியுறழ நூறு வண்ணமும் பிறக்கும்; என்னை?

‘ தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை வைத்துப் பின்னும்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலி பாற்படுத்திட்
டீங்கே குறினெடில் வல்லிசை மெல்லிசை யோடிடையுந்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறுந் தலைப்படுமே ’

என்றார் ஆகலின். அவை உறழுமாறு:

தூங்கிசை வண்ணம் 20

குறிலகவற்	றூங்கிசை	குறில் வல்லிசைத்	தூங்கிசை
நெடிலகவற்	,,	நெடில் வல்லிசைத்	,,
வலியகவற்	,,	வலி வல்லிசைத்	,,
மெலியகவற்	,,	மெலி வல்லிசைத்	,,
இடையகவற்	,,	இடை வல்லிசைத்	,,
குறிலொழுகற்	,,	குறின் மெல்லிசைத்	,,
நெடிலொழுகற்	,,	நெடின் மெல்லிசைத்	,,
வலியொழுகற்	,,	வலி மெல்லிசைத்	,,
மெலியொழுகற்	,,	மெலி மெல்லிசைத்	,,
இடையொழுகற்	,,	இடை மெல்லிசைத்	,,

ஏந்திசை வண்ணம் 20

குறிலகவ	லேந்திசை	குறில் வல்லிசை	யேந்திசை
நெடிலகவ	,,	நெடில் வல்லிசை	,,
வலியகவ	,,	வலி வல்லிசை	,,
மெலியகவ	,,	மெலி வல்லிசை	,,
இடையகவ	,,	இடை வல்லிசை	,,
குறிலொழுக	,,	குறின் மெல்லிசை	,,
நெடிலொழுக	,,	நெடின் மெல்லிசை	,,
வலியொழுக	,,	வலி மெல்லிசை	,,
மெலியொழுக	,,	மெலி மெல்லிசை	,,
இடையொழுக	,,	இடை மெல்லிசை	,,

அடுக்கிசை வண்ணம் 20

குறிலகவ	லடுக்கிசை	குறில் வல்லிசை	யடுக்கிசை
நெடிலகவ	,,	நெடில் வல்லிசை	,,
வலியகவ	,,	வலி வல்லிசை	,,
மெலியகவ	,,	மெலி வல்லிசை	,,
இடையகவ	,,	இடை வல்லிசை	,,
குறிலொழுக	,,	குறின் மெல்லிசை	,,
நெடிலொழுக	,,	நெடின் மெல்லிசை	,,
வலியொழுக	,,	வலி மெல்லிசை	,,
மெலியொழுக	,,	மெலி மெல்லிசை	,,
இடையொழுக	,,	இடை மெல்லிசை	,,

பிரிந்திசை வண்ணம் 20

குறிலகவற்	பிரிந்திசை	குறில் வல்லிசைப்	பிரிந்திசை
நெடிலகவற்	,,	நெடில் வல்லிசைப்	,,
வலியகவற்	,,	வலி வல்லிசைப்	,,
மெலியகவற்	,,	மெலி வல்லிசைப்	,,
இடையகவற்	,,	இடை வல்லிசைப்	,,
குறிலொழுகற்	,,	குறின் மெல்லிசைப்	,,
நெடிலொழுகற்	,,	நெடின் மெல்லிசைப்	,,
வலியொழுகற்	,,	வலி மெல்லிசைப்	,,
மெலியொழுகற்	,,	மெலி மெல்லிசைப்	,,
இடையொழுகற்	,,	இடை மெல்லிசைப்	,,

மயங்கிசை வண்ணம் 20

குறிலகவன்	மயங்கிசை	குறில் வல்லிசை	மயங்கிசை
நெடிலகவன்	,,	நெடில் வல்லிசை	,,
வலியகவன்	,,	வலி வல்லிசை	,,
மெலியகவன்	,,	மெலி வல்லிசை	,,
இடையகவன்	,,	இடை வல்லிசை	,,
குறிலொழுகன்	,,	குறின் மெல்லிசை	,,
நெடிலொழுகன்	,,	நெடின் மெல்லிசை	,,
வலி யொழுகன்	,,	வலி மெல்லிசை	,,
மெலி யொழுகன்	,,	மெலி மெல்லிசை	,,
இடை யொழுகன்	,,	இடை மெல்லிசை	,,

இவ்வண்ண விகற்பம் ஓதினர் [38]கையனார் முதலாகிய ஒரு சாராசிரியர் எனக் கொள்க.

இனித் தொல்காப்பியனார் வண்ணம் இருபதென் றோதி னார். என்னை ?

‘வண்ணந் தாமே நாலைந் தென்ப.’

‘அவைதாம்,
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ண மளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ண மொரூஉ வண்ணம்
எண்ணு வண்ண மகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ணம்
உருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங்கவை யென்ப வறிந்திசி னோரே.’

(தொல். பொருள். சூ. 524, 25.)

இவ்வண்ண விகற்பம் எல்லாம் தொல்காப்பியத்துள்ளும், யாப்பருங்கல விருத்தியுள்ளும் கண்டு கொள்க.

(பி - ம்.) 38. அவிநயனார்.

புனைந்துரை

இனி, புனைந்துரை இரண்டு வகைப்படும், பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதலும், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலும் என. என்னை ?

'உரைக்கப் படும்பொருட் கொத்தவை யெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை [39]யாகும்'

என்றார் ஆகலின்.

வரலாறு

நேரிசை வெண்பா

'அடையார்பூங் கோதையாட் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்றும்—இடையாதும்
[40]கண்கொள்ளா வாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாக வேண்டு நசப்பு.'

இது (சங) பெரியதனைச் சுருக்கிற்று.

நேரிசை வெண்பா

'(சச) அவாப்போ [41]லகன்றத னல்குன்மேற் சான்றோர்
உசாப்போல வுண்டே மருங்குல்—உசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்.'

இது சிறியதனைப் பெருக்கிற்றும் பெரியதனைச் சுருக்கிற் றும். இதனுள் 'சான்றோர்உசாப்போல வுண்டே மருங்குல்' என் பது பெரியதனைச் சுருக்கிற்று. அல்லன சிறியதனைப் பெருக்கின.

(சங) உளதாகிய இடையை, 'கண் கொள்ளா' என்றமையால் பெரியதனைச் சுருக்கிற்று.

(சச) அல்குலின் பரப்புக்கு ஆசையின் பரப்பைக் கூறியது சிறியதனைப் பெருக்கிற்று. உசா - ஆராய்ச்சி. ஆராய்ச்சியைப் பேதைக்கு உரைப்பவனுக்குப் பிழை பெருகும். 'குயம் பிழைப்பிற் பெருகினவே' என்பதும் சிறியதனைப் பெருக்கிற்று. நுட்பமான ஆராய்ச்சி இடைக்கு உவமை.

(பி - ம்.) 39. யென்ப. 40. கண்டுகொளாதாயினுங். 41. லகன் றதே யல்குலுஞ் சான்றோர்.

'(சடு) பொன்மலி கச்சி பூமலி கூடல்
மாரி யீகை மணிமாடம்.'

இவை சிறியதனைப் பெருக்கின.

அடியின்றி நடப்பனவும் ஓரடியால் நடப்பனவும்

இனி அடியின்றி நடப்பன பாட்டும் உரையும், நூலும், மந்திரமும், (சசு) பிசியும், முது சொல்லும், அங்கதமும், வாழ்த்தும் முதலாயினவெனக் கொள்க. என்னை?

'உரையு நூலு மடியின்றி நடப்பினும்
வரைவில வென்ப வாய்மொழிப் புலவர்'

'வாய்மொழி பிசியே யங்கத முதுசொலென்
றுயவை நான்கு மன்ன வென்ப.'

பாட்டும் உரையும் நூலும் மந்திரமும் பிசியும் முது சொல்லும் அங்கதமும் என்றிவை பிறவும் ஓரடியானும் பலவடியானும் வரப்பெறு மெனக் கொள்க. என்னை?

'செயிர்தீர் செய்யுட் டெரியுங் காலை
அடியி னீட்டத் தழகுபெற் றியலும்'
'ஓரடி யானும்வந் தொரோவிடத் தியலும்'

'அவை தாம்,
பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொ லங்கதம் வாழ்த்தொடு பிறவும்
ஆகு மென்ப வறிந்திசி னோரே'

என்றார் ஆகலின்.

இவை அடியின்றி நடப்பனவும் ஓரடியால் நடப்பனவுஞ் சொன்னவாறு. (அ)

(சடு) கச்சி, கூடல், ஈகை, மாடம் இவற்றைப் புனைந்துரை வகையாற் பெரிதும் புகழ்தலின் சிறியவற்றைப் பெருக்கின.

(சசு) பிசி - பிதிர். முதுசொல் - பழமொழி. அங்கதம் - வசை.

காரிகை நுதலிய பொருளும் தொகையும்

44. எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை [1]நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றேழுக்கிய வண்ணங்க ளுறேன்ப தொண்பொருள் கோளிரு
வழுக்கில் விகாரம் வனப்பெட்டி யாப்புள் வகுத்தனவே.

இ...கை. இந்நூல் வகுத்த பொருளெல்லாம் தொகுத்து உணர்த்......று.

எழுத்துப் பதின் மூன்றாவன: (1) குற்றெழுத்தைந்து, (2) நெட்டெழுத்தேழு, (3) உயிரெழுத்துப் பன்னிரண்டு, (4) குற்றியலுகர வெழுத்து நாற்பத்திரண்டு, (5) குற்றியலிகர வெழுத்து நாற்பத்து மூன்று, (6) ஐகாரக் குறுக்க வெழுத்து மூன்று, (7) ஆய்தவெழுத்து ஆறு, (8) மெய்யெழுத்துப் பதினெட்டு, (9) வல்லின வெழுத்து ஆறு, (10) மெல்லின வெழுத்து ஆறு, (11) இடையின வெழுத்து ஆறு, (12) உயிர்மெய்யெழுத்து இருநாற்றொருபத்தாறு, (13) அளபில் உயிரளபெடை யெழுத்து இருபத்தெட்டு, ஒற்றளபெடை யெழுத்து இருபத்திரண்டு. ஆக எழுத்துப் (க) பதின் மூன்று.

இரண்டசை யாவன: (1) நேரசை, (2) நிரையசை என இவை.

சீர் முப்பதாவன: [2]ஆசிரிய வுரிச்சீர் நான்கும், வெண்பா வுரிச்சீர் நான்கும், வஞ்சியுரிச்சீர் நான்கும் பொதுச்சீர் பதினாறும், ஓரசைச் சீர் இரண்டும் என இவை.

தளை ஏழாவன: (1) நேரொன்றாசிரியத் தளை, (2) நிரையொன்றாசிரியத்தளை, (3) இயற்சீர் வெண்டளை, (4) வெண்சீர் வெண்டளை, (5) கலித்தளை, (6) ஒன்றிய வஞ்சித்தளை, (7) ஒன்றாத வஞ்சித்தளை என இவை.

(க) இவ்வாசிரியர் யாப்பருங்கலத்தில் ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்ற மூன்றனையும் இப்பதின் மூன்றனோடுங்கூட்டி எழுத்துப் பதினைந்து என்பர்.

(பி - ம்.) 1. நாற்பத்து. 2. ஈரசைச்சீர் நான்கும், மூவசைச்சீரெட்டும், நாலசைச்சீர் பதினாறும்.

ஐந்து இழுக்கில் அடியாவன: (1) குறளடி, (2) சிந்தடி, (3) அளவடி, (4) நெடிலடி, (5) கழிநெடிலடி என இவை.

தொடை நாற்பத்து மூன்றாவன: அடிமோனை, அடியியைபு, அடியெதுகை அடிமுரண் அடியளபெடை என ஐந்தும், அந்தாதித் தொடை இரட்டைத்தொடை செந்தொடை என மூன்றும், இணைமோனை முதலாகிய விகற்பத் தொடை முப்பத்தைந்தும் என இவை.

ஐந்து பாவாவன: (1) வெண்பா, (2) ஆசிரியப்பா. (3) கலிப்பா, (4) வஞ்சிப்பா, (5) மருட்பா என இவை.

இனம் மூன்றாவன: (1) தாழிசை, (2) துறை, (3) விருத்தம் என இவை.

ஒழுக்கிய வண்ணங்கள் நூறு ஆவன: குறிலகவற்றூங்கிசை வண்ணம் முதலாயின.

ஒன்பது ஒண் பொருள்கோள் ஆவன: நிரனிறை மொழி மாற்று முதலாயின.

இருமூ வழுக்கில் விகாரம் ஆவன: வலிக்கும் வழி வலித்தன் முதலாயின.

வனப்பு எட்டாவன: அம்மை முதலாயின. ‘யாப்புள் வகுத்தனவே’ எ - து: யாப்பருங்கலக் காரிகையுட் சொல்லப் பட்டன எ - று.

ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

‘ஐந்து இழுக்கிலடி’ என்று சிறப்பித்தவதனால், திணை வழுவும், பால்வழுவும், மரபுவழுவும், வினைவழுவும், செப்பு வழுவும், காலவழுவும், இடவழுவும் என்றுரைக்கப்பட்ட ஏழு வழுவும் படாமற் புணர்க்கப்படும் எனக்கொள்க.

‘ஒழுக்கிய வண்ணங்கள் நூறு’ என்று சிறப்பித்தவதனால் ஒரு சாராசிரியர் வண்ணம் இருபதெனச் சொன்னர் எனக் கொள்க.

‘ஒன்பது ஒண் பொருள்கோள்’ என்று சிறப்பித்தவத

ஞல் பொருள்கோள் ஒன்பதல பல' (உ) என்பாரும் உளர் எனக் கொள்க.

'வழுக்கில் விகாரம்' என்று சிறப்பித்தவதனல் (1) எழுத்துக் குற்றம், (2) சொற்குற்றம், (3) பொருட் குற்றம், (4) யாப்புக்குற்றம், (5) அலங்காரக் குற்றம், (6) ஆனந்தக் குற்றம் என்னும் இவ்வாறு குற்றமும் படாமற் சொல்லப்படுவன செய்யுட்கள் எனக் கொள்க.

[3] எழுத்துக் குற்றமாவது எழுத்ததிகாரத்துடனே மாறு கொள்வது.

வரலாறு

வெண்பா

'(ங) வெறிகமழ் தண்சிலம்பின் வேட்டமே யன்றிப்
பிறிதுங் குறையுடையான் போலுஞ்—செறிதொடீஇ
தேமா னிதணத்தே யாமாக நம்புனத்து
வாமான்பின் வந்த மகன்.'

இதனுள் 'தேமா' எனற்பாலதனைத் 'தேமான்' என்று னகரவொற்றுக் கொடுத்தமையால் எழுத்துக் குற்றமாயிற்று. என்னை?

'(ச) முன்னிலை நெடில மாவு மாவும்
னம்மிகப் புணரு மியங்குதிணை யான'

என்றார் [4] அவிநயனர்.

(உ) 'நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற், றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே' (தொல். எச்ச. 8) என நான்காகவும், 'பூட்டுவில் விதலை யாப்புக் கொண்டுகூட், டொடுசிறை நிலையே பாசி நீக்கமென், றுக்கிய வைந்தும் பொருள்கோ ளாகும்' என ஐந்தாகவும் (இறையனர் அகப். உரை), 'யாற்று நீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண், தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட் டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே' (நன். சூ. 410) என எட்டாகவும் கூறுவர்.

(ங) சிலம்பு - மலை. இதண் - பரண். வாமான் - தாவுகின்ற மான்.

(ச) இயங்குதிணை - அசையும் பொருள். முன்பாட்டில் நிலைத்திணைப் பொருளாகிய மாமரத்தை னகரச்சாரியைக் கொடுத்து 'தேமான்' என்றது எழுத்துக் குற்றம்.

(பி - ம்.) 3. அவற்றுள், எழுத்துக் குற்ற முதலிய வைந்தும் அவ்வவ்விலக்கண நூல்களால் அறிந்துகொள்க. இனி ஆனந்தக்.' 4. ஆதலின்

சொற்குற்றமாவது சொல்லதிகாரத்தோடு மாறுகொள்வது. என்னை ?

‘ சொல்லின் வழுவே சொல்லோத்து மரபிற்
சொல்லிய குற்றந் தோன்ற லாகும் ’

என்றார் ஆகலின்.

வரலாறு

வெண்பா

(ரு) ‘ இசையெலாங் கொட்ட வெழிற்றானை யூர்ந்து
வசையில்லா மன்னர்வந் தேத்த—மிசையும்
அடிசில் பருகி யணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கூடலார் கோ.’

